D
211,31 N92
N72.14.3
163172

## உள்ளடக்கம்.

4—2—1992.


| | பக்கங்கள் |
|---|---|
| **வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 207—248 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 248—328 |
| **சிறப்புக் குறிப்புகள்—** | |
| (அ) சைதாப்பேட்டை, பரங்கிமலை கண்டோன்மென்ட் பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றுள்ள வன்முறைச் சம்பவங்கள் குறித்து | 328—340 |
| (ஆ) தம் உயிருக்கு ஆபத்து என உறுப்பினர் திரு. இளம்வழுதி தெரிவிப்பது குறித்து | 346—348 |
| **ன்னிலை விளக்கம்—** | |
| ரங்கிமலை கண்டோன்மென்ட் பகுதியில் தாம் தாக்கப்பட்டது குறித்து உறுப்பினர் திரு. அ. செல்வராசன் விளக்கம் தெரிவித்தல் | 346—348 |
| **அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) மதிப்பீட்டுக் குழு | 348 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 348—349 |
| **சட்ட முன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப்பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1992 | 349—350 |
| (ஆ) தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சார்ந்த சட்டங்களின் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992 | 350 |


டி2 53-416—1

## விவர அறிக்கை.

1956 ஆம் ஆண்டு மாநில சீரமைப்பு சட்டத்தின் 40-வது பிரிவின்படி சென்னை மாநிலத்திற்கு (தற்போது தமிழ்நாடு) மக்கள் அவையில் 41 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இந்த ஒதுக்கீட்டின்படி 1957 ஆம் ஆண்டு மற்றும் 1962 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்தவாறு 1961-ம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்குப்படி தொகுதிகளைச் சீரமைக்கத் "தொகுதிகள் சீரமைப்புக் குழு" (Delimitation Commission) ஒன்று மைய அரசினால் அமைக்கப்பெற்றது. அக்குழு, மக்கட் தொகை கணக்கின்படி தமிழ்நாட்டிற்கு மக்கள் அவையில் 39 இடங்களை ஒதுக்கியது. இதனால் தமிழ்நாட்டிற்கு மக்கள் அவையில் இரண்டு இடங்கள் குறைந்தன. மக்கள் அவையில் இரண்டு இடங்களை இழந்ததற்குக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைத் தீவிரமாக அமல் செய்ததினால் ஏற்பட்ட விளைவு தான் என தமிழக அரசு கருதியது.

இதைத் தவிர்க்க, 1951 மக்கட் தொகைக் கணக்கு அடிப்படையில் மக்கள் அவையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டுமென்று தமிழக அரசு மைய அரசை 1970 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் கேட்டுக்கொண்டது. இவ்வேண்டுகோளை மைய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. மைய அரசு இதற்குப் பதில் அளிக்கையில் தங்கள் கருத்தில் இது குறித்து மாறுதல் இல்லை என்று அறிவித்தது.

தமிழக அரசின் மேற்குறித்த வேண்டுகோளை வற்புறுத்தும் வகையில் மறுபடியும் 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், மக்கள் அவையில் 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப் படி மாநில வாரியாக ஒதுக்கப்பட்ட இடங்களில் எண்ணிக்கையை அப்படியே நிலைப்படுத்தி வைக்கவேண்டுமென்றும் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லையெனில், மாநிலத்தின் மக்கட்தொகையைக் கணக்கிடும்போது தவிர்க்கப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கைகளை மக்கட்தொகைக் கணக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தியது. மைய அரசு இதனை ஏற்றுக்கொள்ளாததினால், மேற்கொண்டு நடவடிக்கைகள் கைவிடப்பட்டன.





**திரு. ம. சின்னசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு குடும்ப நலத் திட்டத்தை தீவிரமாக அமல்படுத்திய காரணத்தால் மக்கள் தொகைக்கு ஏற்ப நம்முடைய நாடாளுமன்ற இடங்களுடைய எண்ணிக்கை 2 குறைக்கப்பட்டிருக்கிறது என்று விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் ஒரு நாடாளுமன்ற தொகுதிக்கு எத்தனை மக்கள் தொகை இருக்க வேண்டும் என்று அரசு நிர்ணயம் செய்திருக்கிறதா? இது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறதா அல்லது இந்தியா பூராவும் ஒரே மாதிரியான முறையிலே மத்திய அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1951 வது ஆண்டு மக்கள் எண்ணிக்கைக்கு பிறகு அதன் அடிப்படையில் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் 41 நாடாளுமன்ற இடங்கள் ஒதுக்கப்பட்டன. அதற்குப் பிறகு 1957, 1962 பொது தேர்தல்களிலே அது கடைபிடிக்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டு மக்கள் தொகை எண்ணிக்கையின் படி வருகிறபோது மக்கள் தொகை அடிப்படையிலே நமக்கு 39 இடங்கள்தான் ஒதுக்கி தரப்பட்டது. ஆகவே இவ்வளவு மக்களுக்கு இவ்வளவு நாடாளுமன்ற தொகுதிகள் இருக்க வேண்டும் என்று விதி இல்லை. மத்தியிலே இந்திய பாராளுமன்றத்திலே இவ்வளவு உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்றுதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவை மக்கள் தொகையின் அடிப்படையில் பகிர்ந்து தரப்படுகின்றன. இப்படி பகிர்ந்து தருகிறபோது நம்முடைய மக்கள் தொகையின் அடிப்படையில் 39 இடங்கள் வருகின்றன. 41 இடங்கள் வேண்டும் என்று தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. 1951-வது ஆண்டு மக்கள் தொகை எண்ணிக்கையைத்தான் அடிப்படையாக வைத்து அப்போது எவ்வளவு ஒதுக்கப்பட்டதோ அவ்வளவு இடங்கள் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டால்தான் குடும்ப நல திட்டத்திற்கு ஊக்கம் தருகிற ஒன்றாக இருக்கும். இல்லாவிட்டால் குடும்ப நலத் திட்டத்தின் மூலம் மக்கள் எண்ணிக்கையை குறைக்கின்ற மாநிலங்களுக்கு, இந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை குறைப்பதன் மூலம் ஒரு தண்டனை கொடுப்பதாகத்தான் அமைகின்றது. ஆகவே அதை 1951 வது ஆண்டு மக்கள் தொகை எண்ணிக்கை கணக்கின்படி 41 இடங்கள் என்று நிர்ணயித்தது அப்படியே இருக்க வேண்டும்.

எந்தெந்த மாநிலங்கள் குடும்ப நலத் திட்டத்தை கடைபிடிக்கின்றனவோ அதற்குச் சலுகை தருகின்ற தன்மையிலே அமைய வேண்டும். அல்லது மற்றொன்றையும் தமிழக அரசு கேட்டுக் கொண்டு இருக்கிறது. குடும்ப நல திட்டத்தை கடைபிடிப்பதன் மூலம் பிறப்பு விகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. அப்படி அந்த குடும்ப நலத் திட்டத்தை கடைப்பிடிக்காமல் இருந்தால் எவ்வளவு குழந்தைகள் பிறந்திருப்பார்களோ அந்தக் கணக்கையும் எடுத்துக் கொண்டாவது இடம் கொடுக்க வேண்டுமென்று நாம் அதையும் கேட்டிருக்கிறோம். இரண்டையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. நாடாளுமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் வற்புறுத்தினால் ஒருக்கால் அங்கே மாற்றம் ஏற்படக் கூடும். தமிழக அரசு எல்லா வகையிலேயும் முயன்று பார்த்து விட்டது.

**திரு. ம. சின்னசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்திய நாட்டிற்கே மிகப் பெரிய சவாலாக இருப்பது பெருகி வரும் மக்கள் தொகை. அந்த மக்கள் தொகையை கட்டுப்படுத்த வேண்டுமென்றால் மாநில அரசும் மத்திய அரசும் குடும்பநலத் திட்டத்தை தீவிரமாக அமல் படுத்த வேண்டும். ஆக குடும்ப நலத் திட்டத்தை தீவிரமாக அமல் படுத்தியதன் காரணமாக நம்முடைய நிதியமைச்சர் கூறியது போல் நமக்கு ஒரு பெரிய தண்டனையை மத்திய அரசு கொடுத்திருக்கிறது. ஊக்கம் கொடுப்பதற்கு பதிலாக தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு பல்வேறு நிலைகளில் பல முயற்சிகள் எடுத்தும், 1974 ஆம் ஆண்டுடன் அந்த முயற்சியை விட்டுவிட்டதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே குறைக்கப்பட்ட அந்த இரண்டு இடங்களை மீண்டும் பெறுவதற்கு தமிழ்நாடு சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தைப் போட்டு நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்புவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடாளுமன்றத்தினுடைய உறுப்பினர்கள் எண்ணிக்கை எப்படி நிரந்தரமாக நிலைப்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கின்றதோ அதே அடிப்படையில் 1951 ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கை கணக்குப்படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று நிர்ணயித்தார்களோ அதைத் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும். அதிலே தான் நியாயமான தன்மை இருக்கிறது. அதைத்தான் தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. இழந்த இரண்டு இடங்களை மீண்டும் பெறவேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். அதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாவது நாடாளுமன்றத்தில் பிரச்சினை எழுப்பப் படுவதன் மூலமாவது அந்தக் குறையை நீக்க வேண்டும் என்று கருதிக்கொண்டு இருக்கிறோம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 22 திரு. எம். கே. பாலன். மாண்புமிகு நிதி அமைச்சர்.

22.—

**பெரிய சட்டமன்றத் தொகுதிகளை இரண்டாகப் பிரித்தல்.**

* 3933-ஏ—திரு. எம். கே. பாலன் :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியதாக உள்ள சட்டமன்றத் தொகுதிகளை இரண்டாகப் பிரிக்க மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை**

அரசியலமைப்புச் சட்டத்தில் தற்பொழுதுள்ள தடையின்படி நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையையும் அவைகளின் பரப்பளவுகளையும் கி.பி. 2001 ஆம் ஆண்டில் எடுக்கப்படும் மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கு முன்னர் மாற்ற இயலாது.

2. நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் எண்ணிக்கையில் பெருமளவு வேறுபாடுகள் உள்ளதால், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றப் பேரவை தொகுதிகளைப் புதியதாக மறுவரையறை செய்ய வேண்டுமென்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கோரினர். தேர்தல் ஆணையமும், மைய

அரசுக்கு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளைப் புதியதாக வரையறுக்க வேண்டுமென்று பரிந்துரைத்தது. இப்பரிந்துரையினை மைய அரசு, தேர்தல் முறைகளில் மாற்றத்தைச் செய்வதற்கென அமைக்கப்பட்ட குழுவின் ஆய்வுக்கு அனுப்பியது. பரிசீலனைக்குப் பிறகு, 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிகளின் எண்ணிக்கையில் எவ்வித மாற்றமும் செய்யாமல், 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் பரப்பளவுகளை மறுவரையறைப்படுத்தலாம் என்று பரிந்துரைத்தது. இப்பரிந்துரைகளின் அடிப்படையில், மைய அரசு, அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவர, 71 வது அரசியலமைப்பு சட்ட முன்வடிவு ஒன்றினை 30—5—1990-ல் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தியது. இது நிலுவையிலுள்ளது.

3. நிலுவையிலுள்ள இந்த சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேறியபின், 'தொகுதி வரையறை ஆணையம்' (Delimitation Commission) புதியதாக நியமிக்கப்படும். இவ்வாணையம், மாநிலங்களிலுள்ள பல்வேறு இடங்களுக்குச் சென்று பொதுமக்களின் கருத்துக்களையும், மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் அறிந்தபின், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகளை வரையறை செய்வது பற்றியும், தனித் தொகுதிகளை மாற்றியமைப்பது பற்றியும் முடிவெடுக்கும். எனவே, பெரியதாக உள்ள சட்டமன்றத் தொகுதிகளிலிருந்து சில பகுதிகளை எடுத்து அடுத்திருக்கும் சிறிய தொகுதிகளோடு சேர்த்து சீரமைப்பது பற்றி இவ்வாணையம்தான் முடிவெடுக்கும். இந்நிலையில், இவ்வரசு மைய அரசை பெரியதாக உள்ள சட்டமன்றத் தொகுதிகளை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று வலியுறுத்தத் தேவையில்லை.

**திரு. எம். கே. பாலன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையின்படி 1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, இதுநாள் வரைக்கும் சட்டமன்றத் தொகுதியைப் பிரித்து—அதிகமாக உள்ள வாக்காளர்கள் எண்ணிக்கையின்படி அந்தத் தொகுதியைப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை 1971 ஒன்றே வைத்திருக்கின்ற காரணத்தினால். தொடர்ந்து இருக்கின்ற காரணத்தினால் பல்வேறு பிரச்சினைகளை மக்களுக்குப்



புரிய வைப்பதற்கு வாக்காளர்கள் அதிகமாக உள்ளத் தொகுதிகளை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இரண்டாகப் பிரிக்கப்படுமா என்று கேளுங்கள்.

**திரு. எம். கே. பாலன்**: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாகப் பிரிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை தொகுதி வரைமுறை ஆணையம் அதாவது டீலிமிடேஷன் கமிஷன் அமைக்க வேண்டும் என்று இருக்கிறது. அந்த வகையிலே பத்து ஆண்டுக் காலத்திற்கு ஒரு முறை தொகுதியினுடைய அளவு எந்த அளவிற்கு இருக்க வேண்டும், எவ்வளவு தொகுதிகள் இருக்க வேண்டும் என்று அந்தத் தொகுதி வரையறை ஆணையம் முடிவு செய்து கொண்டு வந்தது. ஆனால் மத்திய அரசு 1977-ல் ஒரு திருத்தச் சட்டம் கொண்டுவந்து 2001-வது ஆண்டுக்கு முன்னால் இந்த தொகுதி வரையறை ஆணையம் நியமிக்க வேண்டிய அவசியமோ, வரைமுறைகளை மாற்றியமைக்கவேண்டிய அவசியமோ இல்லை என்று ஒரு தடையை நிறைவேற்றிவிட்டது. ஆகையினால்தான் 2, 3 தேர்தல்களாக நாம் புதிய முறையைக் கொண்டுவர முடியவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் சிலபல தொகுதிகள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பது உண்மைதான். வரைமுறை தன்மைகள் அடிப்படையில் ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு 5 சட்டமன்ற இடங்கள் என்று இருந்தன, பிறகு 6 என்று நாம் ஆக்கினோம். எதிர்காலத்தில் நாம் 7 அல்லது 8 என்று ஆக்கினால்தான் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று குறிப்பிட்ட அளவு வாக்காளர்கள் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு இந்தத் தேர்தல்களை நடத்த முடியும். ஆக இந்தத் தொகுதி வரைமுறை ஆணையத்தை அமைக்கலாம் என்று தேர்வு ஆணையமும் கூறி, மத்திய அரசுக்கு 1971 மக்கள் எண்ணிக்கை கணக்கின் அடிப்படையில் தொகுதிகள் எண்ணிக்கையை மாற்றாமல், தொகுதிகளின் பரப்பளவை மட்டும் மாற்றியமைப்பது போன்றவைகளைச் செய்யலாம் என்று ஒரு யோசனையைச் சொல்லியது. அந்த அடிப்படையில் மத்திய அரசும் ஒரு சட்டத்தை முன்வடிவாக கொண்டுவந்து நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் அறிமுகப்படுத்தியது. அது நிலுவை

யிலே இருந்துகொண்டிருக்கிறது. அந்தச் சட்டம் நிறைவேற்றப் படுமேயானால் அதற்குப் பிறகு தொகுதி வரையறை ஆணையம் அமைக்கப்படும். தொகுதி வரையறை ஆணையம் அமைக்கப்படு கின்றபோது தமிழகத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு தொகுதிகள் இருக்கலாம் என்பதும் எப்படி மாற்றி அமைக்கலாம் என்பது குறித்தும் நாம் யோசனைகள் கூறுவதற்கு வழிவகை ஏற்படக்கூடும். அப்படி வருகின்றபோது சிறிய தொகுதிகளைச் சிறிது பெரிதாக ஆக்கவும், பெரிய தொகுதிகளைச் சிறிய தொகுதி களாக ஆக்குவதற்கும் வழிவகைகள் ஏற்படும். இப்போது இருக் கின்ற தொகுதியை இரண்டாகப் பிரிப்பது என்பது நடைமுறைப் படுத்த முடியாத ஒன்றாகும். தொகுதி வரையறை ஆணையம் அமைக்கப்பட்டதற்குப் பிறகு நம்முடைய எண்ணங்களை நிறை வேற்றிக்கொள்வதற்கு வழி வகை இருக்கிறது.

**திரு. எம். கே. பாலன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பத்து வருடக் காலம் என்று கூறியதால் இப்போது 12 வருடம் ஆகின்றது. ஆகையினால் இந்த பத்தாவது பேரவையின் சார்பில் பெரிதாக இருக்கின்ற சட்டமன்றத் தொகுதியை இரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். இதுவரையில் இரண்டு தொகுதி வரையறை ஆணையம் அமைக்கப் பட்டு இருக்கவேண்டும். ஆனால் மத்திய அரசு 2001-க்கு முன்னால் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டதன் காரணமாகத்தான் தடை பட்டு இருக்கிறது. அதற்கு இப்போது சட்ட முன்வடிவு ஒன்று கொண்டு வந்திருக்கிறார்கள். அது நிறைவேற்றப்படுமேயானால் தொகுதி வரைமுறை ஆணையம் அமைக்கப்படும். ஆணையம் அமைக்கப்பட்டால் நாம் தொகுதிகளை நம் விருப்பத்திற்கு ஏற்ப அமைத்துக்கொள்ளலாம். ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் 6 சட்டமன்ற தொகுதிகளா அல்லது ஏழா, எட்டா என்பதை நாம் எடுத்துச் சொல்கின்ற அடிப்படையில் நிர்ணயித்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ச. இராமச்சந்திரன்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி வரையறை ஆணையம் 'டீலிமிடேஷன்





கமிஷன்' என்பதை மூவர் கொண்ட ஒரு குழுவை இந்திய அரசு நியமித்துவிட்டது. ஆகவே, இந்த அரசு இந்த தொகுதி வரையறை ஆணையத்தின் மூலம் ஒரு நாடாளுமன்றத் தொகு திக்கு 7 சட்டமன்றத் தொகுதிகள் என்ற வகையில் வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப சட்டமன்றத் தொகுதிகளை மாற்றி யமைக்க வேண்டுமென்று பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அரசியல் அமைப்பு திருத்தம் கொண்டுவர 71-வது அரசியலமைப்பு சட்ட முன்வடிவு நிலை 30—5—1990-ல் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தியது. இது நிலுவையிலுள்ளது என்று எனக்குக் குறிப்பு தரப்பட்டிருக் கிறது. ஆகவே, நிலுவையிலுள்ள சட்டம் நிறைவேற்றப்படு மானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அதை நடைமுறைக்குக் கொண்டு வராமல் தடைச் சட்டத்தை அவர்கள் நீக்கவேண்டும். அதை நீக்கிவிடுவார்களானால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று 7 சட்ட மன்ற இடமோ அல்லது 8 சட்டமன்ற இடமோ என்று நாம் ஆக்கிக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இரு அவைகள் கொண்ட **Bicameral Legislature** என்று சொன்னால் அதற்கு ஒரு வரையறை ஏற்படுத்தலாம். 5 அல்லது 6 தொகுதிகள் என்று ஆக்கலாம். நாம் ஒரு மக்கள் அவை தொகுதிக்கு 6 சட்டப் பேரவைத் தொகுதிகளை வைத்து இருக்கிறோம். உத்திரப் பிரதேசத்தில் 5 வைத்து இருக்கிறார்கள் ; ஆனால் ஒரே ஒரு சட்டப் பேரவை மட்டும் உள்ள இடங்களில் நாம் விருப்பம்போல் வைத்துக் கொள்ளலாம். 7 என்றும் சிலயிடங்களில், 9 என்று கூட வைத்து இருக்கிறார்கள். கர்நாடகத்தில் 8 என்று வைத்து இருக்கிறார்கள். அரியானாவில் 9 என்று வைத்து இருக் கிறார்கள் ; கேரளாவில் 7 என்று வைத்து இருக்கிறார்கள். பல இடங்களில் மாற்றி, மாற்றி வைத்து இருக்கிறார்கள். ஆனால் நமக்கு ஒரு இடையூறு இருக்கக்கூடும் என்று நான் அஞ்ச

கிறேன். நம் சட்டமன்றப் பேரவை மண்டபம் மிகவும் சிறியது என்று காரணம் காட்டிதான் தொகுதிகளை அதிகப்படுத்தாமல் இருந்து வந்து இருக்கிறோம். எனவே, இதையும் கருத்தில் கொண்டு புதிய சட்டமன்றப் பேரவை மண்டபம் கட்டுவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போன்று சட்டமன்றத் தொகுதிகள் 7 அல்லது 8 என்று ஆகிவிடுமானால், இந்த மண்டபம் போதாதுதான். ஆகவே அந்த எண்ணத்தை நாம் நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லுகிற அதே நேரத்தில், தனியாகச் சட்டமன்றப் பேரவை மண்டபம் ஒன்று புதியதாக கட்டுவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இது தனியாக ஆராயப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப காலத்திலே கூட ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு 5 சட்டமன்றத் தொகுதிகள் என்று இருந்தது. இப்போது இதை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கையை எடுப்பதோடு ஓரே நிரந்தரமாக எஸ்.சி. தொகுதி என்று—இதை இந்த 'டீலிமிடேஷன் கமிட்டிக்கு' எழுத வேண்டும்—1967-லிருந்து 1987 வரை சுமார் 20, 24 ஆண்டுகளாக அந்த ஒரு பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டும் வருவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறதே தவிர இதர ஜாதிகளுக்கு ஒரு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறதே இதுவும் 2001-ல் கவனிக்கப்படும் என்று சொல்லப்படுவதாக நான் அறிகிறேன். ஆகவே அதைக் கொஞ்சம் மாற்றி 'டீலிமிடேஷன் கமிட்டி' இதை மாற்றி அந்த ரிசர்வ் தொகுதி, ஜெனரல் தொகுதி என்று 10 ஆண்டுக்கு ஒருமுறை மாறுவதற்கான ஒரு நிலையை உருவாக்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொகுதி வரையறை ஆணையம் அமைக்கப்பட்டதற்குப் பிறகு தொகுதிகளை வரையறை செய்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபோது எந்தத் தொகுதியிலே குறிப்பிட்ட அளவுக்கு தாழ்த்தப்பட்டவர்களுடைய



எண்ணிக்கை, பர்செண்டேஜ் அதிகமாக இருக்கிறதோ அதைத் தான் தனியாக அதற்கு ஒதுக்குகிறார்கள். இந்த 'டீலிமிடேஷன் கமிட்டி' வருகின்றபோது ஏற்கனவே இருந்த தொகுதியை மாற்றிப் பொதுத்தொகுதியை தனித் தொகுதியாகவும், தனித் தொகுதியை பொதுத் தொகுதியாகவும் மாற்றுகின்றபோது அதற்கு ஏற்றபடி கிராமங்களையும் மாற்றி அதிகமான வாக்காளர் எண்ணிக்கை உடையதாக தாழ்த்தப்பட்டவர்கள் அமையத்தக்க அளவுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற இந்தத் தொகுதி வரையறை ஆணையம் அமைக்கப்பட்டு விட்டால், அவர்கள் கூறுகின்ற கருத்து மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோ. காளன்.

**திரு. கோ. காளான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் குறிப்பிட்டதைப் போல் வில்லிவாக்கம் தொகுதி தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, இந்தியாவில் மட்டும் அல்ல உலகத்திலேயே மிகப் பெரிய (சிரிப்பு) தொகுதியாக இருந்துகொண்டிருக்கிறது. ஏறக்குறைய 5 லட்சம் வாக்காளர்கள் அந்தத் தொகுதியில் இருக்கிறார்கள். அம்பத்தூர் நகராட்சியில் மட்டும் ஏறக்குறைய 3 லட்சம் ஜனத்தொகை, 2 லட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். அதுவே ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஈடாக இருக்கிறது. ஆனால அந்தத் தொகுதியைச் சுற்றி பல்வேறு சட்டமன்றத் தொகுதிகளும், பாராளுமன்றத் தொகுதிகளும் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, நீண்ட நாட்களாக இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வருகின்றது. எனவே, அந்தத் தொகுதியை, அம்பத்தூர் நகராட்சியை மட்டும் ஒரு சட்டமன்ற தொகுதியாகவும், மற்ற போரூர், வளசரவாக்கம், வில்லிவாக்கம் ஒன்றியம் அண்ணா நகர் போன்ற பகுதிகளில் அடங்கியிருக்கின்ற இடங்களை, மூன்றாகப் பிரிக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டாலும் கூட, மற்ற தொகுதிகளோடு அவற்றை அட்ஜஸ்ட் செய்துவிட்டு, அந்தத் தொகுதியைக் கொஞ்சம் குறுகலாக செய்வதற்கு அரசிடம் ஏதாவது ஆலோசனை இருக்கிறதா ; இதுகுறித்து ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் தொகுதி தமிழ

கத்தில் மட்டுமல்லாமல், இந்தியாவில் மட்டுமல்லாமல், உலகத்திலேயே மிகப் பெரிய தொகுதியாக இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தனிப் புகழையும் பெருமையும் தந்து கொண்டுதான் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் புகழையும் பெருமையையும் ஏன் இழக்க விரும்புகிறார் என்பது நமக்குப் புரியவில்லை. இருந்தாலும் வரையறை ஆணையம் அமைக்கப்பட்ட பிறகுதான், இப்படிப்பட்ட பெரும் தொகுதிகள் சிறு தொகுதிகளாகப் பிரிக்கப்படும். அப்போதுதான் எந்தெந்தப் பகுதிகளை எப்படிச் சேர்ப்பது என்பதில் ஒரு முடிவுக்கு வர முடியுமே தவிர, இப்போது எந்தெந்தப் பகுதிகளைச் சேர்ப்பது என்று நான் சொல்ல முடியாது. அந்த வரையறை ஆணையம் வரும்போது யாரும் அவர்களிடத்தில் பரிந்துரை செய்யலாம். பரிந்துரை செய்கின்றபொழுது, எந்தெந்தப் பகுதிகள் ஒன்றாக இருந்தால் நல்லது என்பது பற்றியும் முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 23. திரு. அ. தேவராஜ். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

**23—**

**துணை நீதிமன்றம்.**

**4693 திரு. அ. தேவராஜ் :**

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செய்யாறு தாலுகாவில் துணை நீதிமன்றம் கொண்டு வர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. அ. தேவராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசுகின்றபொழுது 'இல்லை' என்று தெரிவித்தார்கள். செய்யாறு தொகுதியைப் பொறுத்தவரையிலே, இது மிகப் பெரிய தொகுதி. சப்-கலெக்டர் அலுவலகமெல்லாம் இருக்கின்றன. கோர்ட்டுக்குச் செல்ல வேண்டுமென்றால் நாங்கள் ஆரணிக்குத்தான் செல்ல வேண்டும்.



சப்-டிவிஷன் ஆபீசர் அலுவலகம் முதல் எல்லா அலுவலகங்களும் செய்யாறில் இருப்பதால் பொது மக்கள் அங்கே வந்து போவதற்கு வசதியாக இருக்கிறது. ஆனால் கோர்ட்டு என்று சொல்ல வேண்டுமென்றால் ஆரணிக்குத்தான் செல்லவேண்டும். செய்யாறு தொகுதியின் ஒரு கோடியிலிருந்து ஆரணியைப் பார்த்தால் 70 கிலோ மீட்டர் தூரம் வருகிறது. வழக்குகளும் நிறைய தேங்கி இருக்கின்றன. ஆகையால், இனிமேலாவது அதைச் செய்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஒரு சப்-கோர்ட் அமைக்க வேண்டுமானால், அதற்கு ஹைகோர்ட்டுதான் அனுமதி கொடுக்க வேண்டும் ஒன்று. அவர்களுக்கு கோரிக்கை விடவேண்டும். அல்லது அரசுக்கு கோரிக்கை வைத்தால் அந்தக் கோரிக்கையை உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி ஒப்புதல் பெற இந்த அரசு ஆவன செய்யும்.

**திரு. அ. தேவராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோரிக்கை விடப்பட்டு நீண்டநாட்களாக தேங்கி இருக்கிறது. அதையாவது எடுத்து ஆவன செய்யவேண்டும் மறுபடியும் வேண்டுமானாலும் நான் கோரிக்கை விடுக்கிறேன். அதையாவது உடனடியாக பூர்த்தி செய்து தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே அதிகாரிகள் கொடுத்த தகவலில் அப்படிப்பட்ட குறிப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை எடுத்துக் கொண்டு அதற்கு உசிதமான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

**டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தேவராஜ் அவர்கள் கூறியபோது, துணை நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டுமென்றால் ஆரணிக்கு வரவேண்டுமென்று சொன்னார்கள். உண்மையிலேயே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலே, ஆரணிதான் மையப் பகுதியிலே இருக்கிறது. செய்யாறிலேயிருந்து வரவேண்டுமானாலும் சரி, திருவண்ணாமலையிலே, அந்தப்

பகுதியிலேயிருந்துதான் வர வேண்டும். மத்தியிலே இருக்கிற இடமாக ஆரணி இருக்கிற காரணத்தால், செய்யாறிலே இருக்கிற துணைக் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் உள்ள அலுவலகங்களை ஆரணிக்கு மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி எழுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 24 திரு. கு. தங்கமுத்து, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

24—

**பூதான இயக்கம் மூலம் தானமாக வழங்கப்பட்ட நிலங்கள்.**

3239 திரு. கு. தங்கமுத்து :

திரு. கே. ஆர். முருகானந்தம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆச்சாரியா வினோபாபாவே ஆரம்பித்த பூதான இயக்கத்திற்கு தமிழ்நாட்டிலிருந்து எவ்வளவு நிலம் தானமாக கொடுக்கப்பட்டது ?

(ஆ) அந்த நிலங்கள் எந்த முறையில் பிறருக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டன ?

(இ) ஒப்படை செய்யாமல் மீதமுள்ள நிலங்கள் எப்பொழுது ஒப்படை செய்யப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ), (ஆ) மற்றும் (இ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தானமாகப் பெறப்பட்ட நிலம், 9,929 ஹெக்டேர் ஆரம்ப கட்டத்தில், கிராமங்களில் 'தலக்குழு' அமைக்கப்பட்டு அதன் மூலமாக, தமிழ்நாடு பூதான வாரிய மூலமாகக் கிடைக்கப்பட்ட நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நபருக்கு 2.5 ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள நிலங்கள் விரைவிலே பிரித்துக் கொடுக்கப்படும்.





**திரு. கு. தங்கமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆச்சாரியா வினோபாபாவே ஆரம்பித்த இந்த பூதான இயக்கத்திற்கு எடுக்கப்பட்ட நிலங்கள் எவ்வளவு என்று அறிவித்து இருக்கிறார்கள். மீதமுள்ள நிலங்கள் எவ்வளவு ? அந்த நிலங்கள் எப்போது பிரித்துக் கொடுக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.50

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மீதம் 1,404 ஹெக்டேர் இருக்கிறது. அவைகளை விரைவிலே பிரித்துக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. கே. ஆர். முருகானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை கிராமங்கள் கிராம தானமாக பூமிதானச் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும், அதன்மூலம் எத்தனை ஏக்கர் நிலங்கள் கிராமதான இயக்கத்தில் உள்ளது என்பதையும், கிராமதானத்தினுடைய வரைமுறைகள் என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பூமிதானத்தைப் பற்றியது கேள்வி. கிராமதானத்தைப்பற்றியது அல்ல. அது வேறு. இது வேறு. ஆகவே, கிராமம் எவ்வளவு என்பது இதில் துணைக் கேள்வியாக வராது. பூமிதானத்தைப் பற்றித்தான் துணைக் கேள்வி வரும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமதானத்தின்படி தமிழ்நாட்டில் 2,049 கிராமங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கிராம தானத்தின் மூலமாக 1,50,105 ஏக்கர் நிலங்கள் இன்றைக்கு அரசிடத்தில் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமதானம் என்றால், அந்தக் கிராமத்தைக் கொடுக்கிறபொழுது, அந்தக் கிராமத்திலுள்ள பட்டாதாரர்கள் பாதிப் பேர் அல்லது மூன்றில் இரண்டு பேர் உள்ளவர்கள் அதற்குச் சம்மதம் தெரிவிக்க வேண்டும் அல்லது அந்த கிராமத்திலுள்ள நிலங்களில் பாதி நிலங்களுக்கு மேல் அந்தக் கிராமதானத்திலே கொடுப்பதற்கு அவர்கள் ஒப்புதல் தர வேண்டும். அப்படிக் கொடுக்கப்பட்டால் அந்த நிலம் கிராமதானமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு அந்த நிலம் அத்தனை

யும் கிராமதானத்திற்குச் சொந்தம் ஆகிறது. யார் யார் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களோ அவர்கள் அதில் பயிர் செய்ய லாம்; அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அந்தக் கிராமதானத் தின் மூலமாக—அந்த வாரியத்தின் மூலமாக—பூமிதான இயக் கத்தின் மூலமாக உதவிகளைச் செய்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. சத்தியமூர்த்தி.

**திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, பூமிதான இயக்கத்தின் மூலம் கொடுக்கப்பட்ட நிலங்களில் 1,404 ஹெக்டேர் இதுவரையில் பிரித்துக் கொடுக்கப்படாமல் இருக் கிறது என்று சொன்னார்கள். அந்த 1,404 ஹெக்டேர் நிலங்கள் இதுகாறும் யாருடைய அனுபவத்தில் இருக்கின்றன? இத்தனை ஆண்டுக் காலமாக அந்த நிலம் பிரித்துக் கொடுக்கப்படாததற்கு என்ன காரணம் என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அவையில் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே சில பகுதிகள் பூமிதான இயக்கத்திலே இருக் கிறது. சில பகுதிகள் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. சில பகுதி களை அவர்கள் பூமிதானமாகக் கொடுத்துவிட்டு, அவர்களுடைய வாரிசுகள் கோர்ட்டிலே வழக்குத் தொடுத்து இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து, விரைவிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. பி. ராஜு.

**திரு. கே. பி. ராஜு:** பேரவைத் தலைவரவர்களே, பூமிதானம் கொடுத்ததாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்த பூமி தான மாகக் கொடுப்பது, யார் யாருக்கு எந்தெந்தப் பிரிவின் கீழ் தருகி றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பூமிதானம் என்பது ஆச்சாரியா விநோபாபாவே அவர்கள் 1956 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வருகிறபொழுது, இங்கே உள்ளவர்கள் கொடுப்பதற்குத்தான் பூமிதானம் என்று பெயர். அவர்கள் கொடுத்த நிலங்களெல்லாம் பூமிதானத்தில் சேர்க்கப்படுகின்றன. அதைப் பிரித்துக் கொடுக்கிறபொழுது எப்பொழுதும் அரசினுடைய விதிமுறைப்படியும், பூமிதான விதி முறைப்படியும் நிலமற்றவர்களுக்கு குறைந்தது இரண்டரை



ஏக்கருக்கு அதிகம் இல்லாமல் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. அதற்குத்தான் முதலில், 'தலக்குழு' என்று சொன்னேன். 'தலக்குழு' என்றால், அந்தக் கிராமம்—கிராமம் என்றால், தலம் என்றால் அந்த இடம். அந்தக் கிராமத்திலே ஒரு குழு அமைந்து, அந்தக் குழுவின் மூலமாக அது முதலிலே கொடுக்கப்பட்டது. இப்பொழுது வாரியம் அமைத்து, வாரியத்தின் மூலமாக கொடுக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி ஜி. மல்லிகா.

**செல்வி ஜி. மல்லிகா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புவி ஆள வந்த நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் பூதான இயக்கத்தின் மூலம் பெறப்பட்ட நிலங்களை, நிலம் இல்லாதவர்களுக்கு வழங்கி, சர்வோதய கிராமம் அமைக்க வேண்டுமென்ற திட்டத்தை அமல்படுத்த அரசு முயற்சி செய்யுமா, முயற்சிக்குமா?

முற்பகல் 9.55

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அதற்கான ஒரு வாரியம் அமைக்க வேண்டுமென்றால், ஆச்சாரிய விநோபாபாவேயினால் அமைக்கப் பட்ட ஒரு குழு வார்தாவில் இருக்கிறது; அவர்களைக் கேட்டுத் தான் வாரியம் அமைக்க வேண்டும். இப்போது, தமிழக முதல மைச்சர், புரட்சித் தலைவி அவர்களின் அனுமதி பெற்று, ஒரு சட்ட முன்வடிவு இந்த அவை முன் வைக்க இருக்கிறோம். அந்த சட்ட முன்வடிவு வந்துவிட்டால், இந்த அரசே வாரியத்தை அமைத்து, நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25. திரு. எம். பூராசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

25—

### தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடம்

*** 3307. திரு. எம். பூராசாமி /**

மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத் திற்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1992 பிப்ரவரி 4

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 26: திருமதி கற்பகம் இளங்கோ; மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

26—

### காரைக்குடியில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம்.

*4820. திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காரைக்குடியில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இல்லை.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலேயே பல்கலைக் கழகம் உள்ள நகரம் காரைக்குடிதான். மேலும், படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் அதிகமாக உள்ள நகரமும் காரைக்குடிதான். எனவே, வரும் நிதியாண்டிலாவது, எனது கோரிக்கையை பரிசீலனை செய்து, எனது தொகுதி மக்களின் நீண்டகாலக் குறையை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில், சிவகங்கையில் ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இருக்கிறது. அந்த மாவட்டத்திலேயே இன்னொரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கின்ற வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 27: டாக்டர் வெ. சரோஜா; மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



1992 பிப்ரவரி 4]

27—

### ஆரம்ப சுகாதார நிலையம்.

* 1546 டாக்டர் திருமதி வெ. சரோஜா:

மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கி.பி. 2000 ஆண்டுகளுக்குள் அனைவருக்கும், நல்வாழ்வு என்ற அரசின் கொள்கைப்படி சமவெளிப் பகுதியில் 30,000 ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், மலைப்பகுதி எனில் 20,000 ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற கணக்கின்படி ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 1,429 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

டாக்டர் (திருமதி) வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆரம்ப சுகாதார நிலையம் இருந்தும், இவ்வளவு ஜனத்தொகைக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், மக்களின் தேவையை இன்னும் முழுமையாகப் பூர்த்தி செய்ய இயலவில்லை. குறிப்பாக, எனது தொகுதியில் ஒரு சில ஊர்களில் அப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன. அது குறித்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளேன். அதை அரசு பரிசீலித்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 30,000 ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற விகிதத்தில் இருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் எவ்வளவு ஜனத்தொகை இருக்கிறதோ, அதற்கேற்ப அந்த நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது, துணை சுகாதார நிலையங்களைப் பற்றி; அதாவது சப்-சென்டர்களைப் பற்றி சொல்கிறார்

கள். சப்-சென்டரில் இப்போது தேவையான அளவுக்கு, அதாவது 5,000 ஜனத்தொகைக்கு ஒரு சப்-சென்டர் என்ற விகிதத்தில் இருக்கிறது. எங்கேயாவது அவ்வாறு குறைபாடு இருந்தால், அதை நிவர்த்தி செய்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**டாக்டர் (திருமதி) வெ. சரோஜா:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கக்கூடிய சுகாதார நிலையங்களில் மருந்துகளே இல்லாமல் இப்போது இருந்து கொண்டிருக்கின்றன. மருந்துகள் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு நிலை முன்பு இருந்தது மறுக்கமுடியாத உண்மை. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், மருந்துகள் தேவையான அளவு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இப்போது, ஆங்காங்கே இருக்கிற மெடிகல் ஆபீசர்ஸ், சீப் மெடிகல் ஆபீசர்ஸ் தேவையான மருந்துகளை தாங்களாகவே வாங்கிக்கொள்ளலாம் என்ற உத்தரவையும் அரசாங்கம் போட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ரூ. 10,000 கூடுதலாக மருந்துகள் வாங்குவதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இப்போதுள்ள ஒரு பிரச்சினையைத் தெரியப்படுத்தலாம் என்று கருதுகிறேன். கடந்த 2, 3 ஆண்டுக்காலமாக மருந்துகள் வாங்குகிற முறையிலே மாறுபாடுகள் செய்துவிட்ட காரணத்தினால், அவை வாங்குவதிலே மிகப் பெரிய தடை ஏற்பட்டிருக்கிறது; சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, டெண்டர் கால் ஃபார் செய்த பின்னாலே, அந்த டெண்டரை ஃபைனலைஸ் செய்து கொடுப்பதற்கு மிகப் பெரிய காலதாமதம் ஏற்பட்டுவிட்ட காரணத்தினால், இந்த ஆண்டு அதிலே மிகப் பெரிய சோதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். இருந்தாலும், அதையெல்லாம் நிவர்த்தி செய்கிற வகையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு 3 மாத காலத்திற்கு இந்தச் சிரமத்தை நாம் சந்தித்துத்தான் ஆகவேண்டும். காரணம், பட்ஜெட் வந்த



பின்னாலே தான், புதிய சென்ட்ரல் பட்ஜெட் வந்த பின்னாலே தான் புதிய டெண்டர் கால்ஃபார் செய்ய முடியும். அதுவரை லோகல் பர்சேஸ் என்ற முறையிலே கொஞ்சம் அதிகச் செலவு ஆனாலும் கூட தேவையான மருந்துகளை வாங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10.00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ உதவி செய்வதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அநேகமாக கடந்த 2-ம் தேதி என்னுடைய தாலுக்கா மருத்துவமனையில் ஒருவர் காரிலே அடிபட்டு மிகவும் உயிருக்கு ஆபத்தான நிலையிலே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கின்ற போது தாலுகா மருத்துவ மனையிலே சலைன் பாட்டில் கிடையாது; பேண்டேஜ் துணி கிடையாது; குறிப்பாக, டியூட்டி பார்க்கிற டாக்டர் கிடையாது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை அநேகமாகத் தமிழகம் எங்கும் இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்தக் குறைபாடுகளை உடனடியாகக் கவனித்து, ஏழை எளிய மக்களுக்காவது இன்றைக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டுமல்ல, தாலுக்கா மருத்துவமனையிலாவது ஒரு அவசரத்திற்காவது வேண்டிய மருந்துகளைக் கொடுத்து உதவுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி, சில இடங்களிலே அந்தத் தவறுகள் இருக்கலாம். ஆனால் எல்லா இடங்களிலும் அப்படி இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மொத்தமாகச் சொல்வது தவறான தகவல் ஆகும். சில இடங்களிலே இருப்பதை நாங்களே நேரிடையாகக் கவனித்து அதைப் போக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம். கடந்த மூன்று ஆண்டுக் காலமாக இந்த மருந்துகள் வாங்குகிற வகையிலே ஏற்பட்ட சில தவறுகளின் காரணமாக அல்லது தவறான அணுகுமுறையின் காரணமாக குறைபாடுகள் ஏற்பட்டது. இப்போது இந்த ஆண்டும் நாம் அதே முறையைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. காரணம், இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்பதற்கு முன்னாலேயே அந்தக் கமிட்டி அமைக்கப்பட்டு, அதற்குத் தேவையான எல்லா

டெண்டர்களையும் அவர்கள் கால்ஃபார் செய்து விட்டார்கள். இன்றைக்கு நாம் டெண்டர் கால்ஃபார் செய்தால்கூட, வருகிற 28-ம் தேதி வரை சரியான டெண்டர் கிடைக்காது. எனவேதான் வருகிற 15-ம் தேதி டெண்டர் கால்ஃபார் செய்ய இருக்கின்றோம். அதிலேயிருந்து ஒரு மாத காலம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஏறத்தாழ 1½ மாத காலம் நமக்கு அதைப் பைனலைஸ் செய்வதற்குத் தேவைப்படுகிறது. காரணம் 1200 மருந்துகள் அதன் மூலம் வாங்கப்பட வேண்டியிருக்கிறது. விலைப் பட்டியலைத் தேர்ந்தெடுத்து, குறைந்த விலை எது என்று பார்த்துக் கொடுக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. தரம் பார்க்க வேண்டியிருக்கிறது. ஏறத்தாழ 3 மாத காலம் அதைப் பரிசீலனை செய்தால்தான் அவற்றைப் பைனலைஸ் செய்ய முடியும். இருந்தாலும் கூட, விரைவாகச் செய்ய வேண்டுமென்று கருதி, மூன்று கமிட்டி ஆகப் பிரித்து, 1½ மாத காலத்திற்குள் அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். இந்த இடைப்பட்ட நேரத்திலே, அதிக விலை இருந்தாலும் பரவாயில்லை, வெளியிலே வாங்கிக் கொள்ளுங்கள் என்று உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் வாங்கப் பயப்படுகிறார்கள். பின்னாலே அவர்களுக்குப் பிரச்சினை வரும் என்று கருதி வாங்கப் பயப்படுகிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள்—மருந்து இல்லை என்ற நிலை வரக்கூடாது என்ற காரணத்தினால் அவர்களுக்கு உறுதி செய்யப்பட்டிருக்கிறது. உங்களுக்குப் பிரச்சினை வராது. தேவையான மருந்துகளை வாங்கிக் கொள்ளுங்கள் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டியது பற்றியாகும். இப்படி, மருந்து, ஊசி என்று போய்க் கொண்டே இருந்தால் நம்முடைய வினாப் பட்டியலை முடிக்க முடியாது. அடுத்து, வினா எண். 28 திரு. இரா. நடேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

28—

## ரப்பர் தொழிற்சாலை.

***3509. திரு. இரா. நடேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) கன்னியாகுமரி மாவட்டம், பெருஞ்சாணி அணை அருகே ஆரம்பிக்கப்பட்ட ரப்பர் தொழிற்சாலை மூடி இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் மீண்டும் செயல்படத் தொடங்கும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு ரப்பர் கழகத்தின் பெருஞ்சாணி ரப்பர் தொழிற்கூடம் மூடப்படவில்லை. ஆனால் தற்காலிகமாக கழகத்தின் நலன் கருதி அத்தொழிற்கூடத்தின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(இ) இவ்வினாக்கள் எழ இடமில்லை.

**திரு. இரா. நடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூடப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் தான் அந்த பேக்டரி நிறுவப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1990-ல் இருந்து மூடி வைத்திருக்கிறார்கள். உண்மையான தகவல் அதிகாரிகளால் கொடுக்கப்படவில்லை என்று நான் நினைக்கிறேன். கூடிய சீக்கிரம் அதைத் திறந்து அங்குள்ளவர்களுக்கு வேலை கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரப்பர் ஷீட்கள் அங்கே உற்பத்தி செய்வதைக் காட்டிலும் 'செனக்ஸ்' எனப்படும் பொருளை உற்பத்தி செய்வதால் கூடுதலாக 20 ரூபாய் கிடைக்கின்ற காரணத்தால் அதை நாம் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். அந்தக் கூடத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களைக் காப்பாற்றுகின்ற வகையில், தொழிலாளர்களை வாழ வைக்கின்ற நம்முடைய ஒப்பற்ற தலைவி, தமிழக முதல்வர் அவர்கள் மைலார் தொழிற்கூடத்திலும், கீரிப்பாறைத் தொழிற்கூடத்திலும் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டு தொழிலில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. நடேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரப்பர் பாலை 'லேடக்ஸாக' விற்றால் கூடுதலாக 20 ரூபாய் இலாபம் கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சந்தோஷம். அப்படி அவர்கள் சொன்ன போதிலும், தனியார்களுக்குக் கிடைப்பதைப் போல அந்த நிர்வாகத்திற்கு இலாபம் வராததற்கு என்ன காரணம் என்று அமைச்சர் அவர்கள் சற்றுச் சிந்தித்து அதற்கு வேண்டிய நடவடிக்கையைக் கூடிய சீக்கிரம் எடுத்து, இந்தப் பெருஞ்சாணி பேக்டரியைத் துவக்கி அங்குள்ள ஏழை எளியவர்களுக்கு வேலை கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறப்பதுதான் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆசை. அவர்களுடைய திட்டத்தை நிறைவேற்றுகிற வகையில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சுந்தரதாஸ்.

**திரு. மா. சுந்தர தாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற தனியார் நடத்துகிற ரப்பர் தொழிற்சாலைகள் எல்லாம் பல கோடி ரூபாய் இலாபம் ஈட்டுகின்றன. ஆனால் அரசு நடத்துகிற ரப்பர் கழகமானாலும் சரி, அல்லது எஸ்டேட் ஆனாலும் சரி அரசின் தொழிற்சாலைகள் எல்லாம் நஷ்டத்தில்தான் ஓடுகின்றன. எனவே அதைப்பற்றி விரிவான விசாரணை நடத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொழிற்கூடத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளிக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளங்கள் வேறு. நம்முடைய அரசு ரப்பர் தொழிற்கூடங்களில் பணியாற்றுகிற தொழிலாளிகள் டெக்னிக்கல் படிப்பு படித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு போனஸ் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு சம்பளம் உயர்த்தப்படுகிறது. இதுபோன்ற நிலைமைகள் இருக்கின்ற காரணத்தால் நம்முடைய அரசு நடத்துகின்ற தொழிற்கூடங்கள் தனியாரைப்போல் இலாபத்தை ஈட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது என்பதை உறுப்பினர்கள் அனை



வரும் நன்றாக அறிவார்கள். ஆகவே தனியாருக்கும் அரசுக்கும் தொழிற்கூடங்கள் நடத்துவதிலே வேறுபாடுகள் இருக்கின்றன என்பது இங்குள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே இந்தத் துறையைப் பொறுத்தவரையில் ரப்பர் தொழிற்கூடங்கள் சிறப்பான முறையில் சிறந்து விளங்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. தனியாரைப்போல் இலாபத்தை ஈட்டுவதற்குரிய வகையில் விரைந்து செயலாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29.** திரு. ஆர். டி. அரங்கநாதன். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

29—

**விருத்தசாலத்தைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு பேருந்து வசதி**

*** 4740. திரு. ஆர். டி. அரங்கநாதன் :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலம் நகரை மையமாகக்கொண்டு சுற்றிலும் உள்ள கிராமங்களுக்கு போதிய பேருந்து வசதி இல்லையென்பதை அரசு அறியுமா ?

(ஆ) எல்லா கிராமங்களுக்கும் விரைவில் புதிய பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விருத்தாசலம் பணிமனை மூலமாக தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், விருத்தாசலத்தை மையமாகக் கொண்ட கிராமங்களுக்கு பேருந்து வசதிகளை அளித்து வருகிறது. பேருந்து வசதி பெறாத கிராமங்களுக்கெல்லாம், அக்கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தவுடன் பேருந்துகளை அங்கே விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. ஆர். டி. அரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் தொகுதியில் விருத்தாசலம் நகரைச் சுற்றியுள்ள நூற்றுக்கு மேற்பட்ட கிராமப் பொதுமக்கள் விவசாய

[1992 பிப்ரவரி 4

விளைபொருட்களைக் கொண்டு வந்து விற்கவும், அத்தியாவசியப் பொருட்களை வாங்கிச் செல்லவும், அதுமட்டுமல்லாமல் மக்கள் பொது மருத்துவமனைக்கு வந்து செல்வதற்கும் உரிய இடமாக இருக்கிறது. அரசின் அலுவல் சம்பந்தப்பட்ட வேலைகளுக்காகவும் வந்து கூடுகின்ற இடமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் மிக முக்கிய நகரமாக விருத்தாசலம் விளங்குகிறது. தற்போது மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விழுப்புரம் நகருக்கு வருகை தந்தபோது எனது தொகுதியில் சில கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்து கொடுத்தார்கள். அதற்கு எனது தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அதேபோல் மீதம் உள்ள கிராமங்களுக்கும் பேருந்து வசதிகளைச் செய்து கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களையும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் எனது தொகுதியின் மக்கள் சார்பாகக் கேட்டுக் கொண்டு அதற்கு அரசு முன்வருமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலத்தைப் பொறுத்த வரையில் 19 புறநகர் பேருந்துகளும், 47 நகரப் பேருந்துகளும் இப்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம். அருகாமையில் உள்ள பணிமனைகளிலிருந்து விருத்தாசலத்திற்குக் கூடுதலாக 22 பேருந்துகள் இப்போது இயக்கிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழக அரசின் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் விழுப்புரம் நிகழ்ச்சி நடைபெறுகிறபோது ஒரே நாளில் 72 பேருந்துகள் தென்னாற்காடு மாவட்டத்தில் இயக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரையிலும் 1992 நவம்பர் முடிவதற்குள் 1000 மக்கள் தொகை இருக்கிற அத்தனை கிராமங்களுக்கும் பேருந்து வசதிகளைச் செய்வதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதைப் பணிவுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 30. திரு. ஏ. டி. செல்லசாமி. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.



1992 பிப்ரவரி 4]

30—

## ஒட்டன்சத்திரம் தொகுதியில் விசைத்தறி ஆலைகள்

*172—திரு. ஏ. டி. செல்லசாமி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தொழில்துறையில் பின்தங்கிய ஒட்டன்சத்திரம் தொகுதியில் விசைத்தறி ஆலைகள் பெருமளவில் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ):

தொழில் துறையில் பின்தங்கிய பகுதியான ஒட்டன்சத்திரம் தொகுதியில் 'கேதையுறம்பு' கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு பிரதம விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் நிறுவ பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலமாக துவக்கத்தில் 31 தறிகள் மட்டும் நிறுவுவதற்குத் தேவையான நிதியுதவிக்கு இந்தத் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தற்போது ஒட்டன்சத்திரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு விசைத் தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் துவக்கும் கருத்துரு கைத் தறித் துறையில் இருக்கிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**திரு. ஏ. டி. செல்லசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. மேலும் எங்களுடைய தொகுதிக்குட்பட்ட கிராம மக்கள் தொழில் எதுவும் இல்லாமல் வேறு மாவட்டங்களுக்குச் சென்று வருகிறார்கள். அங்கே விவசாயக் கூலியைத் தவிர வேறு எந்தத் தொழிலும் கிடைப்பதில்லை. ஆகவே விரைவாக நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அங்கே ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி அங்கேயுள்ள ஏழைத் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு என்று அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 பிப்ரவரி 4

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவில் 51 தறிகள் கொண்ட ஒரு கூட்டுறவு அமைப்புச் சங்கம் கேதையுறம்பு கிராமத்தில் உருவாக இருக்கிறது. இன்னொன்று ஒட்டன்சத்திரத்தை மையமாகக் கொண்டு இன்னொரு கூட்டுறவுச் சங்கம், விசைத் தறி கூட்டுறவுச் சங்கம் துவக்குவதற்காக பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 31. திரு. கோ. காளன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

31—அம்பத்தூர் பகுதியில் மின்சாரத் தடங்கல்.

*** 1609—திரு. கோ. காளன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அம்பத்தூர் பகுதியில் அடிக்கடி மின்சாரத் தடங்கள் ஏற்படுவதைத் தடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் பகுதியில் ஏற்படுகின்ற மின்சாரத் தடைபற்றி இப்போது அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகின்ற நேரத்திலே உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. காளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் பகுதி என்பது ஒரு தொழில் கேந்திரமான பகுதியாகும். தொழிற்சாலைகளுக்கும், வீடுகளுக்கும்-டொமஸ்டிக் பர்பஸுக்கும் ஒரே சப்-ஸ்டேஷன் மூலமாக மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தொழிற்சாலைகளுக்கு அதிகமாகத் தேவைப்படுகின்ற நேரத்தில் வீடுகளுக்கு கரண்ட் சரியாக வருவது கிடையாது. அதிலும் குறிப்பாக 20, 25 ஆண்டுகளுக்கு முன்பாகப் போடப்பட்ட மின் லைன்கள் மிகவும் சேதாரம் அடைந்து, அடிக்கடி அந்தப் பகுதியில் மின் ஒயர்கள் அறுந்து விழுந்து பல விபத்துக்களை ஏற்படுத்துகிறது. அதேபோன்று அம்பத்தூர் பகுதி சிறிதாக இருந்தபோது அன்றைய தேவையை அனுசரித்து டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்பட்டது.



1992 பிப்ரவரி 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தடங்கல் பற்றிய கேள்விதான். நீங்கள் அந்த மின் லைனிலே என்னென்ன கோளாறுகள் இருக்கின்றன என்று பேசிக்கொண்டிருக்கிறீர்கள். மின் லைனிலே ஒயர்கள் அறுந்துவிழுகிறது அது, இது என்று சொல்லிக்கொண்டிருந்தால் கேள்வி எப்படி வரும் ?

**திரு. கோ. காளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குள்ள ஜனத்தொகைக்கு ஏற்ப அந்த டிரான்ஸ்பார்மர்களை மாற்றியமைத்தால் நிச்சயமாக அப்படிப்பட்ட பழுதடைவு ஏற்பட முடியாது. எனவே அந்த டிரான்ஸ்பார்மர்களை மாற்றியமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ? அந்தப் பகுதியில் இரவு நேரத்தில் லோ வோல்ட்டேஜ் ஏற்படுகின்றபோது அடிக்கடி 'டப், டப்' என்று சத்தம் வந்து இருளில் மூழ்கி விடுகிறது. அது கடைசியில் வேறு யாராவது சுடுகின்றார்களா அல்லது டிரான்ஸ்பார்மர்களால் ஏற்படக்கூடிய விபத்துக்களா என்று மக்கள் அஞ்சுவதற்கு வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றது. எனவே அரசு அதைத் தீர்ப்பதற்கு உடனடியாக தகுந்த டிரான்ஸ்பார்மர்களையும் ஒயர்களையும் மாற்றியமைக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்பத்தூர் பகுதியினுடைய மின் தடை பற்றி இங்கே சொன்னார்கள். அம்பத்தூர் பகுதி என்பது தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி என்பதை இந்த அரசு கவனத்தில் கொண்டிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியினுடைய மின் தடையை நீக்குவதற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஒன்று. 110 கிலோ வாட், ஆவடி அதி உயர் மின் பாதையில் கம்பிகளில் பளுவினை அதிகப்படுத்துகின்ற நடவடிக்கை ஒன்று. ஆவடி ரயில் மின் இணைப்புக்கான பாதையையும் மணலி உப மின் நிலையத்திலிருந்து மாற்றியோ அல்லது ஸ்ரீபெரும்புதூர் 110 கே.வி. உப மின் நிலையத்திற்கு மாற்றியோ ஆவடி 110 கே.வி. மின் பாதையில் பளுவினைக் குறைப்பதற்கும் மற்றும் கிளை மின் பாதையில் மின் பளுவினைக் குறைப்பதற்கும் ஆய்வு செய்து ஒரு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றோம்.

[1992 பிப்ரவரி 4

மூன்றாவதாக புழல் கிராமத்தில் புதிய 110/11 கிலோ வாட்டுக்குள் உப மின் நிலையத்தை நிறுவி ஆவடி உப மின் நிலையத்தையும் நிறுவி ஆவடி உப மின் நிலையத்திற்கும் மின் பளுவினை குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். ஒரு பகுதி பளுவினை திருநின்றவூர் என்கின்ற பகுதியிலிருந்து, 33/11 கிலோவாட் என்கின்ற உப மின் நிலையம் மூலம் மாற்றியமைப்பதற்கு மின் சப்ளை கொடுப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

ஆக இது போக, டிஸ்ட்ரிபியூஷன் என்று சொல்கின்ற அந்த மின் பகிர்மானத்தைப் பற்றி உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அந்த லோ வோல்டேஜ் என்று சொல்கின்ற அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்குமான பல்வேறு நடவடிக்கைகளை இந்தப் பகுதியிலே எடுத்திருக்கிறோம். ஆகவே இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலேயும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்ற காரணத்தினாலே இனிமேல் 'டப், டப்' என்ற சத்தம் வராது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காளன் கேள்வியாகக் கேளுங்கள்.

முற்பகல் 10-15

**திரு. கோ. காளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32. திரு. எஸ். எம். கிருஷ்ணன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

32—

**இரயில்வே மேம்பாலம்.**

***3917—திரு. எஸ். எம். கிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாம்பரம்-வேளச்சேரி சாலையிலுள்ள இரயில்வே லேவல் கிராசிங்கில் மக்கள் நலம் கருதி மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



1992 பிப்ரவரி 4]

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசிடம் இதுபற்றிய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 33. திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

33—

**வள்ளிமதுரம் கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

*** வினா எண் 1266—திரு. ச. புரட்சிமணி:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டத்தில் மங்களூர் தொகுதியில் வள்ளிமதுரம் கிராமத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் மங்களூர் மற்றும் 24 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் வள்ளிமதுரம் கிராமம் சேர்க்கப்பட்டு ஆய்வில் உள்ளது.

**திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள வள்ளிமதுரம் கிராமம் மிகவும் உள்ளடங்கிய கிராமம் ஆகும். அந்தக் கிராமம் வறட்சியான கிராமம் ஆகும். அதனால் அந்தக் கிராமத்திற்கு நிரந்தரமாக குடிநீர்ப் பிரச்னையில் தீர்வு காண அரசு ஏதாவது வழி காணுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று, அதை குடிநீர் வடிகால் வாரியத்தின் தொழில் நுட்பக் குழுவின் அறிக்கையுடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. விரைவில் ஆய்வுப் பணிகள் முடிக்கப்படுவதற்கு அரசின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 34 திரு. கே. [illegible]. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

[1992 பிப்ரவரி 4

34—

## ஆண்டிப்பட்டியில் நுகர்பொருள் வாணிபக் கழக சேமிப்புக் கிடங்கு

* 793—திரு. கே. தவசி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆண்டிப்பட்டியில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆண்டிப்பட்டியில் அப்படிப்பட்ட யோசனை ஏதும் இல்லை. ஆகவே, (ஆ) மற்றும் (இ) வினாக்களுக்கு இடமில்லை.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் 1987-ம் வருட துவக்கத்தில், தம்முடைய தொகுதி மக்களுக்கு அங்கே பல்வேறு சமுதாய நலத் திட்டங்களை துவக்கி வைக்கின்ற போது, 1—1—1987 ஆம் தேதி, அந்த மக்களின் அடிப்படை வசதியான உணவை—அந்தப் பகுதியில் மலைவாழ் மக்கள் மிகுதியாக வாழ்கிறார்கள்—நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் எடுத்துச் செல்கின்ற அந்தப் பொருள்களை தேனி போன்ற ஊர்களிலிருந்து கொண்டு செல்கிற சூழ்நிலை இருப்பதால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விட்டுச் சென்ற பணியை நிறைவேற்றுகின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், வருங்காலத்திலாவது இது நிறைவேற்றப் படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஆண்டிப்பட்டியில் கிடங்கள் இல்லையென்று சொன்னார். ஆண்டிப்பட்டி உள்ளடங்கிய உசிலம்பட்டி வட்டத்திலே. உசிலம்பட்டியிலேயே 1,300 டன் கொள்ளளவு கொண்ட ஒரு சேமிப்புக் கிடங்கு உள்ளது. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே தேவை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்வது புரட்சித்



1992 பிப்ரவரி 4]

தலைவியின் ஆட்சியில் இல்லை. எனவே, இந்தக் கோரிக்கை பரிவோடு பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 35, திருமதி வி. ஜி. மணிமேகலை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

35—

## அருப்புக்கோட்டையில் சென்ட் தொழிற்சாலை

* 4520—திருமதி வி. ஜி. மணிமேகலை :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அருப்புக்கோட்டை தொகுதியில் மல்லிகை அதிகமாக விளைவதால் அதைப் பயன்படுத்தி சென்ட் தொழிற்சாலை தொடங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்கின்ற பேச்சுக்கே இடம் இல்லை என்கின்ற வகையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்தியா சுதந்திரம் அடைந்து விட்டது என்றாலும், பெண்கள் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்கவில்லை என்பதை உணர்ந்து பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற வகையிலே, பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று முழு மூச்சோடு இறங்கி இருக்கின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று கூறுகிறார்கள். அதை அடுத்த முறையாவது நிறைவேற்ற, ஒரு தொழிற்சாலை அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி மகளிருக்கு முக்கியத்துவம் கொடுக்கிற கேள்வி அல்ல. ஓர் ஊரில் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றிக் கேட்டிருக்கிறீர்கள்.

—

**திருமதி வி. ஜி. மணிமேகலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை ஆரம்பித்தால் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாக கொடுக்க முடியும் என்ற வகையிலேதான் இந்தக் கேள்வியைக் கேட்டேன் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெண்களுக்கு முக்கியத்துவம் தரும் வகையிலே இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா என்று கேள்வி கேட்கிறார்கள். மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசியில் மல்லிகைப் பூவிலிருந்து நறுமணத் திரவம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு, 1985 ஆம் ஆண்டிலே, பிரான்ஸ் நாட்டு நிறுவனம் ஒன்றும் வேளாண் பொறியியல் கழகமும் இணைந்து செய்யக்கூடிய முயற்சி ஒன்று உருவாக்கப்பட்டது. பின்னர், அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை அயல்நாடு ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை உருவான நேரத்திலே அது கைவிடப்பட்டது. அதன் பிறகு, தமிழக வேளாண் பொறியியல் கழகமும் மேலை நாடுகளில் வாழ்கிற இந்தியத் தொழிலதிபர்களும், இந்தியாவில் உள்ள தொழிலதிபர்களும் இணைந்து கூட்டு முயற்சியிலே ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டது. பின்னர் அதுவும் பயனில்லாமல் போய்விட்டது. இதற்கிடையிலே உலகச் சந்தையிலே மல்லிகைப் பூவிலிருந்து தயாரிக்கக்கூடிய நறுமணத் திரவியத்திற்கு இணையாக ரசாயனத் திரவியங்கள் அதிக அளவிலே, விலை குறைவாக மார்க்கெட்டுக்கு வந்துவிட்டன. எனவே இந்தத் திட்டங்கள் பயனில்லாமல் போய்விட்டன. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வி, ஆண்கள், வசதி படைத்தவர்கள் அணிந்து கொள்ளக்கூடிய நறுமண சென்ட் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை பற்றியது. அதுபோன்ற சூழ்நிலை இன்றைய தினம் இல்லாத காரணத்தாலே அருப்புக்கோட்டையில் நிறுவுவதற்கு சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**திருமதி வி. ஜி. மணிமேகலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை



என்றுகூறியது எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. அதே நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு நாம் இருப்பது ஒரு புது யுகத்திலே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே இருக்கிறோம். எனவே இல்லை என்ற பேச்சுக்கு இடமில்லாமல், விஞ்ஞான ரீதியாக எத்தனையோ மாற்றங்கள் வந்துள்ள இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து, குறைந்தபட்சம் மல்லிகைப் பூவை அதிகமாக உற்பத்தி செய்ய ஆவன செய்ய வேண்டும். மல்லிகை இதய நோய்க்கு அதிகமாக உதவுவதாக பல புத்தகங்களிலே நான் படித்திருக்கிறேன். அந்த வகையிலே மருத்துவ ரீதியாகவும் மல்லிகையை உற்பத்தி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கலாம். எனவே சென்ட் தொழிற்சாலை நிறுவுவது பற்றி மறுபரிசீலனை செய்து, அந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியின் புனித அரசு இதனைப் பரிசீலனை செய்ய இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 36, திரு. டி. எம் ரங்கராஜன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

**36—**

**திருவான்மியூரில் பத்திரிகையாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம்.**

*** 442 திரு. டி. எம். ரங்கராஜன் :**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, திருவான்மியூரில் பத்திரிகையாளர்களுக்காக நிலம் ஒதுக்கப்பட்டும், வீடு கட்டும் பணி நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அங்கு பத்திரிகையாளர்களுக்கு வீடு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1992 பிப்ரவரி 4

(அ) மற்றும் (ஆ) : சென்னை பத்திரிகையாளர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு திருவான்மியூரில் 5.50 ஏக்கர் நிலத்தை ரூ. 99.25 இலட்சத்திற்கு அரசு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக ஒதுக்கீடு செய்துள்ளது. அச்சங்கம் ரூ. 79.25 இலட்சத்தை வீட்டு வசதி வாரியத்திடம் ஏற்கெனவே செலுத்திவிட்டது. மீதமுள்ள ரூ. 20 இலட்சத்தை அரசு மானியமாக வழங்குவது பற்றிய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. வீட்டுவசதி வாரியத்தை அச்சங்கம் வீடு கட்டும்படி கேட்கவில்லை. சென்னை பத்திரிகையாளர் கூட்டுறவுச் சங்கத்தால் பத்திரிகையாளர்களுக்கு வீடு கட்டப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 37, திரு. எஸ். அன்பழகன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

37—

**நாமக்கல்லில் பழரசம் மற்றும் ஜாம் தயாரிக்கும் தொழிற்சாலை**

*** 1742—திரு. எஸ். அன்பழகன் :**

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாமக்கல் நகரின் அருகிலுள்ள கொல்லிமலையில் உற்பத்தியாகும் பழ வகைகளைக்கொண்டு நாமக்கல்லில் பழரசம் மற்றும் ஜாம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. முஹம்மது ஆசிப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எஸ். அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் தொகுதிக்கு அருகில் உள்ள எருமைப் பட்டி ஒன்றியத்தில் சுற்றுப்புற கிராமங்கள் கொல்லிமலை அடிவாரப் பகுதியில் இருக்கின்றன. அங்கே உற்பத்தியாகும் பழ வகைகளை கொல்லிமலை உயரத்திற்குக் கொண்டு போகும் போது, சில நேரங்களில், குறிப்பாக மழைக் காலங்களில் போக்கு வரத்து வசதியும், சாலை வசதியும் பழுதடைந்து விடுவதால், அங்கே பழங்களைக் கொண்டு போக முடியவில்லை. எனவே தரைப் பகுதியான நாமக்கல்லில் அந்தத் தொழிற்சாலை வந்தால், அது சிறப்பாக நடைபெற வாய்ப்பாக இருக்கும். எனவே அடுத்த ஆண்டாவது அதைக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1992 பிப்ரவரி 4]

**மாண்புமிகு திரு. முஹம்மது ஆசிப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்களையும், காய்கறிகளையும் பதப்படுத்துவதற்கு 1200-க்கும் அதிகமான தொழில் நிலையங்கள் நம் நாட்டில் உள்ளன. தமிழ் நாட்டில் மட்டும் பழங்களைப் பக்குவப்படுத்துவதற்கு 165-க்கும் அதிகமான தொழிற்சாலைகள் உள்ளன. கூட்டுத் துறையில் ரூபாய் 15 கோடி மூலதனத்தில் ஆண்டு ஒன்றுக்கு 10 ஆயிரம் டன் நிறுவனத் திறன் கொண்ட பழம், காய்கறிகளைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை தர்மபுரியில் பர்கூரில் அமைக்கும் திட்டத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் (டிக்கோ) உள்ளது. அதே சமயத்தில் பழங்களையும் காய்கறிகளையும் வீணாகாமல் தடுப்பதற்கு அவை அதிகமாகக் கிடைக்கும் இடங்களில் பழங்களையும் காய்கறிகளையும் பக்குவப்படுத்துவதற்கு நடுத்தர மற்றும் சிறு தொழில்களை நிறுவுவதை ஊக்குவிக்கும்படி மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த ஊரில் அடுத்த ஆண்டாவது தொடங்கப்படுமா என்பதுதான் அவருடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. முஹம்மது ஆசிப்:** ஆகவே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு இதுபற்றி பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 38. திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

38—

**எளிய மக்களுக்குக் கடன் வழங்கும் சிறப்புத் திட்டம்.**

*** 5063 திரு. ப. ரங்கநாதன் :**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகரில் எளிய மக்கள் பயன்பெறும் வகையில் கடன் வழங்கும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

[1992 பிப்ரவரி 4

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் விவரம் என்ன ?

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னை மாநகரில் பெண்களுக்கென்று கடன் வழங்கும் சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளது.

(ஆ) வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள பெண்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடனுதவி பெறும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில், சென்னை மாநகரில் மட்டும் இதற்கான திட்டம் உள்ளது என்று சொன்னார்கள். இது மாநிலம் முழுவதும் விரிவு படுத்தப்படுமா ? எங்கெல்லாம் படித்துவிட்டு பெண்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்களோ, அவர்களுக்கு சுய வேலைவாய்ப்பு வழங்கும் விதத்தில் இது விரிவு படுத்தப்பட்டு, எல்லா பகுதிகளிலும் உள்ள பெண்கள், அதிலும் யார் எல்லாம் உதவி கேட்கிறார்களோ அவர்களுக்கு உதவும் வகையில், இந்தத் திட்டத்தின் கீழ் உதவி செய்வதற்கான, கடன் கொடுப்பதற்கான வழிவகைகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி, சென்னை மாநகரத்தைப் பற்றியது. ஆகவே சென்னை மாநகரத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி சென்னை மாநகரத்தைப் பற்றி இருந்ததால், சென்னை மாநகரைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தமிழகம் முழுவதும் இந்தத் திட்டம் விரிவு படுத்தப்படும் என்பதை புரட்சித் தலைவி அவர்களே அறிவித்திருக்கிறார்கள்.



1992 பிப்ரவரி 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

**திரு. காஞ்சி பன்னீர் செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991—92 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு எதுவும் தனிப்பட்டமுறையில் செய்யப்படவில்லை. ஆனால் இதுவரை சில ஆயிரம் பேர் மட்டும் பயனடைந்த இந்தத் திட்டத்திற்குப் பதிலாக, ஒரு லட்சம் ஏழைப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டமாக இதை முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு அறிவித்திருக்கிறார்கள். இதன் மூலமாக உடல் ஊனமுற்றவர்களும் , தாழ்த்தப்பட்டவர்களும் அதிக அளவில் பயன் பெறும் வண்ணம் இந்த ஆண்டு ரூ. 15 கோடியில் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இத்திட்டம் இந்த ஆண்டு பிப்ரவரி இறுதியில் புரட்சித் தலைவி அவர்களின் கையால் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 39. திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

39—

**சக்தி நகரில் கோழி நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையக் கிளை**

*** 4220 திருமதி க. பழனியம்மாள் :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராசிபுரம் சக்தி நகரில் கோழி நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையக் கிளை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராசிபுரம் சக்தி நகரில் கோழி நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையக் கிளை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதி அங்கே குடிப்பதற்குக்கூட நீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இந்த நிலையில் அங்கே உள்ள விவசாயிகள் கோழிப் பண்ணையைத்தான் மிகவும் நம்பியிருக்கிறார்கள். அங்கே கோழிகளுக்கு நோய் ஏற்படும்போது, அதைப் பரிசோதிக்க வேண்டுமென்றால் பல மைல் தூரம் சென்று ஈரோட்டுக்கு சென்றுதான் நோயைக் கண்டறியவேண்டியிருக்கிறது. அந்த நிலையில் ஏழை, பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ள விவசாயிகளுக்கு உதவி செய்யும்வகையில், சக்தி நகரில் ஏற்கெனவே கால்நடை கிளை நிலையம் இருப்பதால் அங்கே கோழி நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையத்தையும் ஏற்படுத்தி, வருகின்ற இந்த ஆண்டிலாவது பரிசீலிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : சேலம் மாவட்டம் இராசிபுரம் அருகில் உள்ள நாமக்கல் பகுதியில் ஆண்டலூர் கேட் என்ற இடத்தில் கோழி நோய் ஆய்வுக்கூடம் ஒன்று தோற்றுவிக்கும் ஒரு திட்டம் மைய அரசின் ஒப்புதலுக்காக இதயதெய்வம் பொறுப்பேற்ற பிறகு, ஆகஸ்ட் 1991-ல் அனுப்பப்பட்டுள்ளது. மீண்டும் 28—1—1992-ல் நினைவூட்டுக் கடிதமும் மைய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். இத்திட்டத்திற்கு தொடரா செலவு ரூ. 7.75 லட்சமும், தொடரும் செலவாக ரூ. 6.81 லட்சமும் ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு கால்நடை மருந்தகம் ஏற்கெனவே செயல்பட்டு வருவதால் இந்தக் கோழி நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: ஆண்டலூரிலே அமைக்கலாம் என்று அரசு உத்தேசித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 40. திரு. ஆர். சிங்காரம். மீனளத் துறை அமைச்சர்.





40—

## சம்பைப்பட்டினம் மீனவர்களுக்கு காலனி வீடுகள்

* 3015 திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சம்பைப் பட்டினம் மீனவர்களுக்கு 100 காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் இதற்கான பட்டாக்களையும், சிட்டாக்களையும் மடப்பிலே போட்டுவிட்டு, காங்கிரஸ்காரன் என்ற காரணத்தால் அது நிராகரிக்கப்பட்டிருக்கிறது. மீனவ நண்பன் முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்திலே மீனவர்களின் வாழ்வை உயர்த்திக் கொடுத்தார். மீனவர்களையெல்லாம் வாழவைத்த தெய்வமாக விளங்கினார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஒரே அரசியல் வாரிசாக இருக்கின்ற (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே நீங்கள் இல்லை என்று சொல்லலாமா ? ஆகவே என்னுடைய வேதனையை சாதனையாக்க நீங்கள் முன்வருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1989-90 ஆம் ஆண்டு மொத்தம் அறிவிக்கப்பட்ட மூவாயிரம் வீடுகளில் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 303 வீடுகளும், 1990-91 ஆம் ஆண்டில் மொத்தம் அறிவிக்கப்பட்ட மூவாயிரம் வீடுகளில் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 948 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இதில் மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி இந்த ஆண்டிலும் தகுதியுள்ள மீனவர்கள் வீடு கட்ட மனைகளை வழங்க முன்வருவார்களேயானால் எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு கோரிக்கையை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள் முடிவுற்றன.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### திருவட்டார் தொகுதியிலுள்ள சாலைகளில் தண்ணீர் தேங்குவதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண். 7—திரு. இரா. நடேசன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் கழுவன் திட்டை, கல்லுப்பாலம், அரசமூடு, வெண்டலிகோடு, அண்டூர், மார்த்தாண்டம், அருமனை ஜங்ஷன், சிதறால் ஆகிய இடங்களில் மழைக் காலங்களில் சாலையில் தண்ணீர் தேங்கி பல வாகன விபத்துகள் நடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): வினாவில் கீழ்க்கண்ட ஒன்பது இடங் களில் மழைக் காலங்களில் சாலையில் தண்ணீர் தேங்கி வாகன விபத்து ஏற்படுவதாக கூறப்பட்டுள்ளது.

(1) திருவட்டார்: சென்ற பிப்ரவரி மாதம் தார் தளம் புதுப்பிக்கப்பட்டு தற்போது இந்தப் பகுதியில் எந்த இடத்திலும் தண்ணீர் தேங்கி விபத்துக்கள் நடைபெறுவதில்லை.

(2) கழுவன்திட்டை: நில எடுப்புச் சம்பந்தமாக நீதி மன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் இச்சாலைப்பணி முடிக்க ஆவன செய்யப்படும். இருந்தபோதிலும் விபத்துக்களை தடுக்க தற்காலிகமாக சாலையைச் செப்பனிட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

(3) கல்லுப்பாலம்: இச்சாலைப் பணிகள் வெள்ள நிவா ரணப் பணியில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி விரைவில் மேற் கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.



(4) அரசமூடு, வெண்டலிகோடு, அண்டூர், அருமனை ஜங்ஷன் ஆகிய சாலைப்பணிகள் தார் தளமாக புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

(5) மார்த்தாண்டம்: இச்சாலையில் தாழ்வான பகுதியை மேம்பாடு செய்யும் பணி வெள்ள நிவாரண திட்டத்தின் கீழ் நடை பெற்று வருகிறது.

(6) சிதறால்: இச்சாலையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்து தற்போது நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

2—

### திக்குறிச்சி ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா எண். 20—திரு. இரா. நடேசன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருவட்டார் தொகுதி விளவங்கோடு வட்டத்தில் பாகோடு பேரூராட்சிப் பகுதியில் திக்குறிச்சி ஆற்றின் குறுக்கே பாலம் இல்லாததால் வெள்ளப்பெருக்கு காலங்களில் போக்கு வரத்து பாதிப்பு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு பாலம் எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் பாலம் கட்டக் கோரும் இடத்திலிருந்து இந்த ஆற்றின் கீழ்ப் படுகையில் (Down stream side) 3.00 கி.மீ. தொலைவில் மார்த் தாண்டம் பனச்சமூடு சாலையில் (மாவட்ட பெருஞ்சாலை) நேசமணி பாலம் உள்ளது. அதேபோல் மேற்படுகையில் (Up stream side) 3.2 கி.மீ. தொலைவில் அருமனை ஆற்றூர் சாலை (இதர மாவட்டச் சாலை) கி.மீ. 3/10-ல் ஒரு பாலம் உள்ளது. எனவே, இந்தச் சூழ்நிலையில் திக்குறிச்சியில் சுமார் ரூ. 300.00 இலட்சம் செலவில் இன்னொரு பாலம் கட்ட வேண்டிய அவசர அவசியம் தற்போது இல்லை.

3—

### வியன்னூரில் துணை மின் நிலையம் அமைத்தல்.

வினா எண். 22—திரு. இரா. நடேசன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதி, வியன்னூரில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு எடுத்த நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது ?

விடை—

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வியன்னூர் பகுதியில் ரூ. 1.46 கோடி செலவில் 110/11 கி.வோ. மின் அழுத்தமுள்ள துணை மின் நிலையத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 8 ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குரிய மின் சாரம் செலுத்துதல் மற்றும் வழங்குதலுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பெருந் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத் துணை மின் நிலையத்தை நிறுவ கல்குளம் தாலுக்காவில் உள்ள ஆத்தூர் கிராமத்தில் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத் துணை மின்நிலையம் 1994-95 ஆம் ஆண்டில் நிறுவப்படும்.

4—

**மின் அழுத்தம் மிகக் குறைவாக உள்ளதைத் தவிர்க்க நடவடிக்கை**

வினா எண். 23—**திரு. இரா. நடேசன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதி, சாத்திரவிளை, அரமன்னம், ஏற்றக்கோடு, திருவட்டார் அருவிக் கரை, தச்சூர் ஆதிதிராவிடர் காலனி, வியன்னூர் ஆகிய இடங்களில் மின் அழுத்தம் மிகக் குறைவாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்நிலையைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதி, சாத்திரவிளை, அரமன்னம், ஏற்றக்கோடு, திருவட்டார் அருவிக் கரை, தச்சூர் ஆதிதிராவிடர் காலனி ஆகிய இடங்களில் நிலவும் குறைந்த மின் அழுத்தம் உள்ள இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு மின் அழுத்தத்தைச் சீர்செய்ய, மேம்பாட்டுத் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.





(ஆ) மின் அழுத்தம் குறைவாக உள்ள அரமன்னம், சாத்திர விளை ஆகிய பகுதிகளில் ரூ. 1,50,175 மதிப்பீட்டிலும், திருவட்டார், அருவிக்கரை, தச்சூர் ஆதிதிராவிடர் காலனி, வியன்னூர் ஆகிய பகுதிகளில் ரூ. 35,765 மற்றும் ரூ. 87,090 ஆகிய இரண்டு மதிப்பீட்டிலும், மேம்பாட்டுத் திட்டங்கள் (Improvement Works) அனுமதிக்கப்பட்டுள்ளன. இவ்வேலைகள் யாவும் 31—3—1992-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மின் பாதை தளவாடங்களின் இருப்பை அனுசரித்து இவ்வேலைகள் முடிக்கப்படும்.

மேலும், ஏற்றக்கோடு, வியன்னூர் பகுதிகளில் நிலவும் மின் அழுத்தக் குறைபாடுகளைச் சரிசெய்ய ரூ. 137.18 இலட்சம் மதிப்பீட்டில் வியன்னூரில் ஒரு 110/11 கி.வோ. உப மின் நிலையம் 8 ஆவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் நிறுவப்பட உள்ளது. இந்த உப மின் நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்தும் (Land Acquisition) பணி தொடங்கப்பட்டுள்ளது. இந்த உப மின் நிலையம் பணி முடிவு பெற்றதும் வியன்னூர், ஏற்றக்கோடு பகுதிகளில் மின் அழுத்தம் முழுவது மாகச் சீர் அடையும்.

5—

**இராதாபுரம் தொகுதியில் துணை மின் நிலையங்கள் அமைத்தல்.**

வினா எண். 56—**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராதாபுரம் தொகுதி, திசையன்விளை, இராதாபுரம், கூடங்குளம் ஆகிய மூன்று இடங்களிலும் மின்சார உப நிலையங்கள் செயல்படுத்தத் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): கூடங்குளத்தில் ரூ. 1.88 கோடி செலவில் ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம், அக்டோபர் 1991-க்குள் இயக்கி வைக்கப்படும்.

திசையன்விளையில் ரூ. 49 இலட்சம் செலவில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கப்பட உள்ளது. ஆர்ஜிதம்

செய்யப்பட உள்ள ஒரு நிலத்தின் சொந்தக்காரர் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை பெற்றுள்ளதால் இத் துணை மின்நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படவில்லை.

இராதாபுரத்தின் சுற்றுப்புறத்திலுள்ள பகுதிகளின் மின் தேவைகளைக் கூடங்குளம் துணை மின்நிலையம் பூர்த்தி செய்து விடுமென்பதால் இராதாபுரத்தில் தனியாக ஒரு துணை மின் நிலையம் அமைப்பது தேவையில்லை.

6—

## காய்கறி விலையைக் குறைக்க நடவடிக்கை.

**வினா எண். 191—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் காய்கறி விலையைக் குறைக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

(ஆ) அதன் விவரம் யாது ?

விடை.—

(அ) மற்றும் (ஆ) : 1—7—1991 அன்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் கொத்தவால்சாவடி பகுதி அழுகும் பொருள் வியாபாரிகள், மொத்த காய்கறி வியாபாரிகள் சங்கத் தலைவர்கள் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அவ்வமயம், மொத்த வியாபாரிகள் விலையினைக் குறைக்கும்படியும், சில்லறை விற்பனையாளர்களையும் அவ்வாறு குறைக்கப்பட்ட விலையிலேயே விற்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டனர். தினசரி கொத்தவால்சாவடி பகுதியில் நிலவும் காய்கறி விலை விவர அறிக்கைகளைப் பெற்று, அன்றாடம் சென்னையில் நிலவும் விலை விபரங்களை தினசரி செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, வானொலி மூலம் பத்திரிகை செய்தி வெளியிடப்பட்டு வருகிறது. மேலும், சென்னையில் அன்றாடம் நிலவும் காய்கறி விலைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

பெரும்பான்மையான மாவட்டங்களில் கூட்டுறவுத் துறை சில்லறை அங்காடிகள் வாயிலாக காய்கறிகள் விற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அமைச்சர் அவர்களின்



கூட்டத்திற்குப் பிறகு சென்னை நகரில் மட்டும் புதியதாக 48 கூட்டுறவு சில்லறை காய்கறி அங்காடிகள் துவங்கப்பட்டுள்ளன. மாநில அளவில் புதியதாக 131 கூட்டுறவு சில்லறை காய்கறி அங்காடிகள் துவங்கப்பட்டுள்ளன. இவ்வங்காடிகள் மூலம் காய்கறிகள் வெளிச்சந்தை விலைக்குச் சற்றுக் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் காரணமாக காய்கறிகளின் விலைகள் கணிசமாகக் குறைந்து வருகின்றன.

7—

## நெசவாளர் சங்க உறுப்பினர்கள் தொழில் செய்ய நடவடிக்கை.

**வினா எண் 196—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராசர் மாவட்டம், அருப்புக்கோட்டை, திருவில்லிபுத்தூர், சுந்தரபாண்டியம், வ. புதுப்பட்டி, எஸ். இராமச்சந்திராபுரம், இராஜபாளையம், சத்திரப்பட்டி ஆகிய ஊர்களில் நெசவாளர் சங்க உறுப்பினர்கள் தொழில் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை.—

(அ) காமராசர் மாவட்டத்திலுள்ள 115 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள 25,511 உறுப்பினர்களில் 19,753 உறுப்பினர்களுக்கு தொடர்ந்து தொழில் கொடுக்கப்பட்டு வருவதால், காமராசர் மாவட்டம், அருப்புக்கோட்டை, திருவில்லிப்புத்தூர், சுந்தரபாண்டியம், வ. புதுப்பட்டி, எஸ். இராமச்சந்திராபுரம், இராஜபாளையம், சத்திரப்பட்டி ஆகிய ஊர்களில் நெசவாளர் சங்க உறுப்பினர்கள் தொழில் இல்லாமல் இருப்பதாக அரசின் கவனத்திற்குத் தகவல் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

8—

## கைத்தறி ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்கள்

**வினா எண். 214—திரு. ம. சின்னசாமி :** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1992 பிப்ரவரி 4

(அ) தமிழ்நாட்டில் கைத்தறி ஏற்றுமதி குறித்து தீவிர வளர்ச்சித் திட்டங்கள் மொத்தம் எத்தனை ?

(ஆ) அவற்றின் கீழ் எத்தனை நிறுவனங்கள் இலாபத்தில் இயங்குகின்றன ?

விடை.—

(அ) தமிழ்நாட்டில் கைத்தறி ஏற்றுமதி உற்பத்தி திட்டங்களாக கூட்டுறவில். இரண்டு கைத்தறி ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. அவையாவன :—

1. கரூர் கூட்டுறவு கைத்தறி ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், திட்டம், கரூர்.

2. குறிஞ்சிப்பாடி கூட்டுறவு கைத்தறி ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், குறிஞ்சிப்பாடி.

(ஆ) இவ்விரண்டும் குவிந்த நட்டத்தில் செயல்படுகின்றன. 1990-91 ஆம் ஆண்டில், இத்திட்டங்கள் இரண்டும் நிகர இலாபத்தில் செயல்பட்டன. அவ்விவரமாவன :—

| ஆண்டு. (1) | திட்டத்தின் பெயர். (2) | குவிந்த நட்டம். (3) | உத்தேச இலாபம். (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1990–91 | கரூர் திட்டம் | 41.78 | 3.27 |
| 1990–91 | குறிஞ்சிப்பாடி திட்டம் | 5.29 | 9.19 |

இத்திட்டங்கள் இலாபமீட்ட ஆரம்பித்துள்ளமையினால், குவிந்த நட்டம் படிப்படியாகக் குறைந்து வருகின்றது.

9—

### பாரிமுனையிலிருந்து திருப்போரூர் வரை பேருந்து விடுதல்.

**வினா எண் 229—திரு. ம. தனபால்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1992 பிப்ரவரி 4]

(அ) சென்னை, பாரிமுனையிலிருந்து கேளம்பாக்கம் வரை செல்லும் பேருந்தை திருப்போரூர் வரை செல்ல அரசு அனுமதி வழங்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : திருப்போரூர், பல்லவன் போக்குவரத்துக் கழக இயக்க எல்லைக்கு அப்பால் உள்ளதால், பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் சென்னையில் இருந்து திருப்போரூருக்கு பேருந்து இயக்க இயலாது. சென்னையிலிருந்து திருப்போரூர் வழியாக தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் போதுமான அளவு பேருந்துகளை இயக்கி வருகிறது.

10—

### ஆதி திராவிடர் சிறப்பு நலத் திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் எண்ணிக்கை.

**வினா எண் 242—திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேளாண்மைத்துறை மூலம் இலவச பூச்சிக்கொல்லி மருந்து, பொறுக்கு விதைகளால் எத்தனை ஆதி வாசிகள், ஆதிதிராவிடர்கள் 1990-91-ல் பயன் பெற்றனர் ?

(ஆ) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை.—

(அ) தமிழ்நாட்டில் 1990-91 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறை மூலமாக ஆதி திராவிடர்களுக்கு "ஆதி திராவிடர் சிறப்பு நலத் திட்டத்தின்" கீழ் மத்திய அரசு வழங்கும் மானிய உதவியுடன் 50 சதவிகிதம் மானிய விலையில் பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் பொறுக்கு விதைகள் போன்ற இடுபொருட்கள் வழங்கும்

[1992 பிப்ரவரி 4

திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தில் 1990-91-ல் 69,800 ஆதி திராவிடர்களுக்கு வேளாண்மைத் துறை மூலம் கீழ்க்கண்ட இடுபொருட்கள் வழங்கப்பட்டன :—

| வரிசை எண்ணும், இனமும். (1) | பயனடைந்தோர் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. பயறு விதைகள் | 29,780 |
| 2. பசுந்தாள் உர விதைகள் | 1,730 |
| 3. நுண்ணூட்டச் சத்து | 23,190 |
| 4. பூச்சி மருந்து தெளிப்பான் | 7,035 |
| 5. நெல் விதை | 5,700 |
| 6. பூச்சிக்கொல்லி மருந்து | 2,320 |
| 7. காளான் (உணவு உற்பத்தி) | 45 |
| கூடுதல் | 69,800 |

பழங்குடியினர் நல துணைத் திட்டத்தின் கீழ் (Tribal Sub-Plan) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையால் (Department of Horticulture and Plantation Crops), நெல், கேழ்வரகு சோளம், மரவள்ளிக்கிழங்கு போன்ற விதைகளும், மா, கொய்யா, எலுமிச்சை, சப்போட்டா, பலா போன்ற விதை கன்றுகளும், இத்திட்டத்தின் மூலம் 9 பகுதிகளில் பழங்குடியினருக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் 2,750 பழங்குடி குடும்பத்தினர் பயனடைந்துள்ளனர்.

(ஆ) மேற்கண்ட இடுபொருட்கள் மற்றும் பொறுக்கு விதைகளை ஆதிதிராவிடர்களுக்கு வழங்க ரூ. 80,13,712 செலவிடப்பட்டது. பழங்குடியினருக்காக ரூ. 4.63 இலட்சங்கள் செலவிடப்பட்டது.



1992 பிப்ரவரி 4]

குப்பத்தேவன் நடுநிலைப்பள்ளியின் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை.

வினா எண். 369—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் நடுநிலைப்பள்ளியின் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தகுதி அடிப்படையில் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

12—

சோலைச்சேரியிலிருந்து நாச்சியார்புரம் வரை உள்ள சாலையை விரிவுபடுத்தல்.

வினா எண். 390—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த சோலைச்சேரியிலிருந்து ஏந்தலூர் வழியாக, நாச்சியார்புரம் வரை உள்ள சாலை விரிவாக்கப்பட்டு பராமரிக்கப்படுமா ?

விடை—

ஆலங்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த ஏந்தலூர்-நாச்சியார்புரம் வரை உள்ள சாலையினை 1991—92 ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் பராமரிப்பு செய்ய எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

13—

ராமலூரிலிருந்து கலிங்கப்பட்டி வரையுள்ள சாலையை அகலப்படுத்துதல்.

வினா எண். 393—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி கீழப்பாவூர் ஒன்றியத்தைச் சேர்ந்த ராமனூரிலிருந்து கலிங்கப்பட்டி வரை உள்ள சாலை மிகவும் குறுகியதாக உள்ளதால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அகலப்படுத்தி சாலை பராமரிக்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ராமனூரிலிருந்து கலிங்கப்பட்டி வரையிலுள்ள சாலையை செப்பனிட ரூ. 6 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து தற்போது அரசு அளவில் செயற் குறிப்பு ஏதுமில்லை.

14—

**தாலுகா மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வசதி.**

வினா எண். 460—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாலுகா மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

50 படுக்கைகளுக்கு மேல் உள்ள அனைத்து அரசு தாலுகா மருத்துவமனைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆம்புலன்ஸ் வேன் வழங்க அரசு பரிசீலித்து வருகிறது. அதன்படி 50 படுக்கைகளுக்கு மேல் உள்ள 56 தாலுகா மருத்துவ மனை மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வசதி அளிப்பதை கருத்தில்கொண்டு இரண்டு தவணைகளாக இதை அளிக்க அரசு உத்தேசித்துள்ளது.

15—

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்.**

**வினா எண் 458—டாக்டர் ச. சுந்தரராஜ்** / மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பரமக்குடி தொகுதி, கள்ளிக்குடி கிராமம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பங்கு பெற அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) பரமக்குடி தொகுதி, கள்ளிக்குடி கிராமத்திற்கு சோமாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டித்தல் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

(ஆ) கள்ளிக்குடி கிராமத்தில் ஒரு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. குடிநீர் ஆதாரம் போதுமானதாக இல்லாததால், 1990-91 ஆம் ஆண்டில், குழாய் நீட்டிப்பு மூலம் சோமாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், குடியூர் கிராமத்திற்கருகே வைகை ஆற்றில் ஒரு ஊடுருவிக் கிணறு அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மார்ச் 1992-ல் முடிவடையும்.

16—

**ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா எண் 469—டாக்டர் ச. சுந்தரராஜ்** / மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி ஒன்றியம், வடக்கூர், மரிச்சிக்கட்டி ஆகிய ஊர்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப்படுமா ?

விடை—

பரமக்குடி ஒன்றியம், வடக்கூர் கிராமத்தில் இரு கைபிறைப்பான்கள் உள்ளன. மேலும், சோமாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் மூன்று பொதுக் குழாய்கள் அமைத்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மரிச்சிக்கட்டி கிராமத்தில் ஒரு கைபிறைப்பானும், 5,000 லிட்டர் கொள்ளளவு உள்ள ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், நான்கு பொதுக் குழாய்களும் உள்ளன. மேலும், சோமாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் ஏற்றப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி இரு கிராமங்களில் மேலும் ஆழ்குழாய்க் கிணறுகள் தற்போது அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

17—

**அச்சன்குட்டம் கிராமத்தில் கிளை நூலகம் அமைத்தல்.**

வினா எண். 483—**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் ஒன்றியம், அச்சன்குட்டம் கிராமத்தில், கிளை நூலகம் ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948, விதி 45 (4) (பி)-யின்படி 5,000 மக்கள் தொகை உள்ள கிராமங்களில்தான் கிளை நூலகம் திறக்க முடியும். அச்சன்குட்டம் கிராமத்தின் மக்கள் தொகை 5,000-க்குக் குறைவாக உள்ளதால் கிளை நூலகம் திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மேலும், மக்கள் தொகை 5,000-க்குக் குறைவாகவும், 1,000-க்கு மேலும் இருந்தால் பொது நூலகச் சட்டம் 45 (4) (சி)-யின்படி, பகுதிநேர நூலகத்தைத் திறக்கலாம். அச்சன்குட்டம் கிராமத்தின் மக்கட்தொகை 3,000 என்பதால், அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்க, மாவட்ட நூலக அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அச்சன்குட்டம் கிராமத்தில் பகுதிநேர நூலகத்தைத் திறக்க அவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

18—

**பழுதடைந்த சாலைகளைச் செப்பனிடுதல்.**

வினா எண் 554—**திரு. வே. பெரியசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் 1990-91-ல் போடப்பட்ட அனைத்துச் சாலைகளும் பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அவற்றைச் செப்பனிட்டுத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

(அ) 1990-91-ல் போடப்பட்ட அனைத்துச் சாலைகளும் நல்ல நிலையில் உள்ளன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

19—

**அனைத்துப் பள்ளிகளுக்கும் தளவாட சாமான்கள் வழங்கல்.**

வினா எண். 560—**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள அனைத்து தொடக்க, நடுநிலை, மேல்நிலை உயர்நிலைப் பள்ளிகளுக்கு தளவாட சாமான்கள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்போது இல்லை.

20—

**தார்ச் சாலையாக்குதல்.**

வினா எண். 580—**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியம் கோட்டை குளக்கரைச் சாலையை தார்ச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

21—

வினா எண். 580—**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெரியக்கத்திக்கோட்டைக்கு செல்லும் சாலையை தார்ச் சாலை செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

22—

பெத்தநாச்சிவயல் கிராமத்திற்கு சாலை வசதி.

வினா எண். 622—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி பெத்தநாச்சிவயல் கிராமத்திற்கு சாலை வசதி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

23—

தொடக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக்குதல்.

வினா எண். 626—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சி ஊராட்சியைச் சார்ந்த மேட்டுவயல் தொடக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

24—

நாச்சியார்கோவில் நகரில் கழிவுநீர் வடிகால் அமைத்தல்.

வினா எண். 647—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், நாச்சியார் கோவிலில் கழிவு நீர் வடிகால் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

இல்லை.

25—

தார்ச் சாலையாக்குதல்.

வினா எண். 667—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் கோட்டாகுடி அருகில் நைனாங்குளத்தில் இருந்து மூதல்சேரி செல்லும் சாலையை செப்பனிட்டுத் தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

26—

புதிய சாலை அமைத்தல்.

வினா எண். 675—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திர ஒன்றியம் குப்பத்தேவன் சேதுசாலையில் இருந்து நடுநிலைப் பள்ளிக்கு செல்ல புதிய சாலை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

27—

தார்ச் சாலையாக்குதல்.

வினா எண். 679—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்-பேராவூரணி ஒன்றியம், ஆவணத்தில் இருந்து குடியிருப்பு வழியாகவும், ஆதிதிராவிடர் தெரு வழியாகவும் செல்லும் கப்பிச் சாலையை செப்பனிட்டு தார் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

### கப்பிச் சாலையாக்குதல்

28—

வினா எண். 689—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை ஊராட்சி சூரன்கொல்லை, செக்கடிக்கொல்லை வழியாகக் கொண்டிகுளம் வரை செல்லும் ஆற்றுக்கரைச் சாலையைச் செப்பனிட்டு, கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

29—

### தார்ச் சாலையாக்குதல்.

வினா எண். 702—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், அதிராம்பட்டினத்தில் இருந்து மிளாரிக்காடு வழியாக நடுவிற்காடு பள்ளிக்கூட இணைப்புச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.



30—

### தார்ச் சாலையாக்குதல்.

வினா எண். 706—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டையில் இருந்து மிளாரிகாடு வழியாக அதிராம்பட்டினம் செல்லும் சாலையை கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை

31—

வினா எண். 710—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டையில் இருந்து தொக்காளிகாடு மானியக்காடு வழியாக முதல்சேரி செல்லும் ராசாமடம் வாய்க்கால் கப்பிச்சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

32—

வினா எண். 711—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், மானியக்காடு ஊராட்சியில் உள்ள கப்பிச் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

33—

வினா எண். 712—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை — அதிராம்பட்டினம் நெடுஞ்சாலையில் இருந்து சேண்டாகோட்டை செல்லும் கப்பிச் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

34—

தார்ச் சாலையாக்குதல்.

வினா எண். 715—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், கோவனூர் ஊராட்சி மூத்தனார்குடியில் இருந்து தண்டல் தோட்டலும் செல்லும் சாலையை செப்பனிட்டுத் தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

35—

கப்பிச் சாலையாக்குதல்

வினா எண். 716—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருநரையூர் ஊராட்சியில் உள்ள மண் சாலையை கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?





விடை—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம் திருநரையூர் ஊராட்சியில் உள்ள மண் சாலையை 1989-90 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

36—

வினா எண். 720—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் கழுகுப்புலிக்காடு துவரமடை சாலையை செப்பனிட்டு கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

37—

கப்பிச் சாலையாக்குதல்.

வினா எண். 742—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், இஞ்சிக்கொல்லை ஊராட்சியில் உள்ள மண் சாலையை கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1989-90 ஆம் ஆண்டில் இஞ்சிக்கொல்லை ஊராட்சியில் உள்ள மண் சாலையை சிகப்புக் கப்பிச் சாலையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

38—

பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தில் போதுமான உணவு விடுதி அமைத்தல்.

வினா எண் 764—திரு. மா. சுந்தர தாஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நுங்கம்பாக்கம் கல்வித்துறை டி.பி.ஐ. வளாகத்தில் போதுமான உணவு விடுதி இல்லாதிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

விடை—

(அ) பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தில் போதுமான அளவு உணவு விடுதிகள் பின்வரும் எண்ணிக்கையில் தற்போது உள்ளன

1. டி. பி. ஐ. கேண்டின் .. 1
2. 50 பேர் அமர்ந்து சாப்பிடக்கூடிய அளவில் பாடநூல் நிறுவன ஊழியர்கள் கூட்டுறவு சிற்றுண்டிச் சாலை ..
3. டீ கடைகள் ..

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

39—

## வண்டிப் பாலம் அமைத்தல்.

**வினா எண் 773—திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை வட்டம், எட்டுக்குடி கிராமத்தில் உள்ள தெற்கு காட்டாற்றில் வண்டிப்பாலம் இல்லாமல் சத்தியமங்கலம், கீரம்போர், சித்தாய்மூர் ஆகிய கிராம மக்கள் ஆற்றைத்தாண்டி வர முடியாமல் அவதிப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

40—

**வினா எண் 778—திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருவாரூர் வட்டம் கீவளூர் ஒன்றியம் ஆதமங்கலம் ஊராட்சியில் உள்ள மருதூர் என்ற இடத்தில் சிந்தாற்றில் வண்டிப் பாலம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

41—

## ஆடு வளர்ப்போர் சங்கம்.

வினா எண் 806—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டத்திலுள்ள அந்தியூர் கொண்டையம் பாளையம், கூலிவலசு ஆகிய ஊர்களில் ஆடு வளர்ப்போர் சங்கம் செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இல்லை. இம்மூன்று ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

42—

## அந்தியூர் தொகுதியில் 1991-92-ல் போடப்பட்ட தார் சாலைகள்.

வினா எண் 807—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் 1991-92-ல் எத்தனை ஊராட்சி சாலைகள், எத்தனை ஊராட்சி ஒன்றிய சாலைகள், தார் சாலையாக மாற்றப்படும் ?

விடை—

சின்னத்தம்பி பாளையம் முதல் நகலூர் முடியவுள்ள சாலை சாலை மற்றும் சின்னத்தம்பிபாளையம் முதல் மைக்கேல்பாளையம் முடிய உள்ள சாலை ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றிய சாலைகள் தார் சாலையாக மாற்றப்படும். மற்ற சாலைகளுக்கு தார் சாலையாக மாற்ற செயற்குறிப்பேதுமில்லை.

43—

### மின்சார உதவியாளர்களை அதிகப்படியாக நியமித்தல்

வினா எண் 808—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பர்கூர் மலைப் பகுதியில் 32 கிராமங்களுக்கும், மின்சார உதவியாளர்களை அதிகப்படியாக நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்கள் நியமிக்கப்படுவார்கள் ?

விடை—

(அ) ஒப்பந்தத் தொழிலாளர்களை மின்வாரியத்தில் நிரந்தரப் பணியினில் அமர்த்திட பணிகள் நடந்து கொண்டுள்ளன. இப்பணி முடிந்தவுடன் பர்கூர் மலைப் பகுதியில் 32 கிராமங்களுக்கும், களப்பணி உதவியாளர்கள் வேலைப்பளு அளவுகோல் படி அமர்த்தப்படுவார்கள்.

(ஆ) உதவியாளர் பொறுப்பில் நிரப்பப்படாமல் உள்ள பணியிடங்கள் அவ்வளவையும் நிரப்பிடத் தேவையான நடவடிக்கையினையும் அவ்வமயம் பரிசீலனை செய்து முடிவெடுக்கப்படும்.

44—

### தார் சாலையாக்குதல்.

வினா எண் 833—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, நகலூரில் இருந்து பெருமாபாளையம் வரை உள்ள ஊராட்சி ஒன்றிய சாலையினை கல் சாலையாக மாற்றி, தார் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

விடை—

நகலூரிலிருந்து பெருமாபாளையம் வரையிலுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலையை கல் சாலையாக மாற்ற 1991-92 ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

45—

வினா எண் 854—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் துறவிக்காடு கிராமத்திலிருந்து கட்டயங்காடு வரை உள்ள ஆற்றுக்கரை கப்பிச் சாலையை தார் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

46—

வினா எண் 856—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் வலசைக்காட்டிலிருந்து நரியங்காடு வழியாக கல்லூரணிகாடு வரை செல்லும் ஆற்றுக்கரை கப்பிச் சாலையை தார் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

47—

**தார் சாலையாக்குதல்.**

வினா எண். 898—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மருங்கூர் பள்ளத்தில் இருந்து சாந்தாம்பேட்டை வழியாக சங்கரன் கொல்லை செல்லும் கப்பிச் சாலையை செப்பனிட்டு தார் சாலையாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை,

48—

வினா எண் 954—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செருவா விடுதி, செருவா விடுதி வடக்கு, ஈச்சவிடுதி வழியாக சி.எம்.பி. ஆற்றங்கரை இடையாத்தி வரை உள்ள கப்பிச்சாலையை தார் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

49—

**திருச்சிற்றம்பலம் உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிட வசதி.**

வினா எண் 976—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிட வசதி தளவாட சாமான்கள் வழங்கவும் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

இல்லை, எனினும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை இரண்டாம் பகுதி திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதி நிலைமைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்டவும், ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

50—

**சிறு பாலம் அமைத்தல்.**

வினா எண் 985—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் ராமகிருஷ்ணா புரம் செல்லும் சாலையில் ஒரு சிறு பாலம் கட்ட அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

இல்லை.

51—

**கப்பிச் சாலையாக்குதல்.**

வினா எண் 989—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனவாசலில் இருந்து வாடிக்காடு வழியாக ராமகிருஷ்ணாபுரம் செல்லும் சாலையை செப்பனிட்டு கப்பிச்சாலையாக மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

52—

**சாலை அமைத்தல்.**

வினா எண் 990—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் திருவோணம் ஒன்றியம் பாதரங்கோட்டை (வ) ஊராட்சி கருப்பட்டி தெருவிலிருந்து மேல கொள்ளுக் காட்டிற்குச் சாலை அமைக்க செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை—

53—

**கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்த துணியின் மதிப்பு.**

வினா எண் 1096—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1989-90, 1990-91 ஆம் ஆண்டுகளில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்த துணியின் மதிப்பு எவ்வளவு ?

(ஆ) ஈட்டிய இலாபம் எவ்வளவு ?

விடை—

(அ) கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்த துணிகளின் மொத்த மதிப்பு :

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1989-90 | 184.19 |
| 1990-91 | 136.39 |

(ஆ) ஈட்டிய லாபம் :

| | |
|---|---|
| 1989-90 | 3.12 |

1990-91 ஆம் ஆண்டிற்கான லாப நஷ்ட கணக்குகள் இன்னும் தணிக்கை செய்யப் பெறவில்லை.

54—

**தனி மின் இணைப்பு இல்லாத கிராமங்களுக்கு மின் இணைப்பு கிடைக்க நடவடிக்கை.**

வினா எண் 1141—திருமதி நெ. சியாமளா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு கொடுக்கப்பட்டுள்ள தனி மின் இணைப்பு (Single Point Connection) பல கிராமங்களுக்கு செய்து தரப்படவில்லை என்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அவை உடனடியாக செய்து தரப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடிசை வாழ்வோர் மேம்பாட்டைக் கருதி அரசு 'ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' என்னும் திட்டத்தை 1979 ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இவ்வகையில் கிராமப்புற பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட, 200 சதுர அடிக்கு மேற்படாத மண் சுவற்றால் கட்டப்பட்டுக் கூரை வேய்ந்த ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு (40 வாட்) மீட்டர் பொருத்தாமல் அமைத்து கொடுக்கப்பட்டு, அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 2.50 மட்டும் வசூலிக்கப்பட்டு வந்தது. இத் திட்டம் 1984 ஆம் ஆண்டிலிருந்து இலவச மின் இணைப்புத் திட்டமாக மாற்றப்பட்டு இவ்வகை குடிசைகளுக்கு மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தை 1986-ம் ஆண்டிலிருந்து ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் கட்டப்படும் சிறிய வீடுகளுக்கும் நீட்டிக்கப்பட்டது. மேலும், 1988 ஆம் ஆண்டிலிருந்து இந்த இலவச மின் இணைப்புத் திட்டம் 'நாட்கோ' மற்றும் காமராசர் ஆதிதிராவிடர் வீட்டுவசதி திட்டங்களின்கீழ் கட்டப்பட்டு வரும் சிறிய வீடுகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1990-ம் ஆண்டிலிருந்து, இத்திட்டம் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கும் பரவலாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 31—3—1991 முடிய மாநில முழுமைக்கும் மொத்தம் 9,32,286 குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதில் ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் மொத்தம் 4,16,098 மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் (1991-92) 40,000 குடிசைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்க திட்டமிடப்பட்டு 1—4—1991 முதல் 31—7—1991 முடிய மொத்தம் 11,462 குடிசைகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப 40,000 குடிசைகளுக்குக்

[1992 பிப்ரவரி 4

குறையாமல் இலவசமாக மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மின்வாரியத்தின் நிதி நிலைமையில் தொய்வு இருந்த போதிலும் இத் திட்டம் முழுவதுமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இத் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வேண்டுவோர் இதற்கான படிவத்தில் உரிய மின்வாரியப் பிரிவு அலுவலகங்களுக்கு விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதிபெறும் விண்ணப்பதாரர்களுக்கு பதிவு வரிசை அடிப்படையில் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**55—**

பழுதடைந்த சாலையை பராமரித்தல்.

வினா எண் 1153—திரு. **எஸ். எஸ். ராமசுப்பு** : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி கீழப்பாவூர் ஒன்றியத்தில் ஆலங்குளத்திலிருந்து [illegible] செல்லும் சாலை பழுதடைந்து இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் உடனடியாக அச்சாலை பராமரிக்கப்படுமா ?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) : இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் நீளம் 5.2 கி.மீ. ஆகும். இச்சாலையில் கி.மீ. 2/0—4/0 வரையுள்ள பகுதியை இந்த நிதியாண்டிலேயே மேம்பாடு செய்ய சிறப்பு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு பணிகள் செயலாக்கத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள பகுதி வாகன போக்குவரத்திற்கு ஏற்றவகையில் நன்கு பராமரிக்கப்படுகிறது.

**56—**

**கீழப்பாவூர்-சுரண்டை செல்லும் சாலையிலுள்ள ஆக்கிரமிப்பை அகற்றல்.**

வினா எண் 1155—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1992 பிப்ரவரி 4]

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியத்தில், கீழப்பாவூர்-சுரண்டை செல்லும் சாலை ஆக்கிரமிப்பினால் அகலம் குறைந்து போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ள நிலையை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தவிர்க்க, அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**57—**

**தார்ச் சாலையாக்குதல்.**

வினா எண். 1167—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், கொண்டிகுளம்—நடுவிக்கோட்டை கப்பிச் சாலையை செப்பனிட்டு தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—**

இல்லை.

**58—**

**கப்பிச் சாலையாக்குதல்.**

வினா எண். 1174—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக்கரையிலிருந்து மிழ[illegible]கோட்டை இணைப்புச் சாலை வரை உள்ள சாலையை செப்பனிட்டு கப்பிச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—**

இல்லை.

[illegible] 53-416—10

59—

## மின்விளக்குகள் கிடைக்கப்பெறாத ஆதிதிராவிடர் குடியிருப்புகள்

வினா எண் 1211—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பரமக்குடி தொகுதியில் மின் விளக்குகள் கிடைக்கப் பெறாத ஆதிதிராவிடர் குடியிருப்புகள் எத்தனை? அவைகளுக்கு எந்த ஆண்டு இவ்வசதி செய்து கொடுக்கப்படும்?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் மின் இணைப்பு வசதி இல்லாத 1,333 வீடுகளைக் கொண்ட 65 ஆதிதிராவிடர்கள் காலனிகள் உள்ளன. அதில் 1991-92-ஆம் ஆண்டில் 74 வீடுகளைக் கொண்ட 5 ஆதிதிராவிடர் காலனிகளுக்கு மின் இணைப்பு வசதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதியுள்ள, 1,259 வீடுகளைக் கொண்ட 60 ஆதிதிராவிடர் காலனிகளுக்கு மின் இணைப்பு வசதி மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவைகளில், 765 வீடுகளைக் கொண்ட 15 ஆதிதிராவிடர் காலனிகளுக்கு மின்வசதி மேற்கொள்ள மின் சார வாரியத்திற்குக் கோரிக்கை மனுக்கள் வந்துள்ளன. நிதி நிலைமைக்கு ஏற்ப மீதியுள்ள அனைத்து ஆதிதிராவிடர் காலனிகளுக்கும், வரும் ஆண்டுகளில் மின் இணைப்பு வசதி வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சம்பந்தப்பட்ட மின்சார வாரிய அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

60—

## காலனி தொகுப்பு வீடு கட்டுதல்.

வினா எண். 1282—திரு. ச. புரட்சிமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் தச்சூர் என்ற கிராமத்தில் காலனி தொகுப்பு வீடு கட்டும் திட்டம் அர சிடம் உள்ளதா?



விடை—

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் தச்சூர் என்ற கிராமத்தில் காலனி தொகுப்பு வீடு கட்டும் திட்டம் எதுவும் நடப்பாண்டில் (1991-92-ல்) இல்லை.

61—

## வெள்ளாற்றின் குறுக்கே பாலம்.

வினா எண் 1287—திரு. ச. புரட்சிமணி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் சம்பேரி என்ற கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா?

விடை—

தற்போது திட்டம் ஏதும் இல்லை.

62—

## சாலை வசதி செய்தல்.

வினா எண். 1348—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அந்தியூர் தொகுதி அம்மாபேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட இந்திரா நகரில் வாழும் மக்களுக்கு சாலை வசதி செய்து கொடுக்க அரசு முயலுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதா?

விடை—

(அ) அந்தியூர் தொகுதி அம்மாபேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட இந்திரா நகரில் வாழும் மக்களுக்கு செல்லக்கூடிய சாலை தனியார் பட்டா நிலம் வழியாக செல்கிறது. இது குறித்து செயற் குறிப்பு தற்போது அரசிடம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

63—

**பரமக்குடி பகுதிக்குட்பட்ட வைகை ஆற்றின் நிலத்தடி நீரின் அளவு.**

**வினா எண் 1415—டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகரப் பகுதிக்குட்பட்ட வைகை ஆற்றில் நிலத்தடி நீரின் அளவு என்ன ?

(ஆ) இது முந்தைய ஆண்டுகளை விட எவ்வளவு கூடியுள்ளது ?

**விடை—**

(அ) பொதுப்பணித் துறை நிலநீர் பிரிவினரால் நீர்மட்ட அளவு எடுப்பதற்கான பார்வைக் கிணறுகள் பரமக்குடி நகரப் பகுதிக்குட்பட்ட வைகை ஆற்றில் ஏதுமில்லை. எனினும் வைகை ஆற்றின் அருகே பரமக்குடி நகரப் பகுதிக்குள் அமைந்துள்ள பார்வைக் கிணற்றில் ஜூலை 91-ல் தரை மட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட நீர்மட்ட அளவு 5.30 மீ. ஆகும்.

(ஆ) கடந்த 10 ஆண்டுகளின் பார்வை கிணற்றின் தாழ்ந்த மட்டம், உயர்ந்த மட்டம் பின்வருமாறு :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வருடம் | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 |
| | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 |
| தாழ்ந்த | 4.33 | 4.33 | 5.38 | 3.58 | 5.21 |
| மட்டம் | 6.68 | 5.83 | 5.09 | 5.53 | 5.65 |
| (மீட்டரில்) | | | | | |
| உயர்ந்த | 2.02 | 1.66 | 3.17 | 2.09 | 2.57 |
| மட்டம் | 4.23 | 4.93 | 3.98 | 4.99 | 4.52 |
| (மீட்டரில்) | | | | | |

முந்தைய 10 ஆண்டுகளிலுள்ள நீர்மட்ட அளவை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது தற்போதைய நீர்மட்ட அளவில் குறிப்பிடத் தக்க மாற்றம் ஏதுமில்லை.



64—

**கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இலவச பேருந்து பயணச் சலுகை.**

**வினா எண் 1489—டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளி மாணவர்களுக்கு பஸ் பாஸ் வழங்கப்பட்டது போல் கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் வழங்கப்படுமா ?

**விடை—**

பள்ளி மாணவர்களுக்கு பேருந்துகளில் பயணம் செய்ய வழங்கப்பட்டு வரும் இலவச பயணச் சலுகையினை கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் நீட்டிப்பது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

65—

**கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு திட்டம்**

**வினா எண் 1584—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

வேலை இல்லாமல் இருக்கின்ற கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

**விடை—**

**இல்லை.**

66—

**அரசு மற்றும் தனியார் குடும்ப நல மையங்கள்**

**வினா எண் 1654—டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் குடும்ப நல மையங்கள் எத்தனை?

விடை—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் குடும்ப நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன :—

| | | |
|---|---|---|
| 1. | ஆரம்ப சுகாதார நிலையங்கள் (கிராமிய குடும்ப நல நிலையங்கள்). | 11 |
| 2. | அரசு மருத்துவமனைகள் (நகரிய குடும்ப நல நிலையங்கள்). | 5 |

கீழ்க்கண்ட மருத்துவ நிலையங்கள் மூலமாக குடும்ப நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :—

| | | |
|---|---|---|
| 1. | ஆரம்ப சுகாதார நிலையங்கள் (3,000 மக்கள் தொகைக்கு ஒன்று வீதம்). | 47. |
| 2. | அரசு மருத்துவமனைகள் மருந்தகங்கள் | 8 |
| 3. | தன்னியக்க நிறுவனங்கள் | 1 |
| 4. | அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் மருத்துவமனைகள் | 16 |
| 5. | அங்கீகாரம் பெறாத தனியார் மருத்துவமனைகள். | |

67—

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் நடத்தப்படும் பள்ளிகள்.

வினா எண் 1683—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் நலத்துறையின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடத்தப்படும் பள்ளிகள் எத்தனை?

(ஆ) அவற்றில் எத்தனை ஆரம்பப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டன?



விடை—

(அ) ஆதி திராவிடர் நலத்துறையின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட 7 இடங்களில் துவக்கப்பள்ளிகள் உள்ளன :—

1. வடவயல், தேவிப்பட்டினம்.
2. புழக்கிரை, கீழக்கரை.
3. நிலையாம்பாடி, கமுதி.
4. பாம்புவிழுந்தான், பரமக்குடி.
5. காட்டுப்பரமக்குடி, பரமக்குடி.
6. செங்கம்படை.
7. போத்திநிதி.

(ஆ) ஒன்றுமில்லை.

68—

பால்பெருக்குத் திட்டம் அமல்படுத்தாத ஒன்றியங்களுக்கு மானியங்கள்.

வினா எண் 1685—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் சேகரிப்புக் குழு மற்றும் கால்நடைப் பராமரிப்புப் பணிகளுக்கு, ஒன்றியங்களுக்கு அரசு மானியங்கள் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) பால் பெருக்குத் திட்டம் அமல்படுத்தாத காமராஜர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்க தேவர், திருநெல்வேலி, கட்டபொம்மன், வ. உ. சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் பயனடையும் வகையில் உள்ளீட்டு வசதிகள் (Infrastructure facilities) வழங்குவதற்கு அரசு மான்யம் வழங்கி வருகிறது. இந்த உள்ளீட்டு

வசதிகள் அதாவது பால் சோதனைக் கருவிகள், [illegible] மான்யம், மருந்துகள் ; கால்நடை மருத்துவ வசதிகள் திரவ அமோனியா, கால்நடை உண்டிவிந்து குழல்கள் [illegible] ஆம் மாவட்ட ஒன்றியங்கள் மூலமாக செயல்படுத்துவதற்கு எட்டாம் ஐந்தாண்டுக் கால திட்டத்தில் (1990-95) ரூ. 75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய கருத்துரு அரசால் ஏற்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 1990-91 ஆம் ஆண்டில் பால் பெருக்குத் திட்டம் செயற்படுத்தாத ஆறு மாவட்டங்களிலுள்ள 50 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சங்கம் ஒன்றுக்கு ரூ. 4,000 வீதம் [illegible] வசதிகள் செய்வதற்கு ரூ. 2.00 லட்சம் மானியமாக அரசு வழங்கியுள்ளது.

2. மேற்குறிப்பிட்டுள்ள மானியத் தொகையினைக் கீழ்க்குறிப்பிட்டுள்ள நான்கு மாவட்டங்களுக்கு அம் [illegible] கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றிய மேலாண்மை இயக்குநர்கள் மூலமாக 50 பால் கூட்டுறவுச் சங்கங்கள் பயனடையும் வகையில் வழங்கப்பட்டுள்ளது :—

| | | பயனடைந்துள்ள பால் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| இராமநாதபுரம் | .. | 15 சங்கங்கள், | 0.60 |
| பசும்பொன் முத்துராமலிங்க தேவர் | .. | 15 [illegible] | 0.40 |
| காமராஜர் | .. | 15 [illegible] | [illegible] |
| கன்னியாகுமரி | .. | 10 சங்கங்கள் | [illegible] |
| மொத்தம் | .. | 50 சங்கங்கள் | 2.0 |

69—

பரமக்குடி தாலுகா மருத்துவமனை.

வினா எண் 1701—டாக்டர் எஸ். [illegible] : மாண்புமிகு [illegible] துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—





இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா மருத்துவமனையில் D.A. (மயக்க மருந்து மருத்துவர்) M.D. (பொது நல மருத்துவர்) நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்கா மருத்துவமனை, 52 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகும். இம் மருத்துவமனையில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் மொத்தம் ஆறு (6). மொத்தம் ஆறு மருத்துவர்கள் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். பெண் மருத்துவர் மூன்று. ஒருவர் மகப்பேறு மருத்துவர். மூன்று ஆண் மருத்துவர்கள் இதில் குழந்தைகள் நல மருத்துவர்கள் இருவர்.

பெண் மருத்துவர்கள் முறையே 3—7—1987, 9—4—1987, மற்றும் 4—3—1991 முதல் பணிபுரிந்து வருகின்றனர். M.D., D வில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களில் பற்றாக்குறை இருப்பதன் காரணமாக அவர்களைப் பணியமர்த்த இயலவில்லை. தகுதியுடையவர்கள் கிடைத்தவுடன் பணியமர்த்தப்படுவர்.

70—

கால்நடை அதிகமாக உள்ள மாவட்டங்கள்.

வினா எண் 1716—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கால்நடைகள் அதிகமாக எந்தெந்த மாவட்டங்களில் உள்ளன ?

(ஆ) அவற்றைப் பராமரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்காணும் மாவட்டங்களில் கால்நடை அதிகமாக உள்ளன.

| மாவட்டம். | | பசு இனம் | எருமை இனம். |
|---|---|---|---|
| 1. தென்னாற்காடு | .. | 13,63,455 | 1,89,745 |
| 2. தஞ்சாவூர் | .. | 9,96,028 | 2,91,483 |
| 3. திருச்சி | .. | 8,53,983 | 3,09,499 |
| 4. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். | | 7,14,758 | 3,27,537 |
| 5. சேலம் | .. | 6,21,930 | 4,49,398 |
| 6. திருவண்ணாமலை-சம்புவராயர். | .. | 6,06,412 | 85,449 |
| 7. வடஆற்காடு அம்பேத்கார். | .. | 4.98.522 | 1,33,081 |

கீழ்க்காணும் மாவட்டங்களில் ஆடுகள் அதிகமாக உள்ளன :—

| மாவட்டம். | | ஆட்டினம் |
|---|---|---|
| 1. திருச்சி | .. | 7,23,028 |
| 2. சேலம் | .. | 4,75,677 |
| 3. திருவண்ணாமலை-சம்புவராயர் | .. | 4,42,749 |
| 5. திருநெல்வேலி-கட்டபொம்மன் | .. | 3,75,274 |
| 5. தென்னாற்காடு | .. | 3,66,043 |
| 6. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். | | 3,28,948 |

(ஆ) கால்நடைகள் பெருக்கத்தை அதிகரிக்க கால்நடைப் பராமரிப்புத் துறை, கால்நடைகள் நலம் காக்கும் திட்டத்தின் வாயிலாக தொடர்ச்சியாக 22 பிரதம மருத்துவமனைகளையும், 57 மருத்துவ பெருமனைகளையும், 758 கால்நடை மருந்தகங்களையும், 50 நடமாடும் கால்நடை மருந்தகங்களையும், 11 கால்நடை நோய் விழிப்புக் குழுக்களையும் மற்றும் 2,226 கால்நடை கிளை நிலையங்கள் மூலமாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது. வட்டார அளவில் ஒரு கால்நடை விரிவாக்க அலுவலர் ஒவ்வொரு வட்டாரத்திலும் நியமிக்கப்பட்டு கால்நடை மேம்பாட்டு பணிகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்களுடன் கலந்து பணி புரிகிறார். நடமாடும் மருத்துவமனை வாயிலாக மிகவும் உள்ளடங்கியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நோய் புலனாய்வுக் குழுவின் மூலம்





நோய் கிளர்ச்சியைக் கண்டறிந்து தக்க நேரத்தில் நோய் தடுப்பூசி போட தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் தேவைக்கேற்ப புது கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

தவிர கால்நடை பராமரிப்புத் துறை தமிழ்நாட்டில் உள்ள பசுக்கள், எருமைகளுக்கு செயற்கைமுறை இன விருத்திக்காக 2,770 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களை இயக்கி வருகிறது. இந்த 2,770 நிலையங்களில், 1,936 நிலையங்களில் உறைவித்து உபயோகப்படுத்தப்படுகிறது. மீதமுள்ள 834 நிலையங்களில் திரவ விந்து உபயோகப்படுத்தப்படுகிறது. செயற்கை முறை கருவூட்டல் பணிக்கு தேவையான உறை விந்தையும் திரவ விந்தையும் தயாரிக்க, கால்நடை பராமரிப்புத் துறை, 4 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்களையும், தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களில் பொலிகாளை நிலையங்களையும் செயல்படுத்தி வருகிறது.

கால்நடை பராமரிப்புத்துறை ஜெர்மனி, டென்மார்க் நாட்டிலிருந்து 140 உயர்தர ஜெர்சி, பிரிசியன் பொலி காளைகளை இறக்குமதி செய்து, உறைவிந்து உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

71—

### தீண்டாமை குற்றவியல் நீதிமன்றங்கள்.

**வினா எண் 1724—டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தீண்டாமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) மேலும் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

(அ) 29—1—1990 நாளிட்ட உள் துறையால் வெளியிடப்பட்ட நிலையாணை எண். 219-ன்படி மாவட்டத் தலைநகரங்களில் உள்ள செசன்சு நீதிமன்றங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தீண்டாமை குற்றவியல் வழக்குகளை அங்குள்ள செசன்சு நீதிமன்றம் விசாரிக்கும். இதன் காரணமாக,

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் எதுவும் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்படவில்லை.

(ஆ) " மேலே (அ)-வில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் இவ்வினா எழவில்லை ".

குறிப்பு—

மதுரை, திருச்சிராப்பள்ளி, கும்பகோணம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் தனித் தனியே தீண்டாமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர நாகப்பட்டினம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களிலும் தலா ஒரு தீண்டாமைக் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

72—

**சத்திரப்பட்டி சீனிவாசா நினைவு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் முறைகேடு குறித்து நடவடிக்கை.**

வினா எண். 1766—திரு. மா. சுந்தரதாஸ் :

Will the Hon'ble the Minister for Education be pleased to stat :

(a) Whether any inmate of the hostel of the Higher Secondary School at Chatarapatti near Dindugal has been raped at the hostel premises about the 26th July 1991.

(b) the details thereof ; and

(c) the action taken thereon ?

விடை—

(a), (b) and (c)—

சத்திரப்பட்டி சீனிவாசா நினைவு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 20—7—1991 அன்று இரவு பள்ளித் தலைமை ஆசிரியையின் அறையில் வினாவில் கூறப்பட்டுள்ள சம்பவம் நடந்ததாக தகவல் உள்ளது. இது தொடர்பாக பள்ளித் தலைமை ஆசிரியை செல்வி குயினி பள்ளிக் குழுவின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளருமான திருவாளர்கள் இல்லத்திற்சி, அவர்களின் ஒன்னை மற்றும் மேற்படி தகாத நடவடிக்கையில் ஈடுபட்டதாகக்





கூறப்படும் சாமியார் திரு. சாமிநாதன் என்கிற சிவசைலசுவாமிகள் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். தலைமையாசிரியை செல்வி குயினி என்பவர் 25—7—1991 முதல் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

73—

**தெரு விளக்கு எரிய நடவடிக்கை.**

வினா எண். 1836—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அனந்தகோபாலபுரம் தெற்குத் தெரு, வடக்குத் தெருவில் தெரு விளக்குகளை எரியச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தற்சமயம் தெரு விளக்குகள் எரிய விடப்பட்டுள்ளன.

74—

**புதுநகர் ஆதி திராவிடர்களுக்கு வானொலி மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கல்.**

வினா எண். 1849—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) ஊராட்சி, புதுநகர் ஆதி திராவிடர்களுக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

75—

**சுடுகாட்டிற்கு தகரக் கொட்டகை அமைத்தல்.**

வினா எண். 1856—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) ஊராட்சி, மேலக்கொள்ளுக்காட்டில் சுடுகாட்டிற்கு தகரக் கொட்டகை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

76—

**தெரு விளக்கு எரிய நடவடிக்கை.**

வினா எண். 1857—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) ஊராட்சி, மேலக்கொள்ளுக்காட்டில் தெருவிளக்குகளை எரியச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

தற்பொழுது தெரு விளக்குகள் சீர்செய்யப்பட்டு நல்ல நிலையில் எரிகின்றன.

77—

**ஆழ்குழாய்க் கிணற்றை பழுதுபார்த்து குடிநீர் கிடைக்கச்செய்தல்.**

வினா எண் 1858—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) ஊராட்சி, மேலகொள்ளுக்காடு ஆதி திராவிடர் தெருவிலுள்ள போர்வெல்லை பழுது பார்த்து குடிதண்ணீர் கிடைக்கச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

ஆழ்குழாய்க் கிணறு சீர் செய்யப்பட்டு தற்சமயம் குடிநீர் முழு அளவில் வழங்கப்படுகிறது.



78—

**மயானச்சாலை அமைத்தல்.**

வினா எண். 2365—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ)-யைச் சேர்ந்த கருப்பட்டித் தெரு மக்களுக்கு மயானச் சாலையும், தகரக் கொட்டகையும் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

79—

**கப்பிச் சாலையாக்குதல்.**

வினா எண். 1882—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) ஊராட்சி, கீழக்கொள்ளுக்காடு கீழத் தெருவிற்குள் செல்லும் சாலையை கப்பிச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

80—

**தெரு விளக்கு எரிய நடவடிக்கை.**

வினா எண் 1886—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) ஊராட்சி, கீழக்கொள்ளுக்காட்டில் தெருவிளக்கை எரிய வைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்சமயம் எல்லா தெரு விளக்குகளும் எரிய விடப்பட்டு உள்ளன.

81—

## சாலை அமைத்தல்.

வினா எண் 1897—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சி, மேல்விடுதிகொல்லைக்கு சாலை அமைத்தும் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

82—

## அதம்பை வடக்கு நடுநிலைப்பள்ளியின் ஆசிரியர் பற்றாக் குறையை போக்க நடவடிக்கை.

வினா எண். 1901—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம் அதம்பை வடக்கு நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தற்சமயம் இல்லை.

83—

## ஆதிதிராவிடர் காலனியில் பழுதடைந்த வீடுகள் பராமரிப்பு.

வினா எண் 1903—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக் கோட்டை பெரியார் நகர், ஆதிதிராவிடர் காலனியில் பழுதடைந்த வீடுகளைச் சரிசெய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



விடை—

அரசு ஆணையின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பயனாளிகள் தாங்களாகவே சொந்த செலவில் பராமரிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டுமாதலால் பழுதடைந்த அவர்களது வீடுகளைச் சரி செய்வதுபற்றி அரசிடம் செயற் குறிப்பு ஏதுமில்லை.

## பெரியார் நகர் ஆதிதிராவிடர் காலனிக்கு வானொலிப் பெட்டி.

வினா எண் 1904—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக் கோட்டை, பெரியார் நகர் ஆதிதிராவிடர் காலனிக்கு வானொலிப் பெட்டி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இங்கு வானொலிப் பெட்டி தற்போது உள்ளதால், அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

85—

## கப்பிச் சாலையாக்குதல்

வினா எண் 1906—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் நடுவிக் கோட்டை பெரியார் நகரிலிருந்து நடுவிக்கோட்டை செல்லும் சாலையை கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

86—

## சுடுகாட்டில் தகாக்கொட்டகை அமைத்தல்

வினா எண் 1921—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

[1992 பிப்ரவரி 4

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப் புளிக்காடு ஆதிதிராவிடர்களுக்கு சுடுகாட்டில் தகரக்கொட்டகை கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பட்டுக்கோட்டை ஒன்றியம் கழுகுப்புளிக்காடு ஆதி திராவிடர் காலனி சுடுகாட்டிற்கு 1991-92 ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் தகரக்கொட்டகை கட்டித் தர திட்ட மிடப்பட்டுள்ளது.

87—

கழுகுப்புளிக்காடு ஆதிதிராவிடர்களுக்குப் பால்வாடி பள்ளி.

வினா எண் 1922—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் கழுகுப் புளிக்காடு ஆதி திராவிடர்களுக்குப் பால்வாடி பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

88—

தெருவிளக்கு எரிய நடவடிக்கை.

வினா எண் 1927—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் கழுகுப் புளிக்காட்டில் தெருவிளக்கை எரிய வைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இவ்வூராட்சியில் மொத்தமுள்ள 60 தெருவிளக்குகளும் தற்சமயம் எரிகின்றன.



1992 பிப்ரவரி 4]

89—

வேலைவாய்ப்புக்காக மற்ற மாவட்டத்தில் பதிவு செய்தல்.

வினா எண் 2028—டாக்டர் ச. சுந்தராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், வேலை வாய்ப்பு அலுவல கத்தில் வேலைவாய்ப்புக்காக மற்ற மாவட்டத்திலிருந்து பதிவு செய்ய இயலுமா ?

(ஆ) ஆம் எனில், அவ்வாறு பதிவு செய்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பில் முக்கியத்துவம் கொடுக்கப்படுமா ?

விடை—

(அ) தற்போதுள்ள விதிமுறைகளின்படி ஒரு மாவட்டத் தின் எல்லைக்குள் வசிப்போர், அம்மாவட்டத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தில் மட்டுமே பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதன்படி இராமநாதபுரம் மாவட்ட எல்லைக்குள் உள்ள முகவரியை அளிக்கும் விண்ணப்ப தாரர்கள் மட்டுமே அம்மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள இயலும். எனினும் முதுநிலை பட்ட தாரிகள். பொறியியல் மருத்துவப் பட்டதாரிகள் போன்றோர் மற்றும் அதற்குச் சமமான கல்வித் தகுதியுள்ள மாநிலத்திலுள்ள அனைத்து மனுதாரர்களும் சென்னையிலுள்ள தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்படுகின்ற வர். பொருத்தமான காலியிடங்களுக்கு விதிகளின்படி அவர்களது பெயர்கள் இவ்வலுவலகத்தால் பரிந்துரை செய்யக் கருதப்படும்.

(ஆ) இல்லை.

(இ) இராமநாதபுரம் மாவட்ட வேலை வாய்ப்பு அலு வலகத்திற்கு தெரிவிக்கப்படும் காலி இடங்களுக்கு அவ்வலுவல கத்தில் பதிவு செய்துள்ள மனுதாரர்கள் மட்டுமே கல்வித் தகுதி, வயது மற்றும் பதிவு மூப்பு முதலியவற்றின் அடிப்படையில் வேலையளிப்பவர்களுக்குப் பரிந்துரை செய்யப்படுவர். போதிய தகுதி வாய்ந்த மனுதாரர்கள் அம்மாவட்டத்தில் இல்லை என்று

நிலை ஏற்பட்டால் மட்டுமே பிற மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள மனுதாரர்கள் பரிந்துரை செய்யப்படுவர்.

90—

**மேட்டூர் அணை பூங்கா பராமரிப்பு.**

**வினா எண் 2034—திரு. க. அர்ச்சுனன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

மேட்டூர் அணை பூங்கா பராமரிப்பு சரியில்லாத காரணத் தால் தோட்டக்கலை துறையிடம் ஒப்படைக்கப்படுமா ?

விடை—

மேட்டூர் அணை பூங்கா பராமரிப்பு, நிதி வசதிக்கேற்ப பராமரிக்கப்பட்டு வருகிறது. போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்தில் இத்துறையின் மூலமே நன்கு பராமரிக்கப்படும். மேலும் இப்பூங்கா மேட்டூர் அணையின் கீழ்ப்புறம் மிக அருகில் உள்ளதால் அணையின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இப் பூங்காவினை பொதுப் பணித்துறையினர் பராமரிப்பது அவசிய மாகிறது.

91—

**கன்னியாகுமரி மாவட்டத்தில் பாதுகாக்கப்பட்ட காடுகள்.**

**வினா எண் 2053—திரு. கு. லாரன்ஸ் :** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பாதுகாக்கப்பட்ட காடு களின் விஸ்தீரணம் எவ்வளவு ?

(ஆ) தற்போது அதன் சுற்றளவு குறைந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு குறைந்துள்ளது ?

(ஈ) கன்னியாகுமரி மாவட்ட பாதுகாக்கப்பட்ட காடுகளின் சுற்றளவை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

விடை—

(அ) 40,802 எக்டேர்.

(ஆ) இல்லை.

(இ) எழாது.



(ஈ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 3,849 எக்டேர் ரெவின்யூ புறம்போக்கு பாரஸ்ட், பஞ்சாயத்து பாரஸ்ட், ரெவின்யூ பாரஸ்ட் ஆக உள்ள இடங்களை, பாதுகாக்கப்பட்ட காடுகளாக அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

92—

**நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் பதவிகள்**

**வினா எண் 2073—டாக்டர் ச. சுந்தரராஜ் :** மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் பதவிகள் எத்தனை ?

(ஆ) காலியாக உள்ள மதுரை மண்டல இயக்குநர் பணி எப்போது நிரப்பப்படும் ?

விடை—

(அ) ஏழு.

(ஆ) காலியாக இருந்த மதுரை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் பணியிடம் 1991 அக்டோபர் மாதத்தில் நிரப்பப்பட்டு விட்டது.

93—

**முண்டந்துறை, களக்காடு பகுதிகளிலுள்ள வன விலங்குகள்**

வினா எண் 2131—**திரு. ஆர். முருகையா பாண்டியன் :** போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி, முண்டந்துறை பகுதி, களக்காடு பகுதி ஆகிய பகுதிகளில் என்ன இன வனவிலங்குகள் உள்ளன ?

விடை—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி முண்டந்துறை மற்றும் களக்காடு வன உயிரினச் சரணாலயப் பகுதிகளில் கீழ்க்கண்ட வன உயிரினங்கள் உள்ளன :

[1992 பிப்ரவரி 4

யானை, புலி, சிறுத்தை, ஸ்லாத் கரடி, கழுதைப்புலி, சிரி, பாம் சிவட், புனுகுப்பூனை, மலபார் பெரிய அணில், சாம்பல் நிற அணில், இந்திய காட்டெருமை, நீலகிரி வரையாடு, பெரிய மௌஸ் டீர், கடமான், புள்ளிமான், சிங்கவால் குரங்கு, நாட்டுக் குரங்கு, அனுமார் மந்தி, நீலகிரி கருங்குரங்கு, எறும்பு தின்னி, முள்ளம்பன்றி, நரி, காட்டு நாய், உடும்பு, மலைப்பாம்பு மற்றும் ஆந்தை.

94—

### நிழற்குடை அமைத்தல்

வினா எண் 2179—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், உதயசூரியபுரத்தில் ஒரு நிழற்குடை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

நடைமுறையில் இருக்கும் அரசின் முடிவின்படி போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலைமையைப் பொறுத்தும் நிழற்குடை அமைக்கலாம். தற்போது சோழன் போக்குவரத்துக் கழக நிதி நிலவரப்படி தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் உதயசூரியபுரத்தில் ஒரு நிழற்குடை அமைப்பது குறித்த செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

95—

### பாபநாசம் அடிவாரத்திலுள்ள சோதனைச் சாவடியை மாற்றுதல்.

வினா எண் 2444—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், பாபநாசம் அடிவாரத்திலுள்ள செக்போஸ்ட்டை மாற்றியமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாவை ?



1992 பிப்ரவரி 4]

விடை—

(அ) ஆம்.

(ஆ) அம்பாசமுத்திரம்-பாபநாசம் அகஸ்தியர் அருவியில் பொதுமக்கள் ஆண்டு முழுவதும் குளிக்கும் பொருட்டும், அருவியை காணும் பொருட்டும் வருகிறார்கள். அருவிக்குச் செல்லும் வழியில் வனச் சோதனைச் சாவடி ஒன்று தற்சமயம் இருப்பதால், பொதுமக்கள் நுழைவுக் கட்டணம் செலுத்தி, வன உயிரினச் சரணாலயம் எல்லைக்குள் அமைந்துள்ள சாலை வழியே செல்ல வேண்டியுள்ளது. எனவே, பொதுமக்களின் வசதிக்காக அகஸ்தியர் அருவியை சுற்றுலா மையமாக அறிவிக்கவும், வனச்சோதனை நிலையத்தை அம்பை-முண்டந்துறைகரையார் சாலையில் அகஸ்தியர் அருவி அமைந்துள்ள சாலை பிரியும் இடத்திற்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

96—

### கீழக்கரும்புளியூத்து கிராமத்திற்கு வானொலிப் பெட்டி.

வினா எண். 2606—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம் கீழக்கரும்புளியூத்து கிராமத்திற்கு வானொலிப்பெட்டி வைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

தேவையான வானொலிப் பெட்டிகளை அந்தந்த ஊராட்சி நிதியிலிருந்தே வாங்கிக் கொள்ளலாம். எனவே, தனித்தனியாக திட்டம் தேவையில்லை.

97—

### வீரமாங்குடி ஊராட்சி மன்றத்தில் கால்நடை மருத்துவர் பணி நிரப்புதல்

வினா எண் 2842—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1992 பிப்ரவரி 4

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஊராட்சி ஒன்றியம் வீரமாங்குடி ஊராட்சி மன்றத்தில் அமைந்துள்ள கால்நடை மருத்துவமனையில் மருத்துவ நிபுணர் பணி நிரப்பப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் பணி நிரப்ப அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் ஊராட்சி ஒன்றியம் வீரமாங்குடி ஊராட்சி மன்றத்தில் கால்நடை மருத்துவமனை ஏதும் இதுவரை திறக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

98—

**காலியாக உள்ள குற்றவியல் நீதிமன்ற நடுவர் பதவியை நிரப்ப நடவடிக்கை**

வினா எண் 2851—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் நகரில் அமைந்துள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடுவர் பதவி கடந்த இரண்டு மாதங்களாக காலியாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக பணியிடம் நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பாபநாசம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் உட்பட காலியாயிருந்த ஐந்து குற்றவியல் நீதிமன்ற நடுவர் பதவிகளை நிரப்ப, எற்கெனவே தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டு, அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணி நியமனத்திற்காக காத்திருப்போர் பட்டியலிலிருந்து, உரிய ஐந்து நபர்களை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்களாக நியமனம் செய்து அரசாணை எண் 1420, உள்துறை, நாள் 17—9—1991-ல் ஆணையிடப்பட்டுள்ளது.



1992 பிப்ரவரி 4]

99—

**ஆட்டோ, டாக்சி கட்டணங்களை உயர்த்த கோரிக்கை.**

வினா எண் 2893—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்கள் சங்கம் பெட்ரோல் விலை ஏற்றத்தினால் ஆட்டோ, டாக்சி கட்டணங்களை உயர்த்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை பல்வகை எண் 1319, உள்துறை, நாள் 27—8—1991-ன்படி ஆட்டோ மற்றும் டாக்சிகளுக்கு 28—8—1991 முதல் கீழ்க்கண்ட கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | ஆட்டோ | டாக்சி |
|---|---|---|
| குறைந்த கட்டணம் | ரூ. 4.40 | 6.80 |
| கிலோ மீட்டர் ஒன்றுக்கு | ரூ. 2.20 | 3.40 |

100—

**கால்நடை துணை மருத்துவமனை அமைத்தல்.**

வினா எண் 3080—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் புதுப் பட்டினம் ஊராட்சியை சேர்ந்த வெளிவயலுக்கு கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.



V 211, 3) 1892 · 1892-14-3 (163122)

**101—**

**காடுகளில் காய்ந்து விழுந்த மரங்களை பொது ஏலத்தில் விற்பனை செய்தல்.**

**வினா எண் 26—திரு. இரா. நடேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள காடுகளில் விலையுயர்ந்த ஈட்டி, தேக்கு, அயினி, பலா போன்ற மரங்கள் காய்ந்து விழுந்து கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை அரசு மர டிப்போக்களுக்கு எடுத்து வந்து விற்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வனப் பகுதிகளில் இறந்து காய்ந்து கிடக்கும் ஈட்டி, தேக்கு போன்ற விலையுயர்ந்த மரத்தடிகள் அவ்வப்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு சேகரிக்கப்படும் தடிகள் அரசு மரக் கிடங்குகளிலும், சிறப்பு அனுமதியின் பேரில் தலத்திற்கு அருகிலுள்ள வனக் கிடங்குகளிலும் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**102—**

**கைத்தறி தொழிலியல் சங்கங்கள்.**

**வினா எண் 195—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜர் மாவட்டத்தில் கைத்தறித் தொழிலியல் கூட்டுறவுச் சங்கம் செயல்படாமல் 'மாஸ்டர் வீவர்சிடம்' வேலை பார்ப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) காமராஜர் மாவட்டத்தில் கைத்தறி தொழிலியல் சங்கங்கள் செயல்படாமல் மாஸ்டர் வீவர்சிடம் வேலை பார்ப்பது இல்லை. மாவட்டத்திலுள்ள 20 சங்கங்களுக்குள் ஆர்.எச். 11



டாக்டர் லோகியா தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் செயல்படாத நிலையிலுள்ளது. இப்பகுதியில் மாஸ்டர் வீவர்கள் யாரும் இல்லை என்பதால் அவர்களிடம் சென்று வேலை பார்க்க வாய்ப்பில்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**103—**

**மருத்துவர் குடியிருப்புகள்.**

**வினா எண். 287—திரு. வி. கே. சின்னசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர் தங்கும் விடுதிகள் உள்ளன?

(ஆ) இல்லாத இடங்களில் விடுதிகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

(அ) தமிழகத்திலுள்ள மொத்தம் 1,429 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 293 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவர் தங்கும் குடியிருப்புகள் உள்ளன.

(ஆ) மேலும் 130 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவர் குடியிருப்புகள் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஏனைய ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் படிப்படியாக மருத்துவர் தங்கும் குடியிருப்புகள் கட்டுவது குறித்து அரசு நிதி நிலை இடம் தருவதற்குட்பட்டு இனிவரும் ஆண்டுகளில் கருதப்படும்.

**104—**

**காது, மூக்கு, தொண்டை தொடர்பான நிபுணர்களை நியமித்தல்.**

**வினா எண். 293—டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தாலுகா மருத்துவமனையில் கண், காது, மூக்கு, தொண்டை, மயக்க மருந்து அளித்தல் தொடர்பாக நிபுணர்களைப் பணியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1992 பிப்ரவரி 4

விடை—

பரமக்குடி தாலுகா மருத்துமனையில் தற்போது ஆறு மருத்துவ அலுவலர்கள் ( 3 ஆண்கள், 3 பெண்கள்) பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது கண், காது, மூக்கு, தொண்டை மற்றும் மயக்க மருந்து அளித்தல் சம்பந்தமான மருத்துவ சிகிச்சைப் பெற பரமக்குடி தாலுகா மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளை இராமநாதபுரம் மாவட்ட தலைமை மருத்துவ மனைக்கு சிகிச்சைப்பெற அனுப்பப்படுகிறார்கள். கண், காது மூக்கு, தொண்டை, மயக்க மருந்து அளித்தல் தொடர்பான நிபுணர்களின் பணியிடங்கள் அரசு தாலுகா மருத்துவமனை களில் தோற்றுவிக்கப்படுவதில்லை.

105—

இராமநாதபுர மாவட்டத்தில் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள்.

வினா எண் 464—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு தொழி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகள் எத்தனை, எங்கெங்கு உள்ளன ?

(ஆ) மேலும் ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையோ அல்லது மருந்தகமோ தற்போது இயங்கவில்லை.

(ஆ) தற்சமயம் இதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

106—

சேஷசாயி நிறுவனம்.

வினா எண். 491—திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1992 பிப்ரவரி 4]

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதி, வடலூரில் மூடப்பட்டுள்ள சேஷசாயி நிறுவனத்தை திறக்க பேச்சுவார்த்தை என்ற பெயரில் நிர்வாகம் காலங்கடத்தி வருவது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

வடலூரிலுள்ள சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம், அந் நிறுவனத்தில் பணிபுரிந்த தொழிலாளர்களில் தன்னிச்சையாக ஓய்வு பெற விரும்பும் தொழிலாளர்களுக்கு நஷ்டஈட்டுத்தொகை வழங்கியும், வேலைப்பளுவை குறைத்தும் நிறுவனத்தை மீண்டும் செயல்படுத்திருப்பதாக தெரிய வருகிறது. இதற்கிடையில் தொழிலாளர் துறையின் சமரச அதிகாரிகள் நிறுவனத்துடன் சமரசப் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

சமரச பேச்சு வார்த்தைகளின் முடிவினை அரசு எதிர் நோக்கியுள்ளது.

107—

பூங்காவை நவீனப்படுத்துதல்.

வினா எண் 546—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, பார்த்திபனூர் ரெகுலேட்டரில் உள்ள பூங்காவை நவீனப்படுத்தி பொழுதுபோக்கு இடமாக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

பார்த்திபனூர் ரெகுலேட்டர் பூங்காவை மேலும் நவீனப் படுத்தி, பொழுதுபோக்கு இடமாக்க தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக சாத்தியம் இல்லை.

108—

அம்மாபேட்டை ஒன்றிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 592—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதியில் அம்மாபேட்டை ஒன்றியத்தில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைந்து செயல்படுத்த குடிதண்ணீர் பொதுமக்களுக்கு கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

அம்மாபேட்டை, நெருஞ்சிப்பேட்டை பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூபாய் 90.48 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் 6/88-ல் பெறப்பட்டு 90 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. ஆனால், இத்திட்டத்தின் நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க, நெடுஞ்சாலை புறம்போக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்வது குறித்து வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதினால், இப்பணி மேற்கொள்ள காலதாமதமாகிறது. நீதிமன்றத்தின் தீர்ப்பு வாரியத்திற்கு சாதகமாக பெறப்பட்ட உடன் பணிகள் முடிக்கப்பட்டு, மக்கள் பயனுக்கு விரைவில் கொண்டுவர ஆவன செய்யப்படும்.

109—

பெத்தகாச்சிவயல் கிராமத்திற்கு மின்வசதி.

வினா எண் 623—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு ஊராட்சி பெத்தகாச்சிவயல் கிராமத்திற்கு மின்வசதி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு ஊராட்சி பெத்தக்காச்சிவயல் குக்கிராமத்திற்கு 10 குழல் விளக்குகள் பொருத்தக் கோரி ஒரு விண்ணப்பம் வாரியத்திற்கு



28—7—1989-ல் வந்துள்ளது. மேற்படி குழல் விளக்குகளுக்கு விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதியின் இலக்கீட்டிற்கு ஏற்ப மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும். குடிசைகளுக்கு மின் இணைப்பு கோரி இதுவரை விண்ணப்பம் ஏதும் வரவில்லை. அவ்வாறு விண்ணப்பங்கள் வருமாயின் அவ் விண்ணப்பங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டு பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதிக்கான இலக்கீட்டிற்கு ஏற்ப மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

110—

தார் சாலையாக மாற்றல்.

வினா எண் 673—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் வண்டுவாஞ்சேரியில் இருந்து ஆத்திக்குளம் கோழியக்குடி விசலூர் செல்லும் சாலையை தார் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம் வண்டுவாஞ்சேரியிலிருந்து ஆத்திக்குளம் கோழியக்குடி விசலூர் செல்லும் 4.8 கி.மீ. நீளமுள்ள சாலையை, ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 5.36 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலையாக்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

111—

கப்பிச் சாலையாக மாற்றல்.

வினா எண். 718—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஆவணம் பெரியநாயகிபுரம் மாரியம்மன் கோவிலிலிருந்து யூனியன் வரை செல்லும் சாலையை செப்பனிட கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

போளூரணி ஒன்றியம் பெரியநாயகிபுரம் மாரியம்மன் கோவிலிலிருந்து ஒன்றியம் வரை செல்லும் சாலை பெரியநாயகிபுரம் ஊராட்சி சாலையென்றும், 1.4 கி.மீ. நீளமுள்ள இந்த சாலையை ரூ. 1.5 இலட்சம் செலவில் கப்பிச் சாலையாக மாற்ற 1991-92 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

112—

### கூகையூர்—லட்சுமணபுரம் சாலை மேம்படுத்துதல்.

**வினா எண். 756—திரு. ஆர். பி. பரமசிவம் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சின்னசேலம் தொகுதியில் இரண்டு தாலுக்காக்களை இணைக்கும் திட்டத்தின் அடிப்படையில், கூகையூர்—லட்சுமணபுரம் சாலை மேம்பாட்டுத் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

113—

### புக்கங்குழி கிராம ஏரி பாதுகாத்தல்.

**வினா எண் 831—டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதியிலுள்ள புக்கங்குழி கிராம ஏரி நீர் குடிநீராக 5 கிராமங்களுக்குப் பயன்படுவதால் கால்நடைகள் குளிப்பாட்டப்படுவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

தற்சமயம் குடிநீர் வசதிக்காக புக்கங்குழி கிராம ஏரி பாதுகாக்கப்படுவதோடு தனி காவலர் நியமனம் செய்யப்பட்டு கால்நடைகள் குளிப்பாட்டப்படாமல் கண்காணிப்பதோடு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.



114—

### மீனவர்களுக்கு வீட்டுவசதி.

**வினா எண். 834—திரு. வே. பெரியசாமி :** மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதியில் வசிக்கும் மீனவர்களுக்கு அம்மாபேட்டையில் வீடு கட்டிக்கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் பெரியார் மாவட்டத்தில் மீனவர்களுக்கு கட்ட அரசிடம் திட்டம் உள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை. மீனவர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டம் கடல் மீனவர்களுக்கு மட்டுமே கட்டி வழங்கப்படுகின்றன. இத்திட்டம் உள்நாட்டு மீனவர்களுக்கு விரிவுபடுத்தப்படவில்லை.

115—

### ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

**வினா எண். 868—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

116—

**வினா எண் 880—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1992 பிப்ரவரி 4

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பள்ளத்தூர் வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்குப் புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

117—

வினா எண் 882—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பூவாணம் வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

118—

வினா எண் 885—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி மேற்கு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடு கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து



1992 பிப்ரவரி 4]

செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

119—

மருங்கப்பள்ளம் 1-வது வார்டிற்கு தெருவிளக்கு.

வினா எண் 911—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் மருங்கப் பள்ளம் 1-வது வார்டிற்கு தெருவிளக்குகள் எண்ணிக்கை அதிக ரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

சேதுபாவாசத்திரம் ஒன்றியம் மருங்கப்பள்ளம் 1-வது வார்டிற்கு 33 கூடுதல் தெரு விளக்குகள் பொருத்தக் கோரி விண்ணப்பங்கள் வந்ததில் 27 தெருவிளக்குகளுக்கு 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலேயே மின்இணைப்பு வழங்கப்பட்டு அவைகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள ஆறு தெருவிளக்குகளுக்கு இதற்கான மின்னூட்டி நீட்டிப்பு பணிகள் முடிந்தபின் மின்இணைப்பு வழங்கப்படும்.

120—

ஆதிதிராவிடர் காலனிக்கு மின்இணைப்பு.

வினா எண் 918—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பளுக் காடு ஆதிதிராவிடர் காலனிக்கு மின்இணைப்பு வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்திலுள்ள ருத்திரசிந்தாமணி கிராமம் 1972 லேயே மின்வசதி செய்யப்பட்டுவிட்டது. அக்கிராம ஊராட்சிப்பகுதியை சேர்ந்த பளுக்காடு ஆதிதிராவிடர் காலனி [illegible] ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்

பட்டுள்ள தொகுப்பு வீடுகளுக்கு ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின்இணைப்பு கோரி 24—1—1991 அன்று 21 விண்ணப்பங்கள் வந்துள்ளன. மேற்கூறிய தொகுப்பு வீடுகளுக்கு விண்ணப்பங்களின் வரிசைக்கிரமப்படி அப்பகுதி இலக்கீட்டிற்கு ஏற்ப மின்வசதி செய்து கொடுக்க ஆவன செய்யப் படும். இதைத்தவிர வேறு தெருவிளக்கு விண்ணப்பங்கள் ஏதும் இக்காலனியில் நிலுவையில் இல்லை.

**121—**

### ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

**வினா எண் 934—திரு. ஆர். சிங்காரம்** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் நாட்டாணிக் கோட்டை விடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

**விடை—**

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**122—**

**வினா எண் 937—திரு. ஆர். சிங்காரம்** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் நாடாகாடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

**விடை—**

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து



செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**123—**

### காலகம் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியர் பதவி அதிகரித்தல்.

**வினா எண் 971—திரு. ஆர். சிங்காரம்** : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் காலகம் உயர் நிலைப்பள்ளிக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—**

தற்சமயம் இல்லை.

**124—**

### தஞ்சாவூர் மாவட்டத்தில் மின்சார வசதி பெறாத கிராமங்கள்.

**வினா எண் 1094—திரு. சோ. இராசாராமன்** : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் மின்சார வசதி பெறாத கிராமங்கள் எத்தனை ?

(ஆ) அவற்றிற்கு எப்பொழுது மின்இணைப்பு செய்து தரப் படும் ?

**விடை—**

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங் களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**125—**

### பூங்காவிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை.

**வினா எண் 1172—திரு. ஆர். சிங்காரம்** : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் எரிப்புறக்கரையில் சர்வே எண் 266-ல் உள்ள பூங்காவிலுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப் படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

பட்டுக்கோட்டை வட்டம், எரிப்புறக்கரை கிராமம், புல எண் 266 வில்தீர்வை 0.31.5 ஹெக்டேர் பழைய உப்பளச்சாலை புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட நிலமாகும். இந்நிலத்தில் சிலர் ஆக்கிரமிப்பு செய்து, குடிசை போட்டு தொழில் செய்து வந்துள்ளனர். மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கையின் மீது மாவட்ட முன்சிப் கோர்ட்டில் ஆக்கிரமிப்புதாரர்கள் வழக்கு தொடர்ந்தனர். இவ்வழக்கில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பைக் கருத்திற்கொண்டு ஆக்கிரமிப்புதாரர்கள் தங்களது இடங்களைக் காலி செய்து, பொதுப் பாதைக்கோ, பொதுமக்களுக்கோ இடையூறு எழா வண்ணம் பாதையிலிருந்து 20 லிங்ஸ் தூரத்திற்கு அப்பால் குடிசை போட்டு டீக்கடை வைத்து தொழில் செய்கின்றனர் என்றும், தற்போதுள்ள ஆக்கிரமிப்பு பொதுமக்களுக்கோ, பொதுப் பாதைக்கோ எவ்வித பாதிப்பும் இல்லை என்பதாலும், ஆட்சேபணையற்ற ஆக்கிரமிப்பாக இருப்பதாலும், இவ்வாக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

126—

**எரிப்புறக்கரை மீனவர்கள் வீட்டிற்கு ஒரு விளக்கு திட்டம் அமல்படுத்தல்.**

வினா எண் 1175—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் எரிப்புறக்கரை மீனவர்கள் வீட்டிற்கு ஒருவிளக்கு போட்டுக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பட்டுக்கோட்டை ஒன்றியம் எரிப்புறக்கரை மீனவர்கள் வீட்டிற்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின்இணைப்பு கோரி இதுவரை விண்ணப்பம் எதும் மின்வாரிய அலுவலகத்திற்கு



வரவில்லை. அவ்வாறு வருமாயின் அவைகள் ஆய்வு செய்யப்பட்டு குடிசை மின்இணைப்பு பெற தகுதிபெறும் விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதிக்கான இலக்கீட்டிற்கு ஏற்ப மின்இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

இம்மீனவர்கள் காலனியில் இதுவரை 30 வீட்டிற்கு, வீட்டு உபயோகத்திற்கான மின்இணைப்பு வழங்கப்பட்டு அவைகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. மேலும் இக்காலனியில் 20 தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு அவைகளும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

127—

**அரசு கப்பல் வாங்குவதில் ஊழல் நடந்ததாக குற்றம் சாட்டிய பத்திரிகையின் மீது வழக்கு.**

வினா எண் 1197—திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு கப்பல் வாங்குவதில் ஊழல் நடந்ததாக குற்றம் சாட்டிய பத்திரிகையின் மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டுள்ளதா ?

(ஆ) அக்கிரிமினல் வழக்கின் தற்போதைய நிலை என்ன ?

(இ) கப்பல் வாங்குவதில் ஊழல் நடந்ததா என்பதனை அறிய அரசு விசாரணை நடத்துமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

128—

**போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து நிற்குமிடங்களில் நிழற்குடைகள்.**

வினா எண் 1204—டாக்டர் ச. சுந்தராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து நிற்கு மிடங்களில் நிழற்குடைகள் கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

பேருந்து நிற்குமிடங்களில் நிழற்குடைகள் அமைக்கும் பணி உள்ளாட்சி மற்றும் நகராட்சிகளைச் சார்ந்தது. எனினும் போக்குவரத்துக் கழகங்களில் நிழற்குடைகள் அமைக்க கோரிக்கைகள் பெறப்படுவதால் அப்பணியை அக்கழகங்கள் மேற்கொண்டு வந்தன. பொதுவாக நிழற்குடைகள், தனியாரால் கடைகள் வைப்பது, கால்நடைகள் கட்டுவது போன்ற தவறான உபயோகத்திற்குட்படுத்தப்பட்டதால் போக்குவரத்துக் கழகங்கள் நிழற்குடைகள் அமைப்பதில் அதிக கவனம் செலுத்தத் தேவையில்லை என அறிவுறுத்தப்பட்டன. எனினும் பொதுமக்களின் தேவையையும், போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு மேலும் பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் தாமாகவே கொடுக்கும் நன்கொடையைக் கொண்டும் போக்குவரத்துக் கழகங்கள் நிழற்குடைகள் அமைக்கும் பணியை மேற்கொள்ளலாமென அக்கழகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

129—

**சத்திரக்குடியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி.**

**வினா எண் 1213**—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி சத்திரக்குடியில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





130—

**புவனகிரியில் கடலோர கிராமங்களுக்கு டிரான்ஸ்பார்மர் அமைத்தல்.**

**வினா எண் 1222**—செல்வி ஜி. மல்லிகா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் உள்ள கடலோர கிராமங்களான தில்லைவிடங்கன், சாமியார்பேட்டை, பரங்கிப்பேட்டை ஆகிய ஊர்களுக்கு மின்விளக்குகள் சரிவர எரியச்செய்ய டிரான்ஸ்பார்மர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) புவனகிரி தொகுதியில் உள்ள கடலோர கிராமங்களான தில்லைவிடங்கன், சாமியார்பேட்டை, பரங்கிப்பேட்டை ஆகிய ஊர்களில் நிலவிவரும் குறைந்த மின் அழுத்தத்தைச் சீர் செய்ய எட்டு புதிய மின்மாற்றிகள் ரூ. 11.20 இலட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளது. மின் தளவாடங்கள் வரப்பெறுவதைப் பொறுத்து 31—3—1992 க்குள் இப்பணிகள் முடிக்கப்படவுள்ளது.

இதைத்தவிர இம்மூன்று கிராமங்களுக்கும் மின்சக்தி அளிக்கும் புவனகிரி மற்றும் பரங்கிப்பேட்டை மின்னூட்டிகள் (Feeders) சிதம்பரம் 33/11 கிலோவோல்ட் உபமின் நிலையத்திலிருந்து வருகின்றன. இவற்றின் கடைசிப்பகுதிகளில் மின் அழுத்தத்தை சீராக்கும் வகையில் பி. முட்லூர் எனும் இடத்தில் புதிய 33/11 கே. வி. உபமின்நிலையம் அமைத்து இம்மின்னூட்டிகளை அந்த நிலையத்திற்கு மாற்றும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டு 1994—95-ல் செயலில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

131—

**முகுந்தநல்லூர் கிராமத்திற்கு மின்விளக்கு அளிக்க திட்டம்.**

**வினா எண் 1258**—திரு. ச. புரட்சிமணி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் முருகந்த நல்லூர் என்ற கிராமத்திற்கு மின்விளக்கு போட அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை —

தென்னாற்காடு மாவட்டம் மங்களூர் தொகுதியில் உள்ள முருகந்தநல்லூர் கிராமத்தில் 17 தெருவிளக்குகள் பொருத்தப்பட்டு ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 17 குடிசைகளுக்கும் மின்இணைப்பு வழங்கப்பட்டு இவைகளும் இயக்கத்தில் உள்ளன.

தற்போது 11 கூடுதல் தெருவிளக்குகள் பொருத்தக்கோரி வரப்பெற்ற விண்ணப்பத்தின்பேரில் தெருவிளக்கு வேலைகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அப்பணி முடிந்தபின் தெருவிளக்குகளுக்கு மின்இணைப்பு வழங்கப்படும்.

இதைத்தவிர ஐந்து குடிசைகளுக்கு மின்இணைப்பு கோரி விண்ணப்பங்கள் வந்துள்ளன. இவைகளுக்கு பதிவு வரிசை அடிப்படையில் இவ்வாண்டு இலக்கின்படி மின்இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

132—

செங்கமேடு கிராமத்தில் தொகுப்பு வீடு கட்டும் திட்டம்.

வினா எண் 1283—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் செங்கமேடு கிராமத்தில் தொகுப்பு வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.



133—

கீரிப்பட்டி பேரூராட்சியில் அருந்ததிய மக்களுக்கு வீட்டு வசதி.

வினா எண் 1365—திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் கீரிப்பட்டி பேரூராட்சியில் அரிசன அருந்ததியர் மக்களுக்கு நிலம் கையகப்படுத்தி செய்யப்பட்டு வீடு கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கீரிப்பட்டி கிராமம் சர்வே எண் 208/2-சி-யில் 2.70 ஏக்கர் நிலம் ஆதிதிராவிடர்களின் வீட்டுமனைக்காக கையகப்படுத்தப்பட்டு நிலமும் சுவாதீனம் எடுக்கப்பட்டுவிட்டது. நில உரிமையாளர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து தடையாணை பெற்றுள்ளார். வழக்கு முடிந்ததும் கீரிப்பட்டி ஆதிதிராவிடர் மக்களுக்கு வீட்டு மனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

134—

எட்டான்குளம் கிராமத்திற்கு குடிநீர்த் தொட்டி அமைத்தல்.

வினா எண். 1368—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, எட்டான்குளம் கிராமத்திற்கு குடிநீர்த் தொட்டி அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக நிறைவேற்றப்படுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆலங்குளம் தொகுதி, எட்டான்குளம் கிராமத்தின் தற்போதைய மக்கள் தொகை 1445 ஆகும். இங்கு 5 திறந்த வெளி கிணறுகளும் ஒரு கையிறைப்பான் பொருத்தப்பட்ட ஆழ் குழாய்க் கிணறும் உள்ளன. இக்கிராமம் பகுதியளவு குடிநீர்

வசதி பெற்ற கிராமமாகும். நடப்பு நிதியாண்டில் இக்கிராமத்திற்கு ஒரு விசைப் பம்பு குடிநீர்த் திட்டம் வழங்க நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நீராதாரம் தோற்றுவிக்கும் பணி தற்போது ஆய்வில் உள்ளது. போதுமான நீராதாரம் தோற்றுவித்தபின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு திட்டம் மேற்கொள்ளப்படும்.

135—

காடுகள் அழிந்து வருவதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 1401—திருமதி கே. மரியமுஉல் ஆசியா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காடுகள் அழிந்து வருவதைத் தடுக்கவும், வன உயிரனங்களைப் பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

காட்டுவளத்தின் அவசியத்தை உணர்ந்து அவற்றைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வருகிறது. வன உயிரினங்களைப் பாதுகாக்க தேசியப் பூங்கா, உயிரியல் பூங்காக்கள் மற்றும் வன உயிரினப் புகலிடங்கள் அமைக்கப்பட்டு வன உயிரினங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

136—

பரமக்குடி ஒன்றியத்தில் வைகை வரத்துக் கால்வாய்கள்.

வினா எண் 1434—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதி பரமக்குடி ஒன்றியத்தில் வைகை வரத்துக் கால்வாய்கள் எத்தனை ?

(ஆ) அவை எந்த ஆண்டு மராமத்து செய்யப்பட்டன ?





விடை—

(அ) மற்றும் (ஆ)

14 வகை வரத்துக் கால்வாய்கள் உள்ளன. அவைகள் மராமத்து செய்த ஆண்டு பின்வருமாறு :—

| வரிசை எண். | கால்வாயின் பெயர். | மராமத்து செய்யப் பட்ட ஆண்டு. |
|---|---|---|
| 1. | அருங்குளம் வரத்துக் கால்வாய் | 1988—89 |
| 2. | பெருங்கரை வரத்துக் கால்வாய் | — |
| 3. | வேணுநாதஉடையார் கால் | 1987—88 |
| 4. | கமுதக்குடி வரத்துக் கால்வாய் | 1987—88 |
| 5. | கூத்தங்கால் வரத்துக் கால்வாய் | 1989—90 |
| 6. | பொதுவக்குடி வரத்துக் கால் (வெங்கிட்டான் குறிச்சி) | 1988—89 |
| 7. | சுந்தநேந்தல் வரத்துக் கால் | — |
| 8. | தெளிச்சாத்த நல்லூர் வரத்துக் கால் | 1988—89 |
| 9. | காட்டுப்பரமக்குடி வரத்துக்கால்வாய் | — |
| 10. | வேந்தோனிவரத்துக் கால்வாய் | — |
| 11. | செல்லூர் வரத்துக் கால்வாய் | — |
| 12. | அரியனேந்தல் வரத்துக் கால்வாய் | 1987—88 |
| 13. | உரப்புளி வரத்துக் கால்வாய் | 1988—89 |
| 14. | பார்த்திபனூர் வரத்துக் கால்வாய் | 1988—89 |

137—

நயினார்கோவில் ஒன்றியத்தில் மயானச் சாலைகள் அமைத்தல்.

வினா எண் 1442—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, நயினார்கோவில் ஒன்றியத்தில் மயானச் சாலைகள் இல்லாத ஊர்கள் எத்தனை ?

(ஆ) அவற்றிற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் மயானச் சாலைகள் இல்லாத ஊர்கள் 8.

(ஆ) மேற்கண்ட ஊர்களில் ஊராட்சி நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு மயானச் சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

138—

கருவுற்ற மகளிர் இறப்பு விகிதம்.

வினா எண் 1443—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கருவுற்ற மகளிர் இறப்பு விகிதம் எவ்வளவு ?

(ஆ) இது மற்ற மாநிலங்களைவிட எவ்வளவு குறைந்துள்ளது ?

விடை—

(அ)

| வருடம் | விகிதம் |
|---|---|
| 1987 | 1.50 (1,000 பிரசவங்களுக்கு) |
| 1988 | 1.43 (1,000 பிரசவங்களுக்கு) |
| 1989 | 1.42 (1,000 பிரசவங்களுக்கு) |

(ஆ) மற்ற மாநிலங்களுக்கான விவரங்கள் இல்லை. ஆயினும் அகில இந்திய அளவில் கருவுற்ற மகளிர் இறப்பு விகிதம், நான்கிற்கு அதிகமாக உள்ளது.

139—

பூவத்தி கண்மாய் ஆழப்படுத்தும் திட்டம்

வினா எண் 1465—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருப்புவனம் ஒன்றியம், பூவத்தி கண்மாய் ஆழப்படுத்தவும், வாய்க்கால்களில் தடுப்புச் சுவர் அமைக்கும் திட்டமும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அப்பணியினை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

140—

குளத்துக்கரை ஆதிதிராவிடர்களுக்கு ஒற்றை விளக்கு போட்டுத் தரும் செயற்குறிப்பு.

வினா எண் 1590—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கா. உஞ்சிவிடுதி குளத்துக்கரை ஆதிதிராவிடர்களுக்கு ஒற்றை விளக்கு போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம் திருவோணம் ஒன்றியம் கா. உஞ்சிவிடுதி குளத்துக்கரை பகுதியில் ஆதிதிராவிடர் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு இணைப்பு கோரி ஒன்பது விண்ணப்பங்கள் வந்துள்ளன. இந்த விண்ணப்பங்களுக்கு இணைப்பு வழங்க தாழ்வழுத்த மின்னூட்டி நீட்டிப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் சம்மந்தப்பட்ட மின்வாரிய பிரிவு அலுவலகத்தில் 36 விண்ணப்பங்கள் ஏற்கனவே நிலுவையில் உள்ளன. குடிசை இணைப்புகள் பதிவு வரிசை அடிப்படையில் வழங்கப்படுவதால் இந்த ஒன்பது விண்ணப்பங்களுக்கு 1992-93 ஆண்டில் அப்பகுதி இலக்கீட்டிற்கேற்ப மின் இணைப்பு கொடுக்க ஆவன செய்யப்படும்.

141—

இளம்பிள்ளை வாத சொட்டு மருந்து அரசு மருத்துவமனைகளிலேயே கொடுக்க ஏற்பாடு.

வினா எண் 1627—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாய்சேய் நல இல்லங்களில் கொடுக்கும் இளம்பிள்ளை வாத சொட்டு மருந்து (போலியோ டிராப்ஸ்) அரசு மருத்துவமனை களிலேயே கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

விடை—

ஆம். நாடு தழுவிய தடுப்பூசித் திட்டத்தின்கீழ் இளம்பிள்ளை வாத சொட்டு மருந்து (போலியோ டிராப்ஸ்) அரசு மருத்துவ மனைகளிலும் கொடுக்கப்பட்டு வருகிறது.

142—

## தாய்சேய் நல விடுதிகள்.

வினா எண் 1648—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தாய்சேய் நல விடுதி கள் (Maternity Centres) எத்தனை ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டத்தில் 251 துணை சுகாதார நிலை யங்கள் (தாய்சேய் நல விடுதிகள்) செயல்பட்டு வருகின்றன.

143—

## கோழி வளர்ப்புப் பண்ணைகள்.

வினா எண் 1671—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் டாப்கோ மூலம் 1989-90-ல் துவங்கப்பட்ட கோழி வளர்ப்புப் பண்ணைகள் எத்தனை ?

(ஆ) அரசுக்கு இதனால் கிடைத்த லாபம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ):

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி வட்டத்தில் கமுதக்குடி என்ற கிராமத்தில் ஒரு கோழிப்பண்ணை 25—1—199[illegible] அன்று துவக்கப்பட்டது. இப்பண்ணை இலாபம் கருதி நடத்தப்



படுபவை அல்ல. கிராமவாசிகளுக்கு கோழி வளர்ப்பில் பயிற்சி கொடுக்கவும் கோழி வளர்ப்பை ஊக்குவிக்கவும் நடத்தப்படு கிறது.

144—

## இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பால்வளத் துணைப்பதிவாளர் அலுவலகம்.

வினா எண் 1691—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பால்வளத் துணைப்பதி வாளர் அலுவலகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

145—

## ஆதிதிராவிட தாலுகா அலுவலர் நியமிக்கும் செயற்குறிப்பு.

வினா எண் 1711—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு ஆதிதிராவிட தாலுகா அலுவலர் நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனை யில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசின் நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) :

தற்போது இரண்டு வட்டங்களுக்கு (Taluks) ஒரு ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் மற்றும் இதர பணியா ளர்கள் உள்ளனர். ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் வீதம் நியமிக்க வேண்டுமெனில் மேலும் 82 தனி வட்டாட்சியர்களையும் மற்றும் இதர பணியாளர்களையும் நியமிக்க வேண்டும். இதற்கு பெரும் செலவு ஆகும். எனவே,

ஆதிதிராவிடர்கள் அதிக அளவில் வசிக்கும் மாவட்டங்களுக்கு மட்டும் ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு தனி வட்டாட்சியர் மற்றும் இதர பணியாளர்களை நியமிப்பதற்கான செயற்குறிப்பினை 1992-93 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் ஆய்வு செய்யலாமென அரசு கருதியுள்ளது.

**146—**

**எமனேஸ்வரம்—பரமக்குடி நகரப்பேருந்து விடுதல்.**

**வினா எண் 1713—டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி எமனேஸ்வரத்திலிருந்து பரமக்குடிக்கு நகரப் பேருந்துகள் விட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

எமனேஸ்வரம், பரமக்குடி நகர் எல்லையில் உள்ளது. பரமக்குடி-இளையாங்குடி பிரதானச் சாலையில் 3.4 கிலோ மீட்டரில் பிரிந்து உள்ளே 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அதாவது பரமக்குடி பேருந்து நிலையத்திலிருந்து எமனேஸ்வரம் 4.9 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

பரமக்குடியிலிருந்து எமனேஸ்வரம் வழியாக ஐந்து நகரப் பேருந்துகள் 54 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும் பரமக்குடியிலிருந்து எமனேஸ்வரம் விலக்குச் சாலை வழியாக ஏழு நகரப் பேருந்துகள் 62 நடைகள் சென்று வருகின்றன. மேற்கூறிய பேருந்துகளே போதுமானது என்று கருதப்படுகிறது. எனவே பரமக்குடியிலிருந்து எமனேஸ்வரத்திற்கு நகரப்பேருந்து ஒன்று தனியாக விடுவது தேவையில்லை.

**147—**

**பரமக்குடியில் 1988-89-ல் நடந்துள்ள விபத்துக்கள்.**

**வினா எண் 1720—டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய நெடுஞ்சாலையில் (எண் 49) பரமக்குடி நகர எல்லையில் 1988-89-ல் எத்தனை விபத்துக்கள் நடந்துள்ளன?



(ஆ) அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) 1988—62 விபத்துக்கள்.

1989—71 விபத்துக்கள்.

(ஆ) முக்கிய இடங்களில் வேக தடுப்பு அமைக்கப்பட்டும், நெரிசலான நேரங்களில் காவலர்கள் பணியமர்த்தப்பட்டு போக்குவரத்து சீர் செய்யப்படுகிறது.

**148—**

**வெளி மாநிலங்களில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனக் கிளைகள்.**

**வினா எண் 1721—டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி ஆடைகளை விற்க வெளிமாநிலங்களில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனக் கிளைகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றின் இலாப நட்ட விவரம் என்ன?

விடை—

(அ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு 175 கிளை விற்பனை நிலையங்கள் வெளிமாநிலங்களில் உள்ளன.

(ஆ) 1989-90-ல் ரூ. 35.72 லட்சம் நட்டம் அடைந்துள்ளது.

**149—**

**நாமக்கல் நகரத்தில் கூடுதல் செசன்ஸ் கோர்ட்.**

**வினா எண் 1741—திரு. எஸ். அன்பழகன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் நகரத்தில் கூடுதல் செசன்ஸ் கோர்ட் அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) :

நாமக்கல் நகரத்தில் கூடுதல் செசன்ஸ் கோர்ட் கொண்டுவர வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்தோ அல்லது வழக்கறிஞர் சங்கத்திடமிருந்தோ உயர்நீதிமன்றத்திடமிருந்தோ கோரிக்கை எதுவும பெறப்படவில்லை.

**150—**

**திருச்சி அரசு அலுவலகங்களுக்கு பன்மாடிக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 1794—**டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியிலுள்ள அரசு அலுவலகங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் அமையும் வண்ணம் ஒரு புதிய பன்மாடிக் கட்டிடத்தை உருவாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—**

இப்பொருள் குறித்த செயற்குறிப்பு எதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. தகவல் கோரல்.

**(அ) சைதாப்பேட்டை, பரங்கிமலை கண்டோன்மெண்ட் பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றுள்ள வன்முறைச் சம்பவங்கள் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்றையதினம் சைதாப்பேட்டை அருகில் ஏற்பட்ட ஒரு வன்முறை நிகழ்ச்சியைப் பற்றியும், அதற்கு முதல் நாள் இரண்டாம் தேதி பல்லாவரம் கண்டோன்மென்ட் தேர்தலில் நடந்த வன்முறையைப்பற்றியும் அவையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களும் டாக்டர் தே. குமாரதாஸ், திரு. மா. சுந்தரதாஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. ஆர். ஒங்காரம் முதலான உறுப்பினர்களும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.



ஆளுநரின் உரையின் மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது ஒத்தி வைப்புத் தீர்மானம் பேரவையில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை என்பது மரபாகும். இருந்தாலும் பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி அரசாங்கத்தின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வருவதற்கு நான் அனுமதிக்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

* **திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிப்ரவரி 3 ஆம் தேதி அண்ணா நினைவு தினம். அண்ணாவின் வழி அன்பு வழி. நேற்று காலையில் பல்வேறு அரசியல் கட்சிகளும், ஊர்வலங்கள் நடத்தி அண்ணாவின் சமாதியிலே பிரதிக்ஞை ஏற்றுக்கொண்டார்கள். மாலை வரை வந்த செய்திகள் நல்ல செய்திகளாகவே வந்திருக்கின்றன. மாலையிலே திராவிட முன்னேற்றக் கழகம் கவர்னரைச் சந்தித்து தங்களுடைய கோரிக்கை அடங்கிய மகஜரைக் கொடுக்க பேரணியை நடத்தியிருக்கிறார்கள். அந்தப் பேரணி இராஜ் பவனுக்கு முன்னாலே முடிந்து, பேரணிக்குத் தலைமை தாங்கிய தலைவர்கள் ஆளுநரைச் சந்திக்கச் சென்றார்கள். அதற்குப் பின்னாலே அந்தப் பகுதியிலே வன்முறை நடைபெற்றிருக்கின்றது. கடுமையான வன்முறைத் தாக்குதல்கள், தனி நபர்கள் மீது, பொதுத் துறைக்குச் சொந்தமான வாகனங்கள் மீது, காவல் துறையினர் மீது என்று பல்வேறு வகையிலே வன்முறை நடைபெற்றிருக்கிறது. அங்கே பக்கத்திலே இருந்த அரசுக்குச் சொந்தமான பஸ் டெப்போவிற்குள்ளே கல்-எறி சம்பவங்கள் நடைபெற்றதாகவும், அதைத் தொடர்ந்து பல்வேறு வன்முறைகள் நடைபெற்றதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. பஸ்கள் தாக்கப்பட்டு தீக்கிரையாகி இருக்கின்றன. உள்ளே இருந்த பெட்ரோல் பங்கில், டீசல் பங்கில் நெருப்பு வைப்பதற்கு முயற்சிகள் நடைபெற்றதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. ஆவணங்கள் தீக்கிரையாகி இருக்கின்றன. சிலர் ஊர்வலத்திலே சென்றவர்கள். ஊர்வலத்தாலே தாக்கப்பட்டவர்கள் ஆக இரண்டு தாப்பிலேயும் தாக்குதல் நடைபெற்றதாகவும், வன்முறை போன்றவற்றால் பலர் இரையானதாகவும்

முற்பகல் 10-35.

செய்திகள் வந்திருக்கின்றன. இதனைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடைபெற்று இருக்கிறது. அதிலே 4 பேர் காயமுற்றதாக

ஒரு செய்தி, 7 பேர் காயமுற்றதாக இன்னொரு செய்தி—இப்படி இரண்டு செய்திகள் வந்து இருக்கின்றன. ஒருவர் ஆபத்தான நிலையில் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், மற்றவர்கள் இராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் செய்திகள் வந்து இருக்கின்றன. ஜனநாயக நாட்டில் வன்முறைக்கு நிச்சயமாக இடம் இல்லை. வன்முறையை எல்லா வகையிலும் களைய வேண்டும் என்பது தான் அனைத்து அரசியல் கட்சிகளுடைய நோக்கமாகவும், இலட்சியமாகவும், கொள்கையாகவும் இருந்து வருகிறது.

அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்ட முறை, ஓட்டு முறையே தவிர வேட்டு முறை அல்ல. இதைப் பல்வேறு கூட்டங்களிலேயும், அண்ணா அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆக, அண்ணா அவர்கள் நினைவு நாளில் இப்படிப்பட்ட வன்முறை நடைபெறவும், வன்முறைக்குப் பின்னாலே துப்பாக்கிச் சூடு நடைபெறவும் காரணமாக இருந்து, நடைபெற்று இருக்கிறது. இவைகள் உண்மையாகவே கண்டிக்கத்தக்கவை. இதற்குக் காரணம், அண்மைக் காலத்தில் வன்முறையைத் தூண்டிவிடுகின்ற பேச்சுகள் பரவலாக அரசியல் கட்சிகளாலே, அரசியல் கட்சித் தலைவர்களாலே நிகழ்த்தப்படுவதுதான் இதற்குக் காரணமாக இருக்கும் என்று நான் அஞ்சுகிறேன். எங்கே போனாலும் பொதுக் கூட்டங்களிலே பேசப்படுகின்ற பேச்சுகள், பத்திரிக்கையாளர்களைச் சந்திக்கின்ற நேரத்திலே கொடுக்கின்ற பேட்டிகள், அனைத்திலேயும் வன்முறையைத் தூண்டிவிடுகின்ற வகையிலே இன்றையதினம் பலரும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இது போன்ற சம்பவங்களை முழுமையாகத் தவிர்க்க வேண்டும்; தவிர்த்து இருக்க வேண்டும். காவல் துறை இன்னும் கொஞ்சம் அதிகம் கவனம் செலுத்தி இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தவிர்த்து இருக்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

அதுபோல கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு பரங்கிமலை கண்டோன்மெண்ட் தேர்தல் நடைபெற்றது. அந்த தேர்தல் சம்பவம் தொடர்பாக அங்கேயும் வன்முறை நடைபெற்று இருக்கிறது. பலரும் தாக்குதலுக்கு இலக்காகி இருக்கிறார்கள். நம்முடைய பேரவை உறுப்பினர், தி.மு.க. உறுப்பினர் செல்வராஜ் தாக்கப்பட்டு இருக்கிறார் என்று செய்தி வந்து இருக்கிறது. அவருக்கு மண்டையிலே அடிபட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் செய்திகள் வந்து இருக்கிறது. அதற்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயமாக அதனை நான் கண்டிக்கிறேன்.





அது கண்டிக்கத்தக்க செயல். சட்டப்பேரவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சட்டப்பேரவை நடைபெற்றுக்கொண்டிருக்கிற நேரத்திலே உறுப்பினர் ஒருவர் தாக்கப்படுவது கண்டிக்கப்படவேண்டிய ஒன்று. காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்துக் கட்சிக்காரர்களும் தாக்குதலுக்கு ஆளாகி இருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களும் அங்கே தாக்குதலுக்கு ஆளாகி இருக்கிறார்கள். அனைத்துக் கட்சிக்காரர்களும் அதே போல தாக்குதலுக்கு ஆளாகி இருப்பதாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் சில பேர் கிண்டி-ஆலந்தூரிலே இருக்கிற மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக எனக்குச் செய்திகள் வந்து இருக்கின்றன. இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமல் பார்த்துக் கொள்ளவேண்டிய கடமை காவல் துறைக்கு உண்டு. இன்றைய தினம் இரண்டு தரப்பிலேயும் சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகள், காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்பது. காவல் துறை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது என்று வருகிற செய்தி, நிச்சயமாக காவல் துறைக்குப் பெருமை சேர்க்காது. அங்கே வன்முறை வரும் என்று எதிர்பார்த்து, உரிய நடவடிக்கை எடுக்க அவர்கள் தயாராக இருந்து இருக்க வேண்டும்; நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும். எனவே இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும், இந்தச் சம்பவங்கள் குறித்தும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை இந்த அவை முன்னாலே வைக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இன்னும் சில மாண்புமிகு உறுப்பினர்களும் அரசின்

[டாக்டர் ஜெ ஜெயலலிதா] [1992 பிப்ரவரி 4

கவனத்தை, நேற்று நடைபெற்ற சில வன்முறைச் சம்பவங்களுக்கு ஈர்த்து இருக்கிறார்கள். இது சம்பந்தமாக சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

'தடா' சட்டம் தமிழக அரசால் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகக் குற்றச்சாட்டு. அதற்கு ஜனநாயக வழியில் எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறிக்கொண்டு நேற்று தி.மு.க. சென்னையில் ஒரு பேரணியை நடத்தி வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு இருக்கிறது. ஜனநாயக மரபுகளுக்கு நாங்கள் மதிப்பு கொடுக்கின்றோம் என்பதால் தி.மு.க. தொடர்ந்து வன்முறையில் இறங்கி வருகின்றது. (குறுக்கீடு) . . . .

**திரு. இளம்வழுதி :** தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து அப்புறம் பேசுங்கள். திரு. இளம்வழுதி, இதிலே நீங்கள் என்னுடைய அனுமதியைப் பெறவில்லை ; நீங்கள் எதுவும் கொடுக்கவும் இல்லை. இந்தமாதிரி எழுவது நன்றாக இல்லை. (குறுக்கீடு) இது முறையல்ல. (குறுக்கீடு) . . . நீங்கள் செய்வது முறை இல்லாமல் இருக்கிறது. மற்றவர்களைச் சொல்லக் கூடாது. உட்காருங்கள்.

முற்பகல் 10.40

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** இந்த உண்மையை நிரூபிப்பதுபோல் பல நிகழ்ச்சிகள் தமிழகத்தில் தொடர்ந்து நடந்து வருகின்றன. கடந்த 15—9—1991 அன்று சென்னையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாப் பேரணியில் தி.மு.க.வினர் நடத்திய வன்முறை திராவிட இயக்கத்தின் மீது பட்டுள்ள அழிக்க முடியாத கறை ஆகும். திராவிட இயக்கத்தின் மீதும், பேரறிஞர் அண்ணா அவர்களின் மீதும் பற்றுள்ள எவரும் செய்யத் துணியாத அராஜக செயல் அன்று அரங்கேறியது (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து 21—12—1991 மதுரையில் தி.மு.க. நடத்திய திராவிட இயக்க பவள விழா பேரணியில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படங்களையும், என்னுடைய கட்-அவுட்களையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொடிகளையும் எரித்துள்ளனர். பொதுமக்களுக்குச்



1992 பிப்ரவரி 4] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

சொந்தமான கடைகளை அடித்து நொறுக்கியுள்ளனர். அண்ணா தி.மு.க. தொண்டர்களைத் தாக்கியுள்ளனர். திராவிட இயக்கத்தின் பவள விழாவை பாவ விழாவாக்கிய பெருமை தி.மு.க.-வையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி).

நேற்று முன்தினம் பரங்கிமலையில் நடந்த கன்டோன்மெண்ட் தேர்தலில் ஆளும் கட்சியைச் சேர்ந்த வாக்காளர்களை ஓட்டு போட விடாமல் தடுத்து நிறுத்தி தங்களின் வன்முறை ஆயுதத்தை மக்களாட்சித் தத்துவத்தை அழிக்கிற வகையில் பயன்படுத்தி உள்ளனர். இவற்றையெல்லாம் மிஞ்சும் வகையில் நேற்றையதினம் தி.மு.க. நடத்திய பேரணியில் நடந்த வன்முறை ஜனநாயகத்திற்கே சவால் விட்டுள்ளது. இது கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்த பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளில் தி.மு.க. அவர் நினைவாகச் செலுத்திய வன்முறை அஞ்சலி. (மேசையைத் தட்டும் ஒலி).

அண்ணாவின் பிறந்த நாளில் வன்முறை, அவரது நினைவு நாளில் வன்முறை. கேட்டால் நாங்கள் தான் அண்ணாவின் உண்மையான தம்பிகள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாவிற்கு விழா எடுக்க எனக்கு என்ன தகுதி இருக்கிறதென்று கேட்கிறார்கள். தயவு செய்து, உங்கள் சொந்த நலனுக்காக அண்ணாவின் பெருமையையும், புகழையும் களங்கப்படுத்தாதீர்கள் என்று இந்த மாமன்றத்தின் மூலம் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நாங்களும் பல பேரணிகள் நடத்தி இருக்கிறோம். நானும் பேரணிக்கு தலைமையேற்று ஆளுநரைச் சந்தித்து இருக்கிறேன். தலைவர்கள் மட்டுமே ஆளுநரைச் சந்திக்கச் செல்வது நடைமுறை. அவ்வாறு செல்லும்போது தொண்டர்கள் வெளியே நிறுத்தப்படுவதும், தலைவர்கள் ராஜ் பவனுக்கு அழைத்துச் செல்லப்படுவதும் ஆண்டாண்டுக் காலமாக வழக்கத்தில் உள்ளது. அந்த வகையில் தான் நேற்று ஊர்வலமாகச் சென்ற தி.மு.க.வினரும் வெளியே சைதாப்பேட்டையில் தாலுகா அலுவலகச் சாலையில் நிறுத்தப்பட்டு, அவர்களுடைய தலைவர்கள் மட்டும் ராஜ் பவனுக்கு போய் கோரிக்கை மனு கொடுக்க அனுமதிக்கப்பட்டது. அங்கே அமைதி காக்கவேண்டிய தொண்டர்கள் ரகளை செய்து, ஆர்பாட்டம் செய்து அமைதியைக் குலைத்துள்ளனர். சுயநலவாதியின் தலைமையில் இயங்கும் ஒரு கட்சியில் தான் கடமை இருக்காது, கண்ணியம் இருக்காது, கட்டுப்பாடும்

இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர்கள் ஆளுநரைச் சந்தித்து கோரிக்கை மனுவைக் கொடுத்துக் கொண்டிருக்க, பேரணியின் பிற்பகுதியில் இருந்த தி.மு.க. தொண்டர்கள் சைதாப்பேட்டை பல்லவன் போக்குவரத்துக் கழகப் பணிமனையின் நிர்வாகக் கட்டிடத்தின் மீது சரமாரியாக கல்வீசி உள்ளே புகுந்துள்ளார்கள். பணிமனைக் கட்டிடத்திற்குள்ளேயிருந்து கல் வீசப்பட்டது என்பது தவறான தகவல் ஆகும். அப்படி எதுவும் நடைபெறவில்லை. அங்கேயுள்ள தேநீர் விடுதியில் மாட்டப்பட்டிருந்த என்னுடைய படத்தை நொறுக்கி எறிந்து விட்டு, அந்தக் கடைக்கும், அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு மோட்டார் சைக்கிளுக்கும், ஐந்து சைக்கிள்களுக்கும் தீ வைத்துள்ளனர். அலுவலகக் கட்டிடத்திற்குள் நுழைந்து கண்ணாடிகள், விளக்குகள், மரச்சாமான்கள், மற்றும் தஸ்தாவேஜுகளையும் கம்ப்யூட்டர்களையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளனர். பணிமனையில் உள்ள டைம் ஆபீசிற்கு தீ வைத்து, அங்கேயிருந்த ஒரு வயர்லெஸ் செட் மற்றும் டெலிபோனை எடுத்துச் சென்றுள்ளனர். அங்கேயிருந்த மூன்று டீசல் பம்புகளையும், அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 15 பஸ்களையும், ஒரு லாரியையும் கல் எறிந்து சேதப்படுத்தி, பஸ்ஸின் டயர்களை எரிக்கும்போது, காவலர்கள் உள்ளே நுழைந்து பணிமனையிலிருந்து அவர்களை வெளியே விரட்டியுள்ளனர். வெளியே வந்த வன்முறையாளர்கள் மற்றவர்களுடன் பெருந்திரளாகக் கூடி காவல் துறையினரை கல்வீசி தாக்கியுள்ளனர். இச் செயல்கள் அனைத்தும் எவ்வித காரணமுமின்றி நடந்தேறியுள்ளன. அதாவது— **There was absolutely no provocation from any quarter.** வன்முறையாளர் கலைக்க தடியடி நடத்தியும், 10 முறை கண்ணீர் புகைக் குண்டுகள் வெடித்தும் அவர்கள் கலைந்து செல்லாமல் காவலர்கள் மீதான வெறித் தாக்குதலை மேலும் தீவிரப்படுத்தியுள்ளனர். அங்கே நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் காயமடைந்தனர். அவர்கள் இராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10.45

தடியடிப் பிரயோகத்தில் காயம் அடைந்த 7 பேரில் 4 பேர் சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையிலும், 3 பேர் இராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. 23 பேர்கள் இது வரை கைது செய்யப்பட்டு உள்ளனர். இச்சம்பவத்தில் காயம் அடைந்த காவல்துறை துணை ஆணையர்கள் இருவரும், வெளி நோயாளிகளாகவும், இன்ஸ்பெக்டர் ஒருவரும், சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும், காவலர்கள் 11 பேர்களும் சென்னை பொது மருத்துவ மனையில் உள் நோயாளிகளாகவும் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இவர்களுள், தலையில் காயம் அடைந்த காவலர் திரு. அமல்ராஜ் அவர்களின் நிலை மிகுந்த கவலைக்கிடமாக உள்ளது.





இச்சம்பவங்கள் தொடர்பாக 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. குறிப்பாக நேற்று நடந்த சம்பவமும், அதற்கு முன் நடைபெற்ற சம்பவங்களும் நமக்கு ஒரு தெளிவான உண்மையை விளக்குகின்றன. தி.மு.கழகத்தினர் வன்முறையில் இறங்குவதற்கு காரணம் எதும் தேவை இல்லை. ஒரு சிறு அசம்பாவிதம் கூட நடைபெறாமல் மாற்றுக் கட்சியினரும் குறிப்பாக அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகத் தொண்டர்களும் விலகி இருந்து அமைதி காத்தும், அதிகமான காவலர்களைப் பாதுகாப்புப் பணியில் அமர்த்தியும் கூட, அவர்களது பேரணியில் அமைதி காக்க முடியாமல் ஒவ்வொரு முறையும் தவறாமல் விபரீதங்கள் விளைகின்றன என்றால், இவை அவர்கள் திட்டமிட்டுச் செய்யும் வன்முறை நடவடிக்கைகள் தான் என்பது தெளிவாகிறது. மேசையைத் தட்டும் ஒலி).

தி.மு.க. ஒரு பேரணி நடத்துகிறது என்றால், அதில், அதன் தொண்டர்கள் அராஜகத்திலும் வெறிச் செயல்களிலும் ஈடுபடுவார்கள், பொதுச் சொத்துக்களை சேதப்படுத்துவார்கள், பொது மக்களுக்கு இன்னல்களை விளைவிப்பார்கள் என்பதை தமிழக மக்கள் தெரிந்துகொண்டு விட்டனர். (மேசையைத் தட்டும் ஒலி). அவர்களின் இச்செயல்களுக்கு எந்தவித தூண்டுதலும் தேவையில்லை. ஏனெனில் அவை திட்டமிட்டுச் செய்யப்படுபவை என்பதையும் உணர்ந்துகொண்டுவிட்டனர். இந்நிலை இனி மேலும் தொடர்ந்து நீடிக்க அரசு அனுமதிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி).

ஜனநாயக உரிமைக்காக பேரணி நடத்துகிறோம் என்று கூறி அதில் அப்பாவிப் பொதுமக்களின் சொத்துக்களையும், அரசின் உடைமைகளையும் திட்டமிட்டு அழிக்க முற்படும் தி.மு. கழகத்தினரை கட்டாயமாகக் கட்டுப்படுத்தவேண்டியது அரசின் கடமையாகும் (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, தி.மு.க. இனி

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 பிப்ரவரி 4

நடத்தும் பேரணிகளுக்கு, அந்தக் கட்சியின் தலைவர் கையொப்பமிட்டு, தமது கழகத்தினர் எவ்வித வன்முறைச் செயலிலும் ஈடுபட மாட்டார்கள் என்றும், அவ்வாறு ஈடுபட நேரிட்டால், அதனால் ஏற்படும் இழப்புகளுக்கு தனது கட்சி ஈடு செய்யும் என்றும் எழுத்து மூலமாக உறுதி அளித்தால்தான் அரசு இனி அனுமதி வழங்கும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

**டாக்டர் தே. குமாரதாஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே . .

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

**திரு. அ. செல்வராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள். அவர்கள் முடிக்கட்டும். சிலர் இப்பிரச்சினை பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது, முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் தன்னுடைய பதிலைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு.) இதிலே நீங்கள் பேசுவதற்கு இடமில்லை. நீங்கள் பேசுவதற்கு எந்தவகையிலும் இடமில்லை. நீங்கள் இதைக் கொடுக்கவும் இல்லை. நீங்கள் கொடுக்காததைப் பற்றி என்ன கேட்கிறீர்கள் ? இதில் எப்படி நீங்கள் வருகிறீர்கள் ? இடையில் நீங்கள் வருவதற்கு உரிய வாய்ப்பே இல்லை. (குறுக்கீடு). கொடுத்திருக்கிற உறுப்பினர்கள், இன்னின்னார் என்று உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். இதில் நீங்கள் எழுவதற்கு இடமில்லை. நான் நிற்கிறேன். நீங்கள் உட்காரவேண்டும். நீங்கள் எந்த விதியின் கீழ் எழுந்து இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு). முதலமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் எந்த விதியிலே பேசுகிறீர்கள் ? ஏதாவது விதி தெரிந்து பேசுங்கள். மூத்த உறுப்பினர் என்ற பெயரில் நீங்கள் விதியே இல்லாமல் பேசக் கூடாது. தயவுசெய்து உட்காருங்கள். நான் நிற்கிறேன். (குறுக்கீடுகள்). நான் நிற்கிற போது, நீங்கள் பேசுவது சரியல்ல. தயவுசெய்து, திரு. இராமச்சந்திரன் அவர்கள் எதிர் வாதம் செய்து கொண்டிருப்பது முறையல்ல. எந்த விதியிலே



1992 பிப்ரவரி 4] [பேரவைத் தலைவர்]

நீங்கள் பேசுகிறீர்கள் ? (குறுக்கீடு). எந்த விதியிலே நீங்கள் பேசுகிறீர்கள் ? நீங்கள் கொடுக்கவும் இல்லை. கொடுக்காமல் எந்த விதியின்கீழ் நீங்கள் பேசுகிறீர்கள் ? (குறுக்கீடு) இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுப்பதற்கு இல்லை. இது ஒத்திவைப்புத் தீர்மானம் இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானம் என்று தயவுசெய்து தப்பாக, அதற்குப் பொருள் கொள்ளாதீர்கள். எல்லோரும் உட்காருங்கள். திரு. குமாரதாஸ் உட்காருங்கள். (குறுக்கீடு). இதிலே உங்களுடைய கருத்தை நீங்கள் பேசும் போது சொல்லலாம். நீங்கள் பேசுகிறபோது பேசலாம். முதலமைச்சர் அவர்கள் இன்னும் முடிக்கவில்லை. உட்காருங்கள். முதலமைச்சர் இன்னும் முடிக்கவில்லை. (குறுக்கீடு) இது அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதா, இல்லையா என்பதைப்பற்றி நான் முடிவு சொல்லவேண்டிய அவசியம் இல்லை. முதலமைச்சர், தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மேற்கொண்டு முதலமைச்சர் இன்னொரு விவரத்திற்கும் அவர்கள் பதில் சொல்ல வேண்டியதிருக்கிறது. தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இரண்டு—கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொண்டு வந்தார்கள். இரண்டு—ஸ்பெசல் மென்சன்களைக் கொண்டு வந்தார்கள். அவற்றில் ஒன்றுக்குத்தான் பதில் சொல்லி முடித்திருக்கிறேன்.

முற்பகல் 10-50.

அடுத்து, பரங்கிமலை கன்டோன்மெண்ட் போர்டுக்கு பிப்ரவரி 2 ஆம் தேதியன்று நடந்த தேர்தலின்போது நடந்த சம்பவங்கள் மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். பரங்கிமலை கன்டோன்மெண்ட் போர்டுக்கு 2—2—1992 அன்று தேர்தல்கள் நடந்தன. தேர்தலின்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி ஆட்களைக் கொண்டு வந்து கள்ள ஓட்டு போட முயற்சி செய்ததாக தி.மு.க. உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர். இதே போன்ற குற்றச்சாட்டை தி.மு.க. உறுப்பினர்கள் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கூறியதோடு அவர்கள் கலவரத்திலும் ஈடுபட்டதாக குற்றம் சாட்டினர். இதுசம்பந்தமாக தகராறு ஏற்பட்டு சில இடங்களில் தி.மு.க.வினருக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்குமிடையே மோதல் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் கத்திகளால் தாக்கிக் கொண்டனர். இன்னும் பல இடங்களில்

தி.மு.க. தரப்பில் திருவொற்றியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி. கே. பழனிச்சாமி அவர்களும், துறைமுகம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. செல்வராஜ் அவர்களும் மற்றும் வேட்பாளர் மகாதேவன் ஆகியோர் காயமடைந்தனர். விஜயன் என்ற வேட்பாளரும், இரு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் தி.மு.க.வினரால் தாக்கப்பட்டனர். சில விஷமிகளால் பட்ரோடிலுள்ள தி.மு.க. கட்சி அலுவலகம் தீயிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தங்களைத் தாக்குவதாகவும், கள்ள ஓட்டு போட முயற்சிப்பதாகவும், அதனைக் கண்டித்து சுமார் 100 தி.மு.க. உறுப்பினர்கள் சென்னை பூந்தமல்லி சாலையில் ஒரு மணி நேரத்திற்கு போக்குவரத்தைத் தடை செய்தனர். சுமார் 30 அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வினர் சாலைப் போக்குவரத்தைத் தடுக்கும் வகையில் சாலையில் உட்கார்ந்தனர். காவல்துறையினர் தலையிட்டு போக்குவரத்தில் சகஜ நிலையை ஏற்படுத்தினர். தேர்தல் வேலையில் ஈடுபட்டிருந்த அண்ணா தி.மு.க. வினரின் வேன் ஒன்றின் மீது சில தி.மு.க. உறுப்பினர்கள் பல்லாவரம் கண்டோன்மென்ட் பள்ளிக்கு அருகில் கற்களை வீசி அதன் கண்ணாடிகளுக்கு சேதம் விளைவித்தனர். அண்ணா தி.மு.க.-வினர் கள்ள ஓட்டு போட பேருந்து ஒன்றில் தாய்மார்களை அழைத்து வந்ததாக எண்ணி, ஜெயராமன் மற்றும் சில தி.மு.க. உறுப்பினர்கள் சுற்றுலா பேருந்தின் மீது கற்களை வீசினர். இதன் காரணமாக அப்பேருந்தின் கண்ணாடிகள் சேதம் அடைந்தன. சிகிச்சைக்காக காயமடைந்த டி. கே. பழனிச்சாமி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ் ஆகியோர் அரசினர் ஸ்டேன்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இப்போது மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் இங்கே வந்துள்ளார்கள். டி. கே. பழனிச்சாமி மற்றும் பிற தி.மு.க. உறுப்பினர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து, திருவொற்றியூரில் 2—2—1992 அன்று பிற்பகல் சுமார் 600 கடைகள் மூடப்பட்டன. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களால் தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி. கே. பழனிச்சாமி தாக்கப்பட்டதைக் கண்டித்து 2—2—1992 மாலை பிலிப் மற்றும் இரண்டு தி.மு.க. உறுப்பினர்கள், பவழக்காரத் தெருவில் பன்னீர்செல்வத்திற்குச் சொந்தமான மதுக் கடையையும், முத்தியால்பேட்டையிலுள்ள இப்ராஹிம்சாஹிப் தெருவில் சகாயராஜ் என்பவரின் வீடியோ கடையையும் சேதப்படுத்தினர். காவல் துறையினர் இரு வழக்குகள் பதிவு செய்து புலன் விசாரணை செய்து





வருகின்றனர். பாதிக்கப்பட்ட இடங்களில் காவல் ரோந்து தொடர்கிறது. இந்த ஸ்பெஷல் மென்ஷன்களைக் கொண்டுவரும்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது அண்மைக்காலமாக சில அரசியல் கட்சித் தலைவர்களின் வன்முறை தூண்டும் பேச்சுக்கள்தான் இத்தகைய வன்முறை சம்பவங்களுக்குக் காரணம் என்று குறிப்பிட்டார். எந்த அரசியல் கட்சித் தலைவர்களை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறார் என்பதை அவர் விளக்கினால் நன்றாக இருக்குமென்று கருதுகிறேன். ஏனெனில் எங்களுக்குத் தெரிந்த வரையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த கட்சித் தலைவர்கள் இத்தகைய வன்முறையைத் தூண்டும் பேச்சுக்களில் இதுவரை ஈடுபட்டதில்லை. அத்தகைய பழக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடையாது. (மேஜையைத் தட்டும் ஒலி) மற்றபடி இத்தகைய வன்முறைச் சம்பவங்களை காவல்துறையினர் எச்சரிக்கையாக இருந்திருந்தால் தவிர்த்திருக்க முடியும் என்பதையும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் ஏற்கெனவே விளக்கிக் கூறியபடி நேற்று நடந்த பேரணியில் ராஜ் பவனுக்கு ஆளுநரிடம் மனு கொடுக்க தி.மு.க.-வினர் நடத்திய பேரணியின்போது போதுமான காவல் பந்தோபஸ்து போடப்பட்டிருந்தது. எத்தகைய 'ப்ரோவோகேஷனும்' இல்லை. அவர்கள் வன்முறையில் ஈடுபட்டதற்கு எந்தத் தரப்பிலிருந்தும் எந்தவிதமான தூண்டுதலும் இருக்கவில்லை. வழக்கமாக தி.மு.க.வினர் எந்தப் பேரணி நடத்தினாலும், எந்த நிகழ்ச்சி நடத்தினாலும், அதில் வன்முறைச் சம்பவங்களை அவர்கள் உருவாக்கவேண்டுமென்று திட்டம் போட்டுக் கொண்டே வருகின்றனர். அவர்கள் செய்வதையும் செய்துவிட்டு, பி.டி.சி. பணிமனையிலிருந்து உள்ளேயிருந்து கற்கள் வீசப்பட்டன என்று ஒரு தவறான தகவலையும் அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-55

நான் கேட்க விரும்புகிறேன். ஏற்கெனவே அரசாங்கத்திற்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பேருந்துகளுக்கு இந்த ஆட்சி அமைந்த பிறகு கடந்த ஏழு மாதங்களில் எந்த அளவிற்குச் சேதங்கள் விளைவிக்கப்பட்டிருக்கின்றன? எத்தனை லட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன? அப்படி இருக்கும்போது ஒரு கட்சி அலுவலகத்திற்குள்ளே இருந்து சில கட்சித் தொண்டர்கள் கற்களை வீசினார்கள்

என்றால்கூட அது நம்பக்கூடியதாக இருக்கும். ஆனால் உள்ளே 15 பஸ்கள் நிற்கிற இடத்திலே பி.டி.சி. டெப்போவிலேயிருந்து பணிமனைக்குள்ளே இருந்து கற்களை எறிந்தார்கள் என்று தி.மு.க.வினர் குற்றம் சாட்டினால் அதை எப்படி நம்புவது என்பதை இந்த அவையின் உறுப்பினர்கள் தீர்ப்புக்கே நான் விட்டு விட விரும்புகிறேன். ஆகவே தி.மு.க.வினர் தொடர்ந்து இத்தகைய நிகழ்ச்சிகளின் போது வன்முறையை கட்டவிழ்த்து விட வேண்டுமென்று ஒரு திட்டம் போட்டுக்கொண்டே அவர்கள் செயல்படுகின்றனர். ஆகையினால் இத்தகைய நிகழ்ச்சிகளை காவல் துறையினர் எப்படி எதிர்பார்க்க முடியும்? எதிர்பார்ப்பது என்பது சாத்தியம் அல்ல என்பதைக் கூறிக்கொள்வதோடு, நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல இத்தகைய நிகழ்ச்சிகள், வன்முறைச் சம்பவங்கள் ஒரு தொடர் சங்கிலிபோல நடைபெற்றுக் கொண்டு வருவதால், இனிமேல் இத்தகைய ஒரு பேரணி நடத்த வேண்டுமென்று தி.மு.க. வினர் அனுமதி கோரினால், அவர்களுடைய கட்சித் தலைவர் கையொப்பம் இட்டு, இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் நிகழாது, நிகழ்ந்தால் அதற்கு பொறுப்பேற்று அந்தக் கட்சியே அதற்கு நஷ்ட ஈடு வழங்கும் என்று எழுதிக் கொடுத்தால்தான் இனிமேல் அனுமதி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிச் செய்தால் தான் இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நிகழாமல் தடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

### 3. தன்னிலை விளக்கம்.

**பரங்கிமலை கண்டோன்மென்ட் பகுதியில் நாம் தாக்கப்பட்டது குறித்து உறுப்பினர் திரு. அ. செல்வராசன் விளக்கம் தெரிவித்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பிரச்சினையை இத்தோடு விட்டு விடலாம் என்று நினைக்கிறேன். (குறுக்கீடுகள், கூச்சல் குழப்பம்) திரு. செல்வராசன் அவர்கள் தாக்கப்பட்டதாக ஒரு பிரச்சினை இருக்கிறது. இது பற்றிய தன்னிலை விளக்கம் மட்டும் அவர்கள் அளிக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாக்கப்பட்டதாக ஒரு பிரச்சினை இதிலே வருகிற காரணத்தால், அவர் தான் தாக்கப்பட்டது குறித்து ஒரு தன்னிலை விளக்கம் மட்டும் சொல்லலாம்.





**திரு. அ. செல்வராசன் :** மாண்புமிகு பேரவையின் நீதித்தேவன் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் அவர்களே, என்றாலே போதும்.

**திரு. அ. செல்வராசன் :** மற்றும் இந்த மாமன்றத்திலே அமர்ந்திருக்கிற அனைத்துக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களே, கடந்த 2 ஆம் தேதி பரங்கிமலை கன்டோன்மென்டிலே நடந்த தேர்தலுக்கு எங்கள் கட்சியின் சார்பாக பணியாற்ற நான் சென்றிருந்தேன். 8 மணிக்கு அங்கே சென்றவன் 2 மணி நேரம் வாக்காளர்களைச் சந்தித்து, நானும் என்னோடு வந்தவர்களும் சேர்ந்து வீதிவீதியாகச் சென்று வாக்காளர்களை ஓட்டு கேட்டோம். சுமார் 10, 10¼ மணிக்கு நான் என்னுடைய கட்சி அலுவலகத்திற்குச் சென்று, அங்கே உட்கார்ந்து வாக்குச் சீட்டுகளை எழுத நான் அமர்ந்து கொண்டேன். காரணம் அப்போது வெய்யிலாக இருந்தது. எனக்கு கொஞ்சம் களைப்பாகக்கூட இருந்தது. ஆகையினாலே நான் அங்கே அமர்ந்து விட்டேன். நான் எழுதிக் கொண்டே இருக்கிறேன். வாக்காளர்கள் வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருக்கிறார்கள். திடீரென்று 3 வேன்களிலே—தயவுசெய்து நான் சொல்வதற்கு மன்னிக்க வேண்டும். 3 வேன்களிலே அண்ணா தி.மு.க. காரர்கள் வந்தார்கள். நான் உடையைப் பார்த்தேன். அவர்கள் வேட்டி. அதற்கு மேலே இருந்த துண்டெல்லாம் பார்த்தேன். அவர்கள் கீழே இறங்கி . . . (கூச்சல் குழப்பம், குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சொல்லட்டும். சொல்லட்டும். அவர் பேசுவதற்கு நான் அனுமதித்திருக்கிறேன்.

**திரு. அ. செல்வராசன்:** நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியபோது கட்சியினுடைய தலைவர் என்று சொன்னார்கள். ஆனால் நான் யார் பெயரையும் சொல்லவில்லை, அண்ணா தி.மு.க. காரர்கள் என்றுதான் சொன்னேனே தவிர, தனிப்பட்ட நான் அவர் இவர் என்று சொல்லவில்லை. ஆகையினாலே தயவுசெய்து நீங்கள் கோபப்படக்கூடாது. அவர்கள் திடீரென்று இறங்கி கற்களை எடுத்து இங்கே என்னடா எழுதுகிறீர்கள்? ஓடுங்கள், ஓடுங்கள், ஓடுங்கள் என்று வீசிக்கொண்டே [illegible] நான் இந்தக் குடையை எடுத்து அப்படியே [illegible] தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டேன். கொஞ்ச

[திரு. ஆர். செல்வராசன்] [1992 பிப்ரவரி 4

நேரம்தான் நிற்க முடிந்தது என்னால். அதற்குப் பிறகு நிற்க முடியவில்லை. ஒரு கல் வந்து என் கண்ணுக்கு பக்கத்திலே பட நான் உடனே மயங்கி கீழே விழுந்துவிட்டேன். இந்தத் துணியை அப்படியே பிடித்துக்கொண்டு, ஒரு வீட்டிலே என்னை அழைத்துச் சென்று உட்கார வைத்தார்கள். ஒரு மணி நேரம் என்னாலே ஒன்றும் செய்ய முடியவில்லை. அதற்குப் பின்னாலே கொஞ்ச நேரம் பொறுத்தபிறகு நான் ஏற்கெனவே வந்த ஜீப்பிலேயே என்னை ஏற்றி பாலாஜி ஹாஸ்பிடல் என்ற மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று முதல் உதவி சிகிச்சை அளித்து, அதற்குப் பிறகு நான் ஸ்டேன்லி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். இதுதான் என்னுடைய நிலை. இதை இங்கே அளிக்கவேண்டியது என்னுடைய கடமை என்று சொன்னேன். மற்றபடி தீர்ப்பு வழங்க வேண்டியது தலைவரின் பொறுப்பு என்று கூறி நான் விடை பெறுகிறேன். (குறுக்கீடுகள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே வேண்டாம், அனைவரும் உட்காருங்கள். கொடுத்த உறுப்பினர்களுக்கு நான் வாய்ப்பு வழங்கியிருக்கிறேன். எல்லா உறுப்பினர்களும் எழுந்து பேசுவது என்பது முறையல்ல. பாதிக்கப்பட்ட உறுப்பினருக்கும் வாய்ப்பு வழங்கியிருக்கிறேன். ஆளுநர் உரையின் மீது விவாதம் நடைபெற இருக்கிறது. அப்போது நீங்கள் இதுபற்றிய விளக்கங்களைச் சொல்லலாம். இதிலே மேற்கொண்டு நீங்கள் விளக்கம் சொல்வது சரியல்ல. அதாவது திரு. செல்வராசன் அவர்கள் பாதிக்கப்பட்டேன் என்று சொல்லியபோது அவருக்கு வாய்ப்பு வழங்கியிருக்கிறேன். மற்றவர்கள் இதிலே பேசுவதற்கோ வாதம் செய்வதற்கோ இது ஒத்திவைப்புத் தீர்மானம் அல்ல. ஒத்தி வைக்கப்பட்டு அதிலே எடுக்கப்பட்ட முடிவு அல்ல. உட்காருங்கள்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்கள் தான் தாக்கப்பட்ட சம்பவத்தை இங்கே விளக்கிக் கூறினார்கள். அதை இந்த அரசு மறுக்கவில்லை. நான் ஏற்கனவே இங்கே கொடுத்த விளக்கத்தில் இரு தரப்பிலும் தாக்கிக்கொண்டார்கள். அடித்துக்கொண்டார்கள் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறேன். இப்படி திரு.க. தரப்பில் மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்களும் ... சட்ட



1992 பிப்ரவரி 4] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

மன்ற உறுப்பினர் பழனிச்சாமி அவர்களும், இன்னும் சில பேரும் காயம் அடைந்தார்கள் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் அதற்குத்தான் பதிலுக்குப் பதில் என்று அவைக்கு வெளியிலேயே அவர்கள் தீர்த்துக்கொண்டு விட்டார்கள். அவர்கள் பன்னீர்செல்வம் என்பவருக்குச் சொந்தமான டீக்கடையை நொறுக்கிவிட்டார்கள். சகாயராஜ் என்பவருக்குச் சொந்தமான வீடியோ கடையை நொறுக்கிவிட்டார்கள். எனவே, அவர்கள் நீதி கேட்பதாக இருந்தால் இத்தகைய வன்முறைச் செயல்களில் ஈடுபடாமல் நீதி கேட்டால் அது பொருத்தமாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடுகள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். அதாவது நீங்கள் தாக்கப்படவில்லை என்று முதலமைச்சர் சொல்லவில்லை. தாங்கள் தாக்கப்பட்டீர்கள் என்பதை அவர்கள் அறிக்கையிலேயும் சொன்னார்கள், இப்பவும் சொல்கிறார்கள். இப்போது, நீங்கள் தாக்கப்படவில்லை என்று சொன்னால்தான், நீங்கள் இதையெல்லாம் காண்பிக்க வேண்டும். நீங்கள் தாக்கப்பட்டீர்கள்; அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். நீங்கள், தாக்கப்படவில்லை, அது தவறான தகவல் என்று சொன்னால்தான் நீங்கள் இதையெல்லாம் காண்பிக்கலாம். அதாவது நீங்கள் தாக்கப்பட்டீர்கள் என்பதை முதலமைச்சரும் சொல்கிறார். நீங்கள் மட்டும் சொல்லவில்லை. முதலமைச்சரும் சொல்கிறார் தாங்கள் தாக்கப்பட்டீர்கள் என்று. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டீர்கள் என்பதை அவர்களே தெரிவித்தார்கள். இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிடலாம். தயவுசெய்து இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிடுங்கள் தயவுசெய்து அரசாங்கம் ஒரு அறிவிப்பு கொடுப்பதற்குப் பிறகு அதன்மீது இப்படி விவாதம் செய்து கொண்டிருப்பது முறையல்ல. இதிலே விதியிலே இடம் இல்லை. இதில் விதியில் இடம் இல்லை. இதில், விதியில் இடம் இல்லாததை நீங்கள் கேட்கக் கூடாது (குறுக்கீடு). திரு. குமாரதாஸ் நீங்கள் உட்காரவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கண்டோன்மெண்ட் சம்பவத்தில் கழகத்திற்காக பணியாற்றிக்கொண்டிருந்த 15 தாய்மார்களும் அடிபட்டு அவர்களும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[1992 பிப்ரவரி 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செல்வராஜ் நீங்கள் தாக்கப்பட்டீர்கள் என்பதை முதலமைச்சரும் தெரிவிக்கிறார். முதலமைச்சர் நீங்கள் தாக்கப்பட்டீர்கள் என்பது தவறான தகவல் என்று சொல்லவில்லை. நீங்கள் தாக்கப்பட்டீர்கள் என்று சொன்ன பிறகு இதிலே மேற்கொண்டு என்ன இருக்கிறது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பேரவைத் தலைவர் அவர்களே, இருதரப்பிலும் வன்முறை நடந்தது என்பதை நான் ஏற்கனவே விளக்கி கூறியிருக்கிறேன். தி.மு.க. தரப்பிலும், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தரப்பிலும், இருதரப்பிலும் அடித்துக்கொண்டார்கள், கற்களால் தாக்கிக்கொண்டார்கள் என்பதை நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். நான் கூற விரும்புவது எல்லாம் எந்தத் தரப்பில் வன்முறை நடந்தாலும், எந்தத் தரப்பில் தவறு நடந்தாலும் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும். காவல் துறையினர் புலன் விசாரணை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து இதில் மேற்கொண்டு விவாதம் தேவையில்லை. தாங்கள் தாக்கப்பட்டீர்கள். அதன்மீது காவல் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. புலன் விசாரணை செய்து வருகிறார்கள். தாங்கள் தாக்கப்பட்டதைப் போல, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதைப்போல, அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வினரும் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கின்ற உண்மையைச் சொன்னால் அதைச் சொல்ல விடமாட்டேன் என்று சொன்னால் என்ன அர்த்தம்? நீங்கள் தாக்கப்பட்டதைப்போல எதிர் தரப்பிலேயும் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை முதலமைச்சர் தெரிவிக்கிறார். நீங்கள் தாக்கப்படவில்லை என்று அவர் மறுக்கவில்லை. தாங்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை அவர்கள் மறுக்கவில்லை. அதில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது, புலன் விசாரணை நடைபெறுகிறது என்பதை முதலமைச்சரே சொல்கிறார். அதை மீறி இதிலே விவாதம் செய்வது என்பது தேவையில்லாதது—விதி எண் 109. "பேரவைத் தலைவர் அனுமதியின் பேரில் உறுப்பினர் ஒருவர் தன்னிலை விளக்கம் ஒன்றினை, பேரவை முன் பிரச்சினை எதுவும் இல்லை என்றாலும் அளிக்கலாம். ஆனால் அப்போது சர்ச்சைக்குரிய பொருள் எதையும் கொண்டுவரக் கூடாது. எவ்வித விவாதமும்



1992 பிப்ரவரி 4]

இருத்தல் கூடாது. "உங்களுடைய தன்னிலை விளக்கத்திற்கு நான் அனுமதி அளித்திருக்கிறேன். தாங்களும் தன்னிலை விளக்கம் அளித்திருக்கிறீர்கள். அந்த தன்னிலை விளக்கத்தில் விதி 109-ன்படி சர்ச்சைக்குரிய பொருள் எதையும் கொண்டுவரக் கூடாது. எவ்வித விவாதமும் அதைத் தொடர்ந்து இருக்கக் கூடாது என்று விதி இருக்கின்றபோது மேற்கொண்டு இதிலே தாங்கள் விவாதித்துக் கொண்டு இருப்பது சரியில்லை. (குறுக்கீடு.)

(குறுக்கீடு)

அவர்கள் சொல்வதற்கு அனுமதி இல்லை என்று எப்படிச் சொல்வது? நீங்கள், நான் தாக்கப்பட்டேன் என்று சொல்கிற உரிமை உங்களுக்கு எப்படி இருக்கிறதோ அதைப்போல தங்கள் தரப்பினரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கின்ற உரிமை முதலமைச்சருக்கு இல்லை என்று நீங்கள் வாதம் செய்வது எப்படி முறையாகும்? (குறுக்கீடு)

(திரு. அ. செல்வராசன் வெளிநடப்பு செய்தார்.)

அதேபோல . . . . . (குறுக்கீடு)
தயவுசெய்து அமருங்கள். நீங்கள் கொடுக்கவில்லை. நீங்கள் பிரச்சினைக்கு எந்தவிதமான அறிவிப்பும் கொடுக்கவில்லை. கொடுக்காமல் நீங்கள் எழுந்து நின்றுகொண்டு இருப்பது முறை நீங்கள் உட்காருங்கள். உங்கள் தலைவர் வெளிநடப்புச் செய்திருக்கிறார். அவரைத் தொடர்ந்து நீங்கள் வெளிநடப்புச் செய்வதானால் செய்யலாம். நீங்கள் நின்றுகொண்டு இப்படி வாதம் செய்து கொண்டிருப்பது நீங்கள் உங்களுடைய தலைவரைப் பின்பற்றவில்லை, உங்களுடைய விருப்பத்திற்கு இந்த அவையினுடைய நேரத்தை எடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள் என்றுதான் பொருள். இல்லை, உங்கள் தலைவரை நீங்கள் பின்பற்றுகிறீர்களா இல்லையா? (குறுக்கீடு) எனக்கு நேரடியாகப் பதில் தேவை. உங்களுடைய தலைவரைப் பின்பற்றுவதாக இருந்தால் பின்பற்றலாம். உங்களுடைய தலைவரை நீங்கள் பின்பற்ற மாட்டேன், இந்த அவையினுடைய நேரத்தை வீண் அடிப்பேன் என்பது முறையல்ல (குறுக்கீடு) திரு. பரிதி இளம்வழுதி உட்கார வேண்டும். நான் பேசுகிறேன். நீங்கள் உட்காரவேண்டும். உட்காருங்கள் என்று சொன்னால் உட்கார்ந்து விடவேண்டும். உட்கார்ந்துவிட்டு பழையபடி எழுந்திருக்கவேண்டும். (குறுக்கீடு)

[1992 பிப்ரவரி 4

2. சிறப்புக் குறிப்புகள்—தொடர்ச்சி.

**(ஆ) தம் உயிருக்கு ஆபத்து என உறுப்பினர் திரு. இளம்வழுதி தெரிவிப்பது குறித்து.**

**திரு. இளம்வழுதி:** நேற்று என்னுடைய உயிருக்கு ஆபத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி உட்கார வேண்டும்.

(திரு. இளம்வழுதி உட்காராமல் நின்றுகொண்டே இருந்தார்.)

திரு. இளம்வழுதியை அவையிலிருந்து வெளியேற்ற உத்தரவிடுகிறேன். மார்ஷல், இளம்வழுதியை அவையை விட்டு வெளியேற்ற வேண்டும் (குறுக்கீடுகள்).

*முற்பகல் 11-05.*

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் ஏதோ நேற்று தன் உயிருக்கு ஆபத்து நேர்ந்துவிட்டதாக இங்கே கூற விரும்புகிறார். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தன்னுடைய தீர்ப்பை திரும்பப் பெற்றுக்கொண்டு அவரை வெளியேற்றாமல் அவர் என்ன சொல்ல விரும்புகிறாரோ அதைச் சொல்ல அனுமதிக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் என்னிடத்தில் ஒரு பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார். உரிமை மீறல் பிரச்சினையாகக் கொடுத்திருக்கிறார். உரிமை மீறல் பிரச்சினை என்பது அவை தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னர் கொடுக்கவேண்டும். நான் இந்த அவைக்கு வந்ததற்குப் பிறகு கேள்வி நேரம் தொடங்கியதற்குப் பிறகு அவர் என்னிடத்திலே ஒரு அறிவிப்பைக் கொடுத்தார். எனவே, அதற்கு நான் இப்போது அனுமதிக்க முடியாது என்பதை அவரிடத்திலேயே சொல்லியிருக்கிறேன். என்னுடைய அந்த விளக்கத்தையும் மீறி இப்போது அவர் கிளப்ப முற்படுகிறார். என்ற காரணத்தினால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தும் கூட நான் அவரை அனுமதிக்க முடியாத நிலையில் இருக்கிறேன். நான் இங்கே வந்ததற்குப் பிறகு 9.30 மணிக்கு வந்து என்னிடத்திலே பரிதி இளம்வழுதி அவர்கள் தான் தாக்கப்பட்டதாகக் கொடுக்காமல் ஒரு உரிமை மீறல் பிரச்சினையாகக்



1992 பிப்ரவரி 4] [பேரவைத் தலைவர்]

என்னிடத்திலே கொடுத்திருக்கிறார். விதியின்படி உரிமை மீறல் பிரச்சினை அவை தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னர் கொடுக்கவேண்டும். எனவே, அதை இப்போது எடுக்காமல் இருக்கிறேன். இருந்தாலும் அவருடைய தலைவர் வெளியேறியதற்குப் பிறகு அவர் இருந்து சில பிரச்சினைகளைச் சொல்லுகிறேன் என்று தெரிவிக்கின்ற காரணத்தால் அவர் தெரிவிக்கலாம்.

**திரு. இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமை மீறல் பிரச்சினை கொடுக்கின்றபோது ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக கொடுக்கவேண்டும் என்பது விதி. அதை தெரிந்துதான் நான் கொடுத்திருக்கிறேன். இங்கே நான் எழுப்பப்போவது என்னுடைய உரிமை மீறல் பிரச்சினை அல்ல. பேரணியில் நடைபெற்ற வன்முறைக்கு தி.மு.க.-தான் காரணம் என்று . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, தயவு செய்து உட்காருங்கள், அதிலே உங்களுக்கு எதுவும் இல்லை. நீங்கள் கொடுத்திருக்கிற பிரச்சினை, நான் தாக்கப்பட்டேன் என்று முன்பு ஆரம்பித்தீர்கள். இப்போது அதற்கு மாறாக பேரவையில் பேசியதற்கு, தி.மு.க. தான் என்று சொல்லப்பட்டதற்கு தான் உங்களுடைய தலைவர் வெளிநடப்பு செய்திருக்கிறார். **நீங்கள்** உங்களுடைய தலைவர் வழியைப் பின்பற்றாமல் நீங்கள் வேறு யார் வழியையோ பின்பற்றுபவர் என்று நினைக்கிறேன். இப்போது நீங்கள் உட்காரவேண்டும். இனிமேல் இதிலே பேசுவதற்கு உங்களுக்கு அனுமதியில்லை. உட்காரவேண்டும். நீங்கள் தாக்கப்பட்ட சம்பவம் என்று ஆரம்பித்த காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு உங்களைப் பேச அனுமதிக்குமாறு அவையில் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் அனுமதித்ததற்குப் பிறகு நான் அதைப்பற்றி பேசவில்லை. இன்னொரு பிரச்சினை பற்றி பேசவேண்டும் என்றால் அவையில் பேசுவதற்கு அனுமதியில்லை. நீங்கள் உட்காரவேண்டும். குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளித்தல்

(திரு. இளம்வழுதி உட்காராமல் நின்று கொண்டே இருந்தார்.)

நான் இன்னொரு அலுவலுக்குச் செல்கிறபோது இப்படி மரியாதையில்லாமல் நடந்து கொண்டிருப்பதால், விதிமுறைகளையும் மீறி நடந்து கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு).

[பேரவைத் தலைவர்] [1992 பிப்ரவரி 4

விதிப்படிதான் அனுமதிக்க முடியும். விதியை மீறி அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) இப்போது அவரை இளம்வழுதியை— வெளியேற்ற உத்தரவிடுகிறேன். அவரை வெளியேற்ற மார்ஷலுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) (பின்னர் அவைக் காவலர்களால் திரு. இளம்வழுதி வெளியேற்றப்பட்டார்).

முற்பகல் 11-20

## 4. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) மதிப்பீட்டுக் குழு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. வ. சத்தியமூர்த்தி, மதிப்பீட்டுக் குழு தலைவர்.

**திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான், "சாலைகளும் பாலங்களும்" குறித்து 1985-86 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழு அளித்த நான்காவது அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான மேற்படி குழுவின் முதலாவது அறிக்கையைக் குழுவின் சார்பாக, பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

**திரு. கி. தர்மலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையின் லாபியிலிருந்து பத்திரிகையாளர்களைச் சந்திப்பது மரபல்ல. அப்படி ஏதேனும் பத்திரிகையாளர் சந்திப்பு மரபாக இருந்தால் அதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக ; [illegible] அறிக்கைத் [illegible] 1985-86 ஆம் ஆண்டுக்கான [illegible]



1992 பிப்ரவரி 4] [கி. தர்மலிங்கம்]

அறிக்கையில் (சிவில்) வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறை தொடர்பான பத்திகள் மீதான குழுவின் இருபத்திநான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

**(அ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1992.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசினர் சட்ட முன்வடிவுகள்—அறிமுகம் செய்தல். 1992 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி கோருவார்.

*** மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப்பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சார்ந்த சட்டங்களின் (திருத்த) சட்ட முன்வடிவு 1992.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சார்ந்த சட்டங்களின் (திருத்த) சட்ட முன்வடிவு இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சார்ந்த சட்டங்களின் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.



6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அந்தக் கால அளவுக்குள் பேசி முடித்துவிட்டால் அதிகமான உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும். அதை உறுப்பினர்கள் கவனத்தில் கொண்டு பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் சீனியம்மாள்.

**டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் :** மாண்புமிகு சட்டப் பேரவை தலைவர் அவர்களே, போற்றுதற்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசிற்கு அளித்த ஆளுநர் உரைமீது பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இதுவரை இல்லாத வகையில் ஏழை, எளிய, நடுத்தர, வசதி வாய்ப்பற்ற மக்கள் அமைதியுடன் மது மயக்கமின்றி, நோயின்றி, இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு, ஒளிமயமான வாழ்விற்கு உன்னதமான தொழிற் கொள்கை என முழக்கமிட்டுள்ளதை பாராட்டியமைக்கு மிக்க நன்றி.

மத்திய அரசு பின்பற்றிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக அந்நியச் செலாவணி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக, ஏறக்குறைய 7 இலட்சம் டன் அரிசியை அந்நிய செலாவணி சம்பாதிக்க ஏற்றுமதி செய்ய முடிவு எடுத்து மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இதனால் அரிசி ஏற்றுமதி பர்மிட் பெற்றவர்கள் எல்லோரும் அரிசி அதிகமாக விளைகின்ற ஆந்திர மாநிலத்தில் முகாமிட்டு உள்ளார்கள். இதனால் வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி கல்கத்தா துறைமுகத்திலிருந்து செய்யப்படுகின்றது. இதனால் அரிசி விலை ஏறுகிறது, இல்லையா? மேலும் வங்காள தேசத்திற்கு அரிசி கடத்தப்படுவது மத்திய அரசு அறிந்திருந்தாலும் கூட, அரிசி விலை உயர்வு இந்தக் கடத்தலால் ஏற்படுகிறது இல்லையா? இந்த அரிசி ஏற்றுமதி கூடாது, இதனால் விலை ஏறுகிறது என்று இந்தியத் துணைக் கண்டம் முழுமைக்கும் குரல் கொடுத்த ஒரே எதிர்ப்புக் குரல் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியுடையதுதான் என்றால் அது மிகையாகாது. நமது

[டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்] [1992 பிப்ரவரி 4

முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் எதிர்ப்புக் குரலின் காரணமாக இன்றைக்கு ஏற்றுமதி செய்யும் அரிசி இலக்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டம்—ஒழுங்கைக் காப்பதற்காக மத்திய சர்க்கார் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவிற்கு, தனது உயிரையும் துச்சமென எண்ணி, துஷ்டர்களைத் துரத்தி, அமைதி காத்தது இந்த மாநிலம் அறிந்ததே.

காஷ்மீர், பஞ்சாப் போன்ற எல்லையோர மாநிலங்களுக்கு ஈடாக நிதி ஒதுக்கீடு செய்து, தமிழ்நாட்டிற்கும் கிடைத்திட வழிவகை செய்திடல் வேண்டும். தமிழ்நாட்டை எல்லையோர நாடாக அறிவிக்க வேண்டும். மத்திய காவல் துறை சி.ஆர்.பி. படைகளை பஞ்சாப், அசாம் ஆகிய மாநிலங்களுக்குக் கொடுக்கிறது. நமக்கும் படையும் இல்லை. பணமும் கொடுப்பது இல்லை. மேலும், காவல் துறை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வதால் நிதி அதிகமாகச் செல்கிறது. எனவே, எல்லை ஓரத் தமிழ்நாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து காவல் படை தந்தால் இந்தத் தமிழகத்தை இணையில்லாத் தமிழகமாக நமது மாண்புமிகு முதல்வரவர்கள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆக்கிக் காட்டுவார்கள் என்பது திண்ணம்.

தற்போது மத்திய அரசு FERA -வை அதாவது Foreign Exchange Regulation Act -ஐத் தளர்த்தியிருப்பது ஏன்? இந்த FERA கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டதால் தான் நம் நாட்டில் ஏற்றுமதி, இறக்குமதி மிகவும் கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. இதனால் நமது நாட்டிற்கு அந்நியச் செலாவணி வருமானம் மிகவும் குறைவு. இதனால் NRI இன் மூலமாக வரும் அயல் நாட்டுப் பணத்தின் டெபாசிட் வரம்பைத் தளர்த்தியுள்ளது, இந்திய நிதி நிலையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர இயலும். இதில் மத்திய அரசு மிகவும் உறுதியாக இருந்தால் பண மதிப்பை உயர்த்தி, விலைவாசியைக் கட்டுக்குள் கொண்டு வரலாம்.

அதுபோலவே, மத்திய அரசின் பொது விநியோகத் துறை அரிசி விலையை உயர்த்தியுள்ளது. பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, நிலக்கரி, ஆகியவற்றின் விலையை உயர்த்தியுள்ளது. இதற்கு பண மதிப்பு குறைப்புதான் காரணம். மத்திய அரசு



1992 பிப்ரவரி 4] [டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்]

மாநில அரசைக் கலந்தாலோசிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வற்புறுத்தியதைக் கேட்காமல் விட்டதின் பலன், இன்றைக்குத் தமிழ்நாடு கடுமையாக வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

காங்கிரஸ் பேரியக்கமும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால்கூட நிறுத்த இயலாத மதுவை, தனியொரு தலைவியாக, தனியொரு பெண்ணாக மதுவை ஒழித்துவிட்டு, அதன்மூலம் 350 கோடி இழந்தாலும், ஏற்றுமதியால் அவதிப்பட்டாலும்கூட சாதாரணமாக அரிசி விலையை ஏற்றவில்லை என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆண்ட அரசில் சாராய வருமானம் வந்தது. ஏற்றுமதி இல்லை. இன்றைக்கு ஏற்றுமதி ஆகின்ற அரிசி கல்கத்தா மூலமாக அயல்நாட்டிற்கு ஏற்றுமதி ஆகிறது. சாராயத்தால் வந்த வருமானம் கம்மியாகிறது. இப்படிப்பட்ட ஒரு வேதனையான சூழ்நிலையிலே, நமது தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள், விலைவாசியை நிர்ணயிக்க முடியாது. இந்த வருமானம் இருந்தால் இந்த அரிசியினுடைய விலையைக் கண்டிப்பாகக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

ஆனால் இன்றைக்கு நடப்பது என்ன? மத்திய அரசு ஓர வஞ்சனை காட்டுகிறது. மக்களை நோயின்றி வாழ வைக்க வேண்டும்; போதைப் பொருட்களின் மேலுள்ள மயக்க நிலையைப் போக்கி, இந்தச் சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணி, இந்தியத் துணைக் கண்டத்தில் இல்லாத வகையில் புரட்சித் தலைவி இலவச மருத்துவ நலத் திட்டத்தை இன்றைக்குக் கொண்டு வந்து, பத்தாயிரம் மருத்துவ முகாம்களை அமைத்து, அதன் மூலமாக ஆறு மாத காலத்திலே, கடைக் கோடியில் இருக்கின்ற கிராமத்தில் ஏழை மக்கள், குழந்தைகள், தாய்மார்கள், இருதய வியாதி உள்ளவர்கள், கண் நோய் உள்ளவர்கள், பால்வினை நோய் உள்ளவர்கள், நரம்பு வியாதி உள்ளவர்கள், மூளை வியாதி உள்ளவர்கள், தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள், டி.பி., சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகிய பல்வேறு பிரிவுகளிலே உள்ள நோயாளிகளைக் கவனிப்பதற்காக, ஆங்காங்கே சிறப்பு முகாம்களை அமைத்து, சிறப்பு பெற்ற மருத்துவர்களை அழைத்து, பெரிய ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலே இருக்கின்ற

[டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்] [1992 பிப்ரவரி 4

வைத்தியத்தைப் போன்ற ஒரு சிறப்பினை இங்கே கடைப்பிடித்து, ஏழை மக்களைக் காப்பாற்றி இருக்கின்ற ஒரு பெருமையையும், மக்களைக் காத்துக் கொண்டு இருக்கின்ற இந்தத் திட்டத்தை உலகத்தில் உள்ள நாடுகள் பின்பற்றும் என்பதில் துளிக்கூட சந்தேகம் இல்லை. அறிவார்ந்த இப்படிப்பட்ட பல திட்டங்களை மேலும் செயல்படுத்த நமது மாண்புமிகு டாக்டர் முதல்வரவர்களை ஊக்குவிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் கிராமத்திலே இருக்கின்ற ஒரு இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு தந்ததைப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம்.

மத்திய திட்டங்களுக்குத் திட்ட ஒதுக்கீடு 1,600 கோடியை அடைய தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறையை உணர்ந்து, 1991-92 ஆம் ஆண்டு முடிவிற்குள் மத்திய அரசு நிதி உதவும் என்று ஆளுநர் உரையில் கூறியிருப்பது, எங்கள் முதல்வரின் இணையில்லாத் தன்னம்பிக்கைக்கு ஊக்கம் தந்தது ஆகிறது.

ஏழை எளியவர்கள் பாதிக்கப்படாத வகையிலே இன்றைக்குச் சாதாரண அரிசி ரூ. 2.00 என்று இருப்பதை அப்படியே வைத்துக் கொண்டு உள்ளது. ஏழையின் சுமையைத் தாங்குகின்ற ஒரு தாயாக இருக்கிறார்கள்.

வணிகர்கள், கோஆப்பரேட்டிவ் சொசைட்டிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவர்களைச் சந்தித்து விலையைக் குறைக்க ஆவன செய்ததை, வெளியைக் குறைத்து இன்றியமையாத பொருட்கள் உடன் கிடைத்திட வழிவகை செய்துள்ளதைப் பாராட்டியிருப்பதற்கு நன்றி.

ஏழைகள், நலிந்த பிரிவினர், வசதி வாய்ப்பு அற்றோர் நலனைப் பாதுகாக்க உணவு மானியத்தை வழங்கி, சமூகப் பாதுகாப்பைக் கருதி, 41.56 கோடி செலவில், 1.20 கோடி ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வேட்டி, சேலைகள் வழங்கியுள்ளது. இவை ஏழை எளிய மக்களின் குறைந்தபட்ச தேவை நிறைவேற்றுகின்ற அரசாகப் பாராட்டியிருப்பதற்கு [illegible] நன்றிகள்.



1992 பிப்ரவரி 4] [டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்]

முற்பகல் 11-20.

நிதி நெருக்கடியான இந்த நிலையில், 'காட்கில் விதிமுறை'களின்படி, தனிப் பிரச்சினைகளுக்காக 7.5 சதவீதம் நிதியையும் வங்கிகளிடமிருந்து பெறும் கடன் சிறப்பு ஒதுக்கீட்டையும் வழங்க வேண்டும். இப்படிப்பட்ட ஒதுக்கீடுகள் இல்லாது விலை உயர்வை எதிர்கொள்வது மிகக் கடினம். எனவே, தனித்த இயல்புடைய தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு அளிக்கும் நிதி பற்றாது எனக் கூறியிருப்பதிலிருந்தே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிக இக்கட்டான சூழ்நிலையில் இருப்பது கண்கூடு. டீசல், பெட்ரோல் விலை ஏறியதன் விளைவாகத்தான் பஸ் கட்டணம் உயர்ந்துள்ளது. நிலக்கரி விலை உயர்வால், மின் கட்டணமும் உயர்ந்துள்ளது. அரசின் மொத்த மானிய சுமை 503 கோடி அளவுக்கு அதிகரித்துள்ளதால், சன்னரக அரிசி விலையும் உயர்ந்துள்ளது. 1993-ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டை கண்டிப்பாக மத்திய அரசு உயர்த்தி, அதன் உதவியுடன் மாநில அரசு நிறைவேற்றும் என்பதில் சந்தேகமே இல்லை.

அண்மையில் பெய்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போதிலும், பயிர்களைப் பாதுகாக்க—மீண்டும் உழவுத் தொழில் செய்ய,—போதிய உரம், மருந்து கொடுத்து அரிசி உற்பத்தியிலே 65.25 டன்னிலிருந்து 90.45 டன்னாக உயர்த்துவதற்கு முயற்சி எடுத்துள்ளதைப் பாராட்டியதற்கு மிகவும் நன்றி. வரும் ஆண்டில், கரும்பு, பருத்தி, கடலை ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கி, அதன்மூலம் விலைவாசியைக் கட்டுப்படுத்துவோம் என்ற உங்கள் நம்பிக்கைக்கு எங்கள் நன்றி.

முதன்முறையாக தொழில் வளர்ச்சி தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய விரிவான கொள்கை விளக்கம். ஊக்க உதவிகள், வசதிகள் ஆகியவற்றை நன்கு தெளிவுபடுத்தி, தமிழக முதல்வரின் தொழில் கொள்கையினை மற்ற அரசுகளிடையே ஒப்பிடுகையில் சிறந்த கொள்கை என்று பாராட்டியமைக்காக நன்றி. (மணியடிக்கப்பெற்றது).

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம், எரிவாயு குழாய் அமைத்து அதன்மூலம் தென் மாநிலங்களுக்கு எரிவாயு கொடுக்கவும். எண்ணூர் துறைமுகம், மணலி தேசிய ஆரோமேடிக் திட்டம், தேசிய [illegible]

[டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்] [1992 பிப்ரவரி 4

சாலைகளை நான்கு வழிப்பாதையாக மாற்றும் திட்டம், 20 ஆண்டுகளுக்குமேலாக எதிர்பார்க்கும் ஏதாவது ஒரு பெரிய மத்திய திட்டம் தீட்டப்படல் வேண்டும் என்ற எங்களின் எதிர்பார்ப்பை வெளியிட்டதற்கு நன்றி. அரசு தொடங்க உள்ள 'டாசிட்' மூலம் தொழில் வளர்ச்சி மையங்களை முறையே காயிதே மில்லத் மாவட்டம், பனங்குடி, பெருந்துறை, ஜெயங்கொண்ட சோழபுரம் ஆகியவற்றிற்கு மத்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்க முன்வர வேண்டுமென்று விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின்மூலம் தமிழக முதல்வரின் தொழில் கொள்கையில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கும், தனியார் துறை மின்உற்பத்தி செய்யவும் வகை செய்து, சுமார் 7,000 கோடி ரூபாய் செலவு செய்யவும், 1,500 மெகாவாட் மின் உற்பத்திக்கும் வழி செய்யப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசு உடனடியாக இசைவு தந்து உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரைமீது பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, தன்னிகரில்லாத இந்தத் தமிழகத்தின் முதல்வர்மீது வேண்டுமென்றே புகார் சொல்லி, மக்களிடையே குழப்பம் ஏற்படுத்தினால், இந்தப் பெண்குலத்துச் சமுதாயமும், தமிழகத்தின் தன்னிகரில்லாத தொண்டர்களும் உயிருள்ளவரை போராடி, இந்த அரசைக் காப்பாற்றுவதற்கு, நாங்கள் ஒற்றுமையாகச் செயல்பட்டு, வழிமுறைகளைக் கடைப்பிடித்து, தமிழகம் உயர வழிவகுப்போம் என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

* **திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-ஆம் ஆண்டு இத் திருமன்றத்திலே ஆற்றப்பட்டிருக்கும் ஆளுநர் உரையின்மீது நடக்கின்ற விவாதத்தில், இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் கலந்துகொண்டு, பேசுவதற்குக் கிடைத்த வாய்ப்புக்கு தங்களுக்கு நான் நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்தமுறை ஆளுநர் உரை விவாதத்தின்போது, விவாதத்திலே பங்குகொண்டு பேசியபோது என் வார்த்தைகள் இப்போது எனக்கு ஞாபகத்தில் வருகின்றன. சுதந்திர இந்தியாவின் வரலாற்றில், தமிழகத்தில்



1992 பிப்ரவரி 4] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

முதன்முறையாக ஆளுங்கட்சி நலனில் அக்கறை கொண்ட ஒரு எதிர்க்கட்சி, சட்டமன்றத்திலே அமர்ந்திருப்பது எவ்வளவு பெருமை தரத்தக்கது என்ற என் வார்த்தைகளை இப்போது நான் நினைவுகூர்கிறேன். அதே நட்பு இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பதிலே நான் பெருமையடைகிறேன். நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நட்பு, உண்மையான, இலட்சியமான நட்பு என்பேன். நான் கடந்த வாரம் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் எழுதிய குறள் நெறி விளக்கத்தினைப் படித்துக் கொண்டிருந்தேன். அதிலே ஒரு குறள் மிகவும் பிடித்திருந்தது.

"அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு."

அதாவது, அழிவைத் தரும் தீமையிலிருந்து நீக்கி, நல்ல வழியில் நடக்கச் செய்து, அக் காலத்தில் உடனிருந்து, துன்பப்படுவதே நட்பாகும். அதேபோல், யாருடைய நட்பைக் கொள்ள வேண்டுமென கூறவந்த வள்ளுவன் அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய வல்லார் நட்பை ஆய்ந்து கொளல் என்று சொன்னார். அதாவது: நன்மை இல்லாத செயலைக் கண்டபோது வருந்தும் படியாக இடித்துச் சொல்லி உலக நடை அறிய வல்லவரின் நட்பை ஆராய்ந்துகொள்ள வேண்டுமென்ற நாவலரின் வார்த்தைகளை நான் நினைவுகூர்கிறேன்.

முற்பகல் 11-25.

இதைப் போலவே, கடந்த நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்னால் பத்திரிக்கைக்கு ஒரு அறிக்கையைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அரங்கநாயகம் சொன்ன வார்த்தைகளும் அதே உணர்வைத் தூண்டுகின்ற வகையில் அமைந்திருக்கின்றது. சட்டமன்றத்திலே இருக்கின்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் எங்களை ஆக்கபூர்வமாக விமர்சிக்க வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதை நாங்கள் வரவேற்கிறோம் என்று கூறியுள்ளார்கள். அமைச்சருக்கு இருந்த அதே நல்லுணர்வோடு நான் இந்த விவாதத்திலே பங்கு கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடந்த ஆண்டு ஆளுநர் உரை நடைபெற்றபோது இருந்த சூழ்நிலையையும், தற்போது இருக்கின்ற சூழ்நிலையையும் சிந்தித்துப் பார்க்கிறேன். அரசியல், சமூக மாற்றங்கள் தமிழகத்திலே மட்டுமல்லாது, இந்திய எல்லையின், உலகத்தின் எல்லைகளையே தொட்டிருக்கிறது. சாம்ராஜ்யங்கள் தகர்ந்

திருக்கின்றன. சரித்திரங்களை மாற்றியிருக்கின்றன. சகாப்தங்கள் முடிந்து இருக்கின்றன. நடந்துவிட்ட சில சம்பவங்கள், உலகப் பொருளாதார அடிப்படையையே மாற்றி அமைத்திருக்கின்றன. இந்திய மக்களின் அரசியல் பார்வை ஒட்டுமொத்தமாக மாறி இருக்கின்றது. மண்டல், மந்திர், மஸ்ஜித் ஆகிய பிரச்சினைகள் எல்லாம் மக்கள் மனதிலே. இருந்து அகற்றப்பட்டு, பொருளாதார அடிப்படையிலே அரசியலைப் பார்ப்பதற்கு மக்கள் ஆரம்பித்து இருக்கிறார்கள். அந்நியச் செலாவணி குறையிருப்பின் காரணமாக, நாட்டில் ஏற்பட்ட தொழில் முடக்கம், அதனைத் தொடர்ந்து, ஐ.எம்.எப். என்று சொல்லக்கூடிய சர்வதேச நிதி நிறுவனத்திலிருந்து இந்திய அரசு கடன் பெற வேண்டிய கடன் நிர்ப்பந்தம், அதனைத் தொடர்ந்து வரி விதிப்புகள், விலைவாசி ஏற்றம் ஆகியவை, சாதாரணமான சாமானியர்களின் வாழ்வினைப் பெரிதும் பாதித்துள்ளது. இந்த சர்வதேசச் சூழ்நிலைக்குத் தமிழகம் மட்டும் விதிவிலக்காக இருக்க முடியாது. இவ்வளவு கடுமையான சூழ்நிலையிலும், இக்கால கட்டத்தில், தமிழகத்தில் ஆட்சி செய்யும் பொறுப் பேற்றுள்ள உங்கள் நிலையினை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. பாதகமான சூழ்நிலையில் தமிழ்நாட்டை ஆளும் உங்களுக்கு அனுசரணையாகவே நாங்கள் இருக்க விரும்பு கின்றோம். ஏறி இருக்கும் விலைவாசி, நாடெங்கும் மலிந்துவிட்ட பற்றாக்குறை, அன்றாட நடைமுறையாகிவிட்ட பயங்கரவாதப் போக்கு, பெருகியுள்ள வேலையில்லாத் திண்டாட்டம், சமூகத்தில் எல்லாப் பிரிவுகளிலும் ஏற்பட்டுள்ள ஒழுக்கக் குறைவு, நிர்வாக இயந்திரத்தின் எல்லாத் துறைகளிலும் மலிந்துவிட்ட ஊழல் இவற்றிற்கெல்லாம் உங்களைக் காரணமாக்கி, நாங்கள் அரசியல் ஆதாயம் பெற விரும்பவில்லை. ஏனென்றால், நாங்கள் கட்சிக்காக ஆட்சி நடத்துகிறவர்கள் அல்ல; ஆட்சிக்காக கட்சி நடத்து கின்றவர்கள். பயங்கரவாதத்தினை ஒடுக்குவதில் நீங்கள் மேற் கொண்ட முயற்சிகள் உண்மையிலேயே பாராட்டுவதற்குரியது. அதைப்பற்றி எங்களுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. தடா சட்டத்தின் துணைகொண்டு பயங்கரவாதிகள் மீது எடுத்த உங்களின் துணிகர நடவடிக்கைகளை நாங்கள் நன்றியோடு நினைக்கின்றோம். அண்ணல் காந்தி, பெருந் தலைவர் காமராசர், அமரர் ராஜாஜி, அறிஞர் அண்ணா, அமரர் எம்.ஜி.ஆர். ஆகியோர் வாழ்வின் எண்ணமான மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்துவதில் இத்தனை [illegible]





யிலும் நீங்கள் மேற்கொண்டு இருக்கும் முயற்சிகளை நாங்கள் பாராட்டுகிறோம். இன்று வானகத்தில் வாழும் அந்தத் தலைவர்கள் வையகத்தில் ஆட்சி செய்யும் உங்களை மனமாரப் பாராட்டிக் கொண்டிருப்பார்கள் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை. இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டிருக் கின்ற சிக்கலைப் பற்றி நான் பேச இருக்கின்றேன். அப்படி பின் விளைவுகள் ஏற்பட்டாலும் கூட, உங்கள் நோக்கம் நல்லவை என்பதால் பாராட்டுகிறேன். மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேரில் நடை பெறுகின்ற மருத்துவ சிகிச்சை முகாம்கள் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய நல்லதொரு முயற்சி, அந்த முயற்சி நல்ல முறையிலே செயல்படுத்தப்பட்டு வெற்றி அடையவும் நான் வாழ்த்துகிறேன்.

புதிய நலத் திட்டங்கள் எதுவும் இந்த ஆளுநர் உரையிலே அறிவிக்கப்படவில்லையென்றாலும் கூட, ஏற்கனவே இருக்கின்ற திட்டங்களைச் செயல்படுத்த இந்த அரசு எடுத்த உறுதி உண்மை யிலேயே எங்களுக்குத் தெரிகிறது. அதற்காக பாராட்டுகள் ஆளுநர் உரையின் மீது பத்திரிகைக்கு நான் கருத்துத் தெரிவிக் கின்ற போது,

"The Governor's Address seems to be a charge sheet against the Centre."

என்று குறிப்பிட்டு இருந்தேன். ஆளுநர் உரைக்கு நன்றி தெரி விக்கின்ற தீர்மானத்தை முன்மொழிந்த நண்பர் தென்னவன் அவர்கள் அந்த வார்த்தைகளைக் குறிப்பிட்டு, ஆளுநர் உரை மூலம் உங்களைக் குற்றம் சுமத்துவது எங்கள் நோக்கம் அல்ல; இருக்கின்ற யதார்த்தங்களை எடுத்துச் சொன்னோம் என்பதனை நண்பர் அல்போன்ஸ் புரிந்து கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், அதற்குப் பின்பு விவாதத்திலே பங்கு கொண்ட சில உறுப்பினர்களின் வாதங்களுக்குப் பதில் சொன்ன மாண்புமிகு முதல்வர் அவர்கள் சில குற்றச்சாட்டுக்களை, மத்திய அரசின் மீது ஆணித்தரமாக இந்த மாமன்றத்திலே வைத்திருக் கிறார்கள். மத்தியிலே ஆளுகின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் கடைசித் தொண்டன் என்கிற முறையில் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்ல எனக்கு கடமை உண்டு. அதே நேரத்தில் அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையானால் மத்திய அரசை எதிர்த்துப் போராடும் உரிமை, தமிழன் என்பதால் எனக்கு உண்டு.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1992 பிப்ரவரி 4

மாண்புமிகு உறுப்பினர் தென்னவன் அவர்கள் பேசுகின்றபோது இன்றைய தினம் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசே காரணம் என்று சொன்னார்கள். இதற்கு பதில் அளிக்கின்ற வகையில், அல்ல, அல்ல, விலைவாசி உயர்வுக்கு மாநில அரசுதான் காரணம் என்று சொல்லக்கூடிய கல்நெஞ்சக்காரன் அல்ல நான்; விவரம் தெரியாதவன் அல்ல நான். ஏனென்றால் 'தன்னெஞ்சறிவது பொய்யற்க' என்ற வள்ளுவத்தின் மீது நம்பிக்கையுடையவன் நான். இன்று இந்தியாவில நிலவக் கூடிய விலைவாசி உயர்வுக்கு, இன்றைய தினம் பாரதப் பிரதமராக இருக்கின்ற மாண்புமிகு நரசிம்மராவ் அவர்களும், தமிழகத்தில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற விலைவாசி உயர்வுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் ஜெயலலிதா அவர்களும் தான் காரணம் என்று யாராவது சொன்னால், அவர்கள் பொருளாதாரம் புரியாதவர்கள், அரசியலின் ஆரம்பப் பாடம் கூட அறியாதவர்கள் என்றுதான் அர்த்தம். இன்றைய தினம் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வுக்கு ஒரு பெரிய வரலாறே உள்ளது. இதுவரை இந்தியாவை, தமிழகத்தை ஆண்ட சில, மத்திய, மாநில அரசுகள், சில பிரதமர்கள் சில முதலமைச்சர்கள் கடைப்பிடித்த தவறான, தொலை நோக்கு இல்லாத, நிதி நிர்வாக ஒழுங்கீனங்கள்தான் இவ்வளவு பெரிய சிக்கலுக்குக் காரணம் என்றால் அது மிகையாகாது.

முற்பகல் 11-30.

அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்காமல், அடுத்த தேர்தலைப் பற்றி மட்டுமே சிந்தித்த சில அரசியல்வாதிகளின் ஓட்டுப்பசிக்குப் போடப்பட்ட தீனியின் விளைவே இன்றைய விலைவாசிப் பிரச்சினை. தேச நிர்மானப் பணியினைப் பற்றிய சிந்தனைகளை அடிப்படையாகக் கொள்வதைக் கைவிட்டுவிட்டு கவர்ச்சித் திட்டங்கள் மூலம் மக்களின் ஓட்டுக்களைக் கைப்பற்றி அரியணை ஏறத்துடித்த சில மூன்றாம் தர அரசியல்வாதிகளின் அதிகார வெறிதான் இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிற பொருளாதாரச் சிக்கலுக்குக் காரணம்.

இங்கே பேசிய பல நண்பர்கள் சில திரைப்படப் பாடல்களை மேற்கோள் காட்டிப் பேசினார்கள். எனக்குக் கூட ஒரு ஆசை, ஒரு திரைப்படப் பாடலைப் பாடவேண்டுமென்று. கவியரசு கண்ணதாசன் அவர்களின் வரிகள் எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றன.



1992 பிப்ரவரி 4] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

'வரவு எட்டணா, செலவு பத்தணா, இறுதியில் துந்தனா, துந்தனா' என்று ஒரு பாட்டைப் பாடினார்கள். அதுதான இன்றையநிலை. அதுதான் தமிழகத்தில் இன்றையதினம் ஏற்பட்டிருக்கின்ற நிலை. மீன் பிடிக்கக் கற்றுக் கொடுக்க நாளாகும் என்பதால், மீனாகவே தந்துவிடுகிறேன் என்ற குறுகிய பாதையினைச் சில தலைவர்கள் கடைப்பிடித்ததன் விளைவே இத் தலைமுறையினர் மாபெரும் சுமையினைச் சுமக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டிருப்பது.

முளையிலேயே வெட்டப்படாத முள் மரம் அகலக் கால் பரப்பி கிளை விட்டுத் தழைத்த பிறகு அதை ஏன் வளரவிட்டாய் என நேற்று நியமிக்கப்பட்ட காவல்காரனைக் கடிந்துகொள்வது எவ்வாறு பொருத்தம் இல்லையோ, அதுபோல் நேற்று முன்தினம் பொறுப்பேற்றிருக்கிற உங்களைக் குறை சொல்வது பொறுப்பு மல்ல; பொருத்தமுமல்ல. இவ்விலைவாசி ஏற்றத்திற்கு நீங்கள் இருவருமே பொறுப்பல்ல. ஆனால் அதே வேளையில் இன்று இந்த விலையுயர்வினால் பாதிக்கப்பட்டுள்ள சாமானிய மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அதிலிருந்து நீங்கள் தப்ப முடியாது. விலைவாசி ஏற்றம் மிகுந்துள்ள இக்கொடிய சூழ்நிலையில் மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு மத்திய அரசுக்கே என்று மாநில அரசும், மாநில அரசுக்கே என்று மத்திய அரசும் சொல்லுமானால், வரலாறு பொறுப்பினைத் தட்டிக் கழித்தவர்கள் (Escapists) என்ற பழியினை உங்கள் மீது சுமத்தும். விலைவாசி ஏற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்று மத்திய நிதியமைச்சர் அறிவித்துள்ளார். ஏறிவிட்ட விலைவாசி இறங்குவதற்கு இன்னும் இருபது மாதங்கள் ஆகும் என்ற உண்மையை ஒளியாது உரைத்த நிதியமைச்சரை, மத்திய நிதியமைச்சரை நான் மனதாரப் பாராட்டுகிறேன். He has got the courage to call the spade as spade. நிதர்சனமான உண்மைகளை நியாயமாக மக்கள் முன் எடுத்து வைத்திருக்கும் அவரது மன உறுதியை நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன். மாண்புமிகு பிரதமர் அவர்களும் இதே கருத்தினைத்தான் எதிரொலித்துள்ளார்கள். இந்த நிலையினை ஒத்துக்கொண்டு மக்களைப் பாதுகாக்கின்ற பணியினைப் பற்றிச் சிந்திப்பதற்கு நாம் முன்வரவேண்டுமேயொழிய ஒருவர் மீது ஒருவர் பழிசுமத்திக் கொண்டிருப்பது சரியல்ல; நியாயமுமல்ல. அது மக்களுக்கு நாம் செய்யும் நம்பிக்கைத் துரோகம்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1992 பிப்ரவரி 4

வருவாயினைப் பெருக்கி செலவினைச் சுருக்கி விலைவாசி ஏற்றத்தின் விளைவுகளுக்கு விடியல் தேடுவதில் முனைப்பாக இருக்கவேண்டுமேயொழிய, அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமே யொழிய வீண் வம்பு வாதங்களில் நேரத்தைச் செலவிடுவது தமிழனுக்கு நாம் செய்யும் பச்சைத் துரோகம். செலவைக் குறைக்கும்போதும், வருவாயைப் பெருக்கும்போதும் சாதாரண சாமானிய மக்கள் கஷ்டப்படாமல் பார்த்துக்கொள்ளும் கடமை நமக்கு இருக்கிறது.

அரிசி விலையை மத்திய அரசு கூட்டிவிட்டது என்று சொல்லி யிருக்கிறீர்கள். மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு மட்டும் அரிசி விலையைக் கூட்டிவிடவில்லை. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே விலையைத்தான் நிர்ணயித்துள்ளது. ஆனால் கேரள அரசு, மத்திய அரசு கூட்டியிருக்கும் விலையினை அம்மாநில மக்கள் மேல் சுமத்தாமல் மாநில அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. எவ்வாறு அதைச் செய்து இருக்கிறார்கள் என்று நமது அரசு ஆராய்ந்து பார்க்கவேண்டும். விலைவாசி ஏற்றத்திலிருந்து முதலில் பாதுகாக்கப்பட வேண்டிய மக்களை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள் மத்திய அரசு விலையை உயர்த்தியும் கேரள அரசு விலையை உயர்த்தவில்லை என்று. ஏற்கெனவே தமிழக அரசு மட்டும்தான் தனியாக மத்திய அரசு கொடுப்பதற்கு மேலாக மானியத்தைக் கொடுத்து வருகிறது. அதை அவ்வாறு கொடுக்காமல் ஏற்கனவே அவர்கள் விற்று வருகிற விலை இப்போது நாம் உயர்த்தியிருக்கிற விலையை விட அதிகம் என்பதை இந்த நேரத்தில் எடுத்துத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விலைவாசி ஏற்றத்திலிருந்து முதலில் பாதுகாக்கப்பட வேண்டிய மக்கள் சமூகத்தில் வாழும் ஏழை எளிய மக்கள்; வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ் கின்றவர்கள்; விவசாயக் கூலிகள்; கிராமத்தில் வாழும்



1992 பிப்ரவரி 4] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

கைவினைஞர்கள்; நகரத்தில் வாழ்கிற அன்றாடக் கூலிகள். இருபது மாதங்களுக்கு விலை உயர்வு குறையாது என்று நிதி யமைச்சர் சொல்லிவிட்ட நிலையில் நாம் இவர்களைப் பாதுகாக்க என்ன செய்யப் போகிறோம் என்ற குறிப்பு ஆளுநர் உரையில் காணப்படவில்லை. பொது வினியோக முறையினைத் திட்ட மிட்டு பலப்படுத்துவதன் மூலமே இந்த ஏழை மக்களைப் பாது காக்க முடியும். அதற்கான முயற்சிகளை இந்த அரசு சிந்திக்க ஆரம்பித்திருக்கிறதா என்று நான் அறிய ஆசைப்படுகிறேன்.

கிராமங்களிலே மற்றும் நகர்ப்புறங்களிலே உள்ள ரேஷன் கடைகள் ஊழலின் உறைவிடமாக உள்ளன. பொது வினியோகத் துறை ஒரு முறையான கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல் மூன்று தலை ராட்சஷக் குழந்தையாக உள்ளது. அதாவது 'மல்டி ஹெட்டட் மான்ஸ்டர்'. ஒரு ரேஷன் கடைக்கு குடிமைப் பொருட்களை ஒதுக்கீடு செய்வதும், வழங்குவதும் அதாவது 'அலாட்மென்ட் அன்ட் லிஃப்ட்மெண்ட்' குடிமைப் பொருளை வழங்கும் துறையிடம் உள்ளது. அதாவது சிவில் சப்ளைஸ். அதை மக்களுக்கு வினியோகம் செய்யும் பொறுப்பு கூட்டுறவுத் துறையிடம் உள்ளது. அவ்வினியோக அட்டைகள் முறையாக வழங்கப்பட்டுள்ளதா என மேற்பார்வையிடும் பொறுப்பு வரு வாய்த் துறையிடம் உள்ளது. இம்மூன்று துறைகளையும் இணைக்கும் முறையான அதிகார குழுமம் அதாவது 'சீட் ஆஃப் பவர்' இதுவரை அரசால் அடையாளம் காட்டப்படவில்லை. அதை அடையாளம் காட்டுகிற முயற்சியையும் அரசு எடுக்க வில்லை. இந்த பொது வினியோகத் துறை. . .

(முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், கூட்டுறவுத் துறை, சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மெண்ட் மூன்றுமே ஒரே அமைச்சரின் கீழே தான் வந்திருக்கிறது என்பதை மாண்பு மிகு உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சராக ஒருவரே இருப்பதை

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1992 பிப்ரவரி 4

பற்றிக்கூட நான் உண்மையிலே, நமது அமைச்சரைப் பற்றி பாராட்ட நினைத்து இருக்கிறேன். ஆனால் At the lowest level—at the taluk level, district level—there should be a comprehensive co-ordinating Agency which has got the complete control over all these sections. They should have all powers to accommodate and adjust. அதைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு பொருளை ஒதுக்கீடு செய்வதும், வழங்குவதும் இப்படி மூன்று துறைகளாக இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பின்னாலே சொல்வதையும் மூன்று நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்** : இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : ஏற்கனவே உங்களுக்கு 15 நிமிடங்கள் தரப்பட்டிருக்கின்றன.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்** : இந்த பொது விநியோகத் துறை முறைப்படுத்தப்பட்டால் ஒழிய ஏழை எளிய மக்களை விலைவாசியிலிருந்து காப்பாற்ற முடியாது. இதைத்தான் மாண்புமிகு பிரதமர் அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வருகிறார்கள். வரக்கூடிய காலங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விலை கூடும் என்பதிலே நமக்கு எவ்விதமான சந்தேகமும் இல்லை. வயிற்றுப்பசியோடு வாழ்விற்கு மன்றாடும் அந்த ஏழையிடம் சென்று புதிய பொருளாதாரக் கொள்கை மருந்தினால் மனிதன் பெறும் நன்மை என்ன என்று நான் உபதேசம் செய்தால் அது நிச்சயம் எடுபடாது. அப்படிப்பட்ட வேளையில் ஒரு புரட்சி வெடிப்பதைத் தடுக்க வேண்டுமென்றால் நியாய விலைக் கடைகளில் அவனுக்கு கிடைக்கவேண்டிய பொருட்களை மிகக் குறைந்த விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அரிசி, எண்ணெய், பருப்பு, மிளகாய் போன்ற அடிப்படைத் தேவையான உணவுப் பொருட்களை மிகக் குறைந்த விலையிலே ரேஷன் கடைகளிலே வழங்கமுடியுமா என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவ்வாறு ஒரு ஏற்பாட்டினை நாம் இப்போது செய்யாவிட்டால் வரக்கூடிய மாதங்களில் ஆட்சி நடத்துவது மிகவும்



1992 பிப்ரவரி 4] [திரு எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

சிரமப்படும் என்று நான் இந்த அரசை எச்சரிக்க விரும்புகிறேன். வெள்ளம் வரும் முன்பே அணைக்கட்ட வேண்டுமேயொழிய வந்த பின் தடுக்கலாம் என நினைப்பது விவேகமல்ல.

திட்ட ஒதுக்கீட்டில் கடந்த ஆண்டை விட, இந்த ஆண்டு நமக்கு மத்திய அரசு குறைந்தே வழங்கியுள்ளது. கூடுதலாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினை ஆளுநர் உரை வலியுறுத்தியுள்ளது. இவ்விவாதத்திலே பங்கு பெற்ற எங்கள் கட்சி உறுப்பினர் திருவிடைமருதூர் பன்னீர்செல்வம் பேசுகையில் தேசம் முழுவதும் இருக்கின்ற பொருளாதாரச் சிக்கலின் நிலையில் ... மத்திய அரசின் நிலையினை மாநில அரசு புரிந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டபோது அதற்கு பதில் உரைத்த முதல்வர், அந்நிலையினை மத்திய அரசு எல்லா மாநிலங்களுக்கும் ஒன்று போல் பொருத்திப் பார்க்கவேண்டும். தமிழகத்திற்கு மட்டும் குறைத்து, கர்நாடகத்திற்கும் ஆந்திராவுக்கும் அவர்கள் கேட்டதைவிட அதிகம் கொடுத்துள்ளது என்கிற தகவலை இந்த அவைக்குச் சொன்னார்கள். முதலமைச்சர் சொன்னதுபோல், ஒரு நிலையினை மத்திய அரசு எடுத்திருக்குமென்று சொன்னால், அது உண்மையிலேயே கண்டிக்கத்தக்கது. ஆனால் எங்களுக்கு கிடைத்திருக்கின்ற விவரங்கள் வேறாக இருக்கின்றன. கடந்த ஆண்டை விட திட்ட ஒதுக்கீடு நமது மாநிலத்திற்கு மட்டும் குறையவில்லை. காங்கிரஸ் ஆட்சியிலே இருக்கின்ற கேரளா, ... ஜனதா கட்சி ஆட்சியிலே இருக்கின்ற உத்திரப் பிரதேசம், தெலுங்கு ... ஆட்சியிலே இருக்கின்ற ... ஆகிய மாநிலங்களுக்குக் கூட திட்ட ஒதுக்கீடு சென்ற வருடத்தை விட குறைந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ... மாநிலத்தை அன்றைக்கு ஒப்பிட்டுக் காட்டினார்கள். நீங்கள் வேறு மாநிலத்தை இப்போது ஒப்பிட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில்கூட, அவர்கள் சொன்னதிலேயே பதில் இருக்கிறது. அடிஷனல் ரிசோர்சஸ் மொபிலைசேசன். இந்த ஆண்டு சென்ற ஆண்டைக் காட்டிலும் 400 கோடி ரூபாய்க்கும் அதிகமாக அவர்கள் புதிதாக கலால் வரி மூலம் அவர்களாலே திரட்ட முடிந்தது; நிதி ஆதாரம் திரட்ட முடிந்திருக்கிறது. எனவே தான் அவர்களுக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதிய ஜனதா கட்சி ஆட்சியிலே இருக்கின்ற உ.பி., இடது கம்யூனிஸ்ட் ஆட்சியிலே இருக்கின்ற மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களுக்குக்கூட திட்ட ஒதுக்கீடு சென்ற வருடத்தைவிட குறைந்துள்ளது.

தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இந்திய மாநிலத்திலுள்ள அனைத்து முதல்வர்களும் பிரதமரும் கூடிய வேளையில் திட்ட முதலீட்டை எவ்வாறு கணக்கிடுவது என்று அமைக்கப்பட்ட காட்கில் பார்முலா, எல்லா முதல்வர்களாலும் பிரதமராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. நமது முதல்வரும் அங்கே சென்றிருந்தார்கள் என்று நான் நினைக்கிறேன். ஒத்துக்கொள்ளப்பட்ட பார்முலா அடிப்படையில்தான் இந்தியா முழுமைக்கும் திட்ட ஒதுக்கீடு கணக்கிடப்பட்டுள்ளது. அதன்படி எ.ஆர்.எம். என்று சொல்லக்கூடிய 'அடிஷனல் ரிசோர்சஸ் மொபிலைஷேசன்' என்ற கூடுதல் நிதி ஆதாரத்தினை மாநில அரசு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகத் திரட்டுகிறதோ அதற்கேற்ப மத்திய அரசு தனது பங்கினைத் தருகிறது. அதில் மத்திய அரசுக்கு எத்தனை சதவீதம், மாநில அரசுக்கு எத்தனை சதவீதம் என்ற பார்முலாவை நமது முதலமைச்சர் உட்பட எல்லா முதலமைச்சர்களும் ஏற்கெனவே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். கர்நாடக அரசு சாராய விற்பனை மூலம் இந்த ஆண்டு கூடுதலாக ஏறக்குறைய 500, 600 கோடி ரூபாய் அதிகமாக எடுத்துள்ளது. அதைப்போல் ஆந்திராவிலும் முதலில் திட்ட ஒதுக்கீடு சென்ற ஆண்டைவிட குறைவாகத்தான் இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு அவர்கள் அரிசி விலையைக் கூட்டி கூடுதலாக ரூ. 400, ரூ. 500 கோடி நிதி ஆதாரம் தேடிய காரணத்தால்தான் அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு



அதிகரித்துள்ளது. எனவே மத்திய அரசு—இப்போதுகூட நீங்கள் கூடுதல் நிதி ஆதாரம் திரட்டுவீர்கள் என்று சொன்னால் . . . (குறுக்கீடு).

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி என்றால் அரிசி விலையை இன்னும் கொஞ்சம் உயர்த்தலாம் என்பதுபோல் வருகிறது. ஆந்திராவில், உயர்த்தி இருக்கிறார்கள் என்றும், கர்நாடகாவில் உயர்த்தியிருக்கிறார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். அவர்கள் எவ்வளவு நிதி ஆதாரத்தை கூடுதலாக ஏற்படுத்தியிருக்கிறார்களோ அதற்கு மேலே, அவர்கள் கேட்டதற்கு மேலே, அவர்கள் என்ன கேட்டார்களோ அதற்கு மேலே கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் கொடுத்திருக்கிறது என்றுதான் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது

**Thiru S. PETER ALPHONSE :** I am very clear. I am very specific. Our Finance Minister knows better, I think. How much additional resource mobilisation you can make and the Central contribution will correspond to the additional resource mobilisation. அது அரிசி விலையை கூட்டுவார்களோ, சாராயத்தை விற்பார்களோ எங்களுக்கு அதைப்பற்றித் தெரியாது.
How much you make . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு நிதியமைச்சர்.

*** மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் விவகாரம் ஒன்றும் இல்லை. திட்டம் எப்படி வகுக்க வேண்டுமென்பதற்கு சில பல முறைகள் எல்லாம் இருக்கின்றன. ஒரு மாநிலத்திற்கு இருக்கிற முறையே மற்றொரு மாநிலத்திற்கும் பொருந்தும் என்பது அல்ல. எந்தெந்த வகைக்கு எவ்வளவு எவ்வளவு ஒதுக்கீடு செய்வது என்பதற்கு காட்கில் பார்முலா. ஒரு வாய்ப்பாடு அந்த வாய்ப்பாட்டை அடிப்படையாக வைத்துதான் அந்தந்த மாநிலத்தினுடைய வருவாய், அதனுடைய செலவு, அவர்களுடைய திட்டங்கள், மத்திய அரசினுடைய திட்டங்கள்

ஆகியவற்றின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றனவே தவிர, ஒரு மாநிலத்தோடு மற்றொரு மாநிலத்தை ஒப்பிட முடியாது. ஒவ்வொரு மாநிலமும் தங்களுக்கு திட்ட ஒதுக்கீட்டில் அதிகப்படியாக வேண்டும் என்று கேட்கிற உரிமை இருக்கிறது. எல்லா மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்லியதுபோல நிதி ஆதாரங்கள் எவ்வளவுக்கெவ்வளவு கூட்டப்படுகின்றதோ அந்த அளவுக்கு மத்திய அரசினுடைய ஒதுக்கீடும் கூட்டப்படும் என்பது காட்கில் பார்முலாவில் இருக்கின்ற ஒன்று. ஆகவே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் சில பிரத்தியேக பிரச்சினைகளை எடுத்து வைத்து நாம் கூடுதல் நிதி கேட்கிறோம். ஏனென்றால், மதுவிலக்கைக் கொண்டு வந்திருப்பதன் காரணமாக கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் அளவுக்கு நமக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதை மத்திய அரசுதான் சமாளிக்க வேண்டும். அதுபோல இங்கே எல்.டி.டி.ஈ, விடுதலைப் புலிகள் ஆகியோரைக் கட்டுப்படுத்த செலவினங்களை நாம் கூடுதலாக ஆக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் அதைப்பொறுத்து எங்களுக்கு கூடுதல் ஒதுக்கீடு வேண்டும். கர்நாடகாவிலிருந்து தமிழர்கள் விரட்டி அடிக்கப்படுவதன் காரணமாக அவர்களை எல்லாம் இங்கே கொண்டுவந்து, வைத்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு செலவினங்கள் அதிகமாக ஆகின்றன. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே ஆன, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே திட்டங்களை நிறைவேற்ற முடியாத சூழ்நிலைகளும் இருந்தன. இந்தக் காரணங்களை எல்லாம் வைத்து கூடுதலாக நிதி வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். ஆகவே, இதைக் குறைத்தது தவறு என்று நாம் சொல்கிறோம். அதை இங்கே இருக்கிற திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர் திரு பிரணாப் முகர்ஜி அவர்களும் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே, திரும்பத் திரும்ப நாம் கேட்கிறோம். ஆகவே, இந்தத் திட்டங்களை ஏற்றுக்கொள்ளுங்கள், கூட்டித் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களும் இசைவு தந்திருக்கிறார்கள். அதைப்பற்றி பேசி விட்டோம். திரு. பிரணாப் முகர்ஜி கூட கொடுத்துவிடுவார் போல் இருக்கிறது. திரு. பீட்டர் அல்போன்ஸ் தான் கொடுக்க மாட்டார்போல் இருக்கிறது. (சிரிப்பு) ஆகவே, எங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. எங்களுடைய நம்பிக்கையை ஏற்று, அன்றைக்குக் குறைத்





தார்களே தவிர, இன்றைக்கு அவர்கள் இருக்கிற நிலையையும், அவர்கள் சிந்தித்துக்கொண்டிருக்கிற நிலையையும் பார்க்கும்போது, கூடுதலாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிற காரணத்தாலே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அதைக் கெடுத்து விடாமல் பார்த்துக்கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான பொருள் வந்துவிடக் கூடாது என்பதற்காக நான் குறிப்பிடுகின்றேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல நிச்சயமாக நாங்களும் இந்த மாநிலத்திற்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு வர வேண்டுமென்று விரும்புகிறோம். நிச்சயமாக இந்தக் கோரிக்கையை முழுமையாக ஆதரிக்கிறோம். ஆனால் நாம் கேட்ட அளவுக்கு முதன் முறையாக திட்ட ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதைத்தான் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் விளக்கிக்கொண்டிருக்கிறார்களே தவிர அது வரக்கூடாது என்பது நோக்கம் அல்ல. மாடிபைட் காட்கில் பார்முலாபடி நமக்கு முதன்முறையாக ஒதுக்கீடு குறைந்துவிட்டது. மீண்டும் அதிகமான தொகை பெறுவதற்கு எடுக்கின்ற அனைத்து முயற்சிகளிலும் நிச்சயமாக காங்கிரஸ் கட்சி உறுதுணையாக நிற்கும்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாதம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அதிகமான பணம் கேட்பதிலே தமிழக அரசு எவ்வளவு வேகமாக இருக்கிறதோ, அதைவிட வேகமாக நாங்கள் கேட்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் மத்திய அரசு ஏதோ ஒரு கோரிக்கையை புறக்கணித்து விட்டது அல்லது மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து விட்டது அல்லது Impartial treatment to Tamil Nadu alone என்று சொல்கிற அந்த சார்ஜுக்கு தான் நாங்கள் பதில் சொல்கிறோமேயொழிய கூடுதலாக நிதியினைத் தமிழகம் பெறுவதிலே, உங்களுக்கு ஈடு செய்யக் கூடிய அளவில், உங்களை விட அதிகமாக ஒரு படி நின்று பெறுவதிலே நாங்களும் எங்களுடைய தலைவர்கள் எல்லோரும் ஒருநாளும் பின்தங்க மாட்டோம் என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் மிக ஆணித்தரமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் 'Impartial treatment' என்று சொன்னார்கள். அதை Partial என்று மாற்றிக்கொள்ள வேண்டும்.

Thiru S. PETER ALPHONSE : That is correct. Professor knows better.
இதிலே இங்கே கூட சொன்னார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 'நாங்கள் சாராயம் விற்க வேண்டுமென்று கேட்கிறீர்களா? அரிசி விலையை உயர்த்த வேண்டுமென்று கேட்கிறீர்களா? என்று கேட்டார்கள். நான் சொல்கிறேன். இது இரண்டும் செய்யாமல் வருவாயைக் கூட்ட முடியும். அதைச் சொல்லப் போகிறேன். ஏன் என்றால் நான் ஒரு ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவன். I am not interested in criticising alone. I am also interested in advising the Government how to augment its revenue.
அதற்கு வருகிறேன். நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அனுமதி கொடுத்தால், அதைப்போல் இதுதான் அந்த பார்முலா. This formula was uniformly followed throughout India from Kashmir to Kanniyakumari. In this, the Centre does not make any difference between any State. That point, we want to drive home. மத்திய அரசிடமிருந்து அதிகமான நிதி பெற வேண்டுமென்று எடுத்துக்கொண்டிருக்கிற உங்கள் முயற்சிகளுக்கு நாங்கள் துணையாக நிற்போம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மது விலக்குக் கொள்கையின் நடைமுறைச் சிக்கல்கள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். பெரிய பொருளாதாரச் சிக்கல்களுக்கிடையேயும் எங்கள் நெஞ்சுக்கு மிகவும் இனிமையான இக்கொள்கையினை நீங்கள் கடைப்பிடிப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் உங்கள் முயற்சி விழலுக்கிறைத்த நீராவது கண்டுதான் வேதனை ஏற்படுகிறது. முத்தித் தவமிருந்து முன்னூறு நாள் சுமந்து, ஏறாத கோயிலில்லை, போகாத குளமில்லை எனத் தவமிருந்து பெற்ற குழந்தையினை வெறி நாய் தூக்கிக் கொண்டு போனதுபோல் நீங்கள் கஷ்டப்பட்டு, துன்பப்பட்டு நடத்தி வரும் மதுவிலக்கின் பயனை சமூக விரோதிகள் எடுத்துச் செல்கிறார்கள். இம்மாமன்றத்தில் ஒரு தகவலைத் தருவது எனது கடமை என்று எண்ணுகிறேன். யாராவது கள்ளச் சாராயம் எங்கும் காய்ச்சப்



படவில்லை, மது கட்டுப்படுத்தப்பட்டது என்று கூறுவார்களானால் அவர்கள் இந்த அவைக்குத் தவறான தகவல்களை தருகிறார்கள் என்று நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விரைவில் முடிக்கவும். நீங்கள் 23 நிமிடங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** மதுவிலக்கு அமுல் நடத்தப்பட்ட முதல் 2 மாதங்களில் கள்ளச் சாராய விற்பனை கட்டுப்பாட்டில் இருந்தது உண்மைதான். ஆனால் மெள்ள மெள்ள அது அரசின் கட்டுப்பாட்டில் இருந்து விலகி தற்போது சமூக விரோதிகளிடம் போய்க் கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது, மறைக்க முடியாது. அதுமட்டுமல்லாமல் பழரசம் என்ற பெயரில், அரிஷ்டம் என்ற பெயரில், குளோரால் ஹைட்ரேட் என்ற நச்சுத் தன்மை வாய்ந்த போதைப் பொருளை இந்தப் பானங்களில் கலந்து தெருவிற்குத் தெரு, கடைக்குக் கடை விற்கும் கொடுமை எல்லா மாவட்டங்களிலும் நடக்கிறது. ஏழை மக்களின் உடல் நலம் காக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இச்சட்டத்தின் மூலம் அவர்கள் உயிருக்கே உலை வைக்கும் வியாபாரிகள் கொடிகட்டிப் பறக்கிறார்கள். பணக்காரன் உல்லாசத்திற்காகக் குடிக்கிறான். ஏழை உழைத்த உடல் வலியை மறக்க குடிக்கிறான். அந்த ஏழையினை குடிக்காதே என்று தடுத்துவிட்டு, பணக்காரனை மட்டும் குடிக்க அனுமதிப்பது எவ்வகையில் நியாயமாகும்? மேலும் பூரண மதுவிலக்குதான் மதுவிலக்கே தவிர நாட்டுச் சாராயத்திற்கு மட்டும் விதிக்கப்பட்டிருக்கும் தடை மதுவிலக்கு ஆகாது எனவே அரசின் கஜானாவை நிரப்ப வேண்டிய பணம் சமூக விரோதிகளின் கைக்குப் போவதை முதலில் தடுக்க வேண்டும். பின் அயல் நாட்டு மதுபான விற்பனையைத் தடை செய்து, பூரண மது விலக்குக்கு வழி காண வேண்டும்.

புதிய தொழில் கொள்கை அறிவித்திருப்பதை கண்டு நான் மகிழ்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் அந்தக் கொள்கை அறிவிப்பு வெறும் அறிவிப்பாக நின்றுவிடாமல் செயல் வடிவம் பெற வேண்டும். ஆனால் தொழிலுக்குத் தேவை ஊக்கமும். அதன் வளர்ச்சிக்கு அரசு தரும் ஆதரவும் பத்திரிகைகளில் அமைச்சர்களும்,

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1992 பிப்ரவரி 4

அதிகாரிகளும் தரும் செய்திகளாகவும், அறிக்கைகளாகவும் இருக்கிறதே தவிர முழுமையான செயல்வடிவம் பெறவில்லை. உதாரணமாக சிறு தொழில் நிறுவனங்களுக்கு அத்தொழில் ஆரம்பித்த மூன்றாண்டுகளுக்கு அவர்கள் உபயோகிக்கின்ற மின்சாரத்திற்கு அரசு மானியம் தருகிறது என்று நாம் அறிவித்திருக்கிறோம். ஆனால் எங்கள் மாவட்டத்தில் 1990-க்குப் பிறகு அம்மானியம் இதுவரை வழங்கப்படவில்லை. எப்போது கேட்டாலும் மாவட்டத் தொழில் மையத்தில் பணம் வருகிறது, வருகிறது என்றுதான் சொல்லுகிறார்கள். இந்த அரசு உடனே இதை கவனித்து ஆவன செய்ய வேண்டும். தவிர சிறு தொழில் வளர்ச்சிக்காக நாங்கள் எல்லாம் செய்யத் தயாராக இருக்கிறோம் என்னும்போது கடந்த 1½ ஆண்டுகளாக ஏன் மானியம் வழங்கப்படவில்லை என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

முற்பகல் 11-50

பெருகி வரும் விலைவாசி ஏற்றத்தைக் குறைத்து, ஏழை எளியவர்கள் நலம் காண மேற்கொள்ளும் முயற்சிகள் 2 வழிகளிலே மட்டுமே முடியும். ஒன்று, அரசின் வருவாயைப் பெருக்குதல், மற்றொன்று, அரசின் செலவைக் கட்டுப்படுத்துதல். அரசின் வரவைக் கூட்ட வேண்டுமென்பதற்காக அத்தியாவசியப் பொருள்களான அரிசி, பால், மின்சாரம், போக்குவரத்துக் கட்டணம் ஆகியவற்றின் விலைகளைக் கூட்டுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இந்த அரசினுடைய மிகப் பெரிய நிதி ஆதாரம் வணிக வரி. இவ்வாண்டு 2,500 கோடி ரூபாய் வரி திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனக்குக் கிடைத்த தகவல்கள், இதுபோல் இன்னொரு 2,500 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு மூலம் இழக்கப்படுகிறது என்று அறிகிறேன். இந்த ரூபாய் 2,500 கோடி இழப்பிற்காக 10 சதவீதம், ரூபாய் 250 கோடி வியாபாரிகளால் லஞ்சமாக அதிகாரிகளுக்கு வழங்கப்படுகிறது என்று நான் அறிகிறேன். எனவே எவ்விதமான கூடுதல் வரியும் விதிக்காமல், எந்த அத்தியாவசியப் பொருட்களின் விலைகளையும் உயர்த்தாமல் தற்போதுள்ள வணிக வரி விதிப்பை முறையாக அமல் செய்தால் 100 விழுக்காடு வரி ஏய்ப்பை தடுக்க முடியாவிட்டாலும் 50 சதவிகித வரி ஏய்ப்பைத் தடுக்க [illegible] 1,250 கோடி ரூபாய் கிடைக்கும் [illegible] தங்க வியாபாரிகள் [illegible] வரியை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைத்தீர்கள். தங்க நகைகளை சாமானியர்கள் அணிவதில்லை



1992 பிப்ரவரி 4] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

தங்க வியாபாரிகள் கடந்த ஆண்டு வரியைக் குறைத்தபோது, அரசைச் சந்தித்து வரிகளை இவ்வாறு குறைத்தால் வரி அதிகமாகக் கிடைக்கும் என்று கூறியதாக நான் அறிகிறேன். அவ்வாறு அதிக வரி கிடைத்ததா என்பதைப் பற்றி வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் பதில் கூறக் கடமைப் பட்டிருக்கிறார். எவ்வளவு வரி கிடைத்தது என அறிய ஆசைப்படுகிறேன். ஆனால் நான் அறிந்தவரையில் கடந்த ஆண்டில் கிடைத்த வரியில் பாதி கூட இந்த ஆண்டு கிடைக்கவில்லை என்று நான் அறிகிறேன். அதுமாதிரி தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் பிரிவு 17-ன்கீழ், விதிவிலக்கு நிறைய வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும். பிரிவு 17-ன்கீழ் வரும் சிறப்பு அனுமதியை நினைத்தோருக்கெல்லாம் வழங்கினால் அரசின் வருவாய் மிகவும் பாதிக்கப்படும் என்பதை நாம் உணரவேண்டும்.

கடந்த ஆண்டு ஆளுநர் உரையின்போதும், நிதிநிலை அறிக்கையின்போதும், வருவாய் ஆதாரத்தைப் பெருக்க பல திட்டங்களை அறிவிக்கப்போவதாகக் கூறினீர்கள். நஷ்டத்தில் இயங்கும் பொதுத்துறையைச் சீரமைப்பது, அரசின் தயவில் வளரும் வெள்ளை யானைகள் அரசின் கொட்டடிகளிலிருந்து அகற்றப்படுவது, இன்னும் அரசின் வருமானங்கள் வழிந்தோடுகின்ற ஓட்டைகள் எங்கேல்லாம் உள்ளன என்று தேடிப்பார்த்து, அவைகளைச் சீராக்கினாலேயே அதிகமான வரிவிதிப்பு தேவையிராது என்ற சூழ்நிலையை உணர்ந்து கொண்டு இந்த முறைகளை நீங்கள் மீண்டும் முயற்சி செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தை முறைப்படுத்துவதும், அதிலே களவு மற்றும் பொருட்களைத் தவறாகப் பயன்படுத்துதல் முதலியன இல்லாமல் பார்த்துக் கொள்வதும், வேஸ்டேஜ் இல்லாமல் பார்த்துக்கொள்வதும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் கடமை. அதற்காக அவர்கள் என்ன திட்டங்கள் வைத்திருக்கிறார் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிக்கவேண்டும்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் இப்போதே அறிவிக்கவேண்டுமென்று உறுப்பினர் கேட்கவில்லை. உறுப்பினர் தொடர்ந்து பேசவேண்டும்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்**: வரவிருக்கும் கொடிய கால கட்டங்களில் இருந்து, அவற்றின் தாக்குதலில் இருந்து ஏழை எளிய மக்களைப் பாதுகாக்க, பாதுகாப்பு வலையினைப் பின்னிட—சேப்டி நெட்—அரசு முன்வர வேண்டும். அவ்வலையினைப் பின்னிட தகுந்த தருணம் இதுதான். இதைச் சரியாகச் செய்யாவிட்டால் தமிழக மக்கள் நம் இரண்டு இயக்கங்களையும் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள் என்ற எச்சரிக்கையை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாடு புதிய பொருளாதாரப் பார்வையை நோக்கி திரும்பி நிற்கிறது. வணிக விதிமுறைகளைத் தளர்த்துதல், தொழில் உரிம முறையை அடியோடு எடுத்துவிடுதல் (லைசென்சிங் பாலிசி) மற்றும் ஓப்பன் எக்கானமி—அதாவது திறந்த வெளிச் சந்தை என்ற புதிய பொருளாதாரச் சிந்தனையின் காற்று, தமிழகத்தில் வேகமாக வீசவேண்டும். இந்த நாடு செய்த தவத்தின் பலன் ஒரு யுக புருஷர் ஒரு யுகப் புரட்சிக்கு தலைமையேற்று இருக்கிறார். மாண்புமிகு பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் அகில உலக அரசியலில் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக விளங்கி வருகிறார். நேற்றையதினம் தொலைக்காட்சியைப் பார்த்தவர்கள் தெரிந்து கொண்டிருக்கக்கூடும். The right Prime Minister at the right time என்று வர்ணிக்கக்கூடிய அளவுக்கு உலகத்தின் பொருளாதார வல்லுனர்களின் கவனத்தை ஈர்ப்பதில் வல்லவரான பிரதமர் இந்த நாட்டுக்கு தலைமையேற்றிருக்கிறார். இந்தப் பிரதமருக்காக எங்களைவிட நீங்கள்தான் அதிக மகிழ்ச்சியடையவேண்டும். ஏனென்றால் he is the first Dravidan Prime Minister. திராவிட முதலமைச்சரை உருவாக்கவேண்டுமென்றுதான் சொன்னீர்கள். நாங்கள் அதை டெவலப் செய்து திராவிட பிரதமரை உருவாக்கியிருக்கிறோம். We have developed a Dravidan Prime Minister. (மேசையைத் தட்டும் ஒலி) அதில் உங்களுக்குத்தான் அதிகப் பெருமை. அந்த திராவிட பிரதமரை ஆதரித்து, திராவிட இனத்திற்கு, திராவிட நிலத்திற்கு வாழ்வும் வளமும் ஏற்படுத்த வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை நண்பர்களே, நான் ஒன்று சொல்லவேண்டும். எப்போதெல்லாம் காங்கிரஸ் வாழ்ந்ததோ அப்போதெல்லாம் நல்ல சக்திகள் தமிழகத்தில் வாழ்ந்திருக்கின்றன. எப்போதெல்லாம்



காங்கிரஸ் வீழ்ந்ததோ அப்போதெல்லாம் தேச விரோத சக்திகள் இங்கே ஆட்சி செய்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் இயக்கமும் காங்கிரஸ் தலைமையும் பலமாக இருக்கிற வரை, தமிழ்நாட்டிலே நல்ல சக்திகளுக்கு பாதுகாப்பு உண்டு. காங்கிரஸ் கட்சி பலவீனப்படுமானால், காங்கிரஸ் தலைமை பலவீனப்படுமானால், இங்கே இருக்கிற நல்ல சக்திகளுக்கு பாதுகாப்பும் இல்லை, பயனும் இல்லை என்பதை உணர்ந்து இந்த நீண்ட நெடிய பொருளாதாரப் பாதையிலே நாம் இருவரும் இணைந்த தண்டவாளங்களாகக் கை கோர்த்துச் செல்வோம் வாருங்கள், வாருங்கள் என்று அழைத்து விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி**: துணைத் தலைவர் அவர்களே, எப்போதெல்லாம் தமிழகத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டு இருக்கிறதோ அப்போதெல்லாம் மத்தியிலும் காங்கிரஸ் ஆண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. தேவராஜ்

***திரு. அ. தேவராஜ்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் அமுத கலசத்திலிருந்து சில இனிமைத் துளிகளை எடுத்துச் சுவைக்கும் வாய்ப்பை எனக்கு அளித்தமைக்கு, தங்களுக்கும் நம் ஈடு இணையற்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியார் அவர்களுக்கும் என் பணிவன்பான நன்றியையும் வணக்கத்தையும் படைக்கின்றேன்.

இடர்ப்பாடுகள் பல வானத்தின் கழுகுகள் என வட்டமிட்ட சூழ்நிலையில், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றார்கள், தமிழகத்தில். இலங்கை போன்ற வெளிநாட்டுப் போராளிகள் பலரும், கொடிய இதயம் படைத்த தீவிரவாதிகள் பலரும் வஞ்சக மாகப் புகுந்து, அமைதிப் பூங்காவாக, இன்பத்தின் நிலைக்களனாக, அன்பின் மாளிகையாக, புகழுடன் விளங்கிய நம்

தமிழகத்தை, இனிய சோலை வனத்தைப் பாலைவனமாக்கி மக்களிடையே பீதியை, கலவரத்தை, பயங்கரத்தை தங்கள் ஆயுதக் கலாச்சாரத்தால் உண்டாக்கி அச்சமூட்டி வந்தார்கள்.

முற்பகல் 11-55.

மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் பொறுப்பேற்றவுடன் துணிவு மிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு அவர்தம் கொட்டத்தை அடக்கிய ஆற்றலை சான்றோரும், ஆன்றோரும் இன்றும் பாராட்டுகிறார்கள்.

அகதிகள் வேடத்தில் போந்து, மக்களுக்குத் தீங்கு பயக்கும் துப்பாக்கிகளை, வெடி குண்டுகளை, வெடி மருந்துகளை இன்னும் பல்வேறு போர்க் கருவிகளைப் பல்வேறு இடங்களில் புதைத்து வைத்து தமிழக மக்களின் எதிர்காலத்தை இருள் மிக்கதாக ஆக்குவதற்கு தீட்டப்பட்ட சதிகள் அனைத்தும் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி பொறுப்பேற்றவுடன் முறியடிக்கப்பட்டன.

தீயவரை நம் காவல் துறையினர் திறம்படப் பிடித்து, உரிய தண்டனை வழங்கினர். வழங்கியும் வருகின்றனர். நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை என்பார் ஔவையார். நல்லோராக ஏழைகளின் இதயத்தில் வீற்றிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றக் காரணத்தினால், இயற்கை அன்னை இன்முகம் காட்டி, அமுதமென மழை பொழிந்து மக்கள் உள்ளத்திலே பால் வார்த்தார். வானத்தே நோக்கி வாடிக் கிடந்த வயல்கள் எல்லாம் பசுமைப் புத்தாடை பூண்டு பொன்னிறக் கதிர்கள் மூலம் அமோக விளைச்சல் அளித்து, நம்மை எல்லாம் அகமகிழச் செய்தன, செய்தும் வருகின்றன.

கல் நெஞ்சினர், கருநாடகத்தைச் சேர்ந்தவர்கள் 'காவிரி அன்னை'யை தடுத்தி நிறுத்தியும் அவள் கேளாமல் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றில் இமயமென உயர்ந்து நின்று தமிழக மக்கள்பால் கருணைகொண்டு ஓடிவந்து பொன்விளைக்கும் பூமியாக தமிழக நிலத்தை மாற்றி உணவிலே நாம் தன்னிகர் பெற்று வாழ, வசதிகள் பலவற்றை அமைத்துவிட்டாள். அன்மைக் கருநாடகத்திலே வெறி உணர்ச்சித் தாண்டவமாடிய போதும்



பண்பாடு மிக்க தமிழ் மக்கள் அமைதி காத்து நம் நாட்டு வரலாற்றிலே ஓர் புகழ்மிக்க பொன்னேட்டைச் சேர்த்தனர். கருநாடக மக்கள் வெறி கொண்டு தமிழ் மக்களை துரத்தி அடித்த போதும் அங்கிருந்து வந்த தமிழ் மக்கள் மீது தாயன்பு கொண்டு அவர்களுக்கு ஆதரவு காட்டினார் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். "வாய்மையே வெல்லும்" என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

பதவி ஏற்றவுடனேயே நம் முதல்வர் அன்னை டாக்டர் புரட்சித் தலைவியார் மலிவு விலை சாராயக் கடைகளை ஒழித்துவிட்டு ஒரு மகத்தான சாதனையைப் புரிந்தார்கள். குடிவெறியால் கோர நர்த்தனத்தால் சிக்கிய குடும்பங்கள் பல இன்பம் பூக்கும் இனிய மலர்ச் சோலைகளாக மாறின. இதனைப் பயன்படுத்தி, கள்ளச் சாராயத்தால் பாமர மக்களை வயப்படுத்தி கெடுக்க முனைந்த கொடியவர்தம் கொட்டம் அடக்கப்பட்டது. போதை மருந்துகளுக்கு அடிமைகளாகி செய்வது அறியாமல் திகைத்தபடி, என்ன செய்கிறோம், எங்கே போகிறோம் என்று தெரியாமல் மயங்கிக் கிடந்த இளைஞர்களை—மாணவ மணிகளை திருத்தி நல்வழியில் அவர்களை நடக்கச் செய்ய, மக்கள் தொடர்புச் சாதனங்கள் வாயிலாகப் பல்வேறு நடவடிக்கைகள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் எடுக்கப்பட்டதை நல்லோர் வரவேற்கின்றனர்.

நம்முடைய சக உறுப்பினர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே குறிப்பிட்டதை நான் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். அவர்கள் பேசுகின்றபோது, அரிசி விலையைக் கூட்டினீர்களோ அல்லது சாராயக் கடைகளைத் திறந்து வைத்தீர்களோ அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை என்று சொன்னார்கள். அவரை நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் சார்ந்துள்ள காங்கிரஸ் இயக்கத்தையும் நான் கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய கொள்கையைத் தெளிவாகச் சொல்லுங்கள். அரிசி விலையை ஏற்ற வேண்டுமா அல்லது மலிவு விலை மதுக் கடைகளை திறக்க வேண்டுமா என்பதைப்பற்றி தெள்ளத் தெளிவாகச் சொல்லுங்கள். காரணம், நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த போது, சட்டசபையிலேயே தெரிவித்திருக்கிறார்கள். எத்தனை கோடி நஷ்டங்கள் ஏற்பட்டாலும் நாங்கள் மதுக்கடைகளைத் திறக்கமாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறை

யிலேதான் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் வருமானத்தை இழந்தாலும் பரவாயில்லை, நாங்கள் மதுக் கடைகளைத் திறக்க மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. டேனியல்ராஜ்.

**திரு. எஸ். டேனியல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில், தமிழகத்தைப் பொறுத்த வரையில் முழு மதுவிலக்கை அமுல்படுத்துவதுதான் எங்களுடைய கொள்கை. இந்தக் கொள்கையிலிருந்து எந்தக் காலத்திலேயும் தமிழக காங்கிரஸ் மாறாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் அல்போன்ஸ் அவர்கள் உரையாற்றும் நேரத்தில் மதுவிலக்கை நீங்கள் அமல்படுத்தினாலும் சரி, அரிசி விலையை உயர்த்தினாலும் சரி, அது எங்களுக்குத் தேவை என்று பேசியிருக்கிறார். இது காங்கிரஸ் கட்சியின் கருத்தா அல்லது உறுப்பினருடைய தனிப்பட்டக் கருத்தா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

நண்பகல் 12.00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் திரு. எஸ். டேனியல்ராஜ்.

**திரு. எஸ். டேனியல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தமட்டில் எந்தக் காலத்திலேயும் கட்சியின் எந்தத் தலைவரும் இதுவரையிலேயும் 'முழு மது விலக்குத்தான் தமிழகத்திற்குத் தேவை என்பதைத்தான்' வலியுறுத்தி பேசி இருக்கின்றோமே தவிர, ஏதோ பேசுகின்ற நேரத்தில் [illegible]



நடையிலே ஏதாவது கூறி இருந்தால், கூறி இருக்கலாமே தவிர, அதை நீங்கள் முழுமையாக எங்களுடைய கருத்தாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** ஒரு தன்னிலை விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மதுவிலக்குக் கொள்கையினை பூரண மதுவிலக்கு ஆக்க வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறேன். நாட்டுச் சாராயம் தடை மட்டும் மதுவிலக்கு அல்ல. All alcoholic drinks whether it is IMFL or country-made liquor, I asked for total probihion. அதுதான் எங்கள் கட்சியினுடைய கொள்கை; அதுதான் என்னுடைய கொள்கை. அடுத்து, அரிசி விலையைக் கூட்ட வேண்டுமென்று நான் கேட்கவில்லை. அரிசி விலையை ஆந்திர அரசு கூட்டியதால் அதற்கு வருமானம் கிடைத்தது என்று சொன்னேன். அதைவிட, நான் பிறகு சொன்னேன், எப்படி அந்த வரி விதிப்பை நீங்கள் தேட முடியும் என்று. 1,250 கோடி ரூபாய்க்கு நான் வழியும் சொல்லி இருக்கிறேன். ஆகவே அரிசி விலையைக் கூட்டியதற்கு எங்கள் கட்சி உடன்பாடு அல்ல. ஏற்றிய விலையைக் குறைக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டு இருக்கிறேன். அதைப்போல, I requested total prohibition: இதுதான் என்னுடைய நிலை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. ச. காந்திராஜன்:** I want a clarification

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வரதராஜன். (குறுக்கீடு). திரு. வரதராஜன் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. அ. தேவராஜ்:** மாண்புமிகு திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கேட்டார்கள். தமிழக காங்கிரஸ் . . .

(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்; விளக்கம் சொல்லியாகிவிட்டது. நீங்கள் தயவுசெய்து அமருங்கள். உறுப்பினர் திரு. வரதராஜன் தொடர்ந்து பேசவும்.

**திரு. அ. தேவராஜ்:** துணைத் தலைவர் அவர்கள் என்னுடைய பெயரை மாற்றி மாற்றி சொல்கிறார்கள். என்ன என்றே எனக்கும் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இடையே குறுக்கீடுகள் அதிகம் இருப்பதால் குழப்பங்கள் வருகின்றன. மாண்புமிகு தேவராஜ் அவர்கள் தொடர்ந்து பேசவும்.

**திரு. அ. தேவராஜ்:** நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தன்னுடைய நிலையைத் திரும்பச் சொல்லியதற்கு மிக்க நன்றி. ஆனால் அதே நேரத்திலே இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 400 கோடி ரூபாயை கர்நாடக அரசு உயர்த்தியதால்தான், அவர்களுக்கு திட்ட ஒதுக்கீடு அதிகமாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று கூறினார்கள். கர்நாடக அரசு வருவாயை உயர்த்தியது எந்தக் காரணம் என்றால், சாராயக் கடைகளின் வருமானத்தின் மூலம்தான் என்று சொன்னார்கள். அப்படியென்றால் காந்தியக் கொள்கையை குழி தோண்டிப் புதைத்து விடுகிறீர்களா என்பதைத் தெரியப்படுத்த வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கின்றேன். ஆனால் அப்படிப்பட்ட நிலையை நாம் செய்ய வில்லை. அப்படிப்பட்ட வருமானம் நமக்குத் தேவையில்லை என்றுதான்—புரட்சித் தலைவி அவர்கள் இங்கே வருமானம் குறைந்தாலும் பரவாயில்லை, அப்படிப்பட்ட கடைகளை நாங்கள் திறக்கமாட்டோம் என்கிற முறையிலே தெரிவித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அமோக விளைச்சல் இருந்தபோதிலும், விலைவாசி கட்டுக்கு அடங்காமல்போய், அதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கைகள் பல மேற்கொண்டு, அதிலே ஓரளவிற்கு வெற்றியையும் பெற்று இருக்கின்றோம். பலகாலமாக பாமாயில் கிடைக்காமல் பரிதவித்துக்கொண்டிருந்த பாமர மக்கள் பரவசம் அடையும் வண்ணம் அதனை வரவழைத்து வழங்கி, நமக்குக் கிடைக்காததை கிடைக்கச் செய்தவர்கள் புரட்சித் தலைவி அவர்கள். நுகர் பொருள் விற்பனைக் கூடங்களில், நியாய விலைக் கடைகளில் சாதாரண அரிசி கிலோ 2 ரூபாய் விலையானாலும், சன்ன, [illegible]





சன்ன ரக அரிசி $2\frac{1}{2}$ ரூபாய் விலையானாலும் அதை இந்த அரசு கொடுத்து வந்தது. ஆனால், இப்போது மத்திய அரசு பொருள்களின் விலையை மிகக் கடுமையாக ஏற்றி, நம்முடைய நிதி நிலைக்கு இடையூறு ஏற்படும் வண்ணம் செய்ததால், கடுமையான நிதி நெருக்கடியைக் கருத்தில் கொள்ளாமல் சன்ன ரக அரிசியை மட்டும் வேறு வழியின்றி வருத்தத்துடன் அரசு உயர்த்தி உள்ளது. இப்படி உயர்த்திய நிலையிலும், இதை மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது நம்முடைய மாநிலத்திலும் விலை மிகக் குறைவானதுதான். இன்றியமையாப் பண்டங்களின் விலை மிக உயராமல் பாதுகாத்து, ஏழை எளிய மக்களின் நலன்களையே குறிக்கோளாகக் கொண்டு இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

வர்த்தகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, அவர்கள் செலுத்தி வந்த லெவி நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. செய்யாறு தொகுதியிலே தேர்தல் நேரத்திலே புரட்சித் தலைவி அவர்கள் பேசும்போது கூட, அரசுக்கும் வியாபாரிகளுக்கும் இடையூறு ஏற்படாத வண்ணம், வருமானம் குறையாத வண்ணம் அந்த லெவி முறையை மாற்றி அமைக்க எங்களுடைய அரசு பாடுபடும் என்று தெரிவித்தார்கள். அவர்கள் தேர்தல் காலத்தில் சொன்ன வாக்குறுதியை இன்று நிறைவேற்றுகின்ற வகையிலே, வர்த்தகர்கள் பெருமகிழ்ச்சி அடைகின்ற வகையிலே 'லெவி' நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதனால் அரிசியின் வெளிச் சந்தை விலை இப்போது ஏறக்குறைய மூட்டை ஒன்றுக்கு 70 ரூபாய்க்கு மேல் குறைந்து இருக்கிறது. பெருவாரியான வணிகர்கள் அதற்கு ஆதரவு அளித்து வருகிறார்கள். இன்னும் ஒரு மாதம் கழித்து, அந்த விலை இன்னும் அதிகமாகக் குறையும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றித் தந்தமைக்காக, அரிசி வியாபாரிகள் அரிசி ஆலை உரிமையாளர்கள் ஆகியோர் சார்பிலே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இதனால் பொது விநியோகத்தைச் செயல்படுத்தும் கூட்டுறவு சங்கங்களும், நுகர்பொருள் வாணிபக் கழகங்களும் இன்றியமையா பொருட்களை நன்முறையில் வழங்கும்.

வேளாண்மைத் தொழிலுடன் கடல் வளர்ச்சித் திட்டங்கள் கடல் மீன் திட்டங்கள் வளர்ச்சிபெற தீவிர முயற்சியை மேற்கொண்டு உள்ளோம்.

அரசின் புதிய தொழிற்கொள்கையாலும், ஊக்க உதவித் தொகை வழங்குவதினாலும் பலர் பயன்பெற்று வருகின்றனர். வெளிநாட்டிலும் நம் நாட்டிலும் உள்ள தொழில் முனைவர்கள் நம் நாட்டில் தொழில் தொடங்க, நம்முடைய புதிய கொள்கையால் கவரப்பட்டுள்ளனர்.

பிற்பகல் 12-05

மின்சாரப் பற்றாக்குறை இல்லா வண்ணம் இன்று நாம் வெற்றி நடை போடுகின்றோம். என்றென்றைக்கும் இந்தப் பற்றாக்குறை நேரா வண்ணம் இருக்க நம்முடைய அரசு பல்வேறு அனல், புனல் மின் திட்டங்களை இந்த எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க செயல்பட்டு வருகிறது. எண்ணூர் துறைமுகத் திட்டம், மணலி தேசிய அரோமெடிக் திட்டம், தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழிப்பாதைச் சாலைகளாக மாற்றும் திட்டம், கிழக்குக் கடற்கரை தேசிய நெடுஞ்சாலையை ஏற்படுத்தும் திட்டம் முதலியன போன்ற நீண்டகால நிலுவைத் திட்டங்கள் பலவற்றை மத்திய அரசின் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முயற்சி மேற்கொண்டுள்ளது சாலச் சிறந்ததாகும். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு, மூன்று நிமிடங்கள் கொடுத்தால் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் தரப்படுகிறது.

**திரு. அ. தேவராஜ்:** இரண்டு நிமிடங்களாகக் கொடுத்து விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஒரு உறுப்பினர் உரையாற்றும்போது அதற்குப் பதில் சொல்வதற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இருக்கிறார்கள். அந்தந்த கட்சியைச் சேர்ந்த பொறுப்பில் இருப்பவர்கள் இருக்கிறார்கள். அதை விட்டு உறுப்பினர்கள் தொடர்ந்து பேசும்போது நேருக்கு நேராக சூடான பதில் சொல்ல வேண்டுமென்ற உணர்வோடு இங்கே



வாய்ப்புகள் கோர வேண்டாம் என்றும், அது குழப்பத்தை ஏற்படுத்துகிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் தொடர்ந்து பேசி விரைவில் முடிக்கலாம்.

**திரு. அ. தேவராஜ்:** துணைத் தலைவர் அவர்களே, போதிய வகுப்பறைகள் இல்லாத ஆரம்ப உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஈகை உள்ளம் கொண்ட நல்லோர் கட்டடங்களைக் கட்டித்தர அவர்களுக்கு இந்த அரசு ஊக்கம் அளிக்கும் வகையில் அவர்களின் பெயர்களும் அங்கே பொறிக்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சொன்னார்கள். இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். ஏனென்றால் என்னுடைய செய்யாறு தொகுதியைப் பொறுத்தவரையில் என்னுடைய நண்பராக இருக்கிற, அமெரிக்காவில் டாக்டராக இருக்கிற ஒருவரை ஆறு வகுப்புகள் கட்ட வேண்டுமென்ற முறையில் 10 இலட்சம் ரூபாய் நன்கொடை அளிக்கவேண்டுமென்று கேட்டேன். அவரும் 10 இலட்சம் ரூபாய் அளித்திருக்கிறார்கள். அந்தக் கட்டடங்கள் 99 நாளில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அவர்கள் இப்போது இதுபோன்று பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 10 இலட்சமும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு வைர விழா கட்டிடம் கட்ட 10 இலட்சமும் ஆக 30 லட்சம் ரூபாய் நன்கொடை அளிப்பதற்கு செய்யாறில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் என்ற புதிய திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டு, ஆறு மாத காலத்தில் 10 ஆயிரம் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தி, கிராமங்களில் வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்கு இலவசமாக சிறந்த மருத்துவ வசதிகள் அளித்து, இந்த அரசு பணியாற்றி வருகிறது. இதுபோன்ற திட்டம் எந்த நாட்டிலும் இல்லையென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவி அவர்கள் முதன்முதலாக செய்யாற்றில்தான் பெரியார் சிலையைத் திறந்து வைத்திருக்கிறார்கள். அதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது [illegible] செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையையும் தன் திருக்கரங்களால் திறந்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு தொகுதியில் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டட வசதி இல்லை. புரட்சித்தலைவி அவர்கள் இதற்கு நிதிஒதுக்கீடு செய்து வரும் ஆண்டுகளில் கட்டித்தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்குள்ள கல்லூரிக்கு இந்த ஆண்டு அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரிக்கு வெள்ளி விழா ஆண்டாக இருப்பதால் பி.எஸ்ஸி. கம்ப்யூட்டர் சயன்ஸ். எம்.எஸ்ஸி. இயற்பியல், வேதியல், எம்.ஏ. ஆங்கில இலக்கணம், எம்.ஏ. பொருளாதாரம் ஆகிய பிரிவுகளை வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மக்களின் அடிப்படைத் தேவைகளை வழங்க நம்முடைய அரசு பொறுப்பேற்றுள்ளது. இவ்வாறு எண்ணற்ற இனிய திட்டங்களை நிறைவேற்றி, ஏழையெளிய மக்களை வாழ்க்கைச் சோலையில் இன்ப உலா வரும் அன்றில் பறவைகளாக உயர்த்த இவ்வரசு மேற்கொண்டுள்ள செயல் திட்டங்களை எல்லாம் நன்கு விளக்கி உரையாற்றிய நம் மேதகு ஆளுநர் அவர்களுக்கும், தமிழக அரசின் முடிமணி விளக்காய் ஒளிரும் முதல்வர், அன்னை புரட்சித் தலைவியார் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ப. சரஸ்வதி.

*திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தமிழகத்தில் தரமான ஆட்சியை சிறப்பாக நடத்திவரும் தன்னிகரில்லாத தலைவி, எங்களுடைய [illegible]தெய்வம் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில் 1992-ஆம் ஆண்டினுடைய மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியை காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

புரட்சித்தலைவி அவர்கள் அன்று எங்கே அரசியலில் [illegible] போகிறார் என்று பேசியவர்கள் எல்லாம் இன்று தலைகுனிந்து காத்திருக்கக்கூடிய காட்சியை இன்று தமிழகமே [illegible] கவனித்துக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், கூடயிருந்து [illegible] பறிப்பவர்கள் ஒரு கூட்டம், எந்த இடத்தில் [illegible] கொண்டால் ஆட்சிக் கட்டிலில் நாமும் அங்கம் வகிக்கலாம் [illegible] ஒரு கூட்டம்! இப்படிப்பட்ட கூட்டங்களையெல்லாம் [illegible],





சரித்திர நாயகியாக தன்னுடைய நெஞ்சுரத்தால் தமிழகத்[illegible] ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்திருக்கக்கூடிய புரட்சித்தலைவி அவர்கள் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், அவர்களுடைய சாதனையை எண்ணிப்பார்க்கும் வகையில் தமிழகத்தினுடைய மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-10.

எங்கே தன்னை அழித்து விடுவார்களோ என்று அஞ்சி சதி. சபாரத்தினத்தை கொலை செய்த கொலைகாரன் என்று சொல்லியவர்கள் எல்லாம் ஆட்சிக்கு வந்தவுடனே தன்னுடைய உயிருக்கு பயந்து அதே பிரபாகரனிடத்தில் அடிமைப்பட்டு கிடந்தவர்கள் தான் முந்தைய ஆட்சிக்காரர்கள். இருப்பது ஓர் உயிர். இன்று போனால் என்ன, நாளை போனால் என்ன என்று வீரவசனம் பேசினார்களேயொழிய அவற்றை செயலில் காட்டவில்லை. புரட்சித்தலைவி அவர்கள் பெண்ணாக இருந்தாலும் [illegible] கலாச்சாரத்தை இந்த தமிழகத்தை விட்டு அடியோடு ஒழித்துவிட தன்னுடைய உயிரை கொலைப்பட்டியலோடு இணைக்கும் அளவுக்கு சாதனைப்படைத்து இன்று தமிழகத்தை காப்பாற்றிக் கொண்டிருக்கக்கூடிய உன்னத தலைவி என்பது [illegible] விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. 20 ஆண்டு [illegible] இடப்பிலே கிடந்தாலும் உயிரோடு பொலிவுடன் [illegible] [illegible] வழக்கை இரவோடு இரவாக சதித் திட்டம் [illegible] வழக்கை வாபஸ் பெற்று, இந்தத் தமிழகத்தினுடைய ஜீவ [illegible] எறிந்துவிட்டு, இன்று போராட்டம் நடத்து [illegible] விலை உயர்வு என்பதைப் பற்றி, [illegible] புரட்சித் தலைவி அவர்கள் எப்படி [illegible] ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்கள் [illegible] தமிழகத்தில் இருக்கக் கூடிய தாய்மார்கள் அத்தனை பேர்களும் நன்றாக அறிவார்கள்.

[illegible] இருவினைக்கு, உச்சநீதிமன்றம் உவந்து அளித்த [illegible] மத்திய அரசு இதழில் வெளியிட்டு. வெற்றி கண்ட [illegible] செயல்படுத்தவேண்டும் என்று மத்திய [illegible] வெற்றியைச் செயல்படுத்தவேண்டும் என்று மத்திய [illegible] போராடிக் கொண்டிருக்கிறார்கள். உச்ச [illegible] எதையுமே மதிக்காத [illegible] நடுவர்மன்றத் தீர்ப்பை, எதையுமே மதிக்காத [illegible] அரசின் மீது மத்திய அரசு என்ன நடவடிக்கை [illegible] என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கர்நாடக [illegible]

ஆட்சிக்குச் சொந்தக்காரர்கள் யார்? அவர்கள் மீது மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என்று நல்ல தமிழ் அறிஞர் நக்கீரன் கூற்றைச் சொல்ல மத்திய அரசுக்கு எப்படிப் பொருத்தமாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். வன்முறைச் செயல்களால் தமிழகத்தை உலுக்கிவிட்ட நிலையில் கூட அமைதியாக அகிம்சா வழியில் செயல்பட்ட எங்களுடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பண்பினையும் பாங்கினையும் இந்த உலகமே பாராட்டுகிறது.

அரிசி, பருப்பு விலையேற்றத்தால், தமிழகத்திலுடைய ஆட்சிக் கட்டிலிலிருந்து எங்கேயோ ஓடி மறைந்த ஒரு சில கட்சியாகத் தான் அன்று ஒரு காலத்தில் காங்கிரஸ் இயக்கத்தைக் கூறினார்கள் மக்கள். இன்று தமிழகத்தில், தன்னிகரில்லாச் சக்தி படைத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு ஆட்சிப் பீடத்திலே இருக்கிறது. அந்த ஆட்சிக்கு இருக்கிற நிதிநிலை நெருக்கடியான நேரத்திலே, அரிசி விலையை ஏற்றி, அந்த அரிசியினுடைய விலையைக் காரணமாக வைத்து, அதற்குப் பிறகு வரக்கூடிய காலக்கட்டத்திலே நம்முடைய இயக்கத்திற்கு பொலிவு பெறலாம் என்று மத்தியிலே இருக்கக்கூடியவர்கள் எண்ணுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. அரிசி விலையை உயர்த்தியிருக்கிறார்கள். மத்தியிலே இருக்கக்கூடிய அரசானது, மாநிலத்தில் ஏற்படக்கூடிய இழப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது அவர்களுடைய பொறுப்பு. பாலின் விலைக்கு நாங்களா பொறுப்பு என்று சில தலைவர்கள் வெளியிலே பேசியிருக்கிறார்கள், காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். நான் பணிவன்போடு காங்கிரஸ் இயக்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு ரூபாய் 75 பைசா வாடகை வாங்கிய லாரிகள் எல்லாம் இன்று 2½ ரூபாய் 3 ரூபாய் கேட்கிறார்கள். தமிழகத்திலே இருக்கக்கூடிய கிராமங்களிலே உருவாகக்கூடிய பால்களை எல்லாம் எடுத்து வந்து, டெப்போவில் சேர்ப்பதற்கு வாடகை கொடுப்பதற்கு இன்று ஏராளமான பணம் செலவாகிற காரணத்தால், பாலின் விலை உயர்கிறது என்பது கூட அந்தத் தலைவர்களுக்குத் தெரியவில்லை. கொடுக்க [illegible] என்று சொல்கிறார்கள். [illegible] கேட்டால் கட்டிலை விட்டு [illegible] எறியப்பட்டு, [illegible] தோன்றி, தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்



கக்கூடிய இயக்கம்தான் இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். அந்த இயக்கத்திற்குச் சொந்தக் காரர்களாக விளங்கக்கூடிய எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் எந்தக் கால கட்டத்திலும் கணக்கிலே நிச்சயமாக தவற மாட்டார்கள் என்பதை எங்களுடைய இயக்கத்தினுடைய சார்பாகவும், மாமன்றத்திலே உறுப்பினராக அங்கம் வகிக்க வாய்ப்பு அளித்த புரட்சித் தலைவி அவர்கள் சார்பாகவும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஏழை தொழிலாளி காலையிலிருந்து மாலை வரை உழைத்து சம்பாதித்த ஊதியத்தைச் சாராயக் கடையிலேயும், சாக்கனாங் கடையிலேயும் கொடுத்துவிட்டு வீட்டிற்கு திரும்பி வந்த அவல நிலையைப் போக்கும் தொலைநோக்குத் திட்டத்தைப் புரிந்து கொள்ளும் அரசியல்வாதிகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மக்கள் இருக்கிறார்கள். நாளை வரும் பலாப் பழத்தைவிட இன்று கிடைக்கும் களாக்காயே போதும் என்று அரசியல்வாதிகள் மக்களை திசை திருப்பப் பார்க்கிறார்கள். ஆனால் மக்கள் தெளிவாக உள்ளார்கள். புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் நாளை [illegible] என்று. எத்தனையோ சுமைகளைத் தாங்கி இருக்கக்கூடிய புரட்சித் தலைவி அவர்கள், நிச்சயமாக இந்த அரிசியின் விலையை மறு பரிசீலனை செய்து, தமிழகத்தினுடைய தாய்மார்களுக்காக ஆட்சிப் பொறுப்பிலே உட்கார்ந்த, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், நிச்சயமாகக் காப்பாற்றுவார்கள். போனால் போகட்டும், சாராயத்திற்குக் கொடுக்கக்கூடிய விலையைக் காட்டிலும் அரிசிக்கு 50 பைசா அதிகமாகக் கொடுத்தால், நாங்கள் குடிமுழுகிப்போக மாட்டோம் என்று இந்தத் தமிழகத்தினுடைய தாய்மார்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட துரோகக் கூட்டம் வெளியிலே உலவிக் கொண்டிருக்கிற காரணத்தால், இந்த அரசை யாராலும் அசைக்க முடியாது என்று உத்தரவாதத்தைக் கொடுத்து பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : திரு. எஸ். டேனியல் ராஜ்.

**திரு. எஸ். டேனியல்ராஜ்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கொடுத்த நிதியை

ஆட்சிக்குச் சொந்தக்காரர்கள் யார்? அவர்கள் மீது மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? நெற்றிக் கண்ணைக் திறப்பினும் குற்றம் குற்றமே என்று நல்ல தமிழ் அறிஞர் நக்கீரன் கூற்றைச் சொல்ல மத்திய அரசுக்கு எப்படிப் பொருத்தமாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். வன்முறைச் செயல்களால் தமிழகத்தை உலுக்கிவிட்ட நிலையில் கூட அமைதியாக அஹிம்சா வழியில் செயல்பட்ட எங்களுடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பண்பினையும் பாங்கினையும் இந்த உலகமே பாராட்டுகிறது.

அரிசி, பருப்பு விலையேற்றத்தால், தமிழகத்தினுடைய ஆட்சிக் கட்டிலிலிருந்து எங்கேயோ ஓடி மறைந்த ஒரு சில கட்சியாகத் தான் அன்று ஒரு காலத்தில் காங்கிரஸ் இயக்கத்தைக் கூறினார்கள் மக்கள். இன்று தமிழகத்தில், தன்னிகரில்லாச் சக்தி படைத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு ஆட்சிப் பீடத்திலே இருக்கிறது. அந்த ஆட்சிக்கு இருக்கிற நிதிநிலை நெருக்கடியான நேரத்திலே, அரிசி விலையை ஏற்றி, அந்த அரிசியினுடைய விலையைக் காரணமாக வைத்து, அதற்குப் பிறகு வரக்கூடிய காலக்கட்டத்திலே தம்முடைய இயக்கத்திற்கு பொலிவு பெறலாம் என்று மத்தியிலே இருக்கக்கூடியவர்கள் எண்ணுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. அரிசி விலையை உயர்த்தியிருக்கிறார்கள். மத்தியிலே இருக்கக்கூடிய அரசானது, மாநிலத்தில் ஏற்படக்கூடிய இழப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது அவர்களுடைய பொறுப்பு. பாலின் விலைக்கு நாங்களா பொறுப்பு என்று சில தலைவர்கள் வெளியிலே பேசியிருக்கிறார்கள், காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். நான் பண்ணின்போது காங்கிரஸ் இயக்கத்திற்குத் தெரிவித்துக் கொள் வது. ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு ரூபாய் 75 பைசா வாடகை வாங்கிய லாரிகள் எல்லாம் இன்று 2½ ரூபாய் 3 ரூபாய் கேட்கிறார்கள். தமிழகத்திலே இருக்கக்கூடிய குக்கிராமங்களிலே உருவாகக்கூடிய பால்களை எல்லாம் எடுத்து வந்து, டெப்போவில் சேர்ப்பதற்கு வாடகை கொடுப்பதற்கு இன்று ஏராளமான பணம் செலவாகிற காரணத்தால், பாலின் விலை உயர்கிறது என்பது கூட அந்தத் தலைவர்களுக்குத் தெரியவில்லை. கொடுக்க நினைக்கு கண்க்கு இல்லை என்று சொல்கிறார்கள். கணக்குக் கேட்டதால் கட்சியை விட்டு நீக்கி எறியப்பட்டு, அன்று ஒரு தனிக் கட்சி யாகத் தோன்றி, தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இன்று





இருக்கக்கூடிய இயக்கம்தான் இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். அந்த இயக்கத்திற்குச் சொந்தக் காரர்களாக விளங்கக்கூடிய எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் எந்தக் கால கட்டத்திலும் கணக்கிலே நிச்சயமாக தவற மாட்டார்கள் என்பதை எங்களுடைய இயக்கத்தினுடைய சார் பாகவும், மாமன்றத்திலே உறுப்பினராக அங்கம் வகிக்க வாய்ப்பு அளித்த புரட்சித் தலைவி அவர்கள் சார்பாகவும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஏழை தொழிலாளி காலையிலிருந்து மாலை வரை உழைத்து சம்பாதித்த ஊதியத்தைச் சாராயக் கடையிலேயும், சாக்கனாங் கடையிலேயும் கொடுத்துவிட்டு வீட்டிற்கு திரும்பி வந்த அவல நிலையைப் போக்கும் தொலைநோக்குத் திட்டத்தைப் புரிந்து கொள்ளும் அரசியல்வாதிகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மக்கள் இருக்கிறார்கள். நாளை வரும் பலாப் பழத்தைவிட இன்று கிடைக்கும் களாக்காயே போதும் என்று அரசியல்வாதிகள் மக்களை திசை திருப்பப் பார்க்கிறார்கள். ஆனால் மக்கள் தெளி வாக உள்ளார்கள். புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் நாளை வரும் பலாப்பழம் என்று. எத்தனையோ சுமைகளைத் தாங்கி யிருக்கக்கூடிய புரட்சித் தலைவி அவர்கள், நிச்சயமாக இந்த அரிசியின் விலையை மறு பரிசீலனை செய்து, தமிழகத்தினுடைய தாய்மார்களுக்காக ஆட்சிப் பொறுப்பிலே உட்கார்ந்த, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், நிச்சயமாகக் காப்பாற்று வார்கள். போனால் போகட்டும், சாராயத்திற்குக் கொடுக்கக்கூடிய விலையைக் காட்டிலும் அரிசிக்கு 50 பைசா அதிகமாகக் கொடுத் தால், நாங்கள் குடிமுழுகிப்போக மாட்டோம் என்று இந்தத் தமிழகத்தினுடைய தாய்மார்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட துரோகக் கூட்டம் வெளியிலே உலவிக் கொண்டிருக் கிற காரணத்தால், இந்த அரசை யாராலும் அசைக்க முடியாது என்று உத்தரவாதத்தைக் கொடுத்து பேச வாய்ப்பு கொடுத்த மைக்கு நன்றி சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். டேனியல் ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கொடுத்த நிதியை

முழுவதுமாகச் செலவழிக்கவில்லை என்று நாங்கள் சொல்லி றோமே தவிர, நாங்கள் கணக்குக் கேட்டதாக, அல்லது கணக்குக் 1992 பிப்ரவரி 4] [திரு. நா. சா. பழனிசாமி]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டுமே ஒரு வகையில் ஒன்றுதான் என்று உறுப்பினர் அவர்கள் சொல்லி னார்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-15

* மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசு ஒதுக்கியிருக்கும் நிதியை நிச்சயமாக மார்ச்சுக்குள் செலவழித்து விடுவோம் என்ற உறுதிமொழியை இந்த மாமன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நா. சா. பழனி சாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது இந்திய உழவர் உழைப்பாளிக் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை முன் வைக்க வாய்ப்பு அளித் தமைக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

'உறுபசியும் ஓவாப் பிணியுஞ் செறுபகையும்
சேராது இயல்வது நாடு'

என்றார் வள்ளுவப் பெருந்தகை. பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவை வழங்குவதிலும், பாமர மக்களுக்கு பொது வினியோக திட்டத்திலே மலிவு விலையில் அரிசி, மண்ணெண்ணெய், பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவதிலும் பசிப் பிணி மருத்துவராகவும், மருத்துவ வசதி இல்லாத குக்கிராமங் களில் கூட

'நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'

என்ற வாக்குக்கு ஒப்ப, மருத்துவ நிபுணர்களால் உடல் பரிசோதனை நடத்தப்பட்டு அவர்களுக்குச் சரியான மருந்து கொடுக்கப்பட்டு, சுகாதாரத்தைப் பேணுகின்ற புரட்சித் தலைவியின் மருத்துவ திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் உடல் பிணி மருத்துவராகவும், மது விலக்கை அமல்படுத்தும் போதெல்லாம் ஆறாய் ஓடுகின்ற கள்ளச் சாராயம் கட்டுப்படுத்தப்பட்டு, வேர் அறுக்கப்பட்டு, இன்று ஏழைகளின் இல்லத்தில் இன்பம் நிலவச் செய்ததன் மூலம், மன நல குடும்ப நல மருத்துவராகவும், உட்பகை, வெளிப்பகை இரண்டையும் ஒழித்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆக்கியதில் சரியான நாட்டு நல மருத்துவராகவும் விளங்கி, தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வள்ளுவரின் நாடு என்ற இலக்கணத்திற்கு ஒப்ப, தமிழகத்தை வழி நடத்தி வருவதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

‘தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு’

அந்த அளவிலே தமிழகத்தை நல்ல விளைச்சலில் முன்னணி மாநிலமாகவும், தொழில்துறையிலே முதன்மை மாநிலமாகவும், நல்லவர்கள் வாழ்கின்ற மாநிலமாகவும் ஆக்குவதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற நடவடிக்கைக்கு, முயற்சிக்கு நாங்கள் வரவேற்பு அளிக்கின்றோம்.

காவிரி தண்ணீரில் தமிழகத்தினுடைய உரிமையை நிலைநாட்டுவதிலும், காவிரி தண்ணீரை கண்ணிலேகூட பார்க்காத சாதாரணமான தமிழர்கள், கன்னட வெறியர்களால் தாக்கப்பட்டு, சொத்துக்கள் சூறையாடப்பட்டு, அகதிகளாக தமிழகம் வந்த போது அவர்களுக்கு ஆதரவளித்துக் காப்பதிலேயும், கன்னட வெறியர்களின் காட்டு தர்பாரைக் கண்டும், காணாத [illegible] மத்திய அரசை தட்டிக் கேட்பதிலும், திட்ட ஒதுக்கீட்டில் தமிழகத்திற்கு வஞ்சனையாக நடந்து கொள்ளும் மத்திய அரசின் திட்ட கமிஷனிடம் போராடி நிதி பெறுவதில் [illegible] காட்டுகின்ற உறுதியிலும், ஒரே நோக்கில் கூட்டாட்சித் [illegible] [illegible] செக்யூலரிஸத்தை பாதுகாப்பதிலும்,

காப்பதில் உறுதியாகவும், புரட்சித் தலைவி அவர்கள் வீராங்கனை யாக நிமிர்ந்து நிற்பதை இந்த நேரத்தில் தமிழகமே பாராட்டு கின்றது.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் பட்டி தொட்டிகளிலெல்லாம் இந்த ஆண்டு இறுதிக்குள் கிடைத்துவிடும் என்ற செய்தி நெஞ் சத்தைக் குளிர வைக்கிறது. பட்டா பாஸ் புத்தகம் விவசாயி களுக்கு வழங்கி நில உடைமை சரியாகக் காட்டப்பட்டு, வங்கிகளில் கடன் பெற எளிதாக்கப்படும் முறை வரவேற்கப்பட வேண்டிய திட்டம். கொண்டுவரப்படுகின்ற நிலப் பதிவேடு மேலாண்மைத் திட்டம் முன்பு நடந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டம் போல குழப்பத்தை ஏற்படுத்திவிடாமல் அரசு கண்காணிக்கவேண்டும். முன்பு நடந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டம், நல்ல நோக்கத் திலே கொண்டுவரப்பட்டாலும், அதைச் செயல்படுத்திய அதிகாரி கள் கையூட்டு கொடுத்த விவசாயிகளுக்கு அவர்கள் பங்காளி களின் நிலத்தை எல்லாம் பட்டா போட்டுக் கொடுத்துவிட்டுச் சென்று விட்ட காரணத்தால் ஏராளமான வழக்குகள் இன்னும் நீதிமன்றத்திலே நடந்து கொண்டிருக்கின்றன.

செங்கை-எம். ஜி. ஆர். மாவட்டத்தில் திருத்தணி வட்டத் திலும், திருச்சி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்திலும் பரிசோதனைக்காக அறிமுகப்படுத்தப்பட்ட பட்டா பாஸ் புத்தக முறை அதிகாரிகளால் சரியாக அமல்படுத்தப்படவில்லை என்று அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் என்னிடம் சொல்லியிருக் கிறார்கள். அதிலுள்ள குறைகளை அரசு ஆராய்ந்து, அந்தக் குறைகளைக் களைந்து பட்டா பாஸ் புத்தகம் எல்லோருக்கும் சரியாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பிற்பகல் 12.20

ஆளுநர் உரையில் தமிழக விவசாயிகள் ஆவலுடன் எதிர் பார்த்திருந்த கடன் நிவாரணம் கண்டு கொள்ளப்படாமல் விடு பட்டிருக்கிறது. டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையிலேயும், சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலேயும் அதற்கு பிறகு வெளியிட்ட நிதிநிலை அறிக்கை வாசகத்திலேயும் மறக்கா மல் சொல்லி வந்த கடன் நிவாரணம் பற்றி மறந்து விட்டார்களோ என ஒரு புறத்திலே புயல் வெள்ள சேதத்திலும், மறுபுறத்திலே மழையின்மை வறட்சி பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகள்



[illegible]லிக்கொண்டிருக்கிறார்கள். வட்டிச் சலுகையாவது கொடுத்து விவசாயிகளை இந்த அரசு பாதுகாக்க வேண்டும் என்று வேண்டி விரும்பி விவசாயிகளின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன். மீட்டர் பொருத்தப்படுகிறது, இலவச மின்சாரம் எடுக்கப்பட்டுவிடும் என விவசாயிகளை பீதி அடைய வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இலவச மின்சாரம் எடுக்கப்பட்டால் விவசாயிகள் போராடி பெற்ற உரிமை பறிபோய்விடும் என்பதோடு இன்று விவசாயிகள் பெரிதும் முதலீடு செய்து நிலத்தடி நீரை எடுத்து பயிரிடும் ஏர் கம்பிரஸ்ஸர் பாசன முறை அடியோடு நின்று விடும் என தி. மு. க. வினர் பட்டி தொட்டிகளிலெல்லாம் வந்து எங்கள் கலைஞர் கொடுத்த இலவச மின்சாரம் எடுக்கப்படுகிறது; மீட்டர்கள் மாட்டப்படுகிறது; விவசாயிகளே இப்போது நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்று விவசாயிகளை போராட்டத் திற்கு தூண்டி வருகிறார்கள்.

புரட்சித் தலைவியினுடைய புனித ஆட்சி தமிழகத்திலே அமைய, கூட்டணி வைத்து தமிழக விவசாயிகளின் ஆதரவை திரட்டி, பாடுபட்ட சொல்லேர் உழவர் செல்லமுத்து தலைமையிலே உள்ள எங்கள் இயக்கத்தை ஆளும் கட்சிக்கு ஆமாம் சாமி போடு கிறவர்கள் என்று எங்கள் பங்காளி விவசாயச் சங்கங்களெல்லாம் எங்களை நையாண்டி செய்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தனைக்கு இடையிலேயும் நாங்கள், டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சி தமிழகத்தில் உள்ளவரை விவசாயிகளுக்கு மீண்டும் மீண்டும் சலுகை கொடுப்பார்களேயல்லாமல் நிச்சயமாகக் கொடுத்த சலுகையைப் பறிக்க மாட்டார்கள் என்ற உத்தர வாதத்தைக் கொடுத்து வருகிறோம். எனவே, தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிதிநிலை அறிக்கையிலாவது இலவச மின்சாரம் தொடரும் என்ற உத்திர வாதத்தையும், கடன் நிவாரணம் கிடைக்கும் என்ற உத்திர வாதத்தையும் வழங்கி, அவர்களுடைய வாழ்வை அடைக்கும் ஒளிமயம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இந்த பீதிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

கரும்புக்கு கொடுத்திருக்கிற விலை கசப்பாக இல்லை என்றா லும் இனிப்பு சற்று குறைவாகவே இருக்கிறது. இந்திய அரசு வெளியிட்டுள்ள, இந்திய விவசாயம் பற்றிய அந்த சர்வேயில் முதல் மூன்று பயிர்களில் முதன்மையான மாநிலமாக உற்பத்தியில்

திகழ்வது தமிழ் மாநிலம். ஹெக்டேருக்கு 60 டன் சராசரி மகசூல் கரும்பு என்று அகில இந்திய அளவிலே இருக்கிற சூழ்நிலையில் தமிழகத்தில் 120 டன் ஹெக்டேருக்கு விளைச்சலை தமிழக விவசாயிகள் தங்கள் உழைப்பில் உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக இன்னும் கொஞ்சம் இந்த கரும்பினுடைய விலையைத் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பால் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்கு காரணம் பால் மாட்டினுடைய விலை உயர்ந்திருக்கிறது. பால்மாடு உண்ணுகின்ற அந்தத் தீனியினுடைய விலையும் உயர்ந்திருக்கிறது. அதற்கு வேண்டிய சகல விலைகளும் உயர்ந்திருக்கின்றன. ஆனால் இந்த பால் விலையில் விற்பனை விலைதான் உயர்ந்திருக்கிறதே அல்லாமல் கொள்முதல் விலை இன்னும் உயர்த்தப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வறட்சி காலத்திலே பாலுக்கு கொள்முதல் விலையில் 50 பைசா கூட்டிக் கொடுக்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை கூட்டிக் கொடுக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

“நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்”

எனச் சொல்லும் நன்றிக்கு இலக்கணமாக இருக்கிற தாளுண்ட நீரை தலையாலே தரும் தென்னை மரம் இன்று என்னுடைய தொகுதியில் வாடி வறண்டுக் கொண்டிருக்கிறது. பெற்ற பிள்ளை போடாவிட்டாலும் வளர்த்த பிள்ளை போடும் என்று தென்னம் பிள்ளையை நம்பி இருந்த விவசாயிகளுக்கு, எல்லா இடத்திலேயும் கடன் பெற்று ஆழ்குழாய்க் கிணறு தோண்டியும் தண்ணீர் வரவில்லை கண்ணீர் தான் வந்து கொண்டிருக்கிறது. அந்தத் தென்னைக்கு நான் பயிர்த் தண்ணீர் கேட்கவில்லை. உயிர்த் தண்ணீர் கேட்கின்றேன். இந்தத் தென்னை விவசாயிகளைக் காப்பாற்ற, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திலே உயிர்களைக் தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று சொல்லுகின்ற வள்ளலாரைப் போல் கருணை உள்ளம் படைத்த தாய் குலத்தின் தவப்புதல்வி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்னுடைய கிணத்துக்கடவு தொகுதியினுடைய பொள்ளாச்சி பகுதியினுடைய, உடுமலைப் பகுதியினுடைய தென்னை மரங்களைக் காப்பாற்றுவதற்காக கட்டாயம் உயிர்த் தண்ணீர் விட வேண்டுமென்ற வேண்டுகோளை, எப்படி மூழ்கிக் கொண்டிருக்கிற கப்பலுடைய மாலுமி தன்னைக் காப்பாற்ற எஸ்.ஓ.எஸ். என்று சொல்லப்படுகிற 'சேவ் அவர் சோல்ஸ்' என்று எப்படி ஆபத்பாந்தவனாக காப்பாற்றச் சொல்வானோ அதன்படி இந்த தென்னைகளின் உயிரை காப்பாற்ற, கூடிய விரைவிலே, ஒரு வாரத்திற்குள் அதற்கு உயிர் தண்ணீர் விட வேண்டும், விட வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி வணக்கம்.

பிற்பகல் 12.25

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பால் உற்பத்தியாளர்களுடைய கஷ்டங்களை அறிந்து தான் 10 கோடி ரூபாய் அளித்த பிறகுதான் அந்த பால் உற்பத்தியாளர்களுடைய பாக்கியை நாம் தீர்க்க முடிந்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய நலனைக் காக்கின்ற ஒரே நோக்கத்திலேதான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலேயும் சரி, முதல் நிதிநிலை பற்றிய அறிக்கையில் பேசுகின்ற போதும் சரி, கடனிலே பிறந்து கடனிலே மடிகின்றவன் விவசாயி என்ற ஏக்கக் குரலை வெளியிட்ட ஒரே ஒரு முதலமைச்சர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் தான் என்பதை உறுப்பினர்களுக்குச்

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1992 பிப்ரவரி 4

சொல்லிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனைப் போல கரும்பு விலையைப் பற்றி நா. சா. பழனிச்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய கருத்துக்கும், அவர்களுடைய கவனத்திற்கும் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். 1988-89 ஆம் ஆண்டுக்கு மத்திய அரசினுடைய விலையை அறிந்து அன்றையதினம் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்த தி.மு.க. அரசு விலை நிர்ணயம் செய்தது. அந்த விலை நிர்ணயம் செய்த இரண்டு நாட்களிலே மத்திய அரசு கரும்பு விவசாயிகளுக்கு 20 ரூபாய் கூடுதலாக வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. அந்த ஆணையை மதிக்காமல் அந்த ஆண்டு அந்த 20 ரூபாயையும் [illegible] முன்னால் இருந்த அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இங்கே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாது வெள்ளம் வந்தபோதும், புயல் வந்தபோதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியத் திருநாட்டிலே எந்த ஒரு மாநிலமும் ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: ஏதாவது சில குறிப்புகள் அமைச்சர்கள் அவ்வப்போது சொல்வதனால் சொல்லலாம். முழுமைக்கும் பதில் சொல்லிக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. கடைசியிலே எல்லா உறுப்பினர்களும் பேசியதற்குப் பிறகு முதலமைச்சர் பதில் சொல்லப் போகிறார்கள். ஏதாவது சில குறிப்புகள் இருந்தால் அவ்வப்போது அதை மட்டும் சொன்னால் போதும். அமைச்சர்களே கூட ஒவ்வொரு உறுப்பினரும் பேசி முடித்தவுடன் முழுமைக்கும் பதிலளித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது இல்லை. ஏதாவது சில குறிப்புகள் வேண்டுமானால் கொடுக்கலாம். அடுத்து திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி**: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தினுடைய கருத்துக்களை நான் முன் வைக்க விரும்புகிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழக அரசு நடந்துகொண்ட விதத்தைப் பற்றி ஆளுநர் அவர்கள் அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கர்நாடக அரசு பிடிவாதமாக நடந்துகொண்டு லட்சக்கணக்கான தமிழர்கள் தாக்கப்பட்டு தமிழகம் வந்தபோது



1992 பிப்ரவரி 4] [திரு. ச. அழகிரி]

அவர்களுக்கு தமிழக அரசு செய்த உதவிகளைப்பற்றி ஆளுநர் அவர்கள் எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். அதிலே மிகவும் விசேஷமான விஷயம் கர்நாடகத்தலைவர்கள் செய்ததைப்போல தமிழகத்திலே இருக்கின்ற ஆளும் கட்சியோ அல்லது அதனோடு தோழமைக் கட்சிகளோ அல்லது அரசாங்கமோ கர்நாடகர்களுக்கு எதிரான ஒரு நிலையை எடுக்காமல் இருந்ததுதான் இந்திய வரலாற்றில் பாராட்டப்பட வேண்டிய ஒரு விஷயமாகும். ஏனென்றால் ஒவ்வொரு முறையும் பிரச்சினைகள் வருகின்றபோது ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அல்லது அரசியல் இயக்கங்களைச் சார்ந்தவர்கள் பிரச்சினைகளுடைய தன்மையைப் புரிந்துகொள்ளாமல் இன பாகுபாட்டை, மொழி பாகுபாட்டை ஏற்படுத்தி ஒருஇனப் பிரச்சினையை வளர்ப்பது தமிழகத்திலே ஒரு கண்கூடான விஷயம். இதைத்தான் கர்நாடகத்திலே இருக்கின்ற ஆளும் கட்சி அங்கே செய்தது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை எந்தக் காரணத்தைக் கொண்டும் மனித அவலத்தை ஏற்படுத்தக்கூடாது என்பதற்கு நம்முடைய அரசியல் கட்சிகள் எல்லாம் இணைந்து நிதானமாகவும், பொறுமையாகவும் நடந்து கொண்டதற்காக, அதற்கு தலைமை ஏற்றதற்காக தமிழக முதலமைச்சரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் வரலாற்றைப் பார்க்கின்ற போது ஒவ்வொரு காலகட்டத்திலும் பிரச்சினைகளைத் திசை திருப்புவதற்காக அப்பாவி மக்கள் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள் அல்லது கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த ஒரு விஷயத்தில் மட்டும், தமிழகத்திலே அதைப்போன்ற ஒரு நிலைமை நம்முடைய அரசியல் கட்சிகள் எடுக்காத காரணத்திற்காக, குறிப்பாக ஆளும் கட்சி எடுக்காத காரணத்திற்காக நான் ஆளும் கட்சியைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30.

ஆனால் ஆளுநர் உரையிலே காவிரி நீர்ப் பிரச்சினையினுடைய அடிநாத அம்சம் பற்றி அவர் குறிப்பிட மறந்தது கொஞ்சம் எங்க[illegible] எல்லார் வேதனை அளிக்கிறது. ஏன் என்றால் காவிரி நீர்ப் பிரச்சினை என்பது 25 ஆண்டுக் காலமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க இதுவரை எந்த மாநில அரசும் அல்லது மத்திய அரசும் பெரிய அளவிலே முயன்றது இல்லை. ஆனால் பாரதப் பிரதமர் திரு. நரசிம்ம ராவ்

[திரு. ச. அழகிரி] [1992 பிப்ரவரி 4

அவர்கள் தன்னுடைய நீண்ட, ஆழ்ந்த, பயனுள்ள அனுபவத்தின் காரணமாக அந்தப் பிரச்சினைக்கு அவர்கள் நிதானமாக ஒரு முடிவு எடுத்து எல்லோரும் பாராட்டக்கூடிய ஒரு சூழ்நிலையை அவர்கள் ஏற்படுத்தினார்கள். நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அரசிதழிலே அவர்கள் பதிவு செய்தது என்பது ஒரு சாதாரண விஷயம் அல்ல. கர்நாடகத்திலே காங்கிரஸ் அரசாங்கம் இருக்கிறது. அங்கே அவருடைய காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கிறது. அப்படி இருந்தபோது கூட உண்மையை சொல்லுவதற்காக, நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக, பல்வேறு அரசியல் பிரச்சினைகளுக்கு மத்தியில் பிரதமர் அவர்கள் அரசிதழிலே பதிவு செய்ததற்கு நம்முடைய ஆளுநர் அவர்கள் ஒரு நன்றி தெரிவிக்காதது எங்களுக்கு எல்லாம் மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. ஏன் என்றால் பாராட்டு என்பது இரண்டு பக்கங்களிலும் இருக்கவேண்டும். நீங்கள் எடுத்த நிலைமை நாங்கள் எவ்வளவு பாராட்டி இருக்கிறோம் என்பதைப் பார்க்கிறபோது மத்திய அரசு எடுத்த நிலையைப் பாராட்டுவதில் மாநில அரசுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. வேண்டுமானால் ஆளுநருக்கு திருக்குறள் தெரியாமல் இருக்கலாம். ஆனால் திருவள்ளுவர் பரிசு பெற்று இருக்கிற நம்முடைய நாவலர் அவர்களாவது 'நன்றி மறப்பது நன்று அன்று' என்பதை உணர்ந்து ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே பிரதமருக்கு ஒரு நன்றி தெரிவித்து இருப்பார்களானால் நிச்சயமாக அது பாராட்டக்கூடியதாக இருந்திருக்கும்.

அடுத்து, காவிரிப் பிரச்சினையை எல்லோரும் சேர்ந்து விட்டு விட்டார்கள். இன்றைக்கு நடுவர் மன்றம் வழங்கி இருக்கிற இடைக்கால உத்தரவு என்பது இந்த ஆண்டிற்கு மட்டும் தான் பொருந்தக்கூடியது. அந்த 205 டி.எம்.சி. வாட்டர் என்பது இந்த ஆண்டிற்கு மட்டும் தான் பொருந்தும். எனவே, அடுத்த ஆண்டு வருகின்ற நிலை என்ன? அதற்காக தமிழக அரசு என்ன செய்ய இருக்கிறார்கள்? தமிழக அரசு எந்தவிதமான முயற்சிகளை மேற்கொள்ளவிருக்கிறார்கள் என்பது இந்த அவைக்குத் தெரியவில்லை. ஏன் என்றால் இந்த விஷயத்தில் சேர்ந்து பேச வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கர்நாடக அரசோடு பேசுவதற்கு தயங்குகிறார்கள். அப்படி ஒரு



1992 பிப்ரவரி 4] [திரு. ச. அழகிரி]

தயக்கம் நமக்கு ஒரு இழப்பை ஏற்படுத்துமே ஒழிய நமக்கு அதனாலே பலன் கிடைக்காது என்பதை நான் இந்தப் பேரவைக்கு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல் ஆளுநர் உரை, எப்படியாவது தப்பித்து ஓடி விட வேண்டும் என்கிற சூழ்நிலையில் எழுதப்பட்டு இருக்கிறதே ஒழிய பிரச்சினைக்கு பதில் சொல்லவேண்டும், பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவேண்டும், பிரச்சினைகளை எப்படி அணுகவேண்டும் என்பது பற்றி ஆளுநர் உரையிலே இல்லை. இன்றைக்கு விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கிறது. விலை ஏற்றம் என்பது இந்தியா . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினைபற்றி பேசுகிற நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த தெளிவான, தீர்க்கதரிசனமான அந்த நடவடிக்கையைப் பாராட்டினார்கள். மத்திய அரசினுடைய வேண்டுகோளை ஏற்று உச்ச நீதிமன்றம் எடுத்த முடிவினை மத்திய அரசு அரசிதழிலே அன்றைக்கு வெளியிட்டு அதை நடைமுறைப்படுத்துகிற விதத்திலே இருக்கின்ற நேரத்திலே நடந்த பிரச்சினைகளைப் பற்றி அவர்கள் இங்கே குறிப்பிடாவிட்டாலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினையிலே இன்றைக்கு கர்நாடக அரசோடு பேச வேண்டும் என்ற தன்னுடைய ஆதங்கத்தை இங்கே வெளியிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தமட்டில் பிரச்சினையை வளர்த்துக் கொண்டு போகவேண்டும் என்பது அவருடைய நோக்கம் அல்ல. ஆனால் ஒரு இடைக்காலத் தீர்ப்பை இந்த டிரிபியூனல் வழங்கியதற்குப் பிறகு உச்ச நீதிமன்றம் அந்தத் தீர்ப்பை ஏற்ற பிறகு அதை அரசிதழில் வெளியிட வேண்டுமென்று மத்திய அரசு உத்தரவிட்டதற்குப் பிறகு அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் தான் கர்நாடக அரசு நடந்து கொள்ள வேண்டுமே ஒழிய, அதுதான் இந்திய ஒருமைப்பாட்டை காக்கின்ற இந்த மாநிலங்களுக்கு உகந்ததாக இருக்கும் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். கண்ணப்பன்] [1992 பிப்ரவரி 4

(மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால் ஒவ்வொரு மாநில அரசும் ஒவ்வொரு பிரச்சினையிலே இப்படி எடுத்துக் கொண்டு தன்னுடைய எதேச்சதிகாரப் போக்கைக் கடைபிடித்து நாளைக்கு, தான் எடுத்த முடிவுதான் சரி, தான் உச்ச நீதி மன்றத்தையோ, மத்திய அரசையோ மதிக்கமாட்டேன் என்ற போக்கை, கடைபிடிப்பார்களானால் ஒருமைப்பாடு என்பதே ஒரு கேள்விக்குறியாகிவிடும் என்பதை இன்றைக்கு காங்கிரஸ் நண்பர்களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்த வரையில் நீதிக்கு தலைவணங்குபவர்களாக, நேர்மையை மதிக்கின்றவர்களாக உச்ச நீதிமன்றம் கொடுக்கின்ற தீர்ப்பை மதித்து நடக்கவேண்டும் என்ற ஆழமான கருத்தைத்தான் அவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் இப்போது இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இறுதியான தீர்ப்பு சம்பந்தமான வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதற்கிடையிலே பேசுவது என்பது எந்த விதத்தில் பொருத்தம் என்பதையும் நம்முடைய காங்கிரஸ் கட்சி நண்பர் விளக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். காவிரி நீர்ப் பிரச்சினையிலே இன்றைக்கும் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழக மக்களுடைய நலனைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறார்கள். இன்றைக்கும் என்றைக்கும் உறுதியாக இருப்பார்கள் என்ற உறுதியினை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-35.

**திரு. ச. அழகிரி:** காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான தீர்ப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்படி எதிர்பார்க்கிறார்களோ அதேபோலத்தான் தமிழக காங்கிரசும் அதிலே இருக்கிற நாங்களும் எதிர் பார்க்கிறோம் என்பதை நான் விளக்கி சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து கிடையாது. அதை பலமுறை எங்களுடைய தலைவர் [illegible] தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.



1992 பிப்ரவரி 4] [திரு. ச. அழகிரி]

அடுத்தபடியாக, ஆளுநர் உரையிலே விலையேற்றத்தைப்பற்றி
கடுமையான சொற்கள் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய
அரசாங்கம் இந்தியா முழுவதற்கும் ஒரு கொள்கையை எடுத்து
அதை நிறைவேற்றுகிறது. அந்தக் கொள்கையின் பிரதிபலிப்புத்
தான் தமிழகத்திலே ஏற்பட்டு இருக்கிறது. எனவே அரிசி விலை
ஏற்றம் ஏற்பட்டு விட்டதற்கு முழுமையான காரணம் மாநில
அரசா அல்லது மத்திய அரசா என்பதை நாம்தான் முடிவு செய்து
கொள்ள வேண்டும். இன்றைக்கு, கர்நாடகத்திற்கும், கேரளா
விற்கும், மேற்கு வங்காளத்திற்கும், எல்லா இடங்களுக்கும்
மத்திய தொகுப்பிலேயிருந்து கொடுக்கப்படுகிற அரிசியினுடைய
விலை ஒன்றுதான். அந்தந்த மாநில அரசாங்கங்கள் மக்களுக்குக்
கொடுத்திருக்கின்ற உறுதிமொழிகளின்பால் அவர்கள் விலையைக்
குறைத்துக் கொள்ளலாம் அல்லது கூட்டிக் கொள்ளலாமே
யொழிய, அதற்காக மத்திய அரசுதான் விலை ஏற்றத்திற்கு
முழுமையான காரணம், நாங்கள் என்ன செய்ய முடியும் என்று
ஆளுநர் உரையிலே சொல்லியிருப்பது, பிரச்சினையை கொஞ்சம்
திசை திருப்புவதாக இருக்கிறது. உதாரணமாக, திராவிட
முன்னேற்றக் கழக அரசாங்கம் அரிசி விலையை ஏற்றிய பொழுது
நாம் இரண்டு இயக்கங்களும் சேர்ந்து, அதை எதிர்த்துப்
போராடினோம். அன்றைக்கு அவர்கள் சொன்ன காரணம்,
மத்திய அரசாங்கம் விலையை ஏற்றிவிட்டது அதனால் நாங்களும்
விலையை ஏற்றிவிட்டோம் என்றுதான் அவர்கள் சொன்னார்கள்.
ஆனால் நாம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு மாநில
அரசாங்கம் நினைத்தால் மானியம் கொடுத்து அரிசி விலையைக்
குறைக்க முடியும் என்றுதான் நாம் அன்றைக்குச் சொன்னோம்.
எனவே, இன்றைக்கும் காங்கிரஸ் கட்சியினுடைய நிலை அது
தான். இன்றைக்கு மேற்கு வங்காளத்திற்கு மத்திய
தொகுப்பிலிருந்து என்ன விலைக்கு அரிசியைக் கொடுக்
கிறார்களோ அதற்குமேல் வைத்து அவர்கள் அங்கே
விற்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் அரிசியை நாம் ஒவ்வொரு
மட்டத்திலும் அரசியலாக கருதுகிற காரணத்தினால் அதற்கு
மானியத்தைக் கொடுத்து நாம் குறைத்துக்கொண்டு இருக்
கிறோம். எனவே, அதை மாநில அரசாங்கம் தன்னுடைய
கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமேயல்லாமல் அல்லது
[illegible] உரிய நிதியைப் பெருக்கி அதை சரி செய்ய முயற்சி

செய்யவேண்டுமேயல்லாமல், இரண்டுக்கும் அப்பாற்பட்டு மத்திய அரசாங்கந்தான் இதற்குக் காரணம்; நாங்கள் என்ன செய்ய முடியும் என்று சொல்வது கொடுமை. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். மத்திய அரசு இதுவரை எந்தக் காலத்திலும் 80, 90 பைசா என்ற அளவில் விலையேற்றம் செய்தது கிடையாது. இதற்கு முன்பு ஏற்றியபொழுதெல்லாம் 5 பைசா 10 பைசா, 15 பைசாவுக்கு மேல் எப்போதும் ஏற்றியதில்லை. அது ஒன்று. இன்னொன்று, நடந்து முடிந்த தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில், அதாவது நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்தில் இதைப்பற்றி கலந்தாலோசித்து இருக்கலாமே என்றுதான் மாண்புமிகு முதல்வர் அவர்களும் குறிப்பிட்டார்கள்.

**திரு. ச. அழகிரி :** அடுத்தபடியாக, ஆளுநர் உரையிலே சொல்கிறபொழுது, இந்த விலையேற்றங்களையெல்லாம் அமல்படுத்துவதா அல்லது திட்ட ஒதுக்கீட்டினை குறைத்துக் கொள்வதா அல்லது நாங்கள் மலிவு விலை மதுவை ஒழித்திருக்கிறோமே அதற்கான மானியத்தை மத்திய அரசாங்கம் வழங்குமா அல்லது மத்திய அரசாங்கம் வழங்காவிட்டால் அவர்கள் அரசியல் சட்டத்திலே மாறுதல் கொண்டு வருவார்களா என்றெல்லாம் இங்கே முதல்வர் அவர்கள் வினா எழுப்பினார்கள். மத்திய அரசாங்கம் மதுவை ஒழிக்க வேண்டுமென்பதிலே தீவிரமாக இருக்கிறார்கள். குஜராத்திலே பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட்டது. அப்படி கொண்டுவரப்படுகிறபொழுது ; காங்கிரஸ் ஆளுகிற குஜராத் மாநிலத்திலே கூட மத்திய அரசாங்கம் அதற்காக எந்தவிதமான பிரத்யேக நிதியையும் தரவில்லை, தாங்கள் ஆளுகிற, அதிலும் முழுமையான மதுவிலக்கை கொண்டு வந்திருக்கிற ஒரு மாநிலத்திலேயே அவர்கள் உதவி செய்யாதபொழுது, பாதி மதுவிலக்கைக் கொண்டு வந்திருக்கிற ஒரு மாநிலத்திற்கு அவர்கள் எப்படி நிதியை வழங்க முடியும் என்பதனை இந்தப் பேரவை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்குமேலாக அதிலே ஒரு பிரச்சினை என்னவென்றால் ஒரு கொள்கையை நிறைவேற்றுவதற்குக்கூட பண்ம் தா



1631 600 008



வேண்டுமா என்பதையும் நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். ஏனென்றால், இது மாநில அரசாங்கம் தனனுடைய [illegible]யாதையை உயர்த்திக் கொள்வதற்காகத்தான் எடுத்திருக்கிற [illegible] கொள்கையை நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஒரு முயற்சி இது.

பிற்பகல் 12.40

மாண்புமிகு முதல்வரவர்கள், இந்த மலிவு விலை மதுவைப் பற்றிக் கொண்டு வருகிறபொழுது, அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள், முதலமைச்சர் ஒரு காளையினுடைய இரண்டு கொம்புகளைப் பிடித்திருக்கிறார், காளையை முதலமைச்சர் அடக்கப் போகிறாரா அல்லது காளை முதலமைச்சரைக் கீழே தள்ளப் போகிறதா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டுமென்று அன்றைக்கு அவர்கள் சொன்னார்கள்.

ஏனென்றால், மது விலக்குப் பிரச்சினை வருகிறபொழுதே நன்றாகத் தெரியும், மத்திய அரசாங்கம் இதற்கு உதவி செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று. ஒரு இலட்சியத்தை அடைவதற்காக நாம் எதை வேண்டுமானாலும் இழக்கலாம். ஆனால் எதையாவது இழக்கக் கூடாது என்பதற்காக நாம் இலட்சியத்தை இழந்து விடக் கூடாது என்பதனை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மதுவிலக்குப் பிரச்சினை வந்தபொழுது, தமிழகத்திலே முதன் முறையாக இந்த அரசாங்கத்தை ஆதரித்து காங்கிரஸ் இயக்கம் தான். பல்வேறு பிரச்சினைகளுக்கிடையிலே நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்; உங்களை நாங்கள் பாராட்டுகிறோம்; இந்த முயற்சி மகத்தான முயற்சி, யாரும் எடுக்க முடியாத ஒரு முயற்சி, தைரியமாகக் கொண்டு வந்ததற்காக நாங்கள் பாராட்டுகிறோம் என்று அன்றைக்கே நாங்கள் சொன்னோம்.

ஆனால், திராவிட இயக்கத்தில் இருக்கிற ஒரு சிறிய குறைபாடு, சில நேரங்களில் மதுவை ஒழிக்கிறீர்கள், ஆனால் அதன் பிறகு ஏதாவதொரு காரணத்தைச் சொல்லி திரும்பவும் மதுவைக் கொண்டு வருகிற ஒரு பழக்கம் இருந்து வந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக இருந்த பொழுது மதுவை ஒழித்து விட்டு, அதன் பிறகு கொண்டு வருவதற்கு அவர்கள் சொன்ன காரணங்கள் இதே காரணங்கள்

தான். இன்றைக்கு மீண்டும் அதேபோன்ற ஒரு காரணத்தைச் சொல்லி, மதுவை எங்கே திரும்பவும் இங்கே கொண்டு வந்து விடுவார்களோ என்ற ஒரு அச்சம் எங்களுக்கெல்லாம் இருக்கிறது.

தமிழகக் கிராமப்புறங்களிலே இருக்கின்ற பெண்கள், தமிழக அரசை அவர்கள் ஒரேயொரு காரணத்திற்காகத்தான் ஆதரிக்கிறார்கள். கட்டுப்படுகிறார்கள். அது நீங்கள் மதுவை ஒழிப்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிக்காகத்தான். எனவே, எவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும் மதுவிலக்கு விஷயத்திலே இந்த அரசாங்கம் தீவிரமாக இருக்கவேண்டும். உறுதியாக இருக்கவேண்டும். ஏதாவது பின்னை காரணங்களைச் சொல்லி, நிதி நிலையைச் சொல்லி, ஏற்பட்டு இருக்கின்ற சங்கடங்களைச் சொல்லி, தன்னுடைய கொள்கையிலேயிருந்து இந்த அரசாங்கம் தவறிவிடக்கூடாது என்பதற்காக நான் இதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக, இன்றைக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டிலே ஒரு பாரபட்சமாக நடந்துகொண்டிருப்பதாக ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. கர்நாடக அரசாங்கத்திற்கு ஒருவிதமாகவும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கு ஒருவிதமாகவும் மத்திய அரசு நடந்து கொள்கிறது என்ற ஒரு குற்றச்சாட்டை இங்கே பேசிய பல நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு உத்தரப்பிரதேசத்திலே நிதி ஒதுக்கீட்டிலே குறைவு ஏற்பட்டிருக்கிறது; மேற்கு வங்காளத்திற்குக் குறைவு ஏற்பட்டிருக்கிறது; எல்லாவற்றிற்கும் மேலாக, காங்கிரஸ் ஆளுகின்ற கேரள மாநிலத்திலே—அங்கே குறைவு ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்கீட்டைச் செய்கிற பொழுது ஒரு கொள்கை அடிப்படையிலேதான் செய்கிறது. இது வேண்டிய அரசாங்கமா, வேண்டாத அரசாங்கமா, நம்மை எதிர்த்துப் பேசுகிறவர்களா, ஆதரித்துப் பேசுகிறவர்களா என்று மத்திய அரசாங்கம் எத்தவிதமான அளவுகோலையும் வைத்திருக்கவில்லை. அதற்குமாறாக, யார் உபரி நிதியை அதிகமாகப் பெறுகிறார்களோ, அதற்கான முயற்சிகளை எந்த அரசாங்கம் மேற்கொள்கிறதோ, அவர்களுக்கு அதிகமான நிதி கிடைக்கிறது. எனவேதான், உங்களுக்கு அதிகமான நிதி கிடைக்க வேண்டுமென்றால், உபரி நிதியை நாம் பெருக்க வேண்டும். [illegible] முயற்சியிலே மாநில அரசாங்கம் [illegible] வேண்டும். [illegible]





பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பதிலே மாநில அரசாங்கம் தன்னுடைய கருத்தைச் செலுத்தவேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன்.

கர்நாடக அரசாங்கத்திற்கு அதிகமான அளவிற்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் அவர்கள் உபரி நிதியை 800 கோடியாக ஆக்கிக் காட்டினார்கள். எனவே, அவர்களுக்கு அது கிடைத்திருக்கிறது. தமிழக அரசும் உபரி நிதியைப் பெருக்குவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து இந்த மன்றத்திற்குச் சொல்லவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அதிலே ஒன்று. கொஞ்சம் டிப்ளமசியை நாம் பயன்படுத்த வேண்டும். சைனீஸ் டிப்ளமசி என்று சொல்வார்கள். நிதியைப் பெறுவது என்பது சாதாரணமான விஷயம் அல்ல. உதாரணமாக இந்த அவையிலேகூட நாம் பார்க்கிறோம். திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்து கிளைக் கழகம் அமைக்கவேண்டுமென்று சொன்னால், போக்குவரத்துத் துறை அமைச்சர் "பார்க்கலாம்" என்று சொல்கிறார். கோயம்புத்தூரிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை வேண்டுமென்று சொன்னால் கைத்தறித் துறை அமைச்சர், அந்தக் கேள்விக்கே இடமில்லை என்று சொல்கிறார். இரண்டு பேருமே சொல்வது 'இல்லை' என்பதுதான். ஆனாலும்கூட சொல்வதிலே சற்று வித்தியாசம் இருக்கிறது. ஏனென்றால் நிதி சார்பத்தப்பட்ட விஷயம் அது. அதேபோலத் தான் இதுவும். நிதி பெறுகிறார்கள் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. "பார்க்கலாம்" என்றால், அதைப்பற்றிப் பரிசீலனை செய்து, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வது "பார்க்கலாம்" என்பது. 'இல்லை' என்பது வேறு. ஆகவே, "பார்க்கலாம்" என்று சொன்னால் செய்யப் போகிறோம் என்பதுதான் பொருள். [illegible], இந்தத் திசை திருப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45.

**திரு. ச. அழகிரி :** உண்மையிலே, மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கத்திடமிருந்து இன்னும் நிதியைப் பெற வேண்டும் என்கிற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. அதற்கு காங்கிரஸ் இயக்கமும் துணையாக இருக்கிறது. அதிலே எங்களுக்கு பிரச்சினையும் இல்லை. ஆனால், எங்களுடைய துணையை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஒரு பழமொழி இருக்கிறது : "Two can do together what is impossible for one". ஒருவரால் முடியாத விஷயத்திற்கு இருவரை அழைத்துச் செல்லுங்கள் என்று ஆங்கில பழமொழி இருக்கிறது. நீங்கள் மட்டும் எங்களுடைய தலைவரை அழைத்துச் சென்றிருப்பீர்களே யானால், உங்களுடைய சிரமம் கொஞ்சம் குறைந்திருக்கும் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாநில முதலமைச்சர்களும் எதிர்க் கட்சிகளை அழைத்துச் செல்லவில்லை. புதிதாக, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், 'நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சி'லுக்குச் செல்கிற நேரத்திலே, ஒரு யோசனையைச் சொல்கிறார். எந்த மாநிலத்திலும் அப்படிப் பட்ட பழக்கம் இல்லையென்று நான் கருதுகிறேன்.

**திரு. ச. அழகிரி :** அதற்குத்தான் நான் சொன்னேன் ; என்று சொன்னேன். **Chinese Diploma (குறுக்கீடு).

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவ்வாறு சொன்னதை அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**திரு. ச. அழகிரி :** நான் உதாரணம் கருதித்தான் அவ்வாறு சொன்னேனே தவிர, வேறொன்றும் இல்லை. எனவே, அந்த நிதி ஒதுக்கீடு விஷயங்களை ஒரு அரசியலாக்க வேண்டா மென்றுதான் நான் இந்தப் பேரவையிலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், டெல்லியிலே எங்களுடைய தலைவர்களோடு நாங்கள் தொடர்பு கொண்டு பேசியபோது, இப்படியெல்லாம் குற்றஞ்சாட்டுகிறார்களே, அந்தக் குற்றச் சாட்டுகளுக்கு ஏதாவது அடிப்படை இருக்கிறதா? உண்மை இருக்கிறதா? அல்லது மத்திய அரசாங்கம், மாநில அரசாங் கத்திற்கு எதிரான ஒரு சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறதா? அப்படி ஏதாவது இருந்தால் எங்களுக்குச் சொல்லுங்கள் என்றுதான் கேட்டார்கள். நிச்சயமாக அப்படி அல்ல. இன்னும் சொல்லப் போனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிரவன் அவர்கள் பேசுகிறபோதுகூட சொன்னார். இந்தியாவிலே இருக்கிற முதலமைச்சர்களையெல்லாம் நம்முடைய முதலமைச் சரோடு ஒப்பிட்டு அவர் சொன்னார். அது உண்மையுங்கூட. இன்றைக்கு டெல்லியிலே அதிக செல்வாக்கு பெற்றிருக்கிற முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர்தான். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, அப்படிப்பட்ட ஒரு சிக்கலை டெல்லி அரசாங்கம் ஏற்படுத்தவில்லை. ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை; நண்பர்களையெல்லாம் அவர்கள் பகைவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். நண்பர்களை மேலும் நீங்கள் நண்பர்களாக்க முயற்சி செய்ய வேண்டும்; வேண்டியவர்களிடம் நீங்கள் மேலும் நல்ல விஷயங் களைச் சொல்லி, அவர்களை வேண்டியவர்களாக மாற்றிக்கொள்ள வேண்டுமேயல்லாமல், செய்ய உத்தேசித்திருக்கிற, செய்வதற்கு ஆர்வம் காட்டுகிற, செய்வதற்கு முழு மனதோடு இருக்கிற வர்களைக் குற்றம் சொல்வது என்பது மனதிற்குக் கஷ்டத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

அடுத்து, வளர்ச்சித் திட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். இன்னும் 2 மாத காலத்திற்குள் ஒதுக்கப்பட்டிருக்கிற முழு தொகையினையும் நாங்கள் செலவழித்துக் காட்டுவோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய அந்த உறுதியை நான் பாராட்டுகிறேன். ஆனால் எனக்கு இருக்கிற ஒரு ஐயம், நான் ஊராட்சி ஒன்றியத்திலே பணியாற்றினேன் என்கிற வகையிலே எனக்கிருக்கிற ஐயம், 2 மாத காலத்தில் நீங்கள் எல். & டி.-யிடம்—லார்சன் அண்டு டூப்ரோவிடம்—அந்த வேலைகளைக் கொடுத்தால்கூட, அவர்களால் அதை செய்து முடிக்க முடியாது. காரணம், அவ்வளவு வேலைகள் பாக்கி இருக்கின்றன. வளர்ச்சித் திட்டம் அப்படியே கிடப்பிலே கிடக்கிறது. இன்னும் பல இடங்களில் குடியிருப்பு வீடுகள் அஸ்திவாரத்தைக்கூட தாண்டவில்லை; நான் பார்த்திருக்கிறேன். அப்படி இருக்கிறபோது, இரண்டு மாதங்களில் எப்படி அவ்வளவு பணத்தையும் நாம் செலவழிக்க முடியும் என்பதை தயவுசெய்து உணர்ந்து பார்க்கவேண்டும். ஆட்சி மாறியிருக்கிறது; முதல்வர் மாறியிருக்கிறார். இங்கே அமர்ந்திருக்கிற உறுப்பினர்கள் யிருக்கிறார்கள். ஆனால், திட்டத்தை அமல்படுத்தக்கூடிய அதிகாரிகள் அப்படியே இருக்கிறார்கள். (மணியடிக்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** அதிகாரிகளுடைய மனநிலையிலே மாற்றம் இல்லை என்பதை இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்கள் நிலச்சீர்திருத்தச் சட்டத்தைப் பற்றி சொல்வார்கள்; நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்தால், குன்னியூர் சாம்பசிவ ஐயர் வருத்தப்பட்டால் அதிலே பொருள் இருக்கிறது; பெட்டிக்கடை வைத்திருக்கிற பாவாடை மிகவும் கஷ்டப்படுகிறான்; என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை என்று அவர்கள் சொல்வார்கள். சொல்லிவிட்டு சொன்னார்; அந்தப் பெட்டிக் கடை வைத்திருக்கிற பாவாடை எங்கேயோ 1/2 காணி நிலம் போக்கியம் பிடித்திருக்கிறான். எனவே, ஒருவர் நிலத்தை எடுத்து இன்னொருவருக்குக் கொடுப்பது எவ்வளவு பெரிய தீமை; தவறு என்பது அவனுக்குக் கஷ்டத்தை ஏற்படுத்துகிறது; நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் அவனுக்கு இல்லை. அதற்குப் பெயர்தான் பூர்ஷ்வா குணம் என்று சொல்வார்கள்.





அதைத்தான் பெரியார் சொல்வார்; பணக்காரன் வருத்தப்பட்டால் கவலையில்லை; ஏழைகூட வருத்தப்படுகிறான் என்றால் அவனிடம் இருக்கிற ½ ஏக்கர்கூட போய்விடுமே என்ற எண்ணம் அவனுக்கிருக்கிறது. அவனை கொள்கை ரீதியாக நாம் தயார் செய்யவில்லை. அதுதான் இன்றைக்கு நடைபெறுகிறது. ஆட்சியிலே மாற்றம் ஏற்பட்டிருக்கிறது; ஆனால் அதை எடுத்துச் சொல்ல வேண்டிய அதிகாரிகளினுடைய மனநிலையிலே மாற்றம் இல்லை. எந்தத் திட்ட வேலைப்பாடுகளும் வேகமாக நடைபெறவில்லை. திட்ட வேலைகள் எல்லாம் மிகவும் குறைந்த நிலையிலே இருக்கிறது என்பதை இங்கே மீண்டும் இந்த அவையில் வற்புறுத்த விரும்புகிறேன். எனவே, இந்த ஆண்டிலாவது மத்திய அரசு கொடுத்தப் பணத்தை முழுமையாக செலவு செய்ய நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். அதற்கு பதிலாக அந்தப் பணம் 'சரண்டர்' ஆகக்கூடாது. 120 கோடி ரூபாய்த் திட்டத்திலே குறைவு ஏற்பட்டு இருப்பதாகச் சொல்கிறீர்கள். எந்த எந்த இனங்களில் நாம் கேட்டு, எந்த எந்த இனங்களில் மத்திய அரசாங்கம் தரவில்லை என்பதனை அவைக்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை வைப்பார்களேயானால், எந்தக் காரணத்திற்காக அவர்கள் தரவில்லை என்பதனை நாம் புரிந்து கொள்வதற்கு அது எதுவாக இருக்கும். (மணி அடிக்கப் பெற்றது).

பிற்பகல் 12-50.

அடுத்ததாக, திட்டப் பிரச்சினைகள்பற்றிச் சொன்னேன். உதாரணமாக, வெள்ள நிவாரணம். ஒரு சின்ன உதாரணம், இந்த அவைக்குத் தெரிய வேண்டிய விஷயம். 1984-85 ஆம் ஆண்டிலே ஒருமுறை வெள்ளம் ஏற்பட்டது. அப்போது அரசாங்கம் ஏராளமான உதவிகளைச் செய்தது. இப்போது ஒரு முறை வெள்ளம் வந்தது. இந்த முறை செய்திருக்கிற உதவியைப் போல வரலாற்றிலே யாருமே செய்தது கிடையாது. என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குக் கூட 1 கோடி ரூபாய் கொடுத்தார்கள். 1 ரூபாய், 2 ரூபாய் அல்ல, ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு 1 கோடி ரூபாயை ஏழைகளுக்கு அளித்தது இந்த அரசாங்கம். இதுவரை எந்த அரசாங்கமும் செய்யாத உதவி. ஆனால், அதிலே ஏற்பட்ட கொடுமைகளை நினைத்து ரத்தக் கண்ணீர் வடிக்கின்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது. 500 ரூபாய் கொடுத்தால் 100 ரூபாய் தர

வேண்டும், 250 ரூபாய் கொடுத்தால் 50 ரூபாய் தரவேண்டும். இதையும் முன்கூட்டியே தரவேண்டும். அந்த ஊரிலே இருக்கிற நாட்டாண்மைக்காரர்கள் வசூல் செய்து தரவேண்டும். அப்படிச் செய்து கொடுப்பவர்களுக்கே, அந்த உதவி கிடைத்தது. இதை நான் வட்டாட்சியரிடம் போய் சொன்னேன். கோட்டாட்சியரிடம் போய்ச் சொன்னேன். மாவட்ட ஆட்சியரிடம் போய்ச் சொன்னேன். அதன் பிறகு தலைமைச் செயலாளரிடம் சொன்னேன். ஐயா, இதுபோன்ற கொடுமை நடக்கிறது. எந்த அரசாங்கமும் இந்த அளவுக்கு உதவி செய்தது கிடையாது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இவ்வளவு ரூபாய்களை அள்ளிக் கொடுத்து இருக்கிறார்கள். ஏனென்றால் இரண்டு முறை வெள்ள நிவாரணத்தின்போதும் நான் இருந்திருக்கிறேன். இவ்வளவு கொடுத்தும் கூட, ஏழைகள் கையிலே அந்தப் பணம் போய்ச் சேருகிறபோது, இவ்வளவு ரூபாய் கையூட்டுத் தரவேண்டுமென்றால் அது எப்படி ஒரு நிர்வாகத்திற்கு இலக்கணமாக இருக்க முடியும். தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள் என்று சொன்னேன். நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் இதை எழுத்து மூலமாகத் தரமுடியுமா என்று கேட்டார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறபோது, முதலில் அமைச்சரவை மாறியிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் மாறியிருக்கிறார்கள். அதிகாரிகள் அப்படியேயிருக்கிறார்கள். ஆகையினால்தான் குறைபாடுகள் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். வெள்ள நிவாரணத்தில் தவறு நடந்தால், வரிசையாக அதிகாரிகளிடத்திலே சொல்லிக் கொண்டிருக்கிறாரேயொழிய, இருக்கிற மற்றவர்களிடத்தில் சொல்லியிருந்தால், அதுவும் எப்போது, சாதாரணமாக ஒரு காரியம் எதிரியாக இருந்தால் அந்த காரியத்தை தவறு செய்ய விட்டுக் கொண்டே போகவேண்டும். தவறு தவறு என்று அதற்கும் பிறகு கடைசியிலே தவறு செய்துவிட்டார்கள் என்று சொல்ல வேண்டும். நண்பர்களாக இருந்தால், தவறு செய்த உடனேயே அதை திருத்துவதற்கு, நீக்குவதற்கு, முயற்சி செய்ய





வேண்டும். நீங்கள் நம்முடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள். வெள்ள நிவாரண நடவடிக்கையில் தவறு நடக்கிறது என்று தெரிகிற போது நீங்கள் தொலைபேசி மூலமோ, தந்தி மூலமோ சொல்லியிருந்தால் பாதி தவறு நடக்கின்றபோது— நான் தவறு நடக்கவில்லை என்று சொல்லவில்லை. தவறு நடந்து இருக்கலாம். அதைத் திருத்துவதற்காக, உங்களுக்குத் தெரிந்த உடனேயே சொல்லியிருந்தால்—அது முழுவதும் நடக்காமல் கொஞ்சமாவது தடுத்து இருக்கலாம் என்பது என் கருத்து.

**திரு. ச. அழகிரி:** நான் அந்த நடைமுறையிலே தவறு செய்யவில்லை. வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைப் போய்ப் பார்ப்பதற்குச் சென்றேன். ஆனால், கொஞ்சம் காலம் கடந்து சென்று விட்டேன். இரவு 8 மணிக்குப்பிறகு அவர்கள் பார்க்க மாட்டார்கள் என்று சொல்லிவிட்டார்கள். அதன் பிறகு ஒருமுறை . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். நான் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தாலும், இல்லாவிட்டாலும், நான் சொன்னாலும், சொல்லாவிட்டாலும், எல்லோருக்கும் தெரியும். என்னை யாரும், எப்போதும் எந்நேரத்திலும் பார்க்கலாம். அதற்குக் குறிப்பிட்ட நேரம் வைத்துக் கொள்ளவில்லை என்பதும் எல்லோருக்கும் தெரியும். அது உங்களுக்கும் தெரிந்து இருக்கும். வேண்டுமென்றே ஏதாவது சொல்லவேண்டுமென்று சொல்கிறீர்கள்.

**திரு. ச. அழகிரி:** நான் வயதிலே சிறியவனாக இருந்தாலும், அவைக்குத் தவறான தகவலைக் தரமாட்டேன். நான் அமைச்சர் அவர்களைப் பார்க்கச் சென்றபோது, காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திருமதி கற்பகம் இளங்கோ அவர்கள் அங்கே இருந்தார்கள். நான் அது தவறு என்ற முறையில் சொல்லவில்லை. அதன்பிறகு ஒருமுறை வந்தேன் அமைச்சர் அவர்கள் மன்னார்குடி சென்றுவிட்டார்கள். நான் முயற்சி செய்யாமல் இல்லை. என்னால் இயன்ற அளவுக்கு முயற்சி செய்தேன். தலைமைச் செயலாளர் எழுத்து பூர்வமாகக் கொடுக்கும்படி கேட்டார்கள். (குறுக்கீடு).

[1992 பிப்ரவரி 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நன்றாகப் படித்தவர். விவரம் தெரிந்தவர். என்னிடத்திலே நேரிடையாகக் கொடுக்க முடியாவிட்டாலும், எழுத்து மூலமாக வீட்டிலே கொடுக்கலாம். என்னுடைய நேர்முக உதவியாளரிடத்திலே கொடுத்திருக்கலாம். ஏனென்றால் காரியம் முக்கியம். தவறு நடக்கிறது. ஏழை எளியவர்களுக்கு, தகுதி உடையவர்களுக்கு, கொடுக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறோம். தகுதி உள்ளவர் களுக்குக் கிடைக்காமல், தகுதியற்றவர்களுக்குக் கிடைக்கிறது. தகுதி உடையவர்களுக்குக் கிடைத்தாலும் லஞ்சம் வருகிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆளுங்கட்சிக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அதைவிட அதிகமாகத் தோழமைக் கட்சிக்கும் நிச்சயமாக இருக்கிறது என்பதை நான் மனப்பூர்வ மாக நம்புகிறேன். நீங்கள் இதை ஆழமாக, துல்லியமாக தடுத்து நிறுத்தவேண்டுமென்று எண்ணியிருந்தால் நீங்கள் கடிதத்தின் மூலமாகக் கொடுத்திருக்கலாம். நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று நீங்கள் எவ்வளவோ நாள் கழித்துக் கொடுத்திருக்கிறீர் கள். நான் முதலிலே சொன்னபடி தவறுகள் நடந்து முடிந்த பிறகு, குற்றம் சுமத்தவேண்டும் என்பதற்காக நீங்கள் அப்படிச் செய்யவில்லை. எப்போதும் குற்றங்கள் நடக்கவிட்டு விட்டு, கடைசியில் சொல்லவேண்டுமென்பது ஒரு பழக்கம் நீங்கள் தோழமைக் கட்சிக்காரர், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். இப்படிப்பட்ட நிலைமை இல்லாமல், இது போனால் போகட்டும். இனிமேலாவது தவறு நடந்தால் உடனே சொல்லுங்கள் என்னால் முடிந்ததைச் செய்கிறேன். தவறுகளைத் தடுத்து நிறுத்தி விடுவேன் என்று நான் சொல்லவில்லை; என்னால் முடிந்த வரையிலே குறைக்கிறேன்.

பிற்பகல் 12.55

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



1992 பிப்ரவரி 4]

* **மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளம் வந்தபோது இதற்கு முன்பு எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு புரட்சித் தலைவி ஆட்சியிலே நிதி வழங்கியிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு நன்றி. அதேநேரத்தில் மத்திய விவசாயத் துறை அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகள் அடங்கிய குழு வெள்ளப் பகுதிகளை எல்லாம் பார்த்துவிட்டு சென்றவர்கள் இன்றுவரையில் நிதியே தரவில்லை. அதைப் பெற்றுதந்தால் மீண்டும் நன்றி சொல்லத் தயாராக இருக்கிறோம்.

**திரு. ச. அழகிரி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல அதிகமாக நிதியைப் பெற்றுத்தர நான் தயாராக இருக்கிறேன். ஆனால் அதற்கு அமைச்சரவர்கள் அதிகாரப்பூர்வமாக எனக்கு ஒரு அனுமதியை அளிப்பார்களே யானால் நிச்சயமாக அதிக நிதியைப் பெற்றுத்தருவதற்கு டெல்லியிலே எனக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்துவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (சிரிப்பு). அதிகாரப் பூர்வமாக அதை அறிவிக்க வேண்டும். அதிக நிதியைப் பெற்றுத் தருவதற்கு இந்தச் சட்டப்பேரவை சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினரை அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கிறது (பலத்த சிரிப்பு) என்று சொல்லி, நான் டெல்லிக்குப் போய் நிதியைப் பெற்று வருவதற்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** இந்த அவை ஒட்டு மொத்தமாக உங்களுக்கு அந்த அனுமதியை அளிக்கிறது. (சிரிப்பு) நீங்கள் இதைப் பயன்படுத்தி அதிக நிதியைப் பெற்றுவந்தால் இந்த அவைக்கும் பெருமையாக இருக்கும். இதையே உங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகார முத்திரையாகப் பெற்றுக் கொள்ளலாம். (பலத்த சிரிப்பு). நீங்கள் அதிக நிதியை வெள்ள நிவாரணப் பகுதிகளுக்கு மத்திய அரசின் உதவியாகப் பெற்றுத் தருவதற்கு இந்த அவை ஒட்டுமொத்தமாக, முழுமையாக உங்களுக்கு அனுமதி வழங்குகிறது; நீங்கள் பெற்றுத் தரலாம்.

**திரு. ச. அழகிரி :** இதை நான் சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நிதி அமைச்சர் அவர்கள் அதற்கான செலவுத் தொகைக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1992 பிப்ரவரி 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தச் செலவுத் தொகையை நீங்கள் பெற்றுவருகின்ற அந்தப் பணத்திலிருந்தே நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். பல கோடி ரூபாய் பெற்றுவரப் போகிறீர்களே ;

**திரு. ச. அழகிரி :** அடுத்தபடியாக, அந்தத் தொகுதியிலிருக்கிற பிரச்சனை இதுதான். இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. திநெடுஞ்சேரி என்ற கிராமமும் கேளியூர் என்ற கிராமமும் இருக்கின்றன. அந்த இரண்டு கிராமங்களிலும் மக்கள் முன்கூட்டியே பணம் தர மறுத்ததற்காக அங்கே யாருக்குமே வெள்ள நிவாரண உதவி கிடைக்கவில்லை. நான் தலைமை செயலாளரிடம் கேட்டபோது எழுத்துப்பூர்வமாகத் தாருங்கள் என்று கேட்டார்கள். நான் எழுதி கொடுத்தேன். ஆனால் அதிலே அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. வேறுவிதமாக நடவடிக்கை எடுத்தார்கள். சில அதிகாரிகளை அனுப்பி, விசாரித்து, கிராமத்திலே யார் பணம் பெற்றார்களோ அவர்களைப் பிடித்து சிறையிலே அடைத்து விட்டார்கள் ; சினிமாவிலே வருவதைப்போல நடந்து விட்டது தவறுகள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, அம்மாதிரியாகத் தவறு நடந்தது என்று முதலமைச்சருக்கு சில தகவல்கள் வந்தன. சாதாரணமாக இப்படிப்பட்ட தகவல் வந்தால் எந்த அரசும் என்ன செய்யும் என்றால், உடனே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி விசாரியுங்கள் என்று சொல்லும். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தகவல் வந்தவுடனே அதைப் பார்க்கின்ற வருவாய்த் துறை அமைச்சருக்கு உத்தரவு போட்டு, நீங்களே நேரடியாகச் சென்று, கிராமம் கிராமமாகச் சென்று பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுடைய உத்தரவுபடி நான் பல கிராமங்களுக்குச் சென்று விசாரித்தேன். நான் விசாரித்ததில் தவறு நடந்திருக்கிறது என்பது தெரியவந்தது. அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி



1992 பிப்ரவரி 4] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அவர்கள் லஞ்சம் நடக்கக் கூடாது, அரசு கொடுக்கிற உதவித் தொகை உடனடியாக சேரவேண்டியவர்களுக்குப் போய் சேர வேண்டும், தவறு நடக்கக்கூடாது என்று கருதுகிறார்கள். அவர்களுக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. இந்த ஊரில் இந்த வட்டத்தில் தவறு நடக்கிறது என்று தந்தி வந்திருக்கிறது. உடனே அவர்கள் அதை என்னிடத்திலே கொடுத்து விசாரிக்கச் சொன்னார்கள். எந்த முதலமைச்சராக இருந்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்தத் தந்தியை அனுப்பி, விசாரிக்கச் சொல்வார்கள். ஆனால் இதை கிராமம் கிராமமாகப் போய் விசாரியுங்கள் என்று எனக்கு உத்தரவு போட்டார்கள். நான் சென்று விசாரித்ததில் தவறு கண்டுபிடிக்கப்பட்டு, தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது. பலர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப் பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அழகிரி அவர்கள் 30 நிமிடங்களுக்குமேல் பேசியாகிவிட்டது. இன்னும் ஒரு நிமிடத்தோடு முடித்துவிடுங்கள்.

பிற்பகல் 1-00

**திரு. ச. அழகிரி ;** அடுத்ததாக ஆளுநர் உரையில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் பற்றிக் குறிப்பிடப்படாதது ஜனநாயகத்தின்மீது பற்றுள்ளவர்களுக்கு எல்லாம் கொஞ்சம் கவலையாக இருக்கிறது. இந்த அரசு எவ்வளவு சாதனைகளைச் செய்தாலும் அதை கிராமப்புறங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாகத்தான் செய்யமுடியுமே ஒழிய வேறு எந்தமுறையிலும் செய்துவிட முடியாது என்பதை நமக்குக் கடந்த காலம் நினைவூட்டி இருக்கிறது. எனவே உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை எவ்வளவு விரைவில் அறிவிக்கமுடியுமோ அவ்வளவு விரைவில் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்ததாக . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்ததை அடுத்த முறையில் வைத்துக்கொள்ளலாம். இப்போது ஒரு மணி ஆகிவிட்டது. இத்துடன் முடித்துவிடுங்கள்.

**திரு. ச. அழகிரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துடன் நான் பேசுவதற்கு அனுமதி அளித்ததற்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டில் வாழ்கிற ஏழை எளிய மக்களுக்காக, நலிவுற்ற சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்கிற மக்களுக்காக எந்தவிதமான பிளவும் இல்லாது, கருத்து வேறுபாடும் இல்லாது மாபெரும் சக்தியாக இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தானைத் தலைவியாக, இதய தெய்வமாக விளங்குகின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய ஒரு தொண்டனாக நின்று சில கருத்துக்களை எடுத்து வைப்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

இன்றைக்கு மேதகு ஆளுநருடைய உரையில் ஆறு மாதமாக தமிழகத்தினுடைய மிக முக்கியமான சில பணிகள் குறித்து மிகத் தெளிவாக எடுத்து வைத்திருக்கிறார்கள். தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுத்து தமிழகத்தை அமைதி தவழச் செய்த காட்சி என்பதை இன்றைக்கு சிலர் கொச்சைப்படுத்தினாலும் ஆனால் காஷ்மீரத்தையும், பஞ்சாபையும், அஸ்ஸாமையும் அவர்கள் நினைத்துப் பார்ப்பார்களேயானால் தமிழகம் இன்றைக்கு எவ்வளவு சீரோடும், சிறப்போடும் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட்ட தன்மையில் இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள முடியும்.

அதுபோன்று காவிரிப் பிரச்சினையில் உறுதியான நடவடிக்கையை எடுத்து தமிழ்நாட்டின் உரிமைகளை முழுமையாகக் காப்பாற்றுகிற பொறுப்பைப் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதுபோன்று கர்நாடகாவில் வாழ்கின்ற தமிழர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பால் அவர்கள் தமிழகத்திற்கு வந்த பின்னால் அதற்குரிய முழுச் செலவையுமே தமிழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று சொல்வது மிகுந்த வேதனையாக இருக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் கூடச் சொன்னார்கள் மத்திய அரசு நிதி வழங்கியது என்று ஆனால் தமிழக மக்களோ நிதி [illegible] மன்றம் என்ற கருத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் [illegible] ஒருமைப்பாட்டை அதிகமாகப் [illegible]



கர்நாடகாவில் இருந்தாலும் இந்த கெஜட் பப்ளிக்கேஷனுக்குப் பின்னால் கர்நாடக அரசு தன்னைக் காப்பாற்றிக் கொள்கிற ஒரு முயற்சியையும், தேசிய முன்னணி, பாரதீய ஜனதா கட்சி போன்ற கட்சிகள் எல்லாம் காங்கிரஸ் கட்சியை ஆட்சியை விட்டு வெளியேற்றுகிற முயற்சியையும் மேற்கொண்ட நிலையில் பாதிப்புக்கு உள்ளானவர்கள் தமிழர்கள் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். எனவே தேசிய ஒருமைப்பாடும், தேசியப் பார்வையும் தேசிய கட்சிகளுக்கு இல்லாதபோதும் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு தேசியப் பார்வையைக் கொண்டிருக்கிற இயக்கமாக புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையில் இருக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு ஜாதி, ஒரு மதம், ஒரு கடவுள் என்று சொல்கிற லட்சியப் பாதையில் தமிழக அரசு ஆட்சி செய்வதாக நாம் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்ல முடியும்.

பத்தாண்டு காலமாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசு 4.00 ரூபாய்க்கும், 4.50 ரூபாய்க்கும் கொடுக்கிற அரிசி 2 ரூபாய்க்கும், இரண்டரை ரூபாய்க்கும் தமிழகத்தில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு புறம் இப்படி அரிசி கொடுத்துக்கொண்டிருக்கிறது, தமிழக அரசு, இன்னொரு புறம் தமிழகத்தில் வாழ்கிற ஒரு கோடி குழந்தைகளுக்கு ஒரு நேரம் உணவுக்கு உத்தரவாதத்தை அளித்துக்கொண்டிருக்கிறது. இந்தியாவில் இந்தச் சின்னஞ்சிறு குழந்தைகள் எல்லாம் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிற நேரத்தில், இன்னும் சொல்லப்போனால் உலகத்திலேயே, ஒரு நேரம் உண்ண உணவு கிடைக்கின்ற உத்தரவாதத்தைத் தமிழகத்து மக்கள் மட்டும்தான் பெற்றிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக ஒரு கோடி குழந்தைகள் பாதுகாக்கப்படுகிற சூழ்நிலையில் பத்தாண்டு காலமாக 4 ரூபாய்க்கும், 4½ ரூபாய்க்கும் கொடுக்கப்படுகிற அரிசியை வாங்கி 2 ரூபாய்க்கும், 2½ ரூபாய்க்கும் நமது அரசு கொடுக்கிற சூழ்நிலையில் நியாயமான உணர்வு பொருந்தியவர்கள், தமிழக மக்களின் மீது அன்பும் கனிவும் காட்டுகின்றவர்கள், உள்ளபடியே நான் சொல்வேன், 4 ரூபாய் 50 காசுக்குக் கொடுத்த அரிசியை 5 ரூபாய் 50 காசு என்று அதிகரிப்பதற்குப் பதிலாக ஒரு ரூபாயாவது விலை குறைத்துக் கொடுக்க வேண்டாமா என்ற கேள்வியை நான் நண்பர்களிடையே

[திரு. கு. லாரன்ஸ்] [1992 பிப்ரவரி 4

எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு சொல்லப்போனால், நம்முடைய முதல்வர் அவர்கள் மகத மதவா வாக இதயத்தைத் திறந்து பச்சையாகவே நியாயங்களை எடுத்து வைக்கவேண்டும் என்று இந்த சட்டமன்றத்திலே அவர்கள் நடந்து கொள்கின்றார்கள். அந்த அளவுக்கு நம்முடைய எதிர்க் கட்சித் தோழர்களும் நடந்துகொள்ளவேண்டும் என்றுதான் நான் கருதுகிறேன்.

பிற்பகல் 1-05]

சிலர் காரணம் சொல்கின்ற நேரங்களிலே அது ஒரு 'டபுள் எட்ஜ்ட் வெப்பன' ஆகவே இருக்கிறது. எங்கள் ஊரிலே காயங் குளம் வாள் என்று சொல்வார்கள். அது இரண்டு பக்கமும் கூர்மை இருக்கும். இப்படியும் வெட்டும், அப்படியும் வெட்டும். எனவே தான் இன்றைக்கும் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி சொல்கிற நோக்கிலே சொன்னார்கள். சில பார்முலாக்களின் அடிப்படையிலேதான் மத்தியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகச் சொன்னார்கள். எனவே பார்முலா ஒத்த பார்முலாவாக இருக்கவேண்டும். அதற்குப் பின்னாலே பேசுகிறவர்கள். சொல்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவரை நீங்கள் அழைத்து சென்றிருந்தால் கிடைத்திருக்கும் என்று சொல்கிறார்கள். எனவே அதனுடைய கருத்து தெளிவு பட்டு இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். இன்றைக்கு நம்முடைய கவர்னர் அவர்களுடைய உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பதெல்லாம், அது மத்திய அரசுக்கு எதிராக எழுப்பப்படுகிற ஏவுகணைகள் அல்ல. நியாயமான தமிழகத் தினுடைய, நாட்டு மக்களுடைய, நலிவுற்றவர்களுடைய, ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை, மக்களைப் பாது காப்பதற்காக எடுத்து வைக்கின்ற உரிமைப் போராட்டம் என்பதை அன்பு கெழுமிய எதிர் கட்சித் தோழர்களும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆக இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்த வரையில் சில காரியங்களை எடுத்து வைக்க முயற்சிக்கிறார்கள்.

அருமைக்குரிய மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி [illegible] இறந்துவிட்ட மறுநாளேயே பத்திரிகையையும் பார்த்தால் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் [illegible]



1992 பிப்ரவரி 4] [திரு. கு. லாரன்ஸ்]

வட்டார். அந்த அறிக்கையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது
என்று சொன்னால், ராஜீவ காந்தி அவர்களுடைய கொலைக்கும்
விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை
என்று சொல்லப்பட்டது. எனவே இன்றைக்கு குற்றப் பத்திரிகை
யிலே விடுதலைப் புலிகளுடைய தலைவா அதுமல சமபநதபபட
டிருக்கிறார என்று குற்றபபத்திரிகையிலே அல்லது வழக்கிலே
விடுதலைப் புலிகளுடைய தலைவரையும் இணைத்து இருக்
கின்றார்கள். எனவே தமிழகத்திலே திராவிட முன்னேற்றக்
கழகம் எந்த திசையிலே அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்
தினுடைய தலைமை என்பது ஒரு பொய்மையான வேடம்
தரித்து தமிழகத்திலே உலாவுகிறது என்றுதான் நான் தெளி
வாகச் சொல்முடியும். இதனுடைய விளைவாகத் தான் நடந்
திருக்கிறது. நேற்றைய தினம் நம்முடைய அமைச்சரவையும்,
மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் நீண்ட நெடிய காலம்
போராடிக்கொண்டிருந்த ஸ்டேண்டர்ட மோட்டார் தொழிற்
சாலையைத் திறந்து வைக்கிறார்கள். லட்சக்கணக்கான தொழி
லாளர்களுடைய வேலை வாய்ப்புகளை, குடும்பங்களைப்
பாதிக்கபபட்டு இருக்கிற சூழ்நிலையிலே ஸ்டேண்டர்ட் தொழிற்
சாலை திறந்து வைக்கப்படுகிறது. ஆனால் திராவிட
முன்னேற்றக் கழகமோ நம்முடைய பல்லவன் பணி மனையிலேயே
சென்று பஸ்களை உடைக்கிறார்கள். எல்லா பத்திரிகைகளும்,
நடுநிலைமை வகிக்கின்ற எல்லா பத்திரிகைகளும் திராவிட
முன்னேற்றக் கழகம் வன்முறையில் ஈடுபட்டது என்பதை, மிகத்
தெளிவாகச் சொன்னார்கள். எனவே ராஜீவ் காந்தி அவர்
களுடைய மிகப் பெரிய கொலையையே மறைக்க முயன்று திராவிட
முன்னேற்றக்கழகம் நாடெங்கும் இன்றைக்கு பொய்மையையே
அவிழ்த்து விட்டு வருகிறது என்பதைத் தெளிவாக நான் சொல்
வேன். ஆகவே நாடு முழுவதும், நம்முடைய மாண்புமிகு இதய
தெய்வம் தமிழக முதல்வர் எடுத்துச் சொன்னதைப் போன்று
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்
தோழர்கள் எல்லாம் கை கட்டி தமிழகத்தினுடைய தெருக்களிலே
சும்மாவே இருக்கிறார்கள். நாடெங்கும் திராவிட முன்னேற்றக்
கழகம் வன்முறையைத் தூண்டுகிற அளவுக்கு பொதுக் கூட்டங்
களிலே பேசுகிறார்கள். பொதுக் கூட்டங்களிலே மிகக் கேவல
மாக சொல்கிறார்கள். நாட்டு மக்களுடைய பிரச்சினைகளை
அவர்கள் எடுத்துவைக்கவும் இன்றைக்கு தயாராக இல்லை.
'தடா' சட்டத்தின் மூலமாக உண்மையான சமூக விரோத சக்தி

[திரு. கு. லாரன்ஸ்] [1992 பிப்ரவரி 4

களும் இந்த நாட்டிலே இருக்கிற மிகப் பெரிய தீவிரவாதிகளும் கொடியவர்களும் கைது செய்யப்பட்ட பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அவர்களுடன் இருக்கின்ற ஈடுபாடுகளை மறைப்பதற்கும் தமிழகம் முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகம் வன்முறைகளைத் தூண்டிவிட்டு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அச்சுறுத்தியும் பயமுறுத்தியும் வருகின்றார்கள். இது இன்றைக்கு சிந்திக்கப்பட வேண்டிய சூழ்நிலை இருப்பதாகவே நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். நம்மைப் பொறுத்தவரையில் மிகத் தெளிவாக சொல்வதெல்லாம் சென்ற முறைகூட சட்டமன்றத்திலே பேசிய மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் அரசு விவகாரத்திலேகூட ஒரு நியாயமான கருத்தை எடுத்து வைக்கவில்லை என்று நான் தெளிவாகவே சொல்வேன்.

அருமைக்குரிய டாக்டர் எம். மோசஸ் அவர்கள் பேசுகிற நேரத்திலே சொன்னார்கள். ரூ. 3 ஆயிரத்திற்கு மேலே வருமானம் இருப்பவர்களுக்கு அரிசி வழங்குகிற பங்கீடு அட்டையை வழங்க வேண்டாம் என்று சொன்னார்கள். அந்த ரூ. 3 ஆயிரம் வருமானம் உள்ளவர்கள்கூட நலிவுற்றவர்கள்தான். அவர்கள் சொல்கிற நேரத்திலே ஒரு கருத்தை சொன்னார்கள், நான் பணிவோடு சொல்லிக்கொள்வேன். ஏதாவது ஒரு லிமிட் இருக்க வேண்டும். எனவே, ஒரு புறம் ஒரு கருத்து, இன்னொரு புறம்

பிற்பகல் 1-10

இன்னொரு கருத்தாக இருக்கிறது. நம்மைப் பொறுத்த வரையில், இந்த சட்டமன்றத்தில் நான் தெளிவுபடுத்த ஆசைப்படுவதெல்லாம், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அல்லது காங்கிரஸ் கூட்டணி என்பது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மிகப் பெரிய கூட்டணி என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற கருத்து வேறுபாடுகள், அதன் தலைமையிலே இருக்கிற சில கருத்து வேறுபாடுகள் நம்மை மிகுதியாகவே களங்கப்படுத்த முயற்சிக்கிறதோ என்று நான் [illegible] படுகிறேன். எனவே, நான் உண்மையிலே [illegible] அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் [illegible]



1992 பிப்ரவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சிப் பிரச்சினையை எல்லாம் இங்கே பேசிக் கொண்டிருப்பதற்கு இது நேரம் அல்ல. உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரம் முடிந்துவிட்டது. நீங்கள் இப்பொழுது போய், ஏதாவது கட்சி, கூட்டணி என்று பேசி, உங்களுடைய நேரத்தையும் வீணடித்து, பிரச்சினையையும் நீங்கள் தெளிவு இல்லாமல் விவாதத்திற்குக் கொண்டு போகிறீர்கள்.

திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, திரு. ராஜீவ் காந்தி அவர்கள் என்ன கொள்கையை வைத்திருந்தார்களோ அந்தக் கொள்கையை கடைப்பிடித்து, தமிழகத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடுகள் தர வேண்டும். தமிழகத்தினுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டுமென்று நான் வேண்டி, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. சே. இராஜமன்னார்

திரு. ஆ. சே. இராஜமன்னார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தத்துவமேதை காரல்மார்க்ஸ், சிந்தனை சிற்பி அரிஸ்டாட்டில், அறிவுலக மேதை இங்கர்சால், புரட்சி வித்தகர்கள் வால்டேர், ரூசோ, மாண்டஸ்கியூ, பேரறிஞர் பெர்னாட்ஷா, மூதறிஞர் ராஜாஜி, ஏழைகளின் இதய தெய்வம் எம். ஜி. ஆர். ஆகியோர்களின் மொத்த உருவமாம் புரட்சித் தலைவியின் (மேசையைத் தட்டும் ஒலி) சாதனைகளையும், அவர்களுடைய திட்டங்களையும் கோர்வையாக வெளிப்படுத்தியுள்ள ஆளுநர் உரையைப் பாராட்டி ஓரிரு கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

உலகத் தலைவர்களே வியந்து பாராட்டும் வண்ணம், பஞ்சாபாக, அஸ்ஸாமாக, காஷ்மீராக மாற இருந்த தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றிய புரட்சித் தலைவியின் சாதனையை அழகுற எடுத்துக் கூறியுள்ள கவர்னர் உரையைப் பாராட்டுகின்றேன்.

கடந்த 20 ஆண்டுக் காலமாக எந்த முதல்வராலும். என் புரட்சித் தலைவராலேயே தீர்வு காண முடியாத காவிரி பிரச்

[திரு. சு. சே. இராஜமன்னார்] [1992 பிப்ரவரி 4

சினைக்கு வெற்றிகரமாக தீர்வு கண்டுகொண்டிருக்கும் புரட்சித் தலைவியின் சாதனையை எடுத்துக் கூறியுள்ள ஆளுநர் உரையைப் பாராட்டி வரவேற்கின்றேன்.

"உடுக்கை இழந்தவன் கைபோல" கர்நாடகத் தமிழர்களுக்கு உதவிக் கரம் நீட்டிய புரட்சித் தலைவியின் சாதனையை எடுத்துக் கூறியுள்ள கவர்னர் உரையை நான் பாராட்டி வரவேற்கின்றேன்.

சத்துணவுத் திட்டம் தந்து, இந்தியாவிற்கே வழிகாட்டியாக திகழ்ந்த புரட்சித் தலைவர்போல், மலிவு விலை மதுவை ஒழித்து, கள்ளச் சாராயத்தையும் ஒழித்து இந்தியாவுக்கே வழிகாட்டியாக விளங்கியிருக்கின்ற புரட்சித் தலைவியின் சாதனையை அழகுற எடுத்துக் காட்டியிருக்கும் கவர்னர் உரையைப் பாராட்டுகின்றேன்.

கள்ளச் சாராயத்தை ஒழித்து, காங்கிரஸ் அரசாங்கங்களும், கம்யூனிஸ்ட் அரசாங்கங்களும் செய்ய முடியாத செயலை புரட்சித் தலைவி அவர்கள் செய்து காட்டியிருக்கிறார்கள்.

கள்ளச் சாராயத்தை எப்படி ஒழிப்பது என்று அதிகாரிகளும், அரசாங்கமும் திணறிக் கொண்டிருந்த வேளையிலே, மூன்பு உள்ள வரலாற்று சிறப்பு மிக்க ஒரு சிறிய திட்டத்தைத் தான் புரட்சி தலைவி அவர்கள் கடைபிடித்து கள்ளச் சாராயத்தை ஒழித்திருக்கிறார்கள். முன்பெல்லாம், மன்னர்கள் ஒரு கோட்டையைப் பாதுகாக்க வேண்டுமென்றால், அதற்கு ஒரு திறவு கோலை ஒரு தளபதியிடம் மட்டும் கொடுத்துவிட்டால் எதிரி மன்னன் அந்த தளபதிக்கு கையூட்டு கொடுத்து அந்தக் கோட்டையை வீழ்த்திவிடுவான். ஆகவே, அப்பொழுது மன்னர்கள் அந்தக் கோட்டைக்கு இரண்டு திறவுகோலை கொடுத்து, இரு தளபதிகளிடம் கொடுத்து வைத்திருந்து கோட்டையை பாதுகாத்தார்கள் அதுபோல, இந்த சிறிய திட்டத்தைத்தான் கள்ளச் சாராயம் நடக்கும் பகுதிகளிலே அதை ஒழிப்பதற்கு போலீசார் மட்டும் பொறுப்பு அல்ல, அந்தப் பகுதியிலே உள்ள [illegible] பொறுப்பு என்ற சிறிய திட்டத்தை ஆக்கிப் போட்டார்கள். இரண்டு அதிகாரிகளும் [illegible] வேண்டாம், இருக்கும் சம்பளமே போதும் என்று எண்ணி, [illegible] என்னென்ன [illegible]



1992 பிப்ரவரி 4] [திரு. சு. சே. இராஜமன்னார்]

கொண்டு கள்ளச் சாராயத்தை ஒழித்து, இன்று தமிழகத்தை வெற்றிகரமான ஒரு பாதைக்கு கொண்டு சென்றுகொண்டிருக்கிறார்கள் புரட்சித் தலைவி அவர்கள். அதனை அழகுற எடுத்துக் காட்டியிருக்கிற கவர்னர் உரையை நான் பாராட்டுகிறேன்.

மத்திய அரசின் புதிய பொருளாதார கொள்கை காரணமாக தங்கம் முதல் தக்காளி வரை விலை ஏறிக்கொண்டிருக்கிறது. மத்திய அரசை சாட்டிவிட்டு சிவனே என்று அமர்ந்திருக்கவில்லை எங்களுடைய புரட்சித் தலைவி. விலை ஏற்றத்தைத் தடுக்க அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டி, ஆலோசனை செய்து, நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே "A tale of two Chief Minister" என்று ஒரு ஆர்ட்டிகிள் வந்திருக்கிறது. அதில் புரட்சித் தலைவி அவர்களை "The Iron Lady of Tamil Nadu" என்று வர்ணித்து, இவரும் வங்க முதல்வர் திரு. ஜோதிபாசுவும்தான் மத்திய அரசை இடித்துரைக்கும் முதல்வர்கள். அதிலும் அரிசி விலையை உயர்த்தியதால் முதன் முதலாக மத்திய அரசை கண்டித்தவர் தமிழக முதல்வர், அடுத்துதான் திரு. ஜோதிபாசு.

பிற்பகல் 1-15

முன்பெல்லாம் மாநில முதல்வர்கள் மத்திய அரசாங்கத்திற்குக் காவடி எடுப்பார்கள் அவர்கள் காரியங்களைச் சாதிக்க. ஆனால் இந்த இரும்புப் பெண்மணி சென்னையிலிருந்தே மத்திய அரசுக்கு உத்தரவிடும் துணிச்சல் மிக்கவர் என ஆங்கில பத்திரிகை புகழாரம் சூட்டியுள்ளது. ஆகவே தமிழகத்தின் இரும்புப் பெண்மணியான தமிழக முதல்வர் அவர்கள் விலைவாசி உயர்வை எவ்வழியிலாவது குறைத்து விடுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கெல்லாம் உள்ளது.

தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள் அமையவும், தொழில் வளர்ச்சி மையங்கள் அமையவும் தமிழக முதல்வரவர்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ள ஆளுநர் உரைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தி.மு.க

[திரு. கு. சே. இராஜமன்னார்] [1992 பிப்ரவரி 4

ஆட்சியில் Industrially most backward taluks என 31 தாலுகாக்கள் அறிவிக்கப்பட்டன. அரசியல் தலையீடு காரணமாக தஞ்சையில் உள்ள 9 தாலுகாக்கள் Industrially most backward taluks என அறிவித்த அதே வேளையில் இராமநாதபுரம், சிதம்பரனார் மாவட் இராமநாதபுரம், சிதம்பரனார் மாவட்டங்களில் ஒரு தாலுக்கா டங்களில் ஒரு தாலுக்காகூட Industrially most backward taluk என அறிவிக்கப்படவில்லை. எனது தொகுதியாகிய ஓட்டப்பிடாரம் தாலுகாவில் மருந்துக்குக்கூட ஒரு சிறு தொழிற்சாலை கிடையாது. ஆகவே இதனையெல்லாம் மாற்றி Industrially most backward taluk என்று முதல்வரவர்கள் ஓட்டப்பிடாரம் தாலுக்காவை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியா முழுவதும் தொழிற் கொள்கையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டு வருகிறது. பப்ளிக் செக்டார் குறைந்து ஜாயின்ட் செக்டார் பெருகி, பின் இப்போது பிரைவேட் செக்டாருக்கு ஆதரவு கொடுக்கும் காலகட்டத்தில் உள்ளோம். Privatesation செய்யும்போது, அதன் மூலமாக முதலில் பாதிக்கப்படுவது S.C. and S.T மக்கள்தான். Public Sector களில் உள்ளதுபோல Joint Sector களில் S.C. and S.T. மக்களுக்கு reservation கொடுக்க வேண்டுமென்று mandatory ஆக எதுவுமில்லை. இதனால் Joint Sector களில் S.C. and S.T மக்களை வேலைக்கு எடுப்பதேயில்லை. Joint Sector களிலேயே இந்த நிலைமை என்றால் Private Sector களில் S.C. and S.T. களை யார் வேலைக்கு எடுப்பார்கள்? இது ஒரு அபாயகரமான போக்கு So, the concept of reservation must be extended to joint sectors and even to private sectors.

மாண்புமிகு முதல்வர் அவர்களே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதுபோல Joint Sector மற்றும் Private Sector S.C. and S.T. மக்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென இந்த மாமன்றத்தில் தீர்மானம் போட்டு, மத்திய அரசிடம் கேட்டு அதை வாங்கி வந்து, இந்தியாவிலுள்ள 25 கோடி அரிஜன மக்களை இரட்சிக்க வந்த இரட்சகர் எனப் பெயர் பெற்று இத்தமிழக முதல்வர் அவர்கள் திகழ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





1992 பிப்ரவரி 4] [திரு. கு. சே. இராஜமன்னார்]

தூத்துக்குடி பகுதியில் அமைந்திருக்கும், அமையப் போகும் தொழிற்சாலைகளில் நெல்லை-சிதம்பரனார் மாவட்ட மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அங்கே உள்ள தொழிற்சாலைகளில் வெளி மாநில மக்கள்தான் வேலை செய்கிறார்கள். Sons of the soil எல்லாம், இது தான் SPIC இது தான் TAC என வேடிக்கை பார்க்கும் சூழ்நிலைதான் உள்ளது.

கடல் மீனளம், உள்நாட்டு மீனளம் இவற்றை மேம்படுத்தவும், வரும் ஆண்டில் 1,000 ஹெக்டேரில் இறால் பண்ணைகள் அமைக்க அரசு திட்டமிட்டிருப்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கும் ஆளுநர் உரையைப் பாராட்டுகிறேன். தூத்துக்குடி கடலோரப் பகுதியில் நிலங்கள் இறால் வளர்ப்புக்கு பல தொழில் அதிபர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்நிலங்கள் முழுவதும் கேரளத்தைச் சேர்ந்த தொழிலதிபர்களுக்கு அதிகமாக வழங்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடி ஏரியாவிலுள்ள sons of the soil க்கு first preference கொடுத்து, நிலங்களை இறால் பண்ணை அமைக்கக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கேரளத் தொழிலதிபர்கள் நடத்தும் Amulya Sea Food போன்ற நிறுவனங்கள் எல்லாம் தூத்துக்குடியில் இருக்கிறது. வெள்ளையன் எப்படி, Indian and dogs are not allowed என்று சொன்னானோ, அதுபோல Amulya Sea Food owner Tamils and dogs are not allowed கூறுகிறாராம், என்று. இது மிகவும் வேதனைக்குரிய செயல். ஆகவே தூத்துக்குடி பகுதியில் உள்ள இறால் வளர்ப்புப் பண்ணைகளுக்கு நிலங்களை வழங்கும்போது சிதம்பரனார் மாவட்டத் தொழிலதிபர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருச்செந்தூர் தொகுதியிலுள்ள தாரங்கதாரா கெமிக்கல்ஸில் ஆயிரக்கணக்கான ஏக்கர் உப்பளங்களில் உப்பு தயாரித்துவிட்டு, அதன் கடினத் தன்மை சிறிதும் மாறாமல் அதனை அப்படியே கடலுக்குள் விட்டுவிடுவதன் காரணமாக அங்கேயுள்ள மீனவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எத்தனையோ ஆண்டுகள் எடுத்துக் கூறியும் அந்தத் தொழிற்சாலையை கட்டுப்படுத்த எந்த அரசாலும் முடியவில்லை. ஆகவே தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு கு. சே. இராஜமன்னார்] [1992 பிப்ரவரி 4

அடுத்து TWAD Board -ல் இருந்து ரூ. 15 கோடிக்கு சிவலப்பேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று ஒரு திட்டத்திற்கு எஸ்டிமேட் வந்துள்ளது. மாண்புமிகு முதல்வரவர்கள் தயவு செய்து இந்த Sivalaperi Combined Water Service Scheme -க்கு அனுமதி கொடுத்து, ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம் தொகுதிகளில் உள்ள 10 இலட்சம் மக்களைக் காப்பாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நெல்லை-சிதம்பரனார் மாவட்ட மக்களின் ஒட்டு மொத்தமான ஓர் கருத்தை நான் இங்கே கூற விரும்புகிறேன். மணியாச்சியிலிருந்து மதுரைவரை உள்ள மீட்டர் கேஜை அகற்றி விட்டு பிராட் கேஜ் போட ரயில்வே போர்ட் முடிவு செய்துள்ளது.

பிற்பகல் 1.20

இதனால் நெல்லை-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்ட மக்கள் அல்லல் படுகிறார்கள். ஆகவே மதுரை-திண்டுக்கல் போல, பாரலல் ஆக மீட்டர் கேஜோடு பிராட் கேஜ் அமைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசைக் கேட்டு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு, வரலாற்றிலே சிலர் ஆட்சி காலம் பொற்காலம் என வருணிப்பதுண்டு. ஆங்கிலேய வரலாற்றில் பெர்க்கிலீயஸன் காலம் பொற்காலம்; மொகலாயர்களின் வரலாற்றில் ஷாஜகானின் காலம் பொற்காலம்; சோழர்களின் வரலாற்றில் இராஜ ராஜ சோழனின் காலம் பொற்காலம்; அது போல தமிழர்களின் வரலாற்றில் புரட்சித் தலைவியின் புனித ஆட்சிக் காலம்தான் பொற்காலம் என வரலாறு நிரூபிக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எனக் கூறி, ஆளுநர் உரைக்கு நன்றி கூறி, வரவேற்று அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி க. பழனியம்மாள்.

**திருமதி க. பழனியம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29—1—1992 அன்று மேதகு ஆளுநர் அவர்களால் ஆற்றப்பட்ட உரையானது ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தமிழகத்தின் தனிப்பெருந்தலைவியாக விளங்குகின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியின் கொள்கை விளக்கங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் மக்கள் நலப் பணிகளையும் உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது என்பது அனைவராலும் பாராட்டப்படக்கூடிய ஒன்றாகும்.



1992 பிப்ரவரி 4] [திருமதி க. பழனியம்மாள்]

இங்கே பேசிய உறுப்பினர்கள் சிலர் இந்த மதுவிலக்கு கொண்டு வந்தபோது அதை இரண்டு கொம்புகளை உடைய காளையை அடக்குகின்ற நிகழ்ச்சியாக வர்ணித்துப் பேசினார்கள். ஒரு காளையை அடக்கக்கூடிய போராட்டத்தில் இறங்கும்போது ஒரு சாதாரண மனிதனால் அதில் இறங்கிவிட முடியாது. ஒரு வீரமிக்க மனிதன்தான் காளையை அடக்குகின்ற போராட்டத்தில் இறங்கமுடியும். அத்தகைய வீரத்தைப் பெற்று இருப்பவர் புரட்சித் தலைவி என்பது இங்கே அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அந்தக் காளையை அடக்கப் புறப்பட்ட அனைவருமே காளையை அடக்கிவிட முடியாது. ஒரே ஒருவர்தான் வெற்றியைப் பெற முடியும் என்பது சரித்திரம் காட்டும் உண்மை. அந்த வகையில் இந்த மது அரக்கனானது கொம்பு ஒடிக்கப்பட்ட காளையாகவும், நின்று கொண்டிருக்கிறது. அதிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள் என்பதை அனைவரும் இன்று ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். அந்தக் கொம்பு இழந்த காளையை அடக்குவது என்பது இன்றைக்கு கள்ளச் சாராயத்தை ஒழிக்கப்பட்டுவிட்ட நிலையில் மதுவிலக்கில் நமது மாநிலம் கட்டாயம் முழுமையாக அமல்படுத்தினாலும் முழுவதும் கள்ளச்சாராயம் ஒழிந்து விட்டது என்பதைக் காட்டுவதாகத்தான் அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே இங்கே பேசிய மற்றொரு உறுப்பினர் ஆளுநர் உரை மிகவும் அவசர அவசரமாக ஏதோ தப்பித்துக் கொள்ள வேண்டுமென்ற முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையிலே என்ன இல்லை என்பதை அவர்கள் நிரூபித்துக் காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழில் வளம், மக்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், சாலை வசதி, உணவு, சுகாதாரம், உடை போன்ற எல்லாவற்றையும் உள்ளடக்கியிருப்பதோடு, கல்வி மற்றும் குழந்தைகள் நலன், முதியோர் நலன், பெண்கள் நலன் ஆகிய எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக ஆளுநர் உரை அமைந்து இருக்கிறது என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இன்றைக்கு நாம் எல்லோரும் நினைத்துப் பார்க்க வேண்டிய ஒரு கட்டம் என்னவென்றால், சட்டம் ஒழுங்கு சீர் குலைந்திருந்த தமிழ்நாட்டிலே சட்டம்

[திருமதி க. பழனியம்மாள்] [1992 பிப்ரவரி 4

ஒழுங்கை நிலை நாட்டியதோடு இல்லாமல், காவிரி நீர்ப் பிரச்சினையிலும் எந்த முதல்வரும் பெறாத ஒரு சிறப்பான வெற்றியை நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

இங்கே ஜனநாயக முறைகளைப் பற்றியெல்லாம் நாம் இந்த மாமன்றத்திலே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அந்த ஜனநாயக மரபுகளை எல்லாம் கட்டிக் காக்கிற ஒரு முதல்வராக இந்த காவிரி நீர்ப் பிரச்சினை வந்தபோது, அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, அகிம்சை முறையில் இந்தப் போராட்டத்தை நடத்தி இன்றைக்கு காவிரி நீர்ப் பிரச்சினையில் மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள். அது நம் அனைவராலும் பாராட்டப்படக் கூடிய ஒரு நிகழ்ச்சியாகும். அது மட்டுமல்லாமல், கர்நாடகத்திலே வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டபோது, தமிழ்நாட்டைச் சேர்ந்த மக்கள், அங்கே பல்லாண்டுக் காலமாக வாழ்ந்து அவர்களுடைய சொத்துக்களையெல்லாம் இழந்து, தமிழ்நாட்டை நோக்கி வந்தபோது, அவர்களை தாயன்போடு வரவேற்று, அவர்களுக்குரிய பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுத்தது நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

பிற்பகல் 1-25

அடுத்து முக்கிய அம்சமாக கவர்னர் உரையைப் பார்த்தால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழை எளிய மக்களின் மீது எவ்வளவு அக்கறையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நம்மாலே புரிந்துகொள்ள முடியும். மத்திய அரசு அரிசியின் விலையை ஏற்றவில்லை என்று கூறினாலும், பொதுத் தொகுப்பிலிருந்து ஏற்படுகிற இழப்பை மாநில அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற காரணமாக இன்று அரிசியின் விலை ஏற்றப்பட்டிருக்கிறது. அந்த நிலையிலே கூட ஏழை மக்கள் உபயோகிக்கிற சாதாரண அரிசியின் விலையை நம்முடைய அரசு ஏற்றவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும். அது மட்டுமல்லாமல், இந்தக் கடுமையான பொருளாதார நெருக்கடியிலேகூட [illegible] சேவை வழங்க வேண்டும் என்ற திட்டத்தை [illegible] கொண்டிருக்கிறது நம்முடைய [illegible]



1992 பிப்ரவரி 4] [திருமதி க. பழனியம்மாள்]

இன்றைக்குச் சத்துணவுத் திட்டம் சீரமைக்கப்பட்டிருக்கிறது. முதியோர்களுக்கு தொடர்ந்து எல்லாவிதமான உதவிகளும் கிடைத்துக் கொண்டிருக்கிறது இப்படி ஏழையெளிய மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள அரசாக புரட்சித் தலைவியினுடைய அரசு கோலோச்சிக் கொண்டிருக்கிறது.

ஆளுநருடைய உரையானது மத்திய அரசு நம்முடைய மாநில அரசை எப்படி பார்க்கிறது என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. மத்திய தொகுப்பிலிருந்து 120 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. மத்திய திட்டங்களுக்கு இன்னும் ஒப்புதல் வரவில்லை. மூன்று தொழில் மையங்களை ஏற்படுத்த செயல்குறிப்புகள் அனுப்பப்பட்டிருந்தாலும் இன்னும் அதற்கு அனுமதி வராத நிலை இருக்கிறது. இத்தகைய நிலையிலே நம்முடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கட்டாயம் இதை நாங்கள் பெற்றுத் தந்துவிட முடியும் என்ற உறுதியை நமக்குக் கொடுத்திருப்பதால், அதைப் பெற்றுத் தருவார்கள். அதற்கு நாம் வேண்டிய ஒத்துழைப்பை நல்குவோம் என்பதை நான் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
(மணி அடிக்கப்பெற்றது)

அது மட்டுமல்லாமல், உணவு, உடை ஆகியவைகளை மட்டும் கொடுத்துவிட்டால் ஏழை மக்களுடைய வாழ்வு பூரணத்துவம் அடைய முடியாது என்பதை உணர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், அவர்களுடைய சுகாதார நிலையை உயர்த்த வேண்டும் என்பதற்காக இன்றைக்கு புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் என்பதை தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதை ஏழையெளிய மக்கள் வரவேற்றிருக்கிறார்கள். அவர்களுடைய ஏழ்மை நிலையின் காரணமாக, நேரம் பற்றாக்குறையின் காரணமாக மருத்துவமனைகளுக்குச் சென்று அவர்கள் தங்களை சோதித்துப் பார்த்துக்கொள்ள முடியாத நிலை இருப்பதால், அவர்களை நோக்கி டாக்டர்கள் சென்று அவர்களுக்கு அறிவுரை வழங்கி அவர்களுடைய நோய்களைக் கண்டறிந்து அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை கொடுப்பதை அவர்கள் மனமார வரவேற்கிறார்கள். இது ஒரு புரட்சிகரமான திட்டம் என்பதை அனைவரும் கைதட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களாகப் [illegible] செலவழித்துச் சென்று கண்டு பிடிக்க முடியாத கொடிய

நோய்களைக் கூட இன்றைக்கு மருத்துவ முகாம்களில் கண்டு பிடித்து டாக்டர்கள் அவர்களுக்குச் சிறந்த அறிவுரையை வழங்குகிறார்கள். நான் நேரிலேயே இதைப் பார்த்தேன். ஒரு கிராமத்தில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட 10 குழந்தைகளையும் 5 முதியோர்களையும் கண்டறிந்து டாக்டர்கள் சொல்லிய பிறகு தான் அவர்களுக்கே நோய் இருக்கிறது என்பதே தெரிய வந்திருக்கிறது. இவ்வாறாக சிறந்த ஒரு மருத்துவ நல முகாம் என்ற புரட்சிகரமான திட்டத்தை அமுல்படுத்திருப்பது நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியாக அமைந்திருக்கிறது. இத்தகைய நல்லாட்சியை அனைவரும் போற்றும் வண்ணம் நமக்கு எல்லாவிதமான ஒதுக்கீடுகளையும் மற்றும் ஆணைகளையும் மத்திய அரசு விரைவில் அளிக்க வேண்டும். மேலும் நம்முடைய ஆட்சி நல்லாட்சியாக அமைய பூரண ஒத்துழைப்பை நல்கி நாம் அனைவரும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி

பிற்பகல் 1.30

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி கூறுகின்ற இந்த விவாதத்திலே பங்கேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறுகின்றேன். இந்த ஆளுநர் உரையிலே பல்வேறு பகுதிகளிலே கூறப்பட்டுள்ள பல கருத்துக்களிலே மூன்று, நான்கு கருத்துக்களை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். தமிழகத்திலே நிலவிய வன்முறையை ஒழித்து, விடுதலைப்புலிகளின் கொட்டத்தை அடக்கி, தமிழகத்திலே சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, மிகச் சீரிய முறையிலே பாடுபட்டு சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்திய தமிழக முதல்வர் அவர்களை நாங்கள் பாராட்டுகின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டி உள்ளது. அதைக் கருத்திலே கொண்டு திருமதி ரமணி நல்லதம்பி மற்றும் ஏனைய 2 உறுப்பினர்களும் விரைந்து பேசி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



திருமதி ரமணி நல்லதம்பி : பட்டி தொட்டிகளிலே வாழ்கின்ற ஏழை எளியவர்களும் தாய்மார்களும் மனம் மகிழும் வகையிலே மதுவிலக்கை துணிச்சலோடு கொண்டு வந்து இருக்கிறார்கள். அதை நாங்கள் பாராட்டுகின்றோம். ஆனாலும் ஒன்றை எதிர் பார்த்தோம். பூரண மதுவிலக்கை அமல்படுத்துவார்கள் என்று. அதுபற்றி இதிலே குறிப்பிடப்படவில்லை. ஆனால் தமிழக முதல்வர் அவர்கள் பேசுகின்ற வேளையிலே, மதுவிலக்கை அமல் படுத்துவதனால் வருவாய் இழப்பு இருக்கின்றது என்றார்கள். அதை ஈடு செய்வது சிரமமாக இருக்கின்றது; மத்திய அரசு இதற்கு ஒரு 'அமென்ட்மென்ட்' கொண்டுவர முடியுமா என்று தமிழக முதல்வர் அவர்கள் கேட்டார்கள். அது எனக்கு மாத்திர மல்ல, தமிழகத்திலே வாழ்கின்ற அத்தனை தாய்மார்களுக்குமே ஐயத்தை ஏற்படுத்துகின்றது. ஒரு வேளை வருவாய்ப் பற்றாக் குறையைக் கருத்திலே கொண்டு இந்த மதுவிலக்கை ரத்து செய்துவிடுவார்களோ என்ற ஒரு அச்சத்தை ஏற்படுத்துகின்றது. அதனால் ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

இந்த மதுவிலக்கை அமல்படுத்தும் அதே நேரத்திலே எங்கள் சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூறினார்கள். அரசு இயந்திரம் அதுவாகத்தானே இருக்கின்றது. எப்படி அதை இயக்கி இந்த மதுவிலக்கை அமல்படுத்தப் போகின்றார்கள் என்ற ஐயப்பாட்டை அவர்கள் எழுப்பி இருந்தார்கள். நான் கூற விரும்புவது, அந்த மெஷினரியை 'ஓவர் ஆல்' பண்ணி, ரிப்பேர் பண்ணி, 'பார்ட்ஸ்' மாற்ற வேண்டியது இருந்தால் மாற்றி சீராக இயக்குவார்களேயானால் முறையாகச் செயல் படுத்த முடியும். ஒரு புது வண்டியை இயக்குவதுபோல் இயக்கமுடியும் என்று நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்து இருந்தேன். அது நினைவு இருக்குமென்று எண்ணுகின்றேன். ஆனால் ஆரம்பக் கட்டத்திலே அந்த மதுவிலக்கை நன்கு அமல்படுத்தினார்கள். ஓரளவுக்கு 'சப்ளை' குறைக்கப்பட்டு இருந்தது. இருந்தது. தாய்மார்கள் எல்லாம் சந்தோஷப்பட்டார்கள். அங்கே மது இருக்கின்றது, இங்கே மது இருக்கின்றது என்றெல்லாம் தகவல் தந்து கொண்டு இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை என்னவென்று கேட்டால், அது கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையிலே தாராளமாக அது விற்கப்படுகின்றது. காவல்துறையும் சரி, வருவாய்த்துறையும் சரி, கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக்கொண்டு பார்க்கின்றன அல்லது ஊக்குவித்துக்கொண்டு இருக்கின்றன. இது

தமிழக முதல்வர் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, எனக்குத் தெரியாது. ஆனால் அதைச் சுட்டிக்காட்டி தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டு இருக்கின்றேன். பெண்கள் பொதுவாக போராட்டத்துக்கு வர வேண்டுமென்று சொன்னால் ரொம்ப கஷ்டம். புருஷன்மார் களிடம் அடிபட்டு அவர்களுடைய வருவாயைப் பெற்று, குடும்பத்தினுடைய நிலையை நன்றாக உயர்த்தி, பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டிய கல்வியை, துணிமணிகளைக் கொடுத்து நல்ல வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முடியாமல் தவித்துக் கொண் டிருக்கிற தாய்மார்கள் அனைவரும் தமிழக முதல்வர் அவர்களிடம் இந்த மதுவிலக்கை எதிர்பார்த்தார்கள்; அதுவும் பூரண மது விலக்கை எதிர்பார்த்தார்கள். இன்றைக்கு 10 ரூபாய், 1 ரூபாய்க்கு குடிக்கிறவர்கள் 50 ரூபாய், 60 ரூபாய்க்கு மேல்நாட்டு மதுவகைகளைக் குடிக்கிற நிலை இருக்கிறது; கள்ளச் சாராயம் தாராளமாக கிடைக்கின்ற காரணத்தால் தாய்மார்கள் வேதனைப் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். புருஷன்மார்களிடம் அடிபடு வதைத் தாங்க முடியாத காரணத்தாலே என் தொகுதியிலே உவரியைச் சார்ந்த பெண்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெண்கள் புருஷன்மார் கிட்டே அடிபடுகிற பெண்கள் என்கிற மாதிரி அந்த அர்த்தத்திலே பேசிக்கொண்டு இருக்கின்றீர்கள். 'குடித்துவிட்டு வருகிற புருஷன்மார்களிடம்' என்று சொல்லுங்கள். ஏனென்றால், உறுப்பினர் சொல்வது மாறுபாடாகவும் இருக்கிறது. அடி கொடுக் கிற. . . .(சிரிப்பு)

**திருமதி ரமணி நல்லதம்பி:** குடிக்கிற கணவன்மார்களைத்தான் நான் குறிப்பிடுகிறேன். ஏனென்றால் எல்லோரும் அடிக்க மாட்டார்கள். மது மதியைக் கெடுக்கின்றது; மன அமைதியைக் கெடுக்கின்றது. குடும்பத்திலே நிம்மதியைக் குலைக்கின்றது. மங்கையர் தம் மனமகிழ்வைக் குலைக்கின்றது. ஆகவேதான் அவர்கள் இந்த நிலையிலே இருந்து தங்களை விடுவித்துக் கொள்ள தமிழக முதல்வர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக காவல் துறையையோ அல்லது மற்றவர்களையோ நம்ப முடியவில்லை என்ற காரணத்தினாலே, இப்படிப் போராட்டத் திற்கு வந்து மறியலில் ஈடுபட்டால், வீட்டிற்குத் திரும்பிப் போகும்போது மறுபடியும் இடி இருக்கிறது என்றது





தெரிந்தும்கூட துணிந்து கே.டி.சி. பஸ், எம்.டி.சி. பஸ்ஸை உவரியிலே மறித்து அங்கே இருந்த சாராயத்தை வெளியிலே எடுத்துப்போட்டு போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள் என் பதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று சொன்னால், மதுவின் கொடுமையை மக்கள் உணர்ந்து அதை வெறுக்கின்றார்கள். காங்கிரஸ் பேரியக்கம் அன்றிலிருந்து இன்று வரை அதைத் தெரிந்துகொண்டு இருக்கின்றது. ஆக சமூக நல அரசு என்று சொல்கிற, மக்கள் நல அரசு என்று சொல்கின்ற எந்த அரசுமே மதுவிலக்கைத்தான் அமல் படுத்த வேண்டும். பெரும் தலைவர் காமராசர் சொல்வார், 'ஒழுகாத வீடு, கிழியாத ஆடை, ஆறாத சோறு. இந்த மூன்றும் சப்ளை பண்ண வேண்டும்; அதுதான் அரசினுடைய கடமை' என்று. அந்த வகையிலே இன்றைக்கு பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கின்ற நீங்கள், திம்மதியாக அந்த கஞ்சியைக் குடிப்பதற்கு வழி செய்கிற வகையிலே இந்த மதுவிலக்கை பூரணமாக அமல்படுத்த வேண்டும். அதற்கு, வருவாய் குறைகின்றது என்று சொல்லாமல் அமல்படுத்த வேண்டும். வருவாயைப் பெருக்குவதற்கு அநேக வழிகள் இருக்கின்றன. அதாவது சேல்ஸ் டாக்ஸ் எவேஷனை, வரி ஏய்ப்பைத் தடுக்கலாம். இப்படிப்பட்டது நிறைய இருக்கின்றன. எடுத்துக்காட்டாக ஒருசிலவற்றைத்தான் நாம் சொல்ல முடியும்.

என்னுடைய தொகுதியிலே செங்கல், மண் வைத்து இருப்பவர்கள்; ஒரு லாரி மண்ணுக்கு பெர்மிட் வாங்கிவிட்டு, ஏகப்பட்ட செங்கல், மண்ணை குளத்தில் இருந்து எடுக்கிறார்கள். ஒரு லாரிக்கு இவ்வளவு என்று ஒரு தொகையை நிர்ணயம் செய்யலாம். அதுமாதிரி ஒரு செங்கல் சூளையில் எவ்வளவு செங்கற்களை வெளியேற்றுகிறார்களோ அந்த அளவுக்கு வரியை விதிக்கலாம். ஏற்கெனவே எங்கள் ஊர் பகுதியில் 46 இலட்சம் ரூபாய் வரி ஏய்ப்பைக் கண்டுபிடித்தார்கள். அது கோர்ட்டில் இருக்கிறது. இதைப்பற்றிக் குறிப்பிடும்போது வணிக வரித்துறை அதிகாரிகள் கூறுகிறார்கள் 'இந்த 46 இலட்சத்தைப்பற்றிப் பெரிதாகச் சொல்கிறீர்கள். அது சுப்ரீம் கோர்ட்டுக்கு போய் விட்டால் முடிந்து போச்சு' என்கிறார்கள். ஆகவே, வரி ஏய்ப்பு நடந்துகொண்டிருக்கிறது. 8 கோடி, 10 கோடி வரி ஏய்ப்பெல்லாம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, மக்களுக்கு

[திருமதி ரமணி நல்லதம்பி] [1992 பிப்ரவரி 4

அதிகமாக தொடர்பில்லாத துறைகளாக வருவாய்த் துறை, வணிகவரித் துறை, கனிம வளத்துறை ஆகியவை இருக்கின்றன. இவைகளிடம் மக்களுக்கு தொடர்பில்லாத காரணத்தால், மக்களுக்கு தெரியாத காரணத்தால் அவற்றை சுட்டிக்காட்டத் தெரியாமல் தவிக்கிறார்கள். அரசு இதில் கவனம் செலுத்தி இந்தத் துறைகளையெல்லாம் கொஞ்சம் முடுக்கி விட்டால் நிறைய வருவாய் பெருக்க முடியும்.

பிற்பகல் 1.35

கனிம வளத்துறையில் 99 வருட லீஸ் என்று கொடுத்து விடுகிறார்கள். கல் உடைப்பதற்கு, மற்றவைக்கு இப்படி கொடுக்கிறார்கள். இவைகளுக்கு லாரிக்கு இவ்வளவு, ஏரியாவுக்கு இவ்வளவு என்று ரேட்டை நிர்ணயம் பண்ணினால் நல்லது. அதன்மூலம் நிறைய வருவாய் வரும். என்னுடைய தொகுதியில் முடவன்குளத்தில் வைரம் இருக்கிறது; அதை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 2, 3 கிலோமீட்டர் வரை குறிப்பிட்ட ஆழத்திற்கு பூமியைத் தோண்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தகவலை நான் கொடுக்க முயன்று தோல்வியடைந்தேன். பிறகு இப்போது களக்காட்டு மலையில் அதுமாதிரி தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். இது நாங்குநேரிப் பகுதியைச் சேர்ந்தது. இதிலே கேரளத்தைச் சேர்ந்தவர்களும், பம்பாயைச் சேர்ந்தவர்களும் வந்து நல்ல வைரத்தை கடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதிலே தொழிலாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை ஆட்சித் தலைவரும், வனத்துறையைச் சேர்ந்தவர்களும் அரசுக்கு சரியாக தகவல் தெரிவிக்க தவறிவிட்டார்கள் என்றே கருதுகிறேன். ஆகவே, இந்த வாய்ப்பை பயன்படுத்தி இதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட செயல்களுக்கு வனத்துறையைச் சேர்ந்தவர்களும் உடந்தையாக இருக்கிறார்கள். தோட்டா வைத்து வெடித்து அந்த வைரத்தை எடுக்கிறார்கள் என்றெல்லாம் தாராளமாக மக்கள் பேசிக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட காரியங்களில் நீங்கள் தலையிடுவீர்களானால் நிச்சயமாக இந்த அரசுக்கு வருவாய் கூடும். ஆகவே, பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுதான் தாய்க்குலத்தினுடைய எதிர்பார்ப்பு என்றும் தமிழக முதல்வர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1992 பிப்ரவரி 4] [திருமதி ரமணி நல்லதம்பி]

ஸ்தல ஸ்தாபன தேர்தல்கள் பற்றி இதிலே ஒன்றும் இல்லை. பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தல்கள், கூட்டுறவுத் தேர்தல்கள இருக்கிறது. இந்தத் தேர்தல்களை சீக்கிரமாக நீங்கள் நடத்து வதற்காக உரிய முயற்சிகளை மேற்கொண்டு மக்களுக்கு இவ்வளவு நாளில் தேர்தல் நடக்கும் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரவலாக, பெரிய அளவில் காணப்படுகிற வேலையின்மையை குறைத்து, வேலை வாய்ப்பைப் பெருக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழக முதல்வர் அவர்களுக்கு ஒரு தாழ்மையான வேண்டுகோளை வேலையில்லாதவர்கள் சார்பாக சமர்ப்பிக்க விரும்புகிறேன். அதாவது எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சில் பதிய வைத்துவிடுகிறார்கள். 10 வருடம், 12 வருடம் காத்திருக்கிறார்கள். அதற்கு பிறகு வயதாகிவிட்டது என்று தள்ளி விடுகிறார்கள். அப்படியானால் இவ்வளவு நாட்கள் காத்து இருந்ததற்கு பொருள் என்ன? ஆகவே, இந்த வேலை வாய்ப்புக்கு நிர்ணயம் செய்திருக்கிற வயதை தமிழகம் முன்னோடியாக நின்று ரத்து செய்ய வேண்டும். அவர்களுக்கு எத்தனை வயதாக இருந்தாலும் சரி, 55 வயது வரை டிபார்ட்மென்டில் வேலை செய்யலாம் என்றால், அவன் 5 வருடம் வேலை பார்த்தாலும் சரி, 50 வயதிலே வேலை வாய்ப்பு கிடைத்தாலும் அதை கொடுக்கக் கூடிய நிலையில் வேலைவாய்ப்புக்கான அந்த ஏஜ் லிமிட்டை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் தற்போது இளைஞர்கள் பெரிய பிரச்சினையாக இருக்கிறார்கள். அதனால் தான் வன்முறைகள் நிறைய வளர்கிறது. போதை மருந்து, பவுடர், இன்ஜெக்ஷன் இப்படி என்னென்னவோ சொல்கிறார்கள். இவைகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு, என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கிறார்கள். அவர்கள் திருமண வயதை அடையும்போது வேலை இல்லையென்றால் ஒருவனும் பெண் தரமாட்டான். ஆகவே, அவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் வம்புகாரியங்களில், வேண்டாத காரியங்களில் ஈடுபட்டு, கொலை, கொள்ளை, கற்பழிப்பு ஆகிய வற்றில் ஈடுபட்டு, தேசவிரோத சக்திகளாக மாறிவிடுகிறார்கள். இன்றைக்கு பார்க்கும்போது இலங்கைக்கு கூட இங்கேயிருந்து போராளிகள் பயிற்சி பெற்று செல்கிறார்கள் என்றெல்லாம் பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. இப்படிப்பட்ட செயல்களில்

எல்லாம் இளைஞர்கள், வருங்கால சமுதாயம் ஈடுபடாத வகையில் தடுத்து நிறுத்தும் வகையில் இந்த லஞ் லிமிட்டை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிகளைப் பற்றிச் சொல்கிறபோது ஓராசிரியர் பள்ளிகளை ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றுவோம் என்று சொல்கிறார்கள். பள்ளிக்கூடங்களைப் பார்க்கும்போது அரசு நடத்தும் பள்ளிகளில் தரம் ரொம்பவும் தாழ்வாக இருக்கிறது. எங்கேயாவது ஒன்றிரண்டு எக்சம்ஷென்ஸ் இருக்கும். இன்று தனியார் பள்ளிகள், தொண்டு நிறுவனங்கள், கிறிஸ்துவ பள்ளிகளில்தான் தரமான கல்வி கிடைக்கிறது. இந்த பள்ளி நிறுவனங்களில் 10 வருடம், 15 வருடம் வேலை பார்த்தவர்கள் எல்லாம் சம்பளம் பெற முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்றால் 60 மாணவர்கள் இருப்பார்கள். நல்ல எஜுகேஷனுக்கு வேண்டிய என்வைரன்மென்ட்—கிளாஸ் ரூம், டெஸ்க், டேபிள், பெஞ்சஸ், பிளாக் போர்ட், பாத்ரூம் பெசிலிட்டிஸ், லேப் பெசிலிட்டிஸ் ஆகிய எல்லா பெசிலிட்டிஸ்ஸும் டீச்சர்களோடு இருந்தும் கூட இந்த அரசு அவர்களுக்கு டீச்சர் போஸ்ட்களை சாங்ஷன் பண்ணத் தவறுகிறது. ஆனால் அரசு நடத்தும் பள்ளிகளில் கட்டடம் இல்லாமல், மரத்தடியில் இருக்கும் இடங்களில் இதனைக் கொடுத்துவிட்டு, தொண்டு நிறுவனங்களிடம் பள்ளிக்கட்டடங்கள் கட்டித்தர கேட்டால் என்ன பொருள் என்று தெரியவில்லை எனவே, தயவுசெய்து இந்தக் கல்வி கொள்கையை மாற்றிட வேண்டும். தனியார் பள்ளிகள், கான்வென்ட்டுகள் போன்றவற்றிற்குதான் நிறையபேர் தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைக்க விரும்புகிறார்கள். அப்படி இந்த நிலை மாறி இவர்களுக்கு ஒரு புறக்கணிப்பு ஏற்படுமானால், கல்வி நிறுவனங்கள் முழுவதும் கவர்மென்ட் கையில் வந்தால், வருங்காலத்தில் கல்வியின் தரம் மிகவும் தாழ்ந்துவிடும். ஐ.ஏ.எஸ். வரவில்லை, ஐ.பி.எஸ். வரவில்லை என்று வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நாம் இந்தமாதிரி ஒரு கல்வி கொள்கையைக் கடைபிடித்தோமானால் அதன் பாதிப்பு நம் எதிர்கால மக்களுக்கு என்பதால் இதனை இந்தநேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





அடுத்து அடிப்படைத் தேவையான குடிதண்ணீர், சாலை, பஸ், தெரு விளக்குகள் எல்லாம் செய்து கொடுப்போம் என்று இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மற்ற இடங்களில் எப்படி இருக்கிறதோ தெரியாது—அடிபம்புகள் அனைத்தும் ரிப்பேராக தான் இருக்கின்றன. மோட்டார் வைத்த மேல்நிலைத் தொட்டிகள் இருப்பதெல்லாம் ரிப்பேராகத் தான் இருக்கின்றன. என்ன நிலைமை அங்கே நிலவுகிறது என்றால் 4, 5 யூனியன்களுக்கு சேர்த்து ஒரே எலக்ட்ரிஷியன் கடைக்காரனை ஏற்பாடு பண்ணிவிடுகிறார்கள். 4, 5 யூனியன்களில் உள்ள ரிப்பேர்கள் பூராவும் ஒரே ஆள் கையில் கொடுக்கும்போது ஒரு மொனோபொலி நிலை ஏற்பட்டு அவன் கை அப்பர் ஹாண்ட் ஆகிவிடுகிறது. அப்படி ஒரு சூழ்நிலை வருகிறபோது அவர் சொன்னது தான் ரேட். புதிய மோட்டார் வாங்கும் விலையை விட ரிப்பேரிங் செலவு அதிகமாக ஆகிறது. காலாகாலத்தில் அதை செய்து தராமல், மக்கள் தண்ணீர் வரவில்லையென்று சொல்கிற நிலையில் இருக்கிறார்கள். அது மாத்திரமல்லாமல், என்னுடைய தொகுதியில் திசையன்விளையில் 10 குடம் பிடிக்கிற மாட்டு வண்டி தண்ணீர் 12 ரூபாய் விற்கிறது. உவரி, மூட்டம் போன்ற பகுதியிலே ஒரு குடம் தண்ணீர் 65 பைசாவாக இருக்கிறது. வடக்கன்குளம், இடிந்தகரை, போன்ற பகுதிகளிலே ஒரு குடம் தண்ணீர் 1 ரூபாயாக விற்கிறது. ஆகவே, குடிநீர் விநியோகத்திலே எத்தனையோ முறை லத்தி சார்ஜ் நடக்கக்கூடிய அளவிலே பல போராட்டங்களை கடந்த காலங்களில் நாங்கள் நடத்தியும் கூட, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய நிலை உருவாகவில்லை. விலை கொடுத்து நீர் வாங்கக் கூடிய அவல நிலை இருக்கிறது. நிறைய மழை பெய்தும், தண்ணீர் போகும் போக்கெல்லாம், பொதுப்பணித்துறை குளங்களைச் செப்பனிட்டு, மெயின்டெயின் பண்ணாத காரணத்தால். அவைகள் வெள்ளமாக போய்ச் சேர்ந்துவிடுகின்றன. அங்கங்கே செக்-டாம் கட்டலாம். ஒன்றுமே செய்யவில்லை. ஏதோ, தாமிரபரணி ஆற்றிலே உலக வங்கிக் கடனிலே, 2 சாத்திலும், மண் அள்ளிப்போடப் போகிறோம் என்று சொல்கிறார்கள். அது அங்கே இல்லை. தாமிரபரணி ஆறு, என் கரைக்கு எல்லாம் மண் போடவில்லை என்று அழவில்லை. மக்கள்தான் எங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை என்று அவலக்குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டிலாவது ஆக்கபூர்வமாக,

[திருமதி ரமணி நல்லதம்பி] [1992 பிப்ரவரி 4

செக்-டாம் கட்டுவது, கால்வாய் கட்டுவது, குளங்களைக் கட்டுவது, பெர்குலேசன் பாண்ட் ஏற்படுத்துவது போன்ற வகையிலே பணத்தைச் செலவழித்து, நல்ல பலனை ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.40)

அடுத்து, கூட்டுக்குடிநீர்த்திட்டம் என்று சொல்லி, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பொன்முடி ஆட்சி காலத்தில், வாக்குறுதி தரப்பட்டது. அது ஆய்விலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கு 20 அல்லது 30 கோடி ரூபாய் ஆகும் என்று எண்ணுகிறேன். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால், 3 போர்சன்கள், அதாவது சாத்தான் குளத்திலே ஒரு போர்சன், நாங்குநேரியிலே ஒரு போர்சன், ராதாபுரத்திலே பெரும்பான்மையாக ஒரு போர்சன், இவைகள் எல்லாம் பயன் அடையும். எனவே, இந்த மூன்று பகுதிகளுக்குப் பயனை அளிக்கின்ற இந்தத் திட்டத்தை, 3 இடங்களுக்கு ஈடுசெய்கின்ற வகையிலே இருக்கின்ற இந்த தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தித் தர தமிழக முதலமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து, நிதிநிலையை செலவழிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அணைகளைப் பொறுத்தவரையில், கொடுமுடியாறு என்று ஒரு அணை இருக்கிறது. இதற்கு நாங்கள் பல போராட்டங்களை நடத்தினோம். அதற்கு இரண்டாவது கட்ட கட்டுமானப் பணிக்கு, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்திலே, 1984-லே 85 லட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கி அந்த வேலைகள் எல்லாம் நடந்து, இடையிலே கைவிடப்பட்டு, ஆக்கிரமிப்புக்கு ஆளாகி இப்படி எல்லாம் ஆகியிருக்கிறது என்பதால், பல போராட்டங்களை நடத்தினோம். அமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்ற அன்றைக்கே மனுவைக் கொடுத்து, நிச்சயமாக அது நடக்கும் என்று அவர்கள் உத்தரவாதத்தைத் தந்து, 50 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் பொதுப்பணித்துறை அதிகாரிகள் இப்போது நான் சாம்பிள் பண்ணுகிறோம் மண்ணை என்று சொல்கிறார்கள். 85 லட்சம் ரூபாய்க்கு வேலை செய்யும் போது, என்ன சாம்பிள் பண்ணுகிறார்களோ. எனக்குத் தெரியவில்லை, 1974-லேயிருந்து. ஆகவே, அந்த வேலையைத் துரிதப்



1992 பிப்ரவரி 4] [திருமதி ரமணி நல்லதம்பி]

படுத்தி, அரசு அத்தனை முன்னோடி நடவடிக்கைகளை எடுத்து, விவசாயப் பெருங்குடி மக்களைக் காக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்**: மன்னிக்கவேண்டும், பேரவைத் தலைவர் அவர்களே, நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரமணி நல்லதம்பி அவர்கள் ஒரு பிரச்சினையைப் பற்றிச் சொல்கிற நேரத்திலே, அவர்களுடைய தொகுதியிலே, இன்றைக்கு தமிழகத்திலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன, இல்லை என்று சொல்லவில்லை, ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது என்பதை அவர்கள் நன்றியோடு நினைத்துப் பார்க்கவேண்டும். அவர்கள் கேட்கின்ற நேரத்திலே எல்லாம், அமைச்சரைச் சந்தித்து, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களிடத்திலே மனுவைக் கொடுத்த நேரங்களிலே எல்லாம், தண்ணீரைத் திறந்துவிட்டது இந்த அரசு என்பதை அவர்கள் நன்றியோடு நினைத்துப் பார்க்கவேண்டும். அணைகளைக் கட்டுகின்ற நேரத்திலே — அதற்குத் திட்டம் தயாரிக்கப்படுகிறபோது, அந்த அணைகளை எப்படிக் கட்ட வேண்டும் என்று விதிமுறை இருக்கிறது. அவர்கள் சொல்வது போல், நினைத்தவுடனேயே அணையைக் கட்டிவிட முடியாது. சாயில் டெஸ்ட் பண்ணவேண்டும். அங்கேயிருக்கிற பல்வேறு அடிப்படை ஆதாரங்களை நாம் தேர்ந்தெடுத்ததற்குப் பின்னாலே தான் ஒரு அணையைக் கட்டுகின்ற பணியைத் தொடங்க முடியும். நம்முடைய உறுப்பினர் அவர்கள் அவசரப்படுவதைப்போல், எடுத்த உடனேயே செங்கற்களை வைத்து அணையைக் கட்டிவிட முடியாது. ஆகவே முதலிலே பிரிலிமினரி ஆக்சன் என்று சொல்வார்களே, அந்த முன் நடவடிக்கைகளை எடுத்து, அதற்குப் பிறகு உரிய முறையிலே, அதற்கான டெண்டர்கள் கோரப்பட்டு, அதற்குப் பின்னாலே நடவடிக்கைகள் தொடரும். ஆகவே இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு, அதற்கான ஆக்கபூர்வமான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு, அவர்கள் ஏரிகளிலே எல்லாம் தூர் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதற்கு 3½ கோடி ரூபாய்க்கு ரிவைஸ்டு எஸ்டிமேட் போடப்பட்டு, இன்றைக்கு பைனான்ஸ் டிபார்ட்

மெண்டிலே கிளியரன்ஸ் கேட்டிருக்கிறோம். தென் மாவட்டங்களிலே, அதுவும் குறிப்பாக, திருநெல்வேலி பகுதியிலே இருக்கிற ஏரிகளை எல்லாம் மேம்படுத்தவேண்டும் என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கொடுத்திருக்கிற அந்தக் கோரிக்கைகள் எல்லாம் இந்த அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது. குளங்களைச் சீர்படுத்தவேண்டும், ஏரிகளைச் சீர்படுத்தவேண்டும் என்று சொன்னார்கள். ஏதோ உதவாக்கரைத் திட்டத்திற்காக பணம் செலவழிக்கப்பட்டதாக நம்முடைய திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் அடுக்கடுக்காகக் குற்றச் சாட்டுக்களை இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எந்தத் திட்டமும், இந்த அரசை பொறுத்தமட்டிலே, மிகச் சிறந்த திட்டமாக, நியாயமாக மக்களுக்குச் சேரவேண்டிய திட்டமாக இருந்தால்தான், இந்த அரசு அதற்கு அனுமதி கொடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

எங்களைப் பொறுத்தமட்டிலும், மக்கள் செலுத்துகின்ற வரிப் பணம் ஒவ்வொன்றும் முறையாகச் செலவழிக்கப்படவேண்டும் என்பதிலே எங்களுடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். 20 ஆண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியிலே நாம் பார்த்திருக்கிறோம். திருமதி ரமணி நல்லதம்பி, நீண்ட நெடிய பாரம்பரியம் உள்ள கட்சியைச் சேர்ந்தவர்கள். அடுக்கடுக்கான குற்றங்களை சொல்கின்ற நேரத்தில், கொஞ்சம் நிதானமாகச் சொல்லவேண்டும். குற்றச்சாட்டு இருந்தால், அதைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக பொதுப்பணித்துறை என்று ஒட்டுமொத்தமாகச் சொல்லக்கூடாது. குறைகள் இருக்கலாம். அதை எடுத்துக் காட்ட வேண்டியது உங்களுடைய பொறுப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களும் விரிவாகப் பதில் கொடுத்துக் கொண்டிருக்கலாம். திருமதி ரமணி நல்லதம்பி அவர்களும் விரிவாக பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் நேரம் 1-44 ஆகிவிட்டது. இந்த மன்றிலே கொண்டு வேறொரு உறுப்பினர் முடிக்கவேண்டும்.





பிற்பகல் 1-45

**திருமதி ரமணி நல்லதம்பி :** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் நான் குறிப்பிடவில்லை. அரசு இயந்திரம் அப்படி பாவலா காட்டிக் கொண்டிருக்கிறது. சில இடங்களிலே வேண்டும் என்று சில தகவல்களை மறைத்தும், திரித்தும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனாலே பாதிப்பு ஏற்படுகிறது என்றுதான் நான் சொல்கிறேன். ஆகவே, இது உங்களுடைய கவனத்திற்கு வந்தால், அதை சரிசெய்வதற்கு உதவியாக இருக்கும் என்பதால் நான் சொல்கிறேன். 85 லட்ச ரூபாய்க்கு அங்கே வேலை நடந்திருக்கிறது. இனிமேல் சாயில் டெஸ்ட் என்பது தவறான கருத்து என்றுதான் சொல்கிறேன். குளங்கள் எல்லாம் பழுது பார்க்கப்படாமல் இருந்தது பழைய காலத்திலே. அதனால் இன்றைக்கு தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. அதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுக்கின்றேன்.

எலக்ட்ரிக்சிடியைப் பொறுத்தவரையில் பி. டீ. ஓ.-வைக கேட்கும்போது நிறைய பல்புகளைக் கொடுத்து விடுகிறார்கள். ஆனால் ஹெல்பர்கள் வந்து சரியாக அவற்றை மாட்டவில்லை என்று சொல்கிறார்கள். மாற்றியவுடன் அது பியூஸ் ஆகிவிடுகின்ற ஒரு நிலை இருக்கிறது. ஹெல்பர் இல்லாத காரணத்தால் என்னுடைய தொகுதியில் பல இடங்களில் பொது மக்களே அந்த கம்புகளின் மீது ஏறி, ப்யூஸ் போகும்போது அதை மாட்டி, சில சமயங்களில் மரணங்கள்கூட அங்கே சம்பவித்து இருக்கின்றன. ஆகவே அந்த ஹெல்பர்களை எப்படியும் அந்த இடத்திலேயிருந்து அவற்றை மாட்டக்கூடிய ஒரு நிலை இருக்கவேண்டுமென்ற சூழ்நிலையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய நன்றி உரையினை முடித்துக்கொள்கிறேன், இன்னும் பல கருத்துக்கள் இருந்தாலும், நேரத்தினைக் கருத்திலே நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வி. ஜி. மணி மேகலை.

**திருமதி வி. ஜி. மணிமேகலை :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தரணி வாழ் தமிழ் மக்களின் இதயங்களில் இடம் பதித்து, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவியாய் உயர்ந்து நின்று செங்கோல் ஏந்தி உலா வரும் வெற்றியின்

[திருமதி வி. ஜி. மணிமேகலை] [1992 பிப்ரவரி 4

சின்னமும், வீரத்தின் மறு உருவமும், நடமாடும் புகழ் இமயமும் ஆகிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, வலிவும், பொலிவும் மிக்க இந்த சட்டமன்றப் பேரவையில் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே மேதகு ஆளுநரின் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தையொட்டி பேச வந்தல் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தன் நிகரில்லா தமிழ் மொழியின் தனிப் பெரும் தலைமகனாகிய திருவள்ளுவ பெருமகனார் கூறிய நாடு என்னும் அதிகாரத்தில் நாட்டு வளம் பற்றி அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

"பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு".

பல்வேறு காரணங்களால் பல்வேறு சுமைகள் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டாலும் அதனைத் தாங்கிக் கொண்டு அரசனுக்கு உரிய வரிப் பணத்திற்கு குறைவல்லாது தர வல்லது நாடு என்பது இக் குறளின் நய உரை என்ற வகையிலே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியும் அவரது தலைமையைப் பெற்ற செங்கோல் அரசும் மக்கள் நல அரசு என்பதற்கேற்ப இக்குறளினை இன்னும் ஒரு படி மேலே சென்று முன் நோக்கி எடுத்துச் சென்றிருக்கிறது என்பதை பெருமித உணர்வோடு சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, கர்நாடக கலவரத்தால் இலட்சக்கணக்கான தமிழர்கள் உள்நாட்டிலேயே அகதிகளாகக் குடியேறிய கொடுமை, மது விலக்கினால் அரசுக்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய வருவாய் இழப்பு, இத்தனை சோதனைகளையும், சுமைகளையும் கடந்து மக்கள் மீது சுமத்தாமல் தானே சுமந்து சமாளிக்க முனையும் தாயுள்ளத்தை, தயாள சிந்தனையை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடம் காண முடிகிறது.

மேதகு ஆளுநரின் உரை புரட்சித் தலைவியின் தாயுள்ளத்தைத் தான் படம் பிடித்து நிற்கிறது. இந்த உரையின் பெரும்பகுதி ஏழை எளிய மக்களின் நலன் கருதி, குறிப்பாக [illegible] முன்னேற்றத்தை மையப்படுத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. [illegible] நோக்கி பாய்ந்து ஓடும் புனலைப் [illegible] [illegible] முறும் [illegible] முன்னே [illegible] [illegible] ஆமை [illegible]. [illegible] வாழும் [illegible] மக்களை எல்லாம், [illegible] [illegible] பகுதி



1992 பிப்ரவரி 4] [திருமதி வி. ஜி. மணிமேகலை]

னால், அது மிகையாகாது. நாட்டின் ஒற்றுமைக்கு ஊறு விளை விக்கும் வகையிலே அபாய சக்தியை அறிவால் கண்டு உணர்ந்தும், ஆற்றாது அல்லல்படும் மக்களின் வறுமையை இதயத்தால் கண்டும் உய்விக்க முடியும் உன்னத பணியில் நம்முடைய புரட்சித் தலைவி வெற்றி மீது வெற்றி ஈட்டி வருகிறார் என்று சொன்னால் அது மிகையாகாது. எதிர் எதிர் சொல்லும் அந்த இரட்டை குதிரை களை லாவகமாக இயக்கும் ஒற்றைச் சாரதியாய் ஒப்பற்ற புரட்சித் தலைவி அவர்கள் விளங்குகின்றார்கள். எனக்கு முன்னால் பேசிய சில பேர் எல்லாம் குறிப்பாக மது விலக்கைப் பற்றிச் சொன்னார்கள். (குறுக்கீடு) இந்த இடத்திலே நான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மது விலக்கிற்கு எந்த அளவிற்கு மக்களின் செல்வாக்கு இருக் கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விழைகின்றேன். என்னுடைய தொகுதியான அருப்புக்கோட்டையிலே உள்ள புலிக்குறிச்சி என்னும் பஞ்சாயத்திலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மதுவிலக்கை குறிப்பாகச் சொன்ன உடனே அவர்கள் சுட்டிக்காட்டியதை நாங்கள் உடனே நிறைவேற்றுவோம் என்ற வகையிலே அந்த பஞ்சாயத்திலே உள்ள கிராமத்து மக்கள் அனைவரும் ஒன்று கூடி நாங்கள் இனிமேல் இந்த கிராமத்திலே யார் மதுவைக் குடித்தாலோ அல்லது விற் பனை செய்வதற்கு உடந்தையாக இருந்தாலோ அவர்களை அந்த கிராமத்தை விட்டு தள்ளி வைப்போம் என்ற ஒரு திட்டத்தை அவர்களுக்குள்ளேயே ஒரு கட்டுப்பாட்டை விதித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு இந்த மாமன்றத் திலே சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

தமது காவல் துறையின் சாதனைகளும் அதன் புகழ்மிக்க வர லாறும் நாடு அறிந்த ஒன்று. அத்துறையின் கூர் மதியை மேலும் செம்மைபடுத்துவதற்கு 80.45 கோடி ரூபாய் செலவில் நவீன மயத் தும் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு மாநிலங் களில் நடைபெறும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவினை மனதில் கொண்டு, அத்தகைய நிலை நமது மாநிலத்திற்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதைக் கருத்திலே கொண்டு இந்த முன் னெச்சரிக்கை நடவடிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்றால்

[திருமதி வி. ஜி. மணிமேகலை] [1992 பிப்ரவரி 4

அது பாராட்டுக்கு உரியது. காவல் துறையை நவீனப்படுத்தும்
இந்த திட்டம், தேங்கிக் கிடக்கும் குட்டையிலே புது வெள்ளத்தை
பாய்ச்சுவதுபோல அன்று, ஊருக்குப் பயன்படும் ஊருணியிலே
பன்னீரை தெளிப்பதற்கு ஒப்பானது.

காவிரிப் நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் இந்திய
கூட்டாட்சி தத்துவத்திற்கே வேட்டு வைக்கும் வகையில், சில
கன்னட வெறியர்கள் நாகரிகம் அற்ற முறையிலே நடந்திருக்கின்
றார்கள். அதன் காரணமாக லட்சக் கணக்கான தமிழ் சகோ
தரர்கள் ஆதரவு அற்றவர்களாக, அகதிகளாக ஆக்கப்பட்டு தங்
களுடைய உடமைகளை ஏன் உரிமைகளை இழந்திருக்கின்றனர்.
அவற்றை கூட உழைப்பால் ஈட்டிக் கொள்ளலாம் மீட்டுக் கொள்ள
லாம். ஆனால் இழக்கக் கூடாத மானத்தை கற்பை நமது தமிழ்
சகோதரிகள் இழந்திருக்கின்றார்கள். இவ்வளவுக்கும் பிறகும்
கூட தமிழ் மக்கள் பொறுமையை கடைபிடித்திருக்கிறார்கள்
என்றால் அது அவர்கள் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையே ஆகும். நமது புரட்சித்
தலைவியும் வரலாறு படைக்கும் விதத்தில், அனைத்துக் கட்சி
களையும் ஒருமைப்படுத்தி, ஒன்று சேர்த்து வெற்றிகரமாக ஒரு
நாள் வேலை நிறுத்தத்தை நடத்திக் காட்டியிருக்கின்றார்கள்.
தமிழ் மக்களின் இந்த ஒட்டு மொத்தமான உணர்வை மத்திய
அரசு புரிந்துக்கொண்டு ஆளுநர் உரையிலே குறிப்பிட்டதைப்
போல கர்நாடக தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பினை ஈடு
செய்வதற்கு உரிய நேரிடை நடவடிக்கையில் இந்திய பிரதமர்
அவர்கள் ஈடுபட்டு ஆகவேண்டும்.

ஏழைகள் நலிந்த பிரிவினர், வசதி வாய்ப்பு அற்றவர்கள் ஆகி
யோர்களுடைய நலனைப் பாதுகாக்க நம்முடைய அரசு உரிய
முன் உரிமையை அளித்திருப்பது நமக்கு ஊக்கத்தை அளிக்
கிறது. ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார்
பேரறிஞர் அண்ணா. ஏழைகளின் சுமைகளை நாம் எல்லோரும்
பகிர்ந்துகொள்வோம் என்றார் புரட்சித் தலைவர். அதே
உணர்வில்தான் நமது புரட்சித் தலைவி அவர்களும் ஏழை எளிய
மக்களோடு இணைந்து தம்மை இனம் காட்டியிருக்கிறார்கள்.
குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலை
வழங்கும் திட்டத்தின்கீழ் 1.20 கோடி மக்கள் பயன் பெற்றிருக்
கிறார்கள் என்று நான் சொன்னால் அது மிகையாகாது.



1992 பிப்ரவரி 4] [திருமதி வி. ஜி. மணிமேகலை]

"கையது கொண்டு மெய்யது போர்த்தி
காலது கொண்டு மேலது தழீஇ"

என்று பழம் தமிழ் இலக்கியம் வறுமையை படம் பிடித்துக் காட்டு
கின்றது. அத்தகைய நிலையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே
வாழும் நம் மக்களுக்கு நம் புரட்சி தலைவியும் தீர்வு காண முற்
பட்டிருக்கிறார். மேலும் கிராம தன்னிறைவுத் திட்டத்தின்கீழ்
கிராமிய போக்குவரத்துக்களை மேம்படுத்துவதிலும் ஆதி
திராவிடர் பழங்குடியினர் வாழும் குடிநீர் இல்லா குக்கிராமங்
களுக்கு குடிநீர் வசதியைப் பெருக்குவதிலும், ஓராசிரியர் பள்ளி
யில் ஈராசிரியரை நியமிப்பது உட்பட பல திட்டங்கள் கிராம
முன்னேற்றங்களில் கவனம் செலுத்தும் திட்டங்களாகும். "காடு
கொன்றும் நாடு கொன்றும் குளம் தொட்டு வளம் பெருக்கி" என்று
சோழ வள நாட்டை கரிகாற்பெருவளத்தான் புதுமைப்படுத்திய
தாக சங்க இலக்கியம் கூறுகின்றது. சிற்றூரும், பேரூரும், நகரங்
களும் இக்காலத்தில் பல்கி பெருகி விட்டதால் இயற்கை வளங்
களும் பின்னணியும் அழிக்கப்பட்டு வருகின்றன. அதனால் மழை
வளம் குறைந்து வருகின்றது. எனவே புதியதாக காடுகளை ஏற்
படுத்த மரங்களை வளர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.
மேதகு ஆளுநர் உரையில் இத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது.
குறிப்பாக மரங்களை வளர்க்கும் உழவர்களுக்கு ஊக்கத் தொகை
வழங்கப்படுவதாக குறிப்பிட்டிருப்பது கவர்ச்சிகரமான அதே
வேளையில் தேவையான ஒன்றாகும்.

பொதுவாக இந்த உரையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து
அம்சங்களும் மக்கள் நலன் கருதி மாநில பொருளாதாரத்தை
உயர்த்தும் வகையில் அமைந்திருப்பதை மனமார பாராட்டி
மேலும் சில வேண்டுகோளை இந்த அவைமுன் வைக்க விரும்பு
கிறேன். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது அந்த
நாட்டின் விரைவான தடங்கல் அற்ற போக்குவரத்தை ஒட்டியும்,
மின்வளர்ச்சியை ஒட்டியும் தான் அமைகின்றது. தமிழகத்தில்
போக்குவரத்து வசதி என்பது பொதுவாக நல்ல நிலையில் இருக்
கிறது என்றாலும் இன்னும் கூடுதலான வசதிகளைப் பெருக்க
வேண்டும். குறிப்பாக தேசிய நெடுஞ்சாலைகளை இன்னும் நல்ல
முறையில் செம்மை படுத்தி, மாநில நெடுஞ்சாலையை அவற்றுடன்
இணைக்க வேண்டும். சென்னை-கன்னியாகுமரி நெடுஞ்சாலைப்
பணிகளை மிக விரைந்து தொடங்குவதற்கு ஆவன செய்ய
வேண்டும். இவ்வாறே சென்னை-மதுரை அகல இரயில் பாதை
திட்டத்திற்கு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

[திருமதி வி. ஜி. மணிமேகலை] [1992 பிப்ரவரி 4

அனல் மின் திட்டம், புனல் மின் திட்டம் ஆகிய இரண்டையும் இன்னும் செம்மை படுத்தி கூடுதல் மின்சாரத்தை தயாரிப்பதற்கு வழி வகை செய்ய வேண்டும். மற்ற மாநிலங்களை விட தமிழகம் பெற்றிருக்கும் தனிச் சிறப்பே அதன் நீண்ட கடற்கரை வளம் ஆகும். நிலம் தருகின்ற வருவாய்களுக்கு எந்த விதத்திலும் குறைவு இல்லாத வருவாய்களை கடல் தரும் என்பதில் ஐய மில்லை. கூடுதலாக ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு மீன் பிடிக்கும் தொழிலை விஞ்ஞான பூர்வமாக துரிதப் படுத்த வேண்டும். ஆழ்கடலில் நெடுந்தொலைவில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு நல்கியும் ஊக்கத்தை தந்தும் அத்தொழிலை வளர்க்க வேண்டும். உவர் நீர் இறால் பண்ணைகளில் விரைவில் மிகப் பெரிய அளவில் தனியார் தொடங்குவதற்கு அரசு . . . (மணியடிக்கப்பெற்று வேறு உறுப்பினர் அழைக்கப்பெற்றார்).

(பிற்பகல் 1-55)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

* டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின் மீது எனது கருத்துக் களைத் தெரிவிக்க வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவந்துள்ள ஆக்கப்பூர்வமான திட்டங் களின் பிரோட்டத்தை உள்ளடக்கிய மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்க நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப் பாக தொழில் வளர்ச்சியை மேம்படுத்துதல், ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள், தமிழகத்தை வெளிநாட்டு சக்தி களிடத்திலிருந்தும், விடுதலைப் புலிகளுடைய பிடியிலிருந்தும், அவர்களுடைய கொட்டத்தை ஒடுக்கி, அடக்கி தவிடு பொடியாக்கி நாட்டின், தமிழக மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டிய மனப்பாங்கு, சீரிய முயற்சிகளும், மத்திய அரசால் மாநில அரசு களுக்கு வழங்கப்படுகின்ற அனைத்து சலுகைகளையும் தங்கு தடையின்றி தயங்காமல் போராடி வாதாடி மக்களுடைய நன்மைப் பேணி காக்கின்ற மனப்பாங்கு, திட்டவட்டமான ஆணித் தரமான முயற்சியில் [illegible]



1992 பிப்ரவரி 4] [டாக்டர் அ. ஸ்ரீதரன்]

நதிநீர் குடிநீர்த் திட்டம் கொண்டு வருகின்ற சீரிய முயற்சி, இவ்வாண்டு இறுதிக்குள் அனைத்து ஊரக சாலைகளும், ஊர் களுக்கு குடிநீர் வசதிகளை செய்து கொடுக்கின்ற சீரிய முயற்சி கள், இந்தியாவிலே எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத புரட்சித் தலைவியினுடைய இலவச மருத்துவ நலத்திட்ட முகாம்கள், ஏழை எளிய மக்களுக்கும், வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கும் வேட்டி, சேலைகளை, வழங்குதல், கள்ளச் சாராயத்தை ஒழித்து நாட்டினுடைய ஏழைப் பெண்களுடைய கண்ணீரைத் துடைத்த அனைத்து திட்டங்களும் பாராட்டக் கூடியவை.

29-ந் தேதி அன்று சட்டசபை கூட இருக்கிறது என்ற செய்தியைக் கேட்டு என்னுடைய தொகுதி மக்கள் என்னிடத் திலே ஒன்றைச் சொன்னார்கள். எம்.எல்.ஏ. சார் அம்மாவிடம் சொல்லி, சென்ட்ரல் கவர்ன்மெண்ட்டோடு தொடர்பு கொண்டு— அடிக்கடி விலைவாசிகளை உயர்த்திக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக பெட்ரோல் விலை, டீசல் விலை, சமையல் வாயு விலை. நிலக்கரி, அரிசி விலை போன்றவற்றை கொஞ்சம் குறைக்கச் சொல்ல வேண்டும் என்று என்னுடைய தொகுதி மக்கள் என்னிடத்திலே சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். பல ஆன்றோர் களும்; சான்றோர்களும் வீற்றிருக்கின்ற இந்த மாமன்றத்தில் என்னுடைய கருத்துக்களை நான் சொல்லியாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். மாண்புமிகு முன்னாள் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் எந்த ஒரு திட்டத்தை எடுத்தாலும், அது ஏழை மக்களையும், வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்களையும் பாதிக்காத வண்ணம் பயன் தரும் வண்ணம் இருக்க வேண்டும் என்று ஒரு மக்களாட் சியை நல்லாட்சியை நடத்தி வந்தார்கள். அந்த வழியில் வந்த தமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்ற வுடனே புனிதமான ஆட்சியினை ஒரு புதிய பாதையில் அமைப் பதற்காக சீர்திருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது

"All the Government Departments must be revamped in such a manner that all the schemes should reach the unreached people". என்ற ஒரு கொள்கையை ஏற்படுத்தி மக்களுடைய நலனைக் காப்பதற்காக பாடுபட்டார்கள். அதற்காகவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத்

தொடரில் கூடச் சொன்னார்கள். எந்த ஒரு நியூஎக்னாமிக் பாலிசியும் ஏழை எளிய மக்களை பாதிக்காத வண்ணம் இருக்க வேண்டும். அதுபோக புதிய பொருளாதாரக் கொள்கையிலே எந்த ஒரு திட்டத்தை எடுத்தாலும் அது அந்தந்த மாநில முதல்வர் அவர்களை கலந்தாலோசிக்க வேண்டும் என்ற ஒரு திட்டவட்டமான முடிவை எடுத்தார்கள். இருந்தபோதிலும் மத்திய அரசும், மாநில அரசும் நகமும் சதையும் போல இருக்கின்ற இந்த நேரத்திலே தமிழ்நாட்டிற்கு ஒதுக்கக்கூடிய திட்ட ஒதுக்கீட்டில் குறை ஏற்பட்டதினுடைய காரணம் எங்களுக்கு என்னவென்று புரியவில்லை. அருமை நண்பர் கோவை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மதுவிலக்கு கொள்கையை பூரணமாக அமல்படுத்தவில்லை. பிராந்தியை ஒழித்தால் அதற்குண்டான சலுகைகளை மத்திய அரசு வழங்கும் என்று சொன்னார்கள். அப்படி சொல்வார்களே யானால் இந்த பிராந்தி கடைகளையும், சாராயக் கடைகளையும், அனைத்தையும் மூடிவிட்டால் அதற்குண்டான இழப்புகளையும், வருவாய் இழப்புகளையும் மத்திய அரசு தருமா என்பதை இந்த நேரத்திலே நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2.00

**டாக்டர் அ. ஸ்ரீதரன்:** மத்திய அரசு திட்ட ஒதுக்கீட்டை கூடுதலாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொன்னது போல், நம்பிக்கை தெரிவித்ததைப் போல் இந்த மார்ச் 31 ஆம் தேதிக்குள் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் கூடுதலாக வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியான வால்பாறைத் தொகுதி என்பது பின் தங்கிய தொகுதியாக அரசு அறிவித்து இருக்கிற காரணத்தாலும் அங்கே எந்த ஒரு தொழிற்சாலையும் நிறுவு வதற்கு இட வசதி இல்லாமல் இருக்கிற காரணத்தால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக "மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்" அவர்களிடமிருந்து அந்த பி.டபுள்யூ.டி. நிலங்களை, unused land -ஐ வருவாய்த் துறைக்கு மாற்றித் தரவேண்டுமென்று நான் மிக பணிவன்போடு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.



Honourable SPEAKER : Thiru Venkatarama Reddy.

* Thiru M. VENKATARAMA REDDY : Honourable Speaker Sir, I take this opportunity to express my opinion on the Address of His Excellency the Governor of Tamil Nadu. There can be no two opinions about the steps taken by our Honourable Chief Minister to restore law and order with an iron hand by putting down the nefarious activities of the militants and the extremists and my party leader Thiru Ramamurthy is out spoken on this aspect and also on the Cauvery Water issue and his sacrifice in this particular aspect is beyond words and we hope that our State will get due justice from the apex Court so far as the Cauvery Water is concerned. It is unfortunate that bad blood is created in between the people of Karnataka and Tamil Nadu on the basis of language and our people in Karnataka have suffered unfold miseries and sufferings and it is appreciable that our Honourable Chief Minister has taken all the possible steps by providing relief to the affected opium of the people and it proved correct by the recent happen- opinion of the people and it proved correct by the recent happenings in Karnataka and unless this madness is curbed, once for all, the very integrity of the country is in danger and the minorities will become targets. The issue of Cauvery water is an excuse for vandalism by some Karnataka misguided elements. It is in the border of my constituency that river Cauvery passes and reaches Hogenakkal. In my Constituency there are still 726 people in the relief camp at Sesharajapuram who were driven out of Sathyagalljagir in Karnataka and they have lost all their belongingings including houses and they apprehend danger to their lives and the fear psychosis exists still.

Myself, Thiruvalargal Manohar, Munivenkatappan, Munuswamy and Singaram, M.L.As. of Hosur, Krishnagiri, Kaveripattinam and Morappur accompanied the Central observer when he visited Dharmapuri district and in fact we have appraised him of the difficulties faced by our people in Karnataka. The Central Observer asked a labourer, a middle aged woman, whether she is prepared to go back to Karnataka and her reply is worth mentioning here. I will tell the same words used by her.

"நான் பிறந்தது, வாழ்ந்தது எல்லாம் கர்நாடகத்தில் தான். அந்த மாநிலத்திற்காக நான் கஷ்டப்பட்டு ரத்தத்தைச் சிந்தினேன். இப்ப எனக்கு இந்த மாநிலத்திலே எந்த விடும்

[திரு. மு. வெங்கடராம ரெட்டி] [1992 பிப்ரவரி 4

வாசலும் இல்லை. ஆனால் இப்ப நீங்க எல்லாம் அங்கே போ, திரும்பிப் போ என்று சொன்னால், போலீஸ் ஆகட்டும், ரெவின்யூ அதிகாரிகள் ஆகட்டும் எனக்கு அங்கே சப்போர்ட் இல்லை. நான் வந்து ஒரு தமிழ்த்தாய் வயித்திலே பிறந்தது தப்பா? எல்லாம் இண்டியன்ஸ் என்று சொல்றிங்க; அந்த இண்டியா எங்கே போச்சி".

It gives a lot of meaning; national integration and all these things. So, I like to suggest some of the steps that this Government has to take and ask the Government of Tamil Nadu to take them.

பிற்பகல் 2-05

The first thing is, we must ask the C.R.P., i.e., the Central Reserve Police to be maintained in vulnerable places in Karnataka where the Tamilians are living for atleast another six months.

The second aspect is neutral observers must be there to assess the damages caused to our Tamil population so far as the movable and immovable properties are concerned and in that, the M.L.As. Tamil Nadu also must have a Committee to apprise the real value.

The third aspect is, we must ask the Karnataka Government to provide atleast six months ration to those people who are willing to go there and settle, as they have lost all their crops due to the vandalism of the misguided elements.

The another aspect, I would like to suggest is to maintain a register of Tamilians who are living in Karnataka, who have migrated long back and are living there, so that if anything happens we can take immediate steps.

So far as the policy of Prohibition is concerned, it is welcome. But, its implementation has suffered a lot. There was little fear for one or two months after the prohibition. But, now it has become open and almost 75 per cent of the old shops have come into existence. Now, the other day, our Honourable Chief Minister wanted to amend the Constitution and asked whether the Prohibition should not be there. In that aspect, the Prohibition is the State policy and it is enshrined in Chapter Four of the Constitution wherein the Centre has no control. Prohibition is the State policy only. It is left to the State as it is called 'the Directive Principles of State Policy'. So, the question of compensation or amending the Constitution does not arise. We cannot amend the Constitution in a negative aspect, that Prohibition should not be there.



1992 பிப்ரவரி 4] [திரு. மு. வெங்கடராம ரெட்டி]

In the issue of rise in prices of essential commodities, it is a global trend and not particular to India and Tamil Nadu alone. The intrinsic value of rupee has gone down. The price control of all the essential commodities lies both on the State and Central Government, and there is no use of blaming each other. The remedy lies in producing more rice and other essential commodities in our own State by giving importance to agriculturists.

So far as the rise in the price of milk is concerned, it is the State Government's look after, and whereas the State Government is now selling the milk at Rs. 6 per litre, the real vendors in the village level sell the same at Rs. 3.50. So, the balance of profit of Rs. 2.50 is too much because the burden is on those people, i.e., the original vendors, as the cost of Boosa and Fodder has gone up.

In so far as the Central assistance to States is concerned, we have to fight for our legitimate share irrespective of party affiliations. The proposed issue of Patta pass-books and development of women programme and the Puratchi Thalaivi Maruthuva Thittam and also the industrial policy, are all most welcome.

As my Constituency is most backward in Tamil Nadu, I request the Honourable Chief Minister to direct some industries to my constituency so that the people can pick up their standard of life.

I thank the Honourable Speaker for having given this opportunity to place my views on the Governor's Address.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். எம். துரை.

*திரு. எஸ். எம். துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாரதியாரால் பெருமைப் படுத்தப்பட்ட இந்தத் தமிழகத்தில் தேன் வந்து பாய்வதற்கு பதிலாக துப்பாக்கிச் சத்தமும் ரத்தமும் வந்து பாய்ந்து கொண்டிருந்தது. அதற்குக் காரணம், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் காவல் துறையை திறமையாக இயக்காததால்தான். அந்த அவல நிலையை மாற்றி, காவல்துறையைச் செம்மையாக இயக்கி, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றி, மீண்டும் நம் காதுகளில் "இன்பதேன் வந்து பாயச் செய்த" நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை பணிவோடு வணங்கி, என் பேச்சைத் தொடங்குகிறேன்.

[திரு. எஸ். எம். துரை] [1992 பிப்ரவரி 4
பிற்பகல் 2-10.

"காவிரி தென்பெண்ணை பாலாறு தமிழ் கண்டதோர் வைகை பொருனை நதி" என்று காவிரி நமக்குச் சொந்தம் என்று பாடினார் பாவேந்தன் பாரதி. அந்த உரிமையை மாற்ற நினைத்த கர்நாடக மாநிலத்தோடு, துணிவோடும், பகுத்தறி வோடும் விடாமல் போராடி, உரிமைகளை மத்திய அரசு அரசிதழில்—கெஜட்டில் வெளியிடச் செய்து வெற்றி பெற்ற வீராங்கனை நமது முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

என்ற வள்ளுவன் வாக்கைச் சிரமேற்கொண்டு, கர்நாடகத்தில் அப்பாவித் தமிழர்கள் தாக்கப்பட்டபொழுது, நம் தாய்க் குலங்களை மானபங்கப்படுத்தித் தலைகுனியச் செய்தபொழுது, பதிலுக்கு நாமும் தாக்க வேண்டும் என்ற இலட்சோபலட்சம் நம் கழகக் கண்மணிகள் வீரக்குரல் கொடுத்துப் பொங்கியெழுந்த போதெல்லாம், ஒன்றைத்தான் நீங்கள் பார்க்கிறீர்கள். நான் இன்னும் என் மக்கள் ஒன்பது பேர் அங்கே வாழ்கிறார்களே, அவர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றுதான் பார்க்கிறேன் என்று சொல்லி, பொங்கும் கடலாகக் கொழுந்து விட்டெரியும் எந்தலாக மாறவிருந்த இந்தத் தங்கத் தமிழகத்தைப் பொறுமையின் சிகரமாக மாற்றி, "பொன்றுந் துணையும் புகழ்" என்ற பெருமையைத் தமிழகத்திற்குத் தேடித் தந்த தாயே, உன்னை நான் கைகூப்பி வணங்குகிறேன்.

"தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்றார் பாரதியார். அந்த மகாகவி தேச உணர்வினை மனதிற்கொண்டு, என் தமிழ் மக்கள் ஒருவேளை கூடப் பட்டினி கிடக்கக்கூடாது; பட்டினி கிடக்க விடமாட்டேன் என்று சபதமெடுத்து, மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தி, அதன் காரணமாக நமது மானிய செலவில் ரூபாய் 503 கோடி அதிகமானபோதிலும், அரிசி விலை கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய்தான் என்று நிர்ணயித்து, வெள்ளை நிறுத்தி, ஏழை எளியவர்களின் வியாபாரிகளின் சுமையைப் பகிர்ந்து கொண்டதாயே, [illegible] புரட்சித் தலைவியே, உன் கருணை உள்ளத்தை மனதாரப் பாராட்டுகிறேன்.



1992 பிப்ரவரி 4] [திரு. எஸ். எம். துரை]

"நாளுக்கு நாள் வளர்வதே ஒரு நல்ல அரசுக்கு அழகு" என்பார்கள். அதை மனத்திற்கொண்டு இந்த அரசு வேளாண்மைத் துறை, மின் வளர்ப்புத் துறை, காட்டு வளர்ப்புத் துறை, கல்வித் துறை இன்னும் பல துறைகளின் வளர்ச்சிக்கு 1992 ஆம் ஆண்டு, 1997 ஆம் ஆண்டுகளுக்கான எட்டாவது திட்டத்திற்கு எங்களுக்கு 9,500 கோடி ரூபாய் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, இம்மாநில வளர்ச்சிக்காகப் பாடுபடும் பத்தரை மாற்றுத் தங்கமே, உன் செயல்களைக் கண்டு பாராட்டுகிறேன்.

"ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்" என்றார் பாரதி. அந்தப் புரட்சிக் கவிஞரின் விருப்பத்தை இந்தப் புரட்சித் தலைவி நிறைவேற்றி வருகிறார்கள். புதிய தொழில் கொள்கை மிகவும் சிறப்பு வாய்ந்தது. விரிவான கொள்கை விளக்கம் தொழில் முனைவர்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்யப் பெற்றுள்ளது. இச்செய்தி இனிமையானது. 'டாசிட்' என்ற அமைப்பின் மூலம் பனங்குடி, பெருந்துறை, கங்கை கொண்டான் ஆகிய இடங்களில் மூன்று பெரிய தொழில் வளர்ச்சி மையங்கள் உருவாக்க இந்த அரசின் திட்டங்கள் போற்றத் தக்க, பெருமைப்படத்தக்க நல்ல திட்டங்களாகும்.

மின் வளர்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்கள் போற்றுதற்குரியன. உதாரணமாக, ஜெயங்கொண்ட சோழபுரத்தில், பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுக்க ரூ. 7,000 கோடி செலவில் ஒரு புதிய பெரிய திட்டத்தை உருவாக்கி, அதன் மூலம் 1,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இந்த அரசு திட்டம் தீட்டியிருப்பதை நான் மனதார வரவேற்கிறேன்.

"ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" புண்ணியம் தரும். அப்புண்ணியத்தையும், நம் புரட்சித் தலைவி பெற்றிருக்கிறார்கள். இதற்காக 12 கோடி ரூபாய் செலவு செய்து எழுத்தறிவியக்கம் ஒன்றைத் தொடங்கி 19 இலட்சம் ஏழை மக்களுக்குக் கல்வி அறிவு புகட்ட புரட்சித் தலைவி வழிவகை செய்திருக்கிறார்கள்.

அழகு நிறைந்த முகத்தில் ஒரு திருஷ்டிப் பொட்டு வைப்பது போல, திறமை மிகுந்த இந்த அரசுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு திருஷ்டிப் பொட்டாக அமைந்துவிட்டது. "ஒன்றுபட்டால்

உண்டு வாழ்வு" என்ற முதுமொழிக்கிணங்க, ஒற்றுமையாக இருந்து செயல்பட்ட மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டிய கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள், அதிலும் குறிப்பாக என் ஆத்தூர் தொகுதியில் சின்னாளபட்டியில் 20 கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் இருந்த நிலைமை மாறி, நலிந்து, மெலிந்து. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது 9 சங்கங்களாகக் குறுகி, தற்போது 7 சங்கங்களே அவல நிலையில் உள்ளன என்று குறிப்பிட விழைகின்றேன். இதற்கு முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி, தேர்தலில் பல தில்லுமுல்லுகளைச் செய்து, உள்ளே புகுந்து அங்கே குழப்பங்களை விளைவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி புரட்சித் தலைவி அவர்கள் 1992 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் தேர்தலை, ஜனநாயக முறையில் நடத்தி, போலிகளை ஒழித்து, உண்மைகளை உள்ளே அனுப்பி, கூட்டுறவு சங்கங்களுக்கு புத்துயிர் அளிக்க வழிவகுக்குமாறு நமது டாக்டர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களைப் பணிந்து வேண்டிக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-15.

மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரையிலுள்ள அனைத்து நலத் திட்டங்களையும் வரவேற்று, ஆத்தூர் தொகுதியில், என் ஊராகிய சின்னாளப்பட்டியில் 40,000 ஜனத்தொகை கொண்ட அந்த இடத்தில், குறைந்தது 15,000, 20,000 கைத்தறி நெசவாள மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் எல்லாம் இன்றைக்கு வேலை கிடைக்காமல், அண்டை மாநிலங்களான கர்நாடகா, டெல்லி போன்ற மற்ற இடங்களுக்குச் சென்று தொழில் நடத்துகிறார்கள்; கூலி வேலை செய்கிறார்கள். எனவே, ஆத்தூர் தொகுதியான என்னுடைய தொகுதியை மிகவும் பின்தங்கிய தொகுதியாக அறிவித்து, அந்தத் தொகுதிக்கு வேண்டிய வளர்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பினைக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்; வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. சிவசுப்பிரமணியன்.





**திரு. கு. சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தில் ஆளுநர் அளித்த உரையின்மீது கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களை அளிக்கும் வாய்ப்பினை அளித்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, நம் தமிழகத்தினுடைய ஏழை, எளிய மக்களுக்காக நல்ல பல திட்டங்களை ஆற்றிட வேண்டும் என்பதற்காக, இன்றைக்கு ஆளுநர் அவர்களின் வாயிலாக இந்தப் பேரவையிலே நல்ல ஒரு உரையை உவந்தளித்திருக்கிறார்கள். இதன்மீது கருத்துக்களை அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும், நம்முடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் சட்டமன்ற உறுப்பினர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்களும், அனைத்து . . . .

## 7. விதி 110-ன் கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் அறிக்கை.

### பி. & சி. ஆலை திறப்பது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள், பேரவை விதி 110-இன்கீழ் ஒரு அறிவிப்பை பேரவைக்கு அளிக்க அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இப்போது, அதை அவைக்கு அளிப்பார்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே நடந்து கொண் டிருந்த பி. அண்ட் சி. மில் மூடப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். அதுகுறித்து பல நாட்களாக பேச்சுவார்த்தை நடைபெற்று, நல்ல முடிவு ஏற்படாமல் இருந்து வந்தது. இன்றையதினம், அரசியல் கட்சி களுடைய வேண்டுகோளுக்கிணங்க அரசியல் கட்சித் தலைவர் களும், தொழிற்சங்கத் தலைவர்களும், பின்னி மில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், பின்னி மில் நிர்வாகத்தினுடைய பிரதிநிதிகளும் ஆகிய அனைவரும் உட்கார்ந்து பரிசீலனை செய்து, ஒரு நல்ல முடிவை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

[டாக்டர் செ. அரங்கநாயகம்] [1992 பிப்ரவரி 4

அதன்படி, வருகிற தமிழ்ப் புத்தாண்டின் முதல் நாள் ஏப்ரல் 13 ஆம் தேதி, பி அண்டு சி மில் திறக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

தொழிலாளர் சார்பில் அதனுடைய தொழிற்சங்கத் தலைவர் திரு. டபிள்யூ. ஆர். வரதராஜன் அவர்களும், நிர்வாகத்தின் சார்பில் திரு. வெங்கட்ராமன் அவர்களும், அரசின் சார்பில், தொழிலாளர் நலத்துறை ஆணையர் திரு. ஆதிமூலம் அவர்களும் அடங்கிய ஒரு மூத்தரப்புக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. இனி அந்தக் குழு, இந்த பி அண்டு சி ஆலையைத் திறந்து நடத்துவதற்கான பணியிலே ஈடுபட்டு, அதை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசுப்பிரமணியன் நாளை தொடர்ந்து பேசுவார்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5—2—1992) காலை 9 30 மணிக்குக் கூடும் வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.19 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

45. எரிசக்தி சேமிப்பு கருவிகள் விற்கப்படும் வியாபாரியால் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2—4—1991-ம் நாளிட்ட 189 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

46. பட்ட மடை, திருவாளர்கள் சுவாமி சிவானந்தா நூற்றாண்டு அறக்கட்டளை மருத்துவமனைக்கு விற்பனை செய்யப்படும் பொருட்களுக்காக செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி யிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய

கருணை உள்ளத்தை மனு...



1992 பிப்ரவரி 4]

அறக்கட்டளைகள் துறையின் 16—4—1991 ஆம் நாளிட்ட 213-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 1/1959) 54 (5) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப் பெற்றது.

47. சில பொருட்களுக்கு எட்டு சதவீத ஒருமுனை வரியிலிருந்து சமவீத வரியாக குறைத்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 26—9—1991 ஆம் நாளிட்ட 402 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் எண் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

48. சில பொருட்களுக்கு வியாபாரியால் விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 4—9—1991 ஆம் நாளிட்ட 390 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் எண் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

49. சென்னை, தென்னக இரயி[illegible]க்கு விற்கப்பெறும் கான் கிரீட் ஸ்லீப்பர்களுக்கு எட்டு [illegible] விற்பனை வரியிலிருந்து நான்கு சதவிகமாக குறைத்தல் [illegible]றித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 21—10—1991 ஆம் நாளிட்ட 421 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

50. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 31—3—1989 ஆம் ஆண்டு முடியவுள்ள காலவரைக்கான அறிக்கை (எண் 4) (சிவில்). (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (ஆங்கிலம்).

51. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 31—3—1990 ஆம் ஆண்டு முடியவுள்ள காலவரைக்கான அறிக்கை (எண் 2) (வருவாய் வரவினங்கள்) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்).

52. தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் எண் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (ஆங்கிலம், தமிழ்).

53. தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் எண் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (ஆங்கிலம், தமிழ்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

15. மதிப்பீட்டுக் குழுவின் முதலாவது அறிக்கை, 1991-92.

16. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை, 1991-92.

17. 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) திருத்தச் அவசரச் சட்டம் (தமிழ் நாடு அவசரச் சட்டம் எண் 5/1992).

18. உடுக்குறியிடாத வி[illegible]க்கள்-விடைகள் (முதல் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 [illegible]).

19. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

---

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore. Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Shiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam [illegible]blishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Cent[illegible] [illegible]ok House (Private) Limited, Madras 2.
13 Kalaiva[illegible] [illegible] [illegible]ntre, No. 1, Ponniamman Koil Street, Egmore Mad[illegible].

I[illegible] [illegible]FASIL OF TAMIL NADU

1 A. Venkata[illegible] & Company, Vellore (North Arcot) District
2 Bharathama[illegible] Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 P[illegible] Brothers, Tiruchirappalli-2.
7 S. K. [illegible]bramania Pillai, Tirunelveli Junction.
8 B. Ar[illegible]doss, Villupuram (South Arcot District).
9 [illegible] Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivaka[illegible]
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, [illegible] Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 [illegible]tional Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.